

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ வானம் வசப்படும்... ★ முத்துலட்சுமி ராகவன்



# முத்துலட்சுமி ராகவன்

# வானம் வசப்படும்...


லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ வானம் வசப்படும்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
வானம் வசப்படும்...

முத்துலட்சுமி ராகவன் எழுதிய
வானம் வசப்படும்...

1

எழும்பிக் கொண்டிருந்த அந்தக் கட்டிடத்தை பார்க்கும் போதே மனதில் ஓர் எழுச்சியினை உணர்ந்தாள் மாளவிகா...
அவளின் வெகுநாளைய கனவு அது..
"ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கு ஈடானது ஒரு ஏழைக்கு படிப்பறிவைச் சொல்லிக் கொடுப்பது மாளவிகா..."
மாளவிகாவின் தந்தை வாசவன் அடிக்கடி கூறும் வார்த்தைகள் இவை...
அவர் படித்ததென்னவோ ஐ.ஏ.எஸ். பார்த்த தென்னவோ கலெக்டர் உத்தியோகம். ஆனால் அவருடைய ஒரே மகளின் மனதில் ஏன் இந்த வார்த்தைகளை திரும்பத் திரும்பக் கூறி உருவேற்றி வைத்தார் என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...
அவருடைய அடி மனதின் ஆசையை மகளிடம் திணித்தாரோ என்னவோ...?
எப்போதுமே எல்லோருடைய வீடுகளிலும் இயல்பாக நடக்கும் இந்தச் செயல்தான் மாளவிகாவின் வாழ்க்கையிலும் நடந்தது.
பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள், தங்களது நிறைவேறாத அபிலாஷைகளை பிள்ளைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள விழைவது.
வாசவனும் அதற்கு விதி விலக்கல்ல.
அவர் என்னவோ ஆசிரியராகத்தான் ஆசைப்பட்டார். ஆனால் ஐ.ஏ.எஸ் ஆகிவிட்டார். ஆசிரியர் ஆகமுடியாத அந்த ஆட்சித் தலைவர்... தன் மனதிலிருந்த எண்ணங்களை மகளிடம் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்.
நாடாளும் ராஜாவுக்கும்... வேறு ஒரு வேலையில் விருப்பம் இருக்கலாம். அவன் செய்யும் வேலையில் திருப்தி இல்லாமல் போகலாம்...

உயர்வான வேலை என்பதால் மட்டுமே மனம் திருப்தி அடைந்து விடாது.
அது பிடித்தமான வேலையாகவும் இருக்க வேண்டும்.
"மக்களுக்கு நல்லது செய்யத்தான் நினைக்கிறேன் மாலு... ஆனால் ஆயிரம் அரசியல் தலையீடு...
நினைத்ததையெல்லாம் என்னால் செய்ய முடிகிறதா..? இது தங்கக்கூண்டு மாளவிகா... பயன்படுத்த முடியாத அதிகாரத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய...?" என்ற வாசவனின் ஆதங்கத்தை மாளவிகாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..
"இதுவே நான் ஒரு ஆசிரியராக இருந்தேன்னு வைத்துக்கொள்... நினைத்தது போல... என் மாணவ.. மாணவிகளை உருவாக்குவேன்... அதில் எந்தத் தலையீடும் இருக்காது... திறமையிருக்கிறவங்களை வெற்றி பெற வைப்பேன்... அவங்களுக்கு வழிகாட்டுவேன்..." அவரது கண்களில் நிறைவேறாத கனவு தெரியும்...
"அந்தக் கனவை நனவாக்க நீ நினைக்கிற மாளவிகா.. உன் மனதுப் பிரகாரம் உன் படிப்பையும் வாழ்க்கையையும் நீ தீர்மானிக்கல... உன்னை உன் அப்பாவின் கனவு வழிநடத்தது... நீயாக இந்தப் பாதையில் நடக்கவில்லை." அவளது ஆசிரியை கனவை அறிந்த போது சரண் நெற்றி சுருங்க அதை ஆட்சேபித்தான்.
"இந்தக் காலத்தில் எல்லோரும் இன்ஜினீயரிங் கனவை மனதில் வைத்துக்கிட்டு இருக்காங்க... ஆளுக்கொரு திசையில் வெளிநாட்டுக்கு பறந்துக்கிட்டு இருக்காங்க..."
"நம்ம நாட்டில் இல்லாத அழகா வெளிநாட்டில் இருக்குது...?"
"இது குண்டுச்சட்டியில் குதிரையை ஓட்டுகிறவங்க பேசுகிற பேச்சு... நீ வீட்டை விட்டு முதலிய வெளியே வந்து பாரு... இந்த வானத்தைப் போல... உலகம் பரந்து விரிந்திருக்கு..."
"விரிந்திருக்கும் இந்த உலகில்... என் வேர்கள் இங்கேதானே இருக்கு சரண்..."
தன் வார்த்தைகளில் தெளிவாகவும்... பிடிவாதமாகவும் இருந்தவளை கண்கள் இடுங்கப் பார்த்தான் சரண்...
"தூங்குகிறவங்களை எழுப்பிவிடலாம்... தூங்குவதைப் போல நடிப்பவர்களை எழுப்பி விட முடியாது... நீ கண்களை

மறைச்சு திரைபோட்டுக்கிட்டு வண்டியை இழுத்துக்கிட்டு ஓடுகிற குதிரைபோல உன் வாழ்க்கையில ஓடிக்கிட்டு இருக்கே..."
"என் கண்களை மறைக்கிற திரை எது சரண்...?"
"உன் அப்பாவின் மேல் உனக்கிருக்கும் கண் மூடித்தனமான பாசம்... உனக்கு அவர் வாய் உதிர்க்கும் வார்த்தைகள்தான் வேதவாக்கு... நான் சொன்னால் கேட்க மாட்ட இல்ல...?"
அவன் வார்த்தைகளில் அப்பட்டமான பொறாமை வெளிப்பட மாளவிகா கலகலவென்று சிரித்தாள்.
"ஊஹூம்...? இதை அப்படியே அப்பாவிடம் சொல்ல உங்களால் முடியுமா சரண்...?"
"எனக்குத் தைரியம் பத்தாதுன்னு சொல்கிறயா...?"
"அப்பாவின் மேல் அந்த அளவுக்கு மரியாதை வைத்திருக்கிறீங்கன்னு சொல்கிறேன்.."
"மாளவிகா... நீயேன் என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன்னு அடம் பிடிக்கிற...? மாமாவின் மேல் எனக்கிருக்கிறது நன்றியுணர்ச்சி. அம்மா, அப்பா இல்லாத என்னை மாமா எடுத்து வளர்த்தார். படிக்க வைத்து ஆளாக்கினார். இத்தனைக்கும் நான் அவருக்கு சொந்தத் தங்கையின் மகனில்லை... என் அம்மா.. அவருக்கு சித்தப்பா மகள்தான்..."
"வேறுபடுத்திப் பேசாதீங்க சரண்... பாசத்தில் சொந்தத் தங்கைன்னா என்ன? ஒன்று விட்ட தங்கைன்னா என்ன...? அப்பாவுக்கு இரண்டும் ஒன்றுதான்..."
"அந்தப் பொருந்தன்மையை யார் குற்றம் சொன்னது...? அவருடைய கனவை உன் மேல் திணிக்கப் பார்க்கிறாரே... இதுதானே எனக்குப் பிடிக்க மாட்டேன்கிறது..."
"இப்ப என்ன ஆச்சு சரண்...?"
"இன்னும் என்ன ஆகணும்... ப்ளஸ் டூவில் ஸ்கூல் பர்ஸ்ட்.. உன் மார்க்குக்கு நீ மெடிகலோ... இல்லை... இன்ஜினீயரிங்கோ படிக்கணும்... நீயானால் ஆர்ட்ஸ் காலேஜில் அப்ளை பண்ணியிருக்கிற..."
"அப்போத்தானே நான் மேலே பிஎட் படித்துவிட்டு டீச்சராக முடியும்...?"

"நீ டாக்டராக வேண்டியவள்னு நான் சொல்றேன்... நீயானா டீச்சராகப் போகிறேன்னு சொல்கிற..."
"ஒரு டீச்சரால் எத்தனை டாக்டர்களை உருவாக்க முடியும் தெரியுமா...?"
"இதை நீயாய் பேசவில்லை. உன் அப்பா சொல்லிக் கொடுத்து வளர்த்தை அப்படியே ஒப்பிக்கிறாய்..."
"ஸோ... நான் சுயமாய் யோசிக்கவே மாட்டேன்னு நீங்க முடிவு கட்டிட்டிங்க..."
"அப்படிச் சொல்ல நானென்ன முட்டாளா...? சுயமாய் யோசிக்கத் தெரியாதவளா.. என் ஒவ்வொரு கேள்விக்கும்.. யோசிக்காம பதிலை அள்ளிவீசுவா...? என்ன ஒண்ணு... எல்லாத்திலயும் தெளிவா இருக்கிறவ... இதில மட்டும் குழப்பிக்கிறாளே.."
"இதில் குழப்பிக்க ஒண்ணுமே இல்லை சரண்... அப்பா எனக்கு மட்டுமா இதைச் சொன்னார்...? உங்களிடமும் இதைச் சொல்லித்தானே வளர்த்தார்...? நீங்க அவர் ஆசையை நிறைவேற்றினீங்களா...?"
"ம்ஹூம்.. உனக்கு அந்தக் குறை வேற மனசில் இருக்கா... நான் ஒருத்தனாவது உருப்படியாய் இருக்கிறது உனக்குப் பிடிக்கலையா...?"
"உங்க அகராதியில்... கம்யூட்டரை படிச்சுட்டு... வெளிநாட்டுக் கம்பெனிகளோட ஒப்பந்தம் போட்டுக்கிட்டு ராத்திரி பகலாய்... செயற்கை வெளிச்சத்தில் வெளியுலகத்தைப் பார்க்காமல் கம்ப்யூட்டரே கதின்னு கிடக்கிறதுதான் உருப்படுவதாக அர்த்தமா...? டீச்சர் வேலைக்கு போவது உருப்படாததா..?"
"இந்த பீல்டில்தானே காசு கொட்டுது..."
"டீச்சிங் புரொபசனிலும் காசு கிடைக்கத்தான் செய்யுது... நீங்க அந்தக் காலத்து திண்ணைப் பள்ளிக் கூடத்திலேயே இருக்காதீங்க..."
"ஓஹோ... அப்போ பேச்சுக்கு பேச்சு எதிர் பேச்சுப் பேசுவ... ஆனா சொன்னதைக் கேட்க மாட்டே..."
"அப்பா சொன்னதைத்தான் கேட்கிறேனே..."
சரணின் முகத்தில்... ஆயிரம் உணர்வலைகள் தோன்றி மறையும்... அவன் கேள்வியில் மனத்தாங்கல்

வெளிப்படும்... மாளவிகா புன்னகைப்பாள். ஆனால் அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லமாட்டாள்.
அவளுக்கு சரணைப் பிடிக்கும்.. மிக.. மிகப் பிடிக்கும்... அவளுடைய எட்டாவது வயதிலேயே தாயை இழந்தவள் அவள்... தன்னைப் போலவே தாயை இழந்து விட்டு அவர்களின் வீட்டில் அடைக்கலமாகியிருந்த சரணின் மேல் இயல்பாகவே அவளுக்குள் ஓர் ஒட்டுதல் ஏற்பட்டது.
அத்தோடு தனக்காவது தாய்க்குத் தாயாக தகப்பன் இருக்கிறார். சரணுக்கு யாருமேயில்லை என்ற பெண் மனத்துக்கே உரிய கருணை உணர்வு அவளுக்குள் சுரக்க... அவள் மனதில் சரணின் மீது அளவற்ற அன்பும் சுரந்தது.
கூடவே வளர்ந்ததால்... பெயர் சொல்லித்தான் அவள் சரணை அழைப்பாள். ஒரு சமயம் அவர்களின் வீட்டுக்க வந்திருந்த உறவுக்கார பெண்மணி ஒருத்தி...
"இதென்ன... அத்தானைப் போய் பெயர் சொல்லிக் கூப்பிடறே..." என்று கேட்டு வைத்துவிட்டுப் போனாள்...
'அத்தான்...' என்று அழைக்க முடியாமல் அவள் திணறிய போது... சரண் இலகுவாகப் புன்னகைத்தான்.
"மக்கு... மத்தவங்க என்ன சொன்னாலும் கேட்டுக்கணுமா... இத்தனை நாளாய் எப்படிக் கூப்பிட்டாயோ... அப்படியே கூப்பிடு..."
அந்த நட்பும்.. கனிவும்தான் அவனின் அடையாளம்.. அவளை விட எட்டுவயது மூத்தவன். இன்ஜினீயரிங் முடித்தவுடன் அடுத்த கம்பெனியில் வேலைக்குப் போகாமல் சொந்தமாக கம்பெனி ஆரம்பித்தவன்.
"அப்பா... அம்மாவின் சொத்தையெல்லாம் வித்து இதில் இன்வெஸ்ட் பண்ணனுமா...? கொஞ்சம் யோசித்துச் செய் சரண்" வாசவன் கவலைப்பட்டார்.
"இதில் யோசிக்க ஒண்ணுமே இல்லை மாமா... அந்தச் சொத்து... இந்தச் சொத்தாக மாறியிருக்கு. அழியவில்லையே..."
"ஆனாலும்... அது உன் பூர்வீக சொத்துப்பா..."
"இது கம்ப்யூட்டர் காலம் மாமா... நோ... சென்டிமெண்ட்..."
சரண் யதார்த்தவாதி... எந்தப் பழமையும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது... தன்போக்கில் செயல்படுபவன்.

மாளவிகாவிடம் சொன்னதையே சரணிடம் வாசவன் சொல்லிய போது...
"எனக்கு அடுத்தவங்களை உருவாக்கறதில ஆர்வமில்லை மாமா... என்னை உருவாக்கி ஜெயிச்சுக் காட்டறதில்தான் ஆர்வம்..." என்று தீர்மானமாக சொல்லி விட்டான்.
சொன்னபடி அவன் வாழ்க்கையில் ஜெயித்துக் காட்டினான். அசுர வேகத்தில்... கம்ப்யூட்டர்களின் ஆட்சி... உலகை வளைத்துப் பிடித்த காலம் அது...
நான்கே நண்பர்களுடன் சேர்ந்து எளிமையாக மிகச் சிறிய அளவில்... ஒரு சின்ன அறையில் ஆரம்பிக்கப்பட்ட கம்ப்யூட்டர் நிறுவனங்கள்... 'இன்போஸிஸ்' போல உயர்ந்து சக்கை போடு போட்ட கம்ப்யூட்டர்களின் பொற்காலத்தில் சரண் ஆரம்பித்திருந்த 'சரண் கம்ப்யூட்டர் வெர்ல்டு...'ம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது.
அவன் இளம் தொழிலதிபராகி... வெளிநாடுகளுக்கு பறக்க ஆரம்பித்த போது, மாளவிகா பிளஸ் டூ படிப்பை முடித்து... கல்லூரியில் அடியெடுத்து வைத்தாள்.
"கம்ப்யூட்டர் என்ஜினீயரிங் படி மாளவிகா... நம்ம கம்பெனியில் ஜாயின் பண்ணிக்க அதுதான் தோது..." என்று சரண் கூறியபோது-
"அது நம்ம கம்பெனியில்லை சரண்... உங்க கம்பெனி..." என்று பதில் சொன்னாள் மாளவிகா...
அப்போதுதான் முதன் முறையாக புருவங்களை உயர்த்தினான் சரண். இப்படிப்பட்ட வார்த்தைகளை மாளவிகாவிடமிருந்து அவன் எதிர்பார்க்கவில்லை.
அவன் வேறு; மாளவிகா வேறு என்று அதுவரை அவன் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.
அன்னை தந்தையில்லாமல் அநாதையாக அந்த வீட்டுப் படியேறி வந்தவனை... குண்டுக் கண்களுடனும்.. கொழுகொழு கன்னத்துடனும் விழித்துப் பார்த்த அந்த சின்னஞ் சிறுமியின் கண்களில் தெரிந்த கனிவையும் பாசத்தையும் இன்று வரை அவன் மறக்கவில்லை.
அவன் யதார்த்தவாதிதான். பணத்தை துரத்திக் கொண்டு ஓடியவாறு இருப்பவன்தான். ஆனால் அவன் மனிதன். அவனுக்குள்ளும் மனம் இருந்தது. அதற்குள் மாளவிகாவின் மேல் வற்றாத காதல் இருந்தது.

சரணின் காதலை மாளவிகா அறியாமல் இல்லை. இப்போது அவள் சிறுமி இல்லை... டீன் ஏஜ் பருவத்தின் முடிவு நிலையில் இருப்பவள்தான். கல்லூரியில் காலடி வைக்கப் போகிறவளுக்கு காதலைப் பற்றிய அரிச்சுவடியாவது தெரிந்திருக்கும் தானே...
அவள் மனதில் சரணைப் பார்த்தாள். பூ... பூக்கத்தான் செய்தது. அவளுக்கு சரணை மிகவும் பிடிக்கும். ஆனால் அதற்காக தனது கொள்கைகளை விட்டுக் கொடுத்து விட்டு... அவனுடைய கொள்கைகளை ஏற்க அவள் தயாராக இல்லை.
அவளுடைய லட்சியக் கனவுகள் அவனுக்கு ஏற்புடையதாக இருக்கிறதா... என்று அறியாமல்... அவனைப் பற்றிக் கனவு காணவும் அவள் தயாராக இல்லை...
எல்லாவற்றிலும் யதார்த்தவாதியாக இருந்த சரண்... மாளவிகாவின் மீதான அவனது காதலில் மட்டும் உணர்வு பூர்வமான மனிதனாக இருந்தான்... அவளுக்காக உருகித் தவித்தான்.
அதே போல... எல்லாவற்றிலும் உணர்வு பூர்வமாக இருந்த மாளவிகா, அவனுடைய காதலை ஏற்பதில் மட்டும் யதார்த்தவாதியாக இருந்தாள். கலைந்து விடப் போகும் கனவுகளுக்காக... சீட்டுக்கட்டு மாளிகை கட்டுவதற்கும் தயங்கிப் பின்வாங்கினாள்.
"புத்தியோடுதான் பேசிவைக்கிறாயா மாளவிகா...?" அவன் விழிகளில் கோபம் கொளுந்து விட்டு எரிந்தது.
"ஏன் சரண்... என் புத்திக்கென்ன குறைச்சல்...? இப்பத்தான் நான் ஸ்கூல் பர்ஸ்ட் ரேங்குன்னு சொன்னீங்க...?" அறிந்தும் அறியாதவள் போல் நிதானமாக வினவினாள் மாளவிகா...
"என் கம்பெனியில் உனக்கு உரிமையில்லையா...?"
"அது எப்படி சரண்...? உங்க அப்பா... அம்மா உங்களுக்கு விட்டுப் போயிருந்த வீட்டையும்... பேங்க் பேலன்ஸையும்... நிலங்களையும் போட்டு நீங்க உருவாக்கியிருக்கும் கம்பெனி... உங்களுடைய புரொபெர்ட்டி இல்லையா...?

அதில் நான் உரிமை கொண்டாடினால் நல்லா இருக்குமா...?"
"இப்ப என்கிட்ட நீ அடி வாங்கத்தான் போகிற... இது என்ன புதுப்பழக்கம் மாளவிகா...? உன்னது... என்னதுன்னு பிரித்துப் பேசிக்கிட்டு? இது உன் வீடுன்னு எப்போதுமே நான் நினைத்ததில்லையே.. ஒரு வேளை இத்தனை நாளும் நீ அப்படித்தான் உன் மனசில நினைத்துக்கிட்டு இருந்தயா...? அது தெரியாம நான் இதை... என் வீடு போல நினைச்சுக்கிட்டு உரிமையோட சுத்தி வந்தேனா...?"
"சரண்..."
மாளவிகா கண் கலங்கிவிட்டாள். அந்தக் கண்ணீரைப் பார்த்த சரணின் மனதில் இனம் புரியாத திருப்தி ஏற்பட்டது.
"இப்ப எதுக்கு அழுது வைக்கிற...?"
"உங்களை என்னைக்காவது வேற்றாள்னு நானும்... அப்பாவும் நினைத்திருக்கிறோமா... எப்படி நீங்க இப்படியொரு வார்த்தையைச் சொல்லலாம்...?"
"நீ மட்டும் என் கம்பெனின்னு சொல்லலாமா...?"
"ப்ளீஸ்... ஆர்கியுமென்டை அவாய்ட் பண்ணலாமே.."
"ஓ... கே... லீவ் இட்.. பட்... நீ என்ஜினீயரிங் படிக்கிறது உன் பியூச்சருக்கு நல்லது மாளவிகா... ஒரு வெல்விசரா இதை நான் உனக்குச் சொல்கிறேன் தயவு செய்து கேளு..."
"தயவு செய்து என் பாதையில் என்னைப் போகவிடுங்க சரண்..."
'உன் பாதையா....?'
மீண்டும் முகம் இறுக... அவளை வெறித்துப் பார்த்தான் சரண்; அவன் பார்வையை - தயங்காமல் தன் நேர் கொண்ட பார்வையுடன் சந்தித்தாள் மாளவிகா...
'அப்படியே அவளுடைய அப்பாவைப் போல...'
சரணின் இதழ்களில் புன்னகை உதித்தது.
வாசவனின் அஞ்சாத தன்மையையும் நேர்மையையும் அப்படியே பிரதிபலித்தாள் மாளவிகா. தகப்பனாரின் ஒட்டுமொத்த குணங்களின் வார்ப்பாக நின்றாள்.
'ம்ஹூம்... இந்த மாமா... தானும் பிழைக்கமாட்டார்... மகளையும் லட்சியம் அது இதுன்னு சொல்லி பிழைக்க விடமாட்டார்.' சரணுக்கு எரிச்சல் வந்தது.

அவனுக்கு வாசவனைப் பிடிக்கும். தாய் தந்தையில்லாத தன்னை அரவணைத்துக் கொண்டவர் என்பதால் அவர்மீது அவனுக்கு அன்பு அதிகம் உண்டு.
பெற்றோர்களை இழந்து நின்ற போதிலும், சரணுக்கு வசதி இருந்தது. பதினாறு வயதுப் பிராயம். அப்படி யொன்றும் பரிதவிக்கக்கூடிய பிராயம் அல்ல... அவன் ஓரளவு விவரம் தெரிந்தவனாகவே இருந்தான்.
பெற்றவர்கள் விட்டுச் சென்றிருந்த வங்கிப் பணத்தின் வட்டியிலே ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு அவன் படிப்பை முடித்திருக்க முடியும்.
ஆனால்.. கல்லூரி விடுதி ஒருநாளும் வீடாக மாற முடியாது. அங்கு அவனுக்கு தோழமை கிடைத்திருக்கும். பாசம் கிடைத்திருக்காது. தோள் கொடுக்க நண்பர்கள் இருந்திருப்பார்கள். பாசத்துடன் தலை தடவிக் கொடுக்கவும், அன்புடன் அவனுக்கு பரிமாறவும்... வாசவனும் மாளவிகாவும் இருந்திருக்க மாட்டார்கள்.
வீடு என்பது எது....? அன்பையும்... பாசத்தையும்... அரவணைப்பையும் நமக்குத் தரக்கூடியது அது... நம்மைத் தனியாக உணரவிடாமல்... குடும்பம் என்ற சூழலை உணர்த்துவது...
அந்த வீட்டின் சூழலை வாசவன் அவனுக்கு அளித்தார். அவனை அக்கறையோடு கவனித்துக் கொண்டார். அன்பு காட்ட மாளவிகா அங்கிருந்தாள்.
சரண் தன்னைத் தனியனாக உணராமல் அந்தக் குடும்பத்துடன் பின்னிப் பிணைந்து கொண்டான்.
அந்தப் பலனை எதிர்பார்க்காது பாசத்தை அளித்த வாசவனின் மேல் அளவற்ற பிரியத்தை அவன் வைத்திருந்தாலும்.. அவர்மேல் 'பிழைக்கத் தெரியாத மனிதர்..' என்ற எண்ணம் அவனுக்குள் இருந்தது...
வாசவனின் சகாக்கள் நெளிவு.. சுளிவுகளுடன் ஆட்சிசெய்யும் அரசியல்வாதிகளை அனுசரித்துப் போகிறவர்களாக இருந்தார்கள்..
வாசவனோ.. நேர்கொண்ட பார்வையும்.. நிமிர்ந்த நன்னெஞ்சுமாக இருந்து தொலைத்தார்..
விளைவு?

'நீ ஆட்சி செய்யும் அதிகாரத்தில் இருந்தால் தானே இல்லாத அழும்புகளைப் பண்ணுவாய்?' என்று அதிகாரமில்லாத துறைகளுக்கு அவரைத் தலைமையாக போட்டது மேலிடம்..
அப்படிப்பட்ட துறைகளிலும் அவர் சும்மாயிருக்காமல்.. வாங்குகிற சம்பளத்துக்கு வேலை செய்கிறேன் பேர்வழியென்று.. கிடப்பில் கிடந்த கோப்புகளையெல்லாம் தூசு தட்ட ஆரம்பிக்க.. அவருக்கு மாதத்திற்கு ஒரு துறை மாற்றம் நிகழ ஆரம்பித்தது...
"என்ன மாலு.. மாமா இந்த மாதம் எந்த டிபார்ட்மெண்ட்..?" என்று சரண் கிண்டலடிக்கவே ஆரம்பித்து விட்டான்...
"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்.. இறுதியில் தர்மமே ஜெயிக்கும் சரண்.." தன் சுட்டு விழிச் சுடரால் அவனைச் சுட்டெரிப்பாள் மாளவிகா..
"என்னவோ போ.. இந்தக் காலத்தில் இப்படி ஒரேயடியாய் நிமிர்ந்த தனமா இருக்கக் கூடாது மாலு... தங்கத்தில் கூட கொஞ்சம் செம்பைச் சேர்த்தால் தான் நகை செய்ய முடியும்.." சரண் கவலையுடன் சொல்வான்..
"ஏன்.. இதை நீங்களே அப்பாவிடம் சொல்ல வேண்டியதுதானே..?" சாவதானமாக கேட்பாள் மாளவிகா..
"நானா..? ஐயையோ.. நடக்கிற கதையைப் பேசும்மா.."
"ஏன்..? அப்பாவிடம் அவ்வளவு பயமா..? அவர் என்ன சிங்கம்.. புலி.. கரடியா..?"
"பயமில்லை.. மரியாதை.."
"அப்படியொண்ணும் மரியாதை மனசில இருக்கிறதைப் போல தெரியலையே.. கிண்டல் தூள் பரக்குது.."
"ஏய்ய்.. அவரைப் பற்றிக் கவலைப்படக்கூடாதா..?"
"இது கவலை மாதிரி தெரியலை.."
"வேற என்ன மாதிரித் தெரியுது.."
"ஏதோ ஒரு கோபம்.. எரிச்சல்.. இதுமாதிரித் தெரியுது.."
மாளவிகா புத்திசாலி.. மனதை சரியாக கணித்து விட்டாள்..
அவன் மனதில் கோபமும்.. எரிச்சலும் இருக்கத்தான் செய்தன.. அது மாளவிகாவிற்கு அவர் தவறான பாதையைக் காட்டுகிறார் என்ற கோபம்..
"இவர்தான் கலெக்டரா இருந்தும் பிழைக்கத் தெரியாம இருக்கிறார்ன்னா.. மகளையும் உருப்படியில்லாம

ஆக்கணுமுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு நிற்கிறாரே..."
மாளவிகா எம்.ஏ. பட்டம் வாங்கிய போது மீண்டும் சரண் அவளது படிப்பைப் பற்றிய தனது யோசனைகளை அவள்முன் வைத்தான்.. வழக்கம் போல.. அவள் புறக்கணித்தாள்..

## 3

"போஸ்ட் கிராஜுவேட் ஆகிவிட்ட.. ஓ.கே.. என் கம்பெனிக்கு நீ வரவேண்டாம்.. மாமாவைப் போல சிவில் சர்வீஸ் எக்ஸாம்களையாவது எழுது மாளவிகா..!"
"நோ சரண்.. நான் பி.எட். ஜாயின் பண்ணப் போறேன்.."
"டீச்சங் புரொபசனலை நான் குற்றம் சொல்லல மாலு.. ஆனால் உன் கண் முன்னால் இருப்பது இரண்டு பேர்.. ஒன்று மாமா.. அவர் ஐ.ஏ.எஸ். கலெக்டர்.. இன்னொன்று நான் எம்.ஈ.முடித்தவன்.. சாப்ட்வேர் இன்ஜினீயர்.. பெரிய கம்ப்யூட்டர் கம்பெனியின் முதலாளி.. எங்க இரண்டு பேரில் யாராவது ஒருவர் போல நீ ஆகக்கூடாதா..?"
"நான் ஏன் உங்களைப் போலவும்.. அப்பாவைப் போலவும் ஆகணும்..?"
"இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லச் சொல்கிற..?"
"கேள்வி கேட்டவருக்கு பதில் தெரியணுமா.. வேண்டாமா..?"
"ஓ.கே. உன் வழிக்கே நான் வருகிறேன்.."
"வேண்டாம் சரண்.. என்வழி தனிவழி.."
இத்தனை நாளும் அவளை மட்டும் நினைத்துக் கொண்டு காத்திருப்பவனின் கனல் வீசும் பார்வையைக் கண்டு கொள்ளாமல் பதிலளித்தாள் மாளவிகா..
"இதுக்கென்ன அர்த்தம்..?" அவன் முகம் ஜிவு ஜிவுத்தது...
"நீங்க வெரி டேலண்ட் பெர்சன்.. இதுக்கு அர்த்தம் தெரியாம இருப்பீங்கன்னு சொன்னா.. அதை நான் நம்பத் தயாராக இல்லை.."
"லுக் மாளவிகா.. நான் பெண்களைப் பார்க்காதவன் இல்லை.. வெளிநாடுகளிலும்.. இந்தியாவுக்குள் இருக்கிற

அத்தனை மெகா சிட்டிகளிலும் சுற்றி வருபவன்.. நான் பார்க்காத பெண்களா..?"
அவனது கேள்வி போகும் திசையை அறிந்து கொண்டவளின் முகம் மாறியது...
"அது எனக்குத் தெரிந்த விசயம்தானே.."
"உலக அழகிகளை மிஞ்சிய அழகிகள் என்னிடம் வேலை பார்க்கிறாங்க.."
"ஸோ.. வாட்..?"
"நீயென்ன.. அவங்களை விடப் பேரழகியா..?"
"உங்ககிட்ட வந்து நான் அப்படிச் சொன்னேனா..?"
"இருந்தும் நான் ஏன் உன் பின்னால் சுற்றுகிறேன்..?"
இந்த நேரடியான கேள்வியில் முகம் சிவக்க.. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..
அந்த முகத்தை முரட்டுத்தனமாகப் பிடித்து தன்பக்கம் திருப்பினான் சரண்..
"மனசுடி.. இந்த மனசை உன்மேல வைச்சுத் தொலைச்சிட்டேன்.. மாற்றி நினைக்க முடியலைடி.."
"சரண்.."
"உனக்கு என்ன மனசுக்குள்ள பெரிய ரதின்னு நினைப்பா..? உன் பின்னாலேயே 'ஜொள்ளு' விட்டுக்கிட்டு அலைகிறேன்னு நினைக்கறியா..?"
"அப்படி நான் சொன்னேனா..?"
"வாய் விட்டுச் சொன்னால்தானா..? உன் பேச்சும்.. நடவடிக்கையும் அப்படித்தானே இருக்கு.. சொல்லு.. உன் மனசுக்குள்ள வேற எவனாவது இருந்து தொலைக்கிறானா..?"
அடிபட்ட பார்வை பார்த்தாள் மாளவிகா.. அவளது பார்வையில் நிம்மதியானவன்.. கோபம் குறையாதவனாக - குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தான்..
அவர்கள் இருவரும் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.. மாலை மயங்கி, இருள்சூழ ஆரம்பித்திருந்த அற்புதமான அந்திப் பொழுது...
பகலின் வெம்மை மறைந்து.. இரவின் குளுமை ஆரம்பிக்கும் அழகான நேரம். கடல் காற்று இதமாக அவர்களின் உடலைத் தழுவியது.. இதையெல்லாம் சரண் உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை..

மாளவிகாவிற்கு அவனை அமைதிப் படுத்தும் விதம் தெரியும். ஒரு பார்வை.. ஒரேயொரு பிரத்யேகப் பார்வையை காதலுடன் அவள் பார்த்து விட்டாலே போதும். அவன் அமைதியடைந்து விடுவான்..
'ஆனால்.. அதற்குப் பின்னால்..?' அவள் பெருமூச்சு விட்டாள்..
அது அத்துடன் நிற்காது.. அவளுடைய சம்மத்திற்காக காத்திருக்கும் சரண் திருமணத்திற்கு வற்புறுத்துவான்.. அவனுடனான திருமணத்தை மாளவிகாவும் மனதிற்குள் மிகவும் விரும்பினாள்..
அவனது மனைவியாகி.. அவனுடைய குழந்தைக்கு தாயாவது எவ்வளவு பெரிய பாக்கியம்..?
அவளது மனதின் ஆசைகளை உணர்ந்தது போல.. அவர்களது வீட்டுக் காம்பவுண்டு சுவருக்கு அப்பாலிருந்த அயர்ன் வண்டிக்காரனின் எப்.எம். ரேடியோவில் பாட்டு ஒலித்தது..

"கையோடு கை சேர்க்கும் காலங்களே..
கல்யாண சங்கீதம் பாடுங்களே..."

மாளவிகாவின் கண்கள் கனவில் மிதந்தன.. அவள் முகம் பார்த்த சரணின் நடை நின்றது.. அவளது நினைவு புரிந்தவனின் கண்கள் மின்னின.. அவன் தாகத்துடன் அவளைப் பார்த்தான்..

"தெய்வீக பந்தம்
நாம் கொண்டாடும் சொந்தம்.
என்னுள்ளம் பொன்னென்று
எந்நாளும் நம்பு..."

அவள் விழிகள் இறைஞ்சின. அதற்காகவே காத்திருந்தவன் ஒரே எட்டில் அவளருகே வந்தான். விலக மனமில்லாமல் - ஒரு விம்மலுடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள் அவள்..

"நான் பூவோடும்.. பொட்டோடும்..
தாயாக வேண்டும்.. வேண்டும்.."

அவளின் கண்ணீர் அதிகமாக.. காரணம் புரியாமல் திகைத்தான் சரண்..
"என்னடி.." அவள் காதோரம் வினவினான்..
"வேண்டாம் சரண்.."

"எது வேண்டாம்.. நான் உனக்கு வேண்டாமா..?"
'இல்லை..' என்று அவள் மனம் கூவியது..
'நீ வேண்டும்.. காலமெல்லாம் உன் காலடியில் நான் வாழ வேண்டும்..'
நினைத்ததை வெளியில் சொல்ல முடியாமல் அவள் விம்மினாள்..
"மாளவிகா.." அவன் அதட்டினான்..
"மனதில் இருக்கிறதைச் சொல்லித் தொலைடி.."
"சரண்.. வாழ்க்கையைப் பற்றிய உங்கள் கண்ணோட்டம் வேறு.. என்னுடைய கண்ணோட்டம் வேறு.."
"அதுதான் தெரிந்த சங்கதியாச்சே.. இதுக்கா இப்படி அழுது வைக்கிற..? நான்.. என்னவோ.. ஏதோன்னு பயந்து விட்டேன்.."
"இல்லை சரண்.. நீங்க நினைப்பது போல்.. இது ஈஸியில்லை.."
"எது ஈஸியில்லை..?"
"நம்ம கல்யாணம்.."
"ஏன்..? நீயும் நானும் வேற ஜாதியா..?"
'ஜாதி ஒன்றாக இருந்தால் மட்டும் போதுமா..? கொடுப்பினை இருக்க வேணாமா..?'
"இல்லை.. நீ பெரிய பண்ணையார் மகள்.. நான் கூலிக்காரனா..?"
'இரண்டு பேரும் சம அந்தஸ்தில் இருந்து விட்டால் மட்டும்.. நினைத்ததெல்லாம் நடந்து விடுமா..?'
"நம்ம காதல் நிறைவேறாமல் போக என்ன காரணமிருக்கு..?"
'எல்லாமே இருந்தால் காதல் நிறைவேறி விடுமா..? தலைவிதின்னு ஒண்ணு இருக்கே.. அதை மறந்து விட்டிங்களா சரண்..?'
"என்னடி பேசாமல் இருக்கே.. டெல் மி த ரீஸன்.."
"நீங்க கோபித்துக்காம இருந்தா நான் சொல்கிறேன்.."
"நீ என் கோபத்திற்கு பயந்தவள்தான். பெரிசாய் பிலிம் காட்டாம விசயத்துக்கு வா.."
"எனக்கொரு லட்சியம் இருக்கு.."
"டீச்சராய் போகணுமுன்னுதானே.. ஓ.கே. நீ பி.எட்.படி.."

"அதுக்கும் மேலே.. நான் ஸ்கூல் நடத்த ஆசைப்படுகிறேன் சரண்.." மாளவிகா சொல்லிவிட்டாள்..
"வாட்..?" சரணின் கண்களில் கோபம் தெரிந்தது..
"உனக்கு உருப்படுற எண்ணமே இல்லையா..?"
"இதுக்குத்தான்.. இந்த மாதிரியான கேள்விகளை நீங்க கேட்டு வைப்பீங்கன்னுதான் நான் இதைப் பற்றியே உங்ககிட்ட பேசலை..."
"மாமாகிட்டப் பேசினயா..?"
"ம்ம்ம்.."
"எங்கே ஸ்கூல் கட்டப் போகிறீங்களாம்.."
"நம்ம தி.நகர் இடத்தில்.."
இதைச் சொல்லி விட்டு அச்சத்துடன் அவன் முகம் பார்த்தாள் மாளவிகா.. அவள் பயந்ததைப் போலவே அவன் முகம் மாறி விட்டது.. அவன் அவளை விலக்கி நிறுத்தி உறுத்துப் பார்த்தான்..
"ஆர் யு எ மேட்..?"
தன் லட்சியம் அவனால் பைத்தியக்காரத்தனமாக பார்க்கப்படும் என்று அறிந்திருந்தும்.. அவள் அவன் கேள்வியைத் தாங்கமுடியாமல் கண் மூடிக்கொண்டாள்..

## 4

"தி.நகர். பிஸினஸ் ஏரியா.. அங்கே ஒரு ஸ்கொயர் பீட் இப்ப என்ன விலைக்குப் போகுதுன்னு உனக்குத் தெரியுமா..?"
"தெரிந்து கொள்ள விரும்பலை.."
"இதைத்தான் அறிவுகெட்டதனம்ன்னு நான் சொல்கிறேன்.."
"சரண்.."
"உன் அப்பா உருப்படியாக உனக்கு சேர்த்து வைத்திருக்கிற பெரிய சொத்து.. இந்த வீடும்.. அந்த இடமும் தான்.. அந்த இடத்தில் போய் ஸ்கூல் கட்டணும்னு சொல்கிறயே.. கொஞ்சம்கூட நீ யோசிக்க மாட்டாயா..?"
"அது சென்டரான இடம் சரண்..."
"அதைத்தான் நானும் சொல்கிறேன்.. அதை விற்றால் எத்தனை கோடி போகுமுன்னு உனக்குத் தெரியுமா..?"

"எனக்கு பணத்தில் ஆசையில்லை.."
"இல்லாவிட்டால் எனக்கு அந்த இடத்தைக் கொடுத்து விடு.. நல்ல பிஸினெஸ் சென்டரான அந்த இடத்தில் ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டி விட்டேன்னு வை.. ஒரு தலைமுறைக்கும் உட்கார்ந்து சாப்பிடலாம்.."
இதை யாதர்த்தமாகத்தான் சொன்னான் சரண்.. பணத்தின் மதிப்புத் தெரியாமல் மாளவிகா இருக்கிறாளே என்ற ஆதங்கத்தில் தான் சொன்னான்..
ஆனால்.. அது மாளவிகாவின் மனதில் பதிந்து அடி ஆழத்தில் அமிழக்கூடும் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை..
மாளவிகா மௌனித்தாள்..
"என்ன உம்முன்னு ஆயிட்ட..? உன் இடத்தை நான் பிடுங்கிக்குவேன்னா..? எனக்கெதுக்கு உன் இடம்..? என் ஸ்டேட்டஸ்ஸிற்கு அதைப் போல ஆயிரம் இடத்தை நான் வாங்கிப் போடுவேன்.."
"நான் வாயே திறக்கவில்லையே.."
"இல்லைன்னா உன் மனதில் என்ன எண்ணம் ஓடுதுன்னு என்னால் கண்டுபிடிக்க முடியாதா..?"
"இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடலாம் சரண்.." அந்தப் பேச்சை அத்துடன் விட்டுவிட அவன் தயாராக இல்லை என்பது இரவு உணவின் போது வாசவனிடம் அவன் பேச ஆரம்பித்த போது மாளவிகாவிற்கும் புரிந்தது..
"மாலு.. ஏதோ சொல்கிறாளே மாமா.. அது உண்மையா..?"
"எது சரண்..?"
"ஸ்கூல் கட்டப் போகிறீங்களாமே.."
"யெஸ்.. யெஸ்.. தட் இஸ் தி ட்ரூ.."
"என்னோட ஒப்பினியனை நான் சொல்லலாமா மாமா..?"
"ஓ.. ஷியூர்.."
"அந்த இடத்தை விற்று விட்டு.. அவுட்டரில் இடம் வாங்கி ஸ்கூல் கட்டுங்க மாமா.. அதுதான் புத்திசாலித்தனம்.."
"அவுட்டரில் யாருக்காக ஸ்கூல் கட்டச் சொல்கிற சரண்..?"
"ஸ்கூல் கட்ட பணத்துக்கு என்ன செய்வீங்க..?"
"என் ஸேவிங்க்ஸ் இருக்கு.. மாளவிகாவின் நகைகள் இருக்கு.. பற்றாக்குறைக்கு பேங்க் லோன் இருக்கு.."

"இப்படிக் கஷ்டப்பட்டு.. இருக்கிற பணத்தை-யெல்லாம் தொலைத்து விட்டு கடனாளியாகி ஸ்கூல் கட்டணுமுன்னு என்ன அவசியம்..?"
"அது மாளவிகாவின் ஆம்பிசன் சரண்.."
"நீங்க உருவாக்கின ஆம்பிசன்தானே மாமா.. நீங்க சொன்னா அவ கேட்டுக்குவா.."
"கேட்டு..?"
"இந்த உருப்படாத ஆம்பிசனை தலை முழுகிட்டு-உருப்படுகிற வழியைப் பார்ப்பா.."
சாப்பிட்டுக் கொண்டிருந்த வாசவன் நிமிர்ந்து சரணை தீர்க்கமாகப் பார்த்தார்..
"என்ன மாமா..?"
"நீ மாளவிகாவை மதிக்கிறாய்தானே..?"
"இதிலென்ன சந்தேகம்..?" சரண் திகைத்துப் போனான்..
"அவளை மதித்தால் அவளுடைய ஆம்பிசனையும் மதி.. அதுதான் அவளுடைய உணர்வுகளுக்கு நீ கொடுக்கும் மரியாதை.."
"மாமா.. ப்ளீஸ்.. நான் அவளையும் உங்களையும் எந்த அளவுக்கு மதிக்கிறேன்னு உங்க மனச்சாட்சிக்கே நல்லாத் தெரியும்.. தி.நகர் இடத்தை விற்றால் நிறையப் பணம் கிடைக்கும். அதில் கால்வாசிப் பணத்தைப் போட்டாலே போதும்.. அவுட்டரில் இடம் வாங்கி ஸ்கூலையும் கட்டி முடித்து விடலாம். உங்க ஸேவிங்க்ஸ் குறையாது. மாளவிகாவின் நகைகளும் தப்பும். கடனாளியா ஆகவும் வேணாம். போதாக் குறைக்கு மீதிப் பணத்தை நல்ல முறையில் வேறு ஏதாவது ஒன்றில் இன்வெஸ்ட் செய்யலாம்.."
மனம் கேட்காமல் யோசனை சொன்னான் சரண்.. ஆனால் மாளவிகா குனிந்த தலை நிமிராமல்.. சாப்பிட்டுக் கொண்டிருக்க.. வாசவன் அவளைப் பார்த்து விட்டு.. சரணைப் பார்த்தார்...
"மாலு, இந்த இடத்தில்தான் ஸ்கூல் கட்டணுமுன்னு ஆசைப்படுகிறாள் சரண்.. ஸோ.. நான் வேறு ஐடியாவை யோசிக்கிறதாக இல்லை.."
"அவசரப்பட வேண்டாம் மாமா.. ஆற அமர யோசித்துப் பாருங்க.."

வாசவன் இதைக் கேட்டுக் கொண்டிருந்தபோதே..
"ஒரு வேளை.. என் நகையும்.. உங்க பணமும் போயிடுமோன்னு அவர் யோசிக்கிறார் போல இருக்கு அப்பா...!" என்றாள் மாளவிகா...
இது மறைமுகமான தாக்குதல். அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று நொடிப் பொழுதில் புரிந்து கொண்டான் சரண்..
அன்று மாலை அவன் மார்பில் சாய்ந்து விட்டவள்.. என்ன சொல்வாள் என்று புரியாத கைக்குழந்தையா அவன்.
அவனைத் திருமணம் பண்ணிக்கொள்ள அவளுக்கு நகை போட வேண்டியிருக்குமாம்.. அவளுடைய அப்பா வரதட்சணையாய் பணம் கொடுக்க வேண்டியிருக்குமாம்.
அது போய் விடுமோன்னு அவன் யோசிக்கிறானாம்..
சரண் அவளையே இமைக்காமல் பார்த்தான்.. மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டு நிலம் பார்த்தாள்..
"ஓகே மாமா.. அவள் இஷ்டம் போல செய்யுங்க.. இனிமேல் இந்த விசயத்தில் நான் தலையிட மாட்டேன்.."
முகம் இறுகச் சொல்லி விட்டு சட்டென்று எழுந்து கைகழுவச் சென்று விட்டான் சரண்..
அவனது கோபம் அவளைத் தீயாகச் சுட.. அசையாமல் அமர்ந்திருந்தாள் மாளவிகா..
இப்போது அவள் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தாள்..
அவன் பின்னால் சென்று கெஞ்சுதலாக பேசியிருக்க வேண்டுமோ..? அவன் கைபிடித்து பாதிச்சாப்பாட்டில் போகாதே என்று தடுத்திருக்க வேண்டுமோ..?
தனக்கு ஏன் இதையெல்லாம் செய்ய வரவில்லை என்ற நினைவுடன் அவளும் சாப்பிடாமல் எழுந்து கொண்டாள்..
நினைவு தெரிந்த நாளிலிருந்து பாசம் வைத்து.. பின்னர் காதல் வைத்து.. அவனிடம் தன் மனதை வைத்திருந்தவளுக்கு அதை வாய் விட்டுச் சொல்லத் தெரியவில்லையே...
தன் மனதை அவனிடம் ஒப்புக்கொள்ள வருடக் கணக்கில் தயக்கம் காட்டியவளுக்கு - மற்ற காதலிகளைப் போல.. அவனை வசீகரிக்கத் தெரியாமல் போனதில் ஆச்சரியம் எதுவுமில்லைதான்..

"என்னம்மா பாதிச்சாப்பாட்டில் எழுந்துட்ட..?" வாசவனின் கூர்மையான பார்வை அவள் மேல் படிந்தது..
"போதும்பா.." அவள் கண்கள் கலங்கின..
அவருக்கா மகளின் மனம் புரியாது.
கோபத்துடன் போகும் சரணையும் கண்கள் கலங்கச் செல்லும் மாளவிகாவையும் யோசனையுடன் பார்த்தவர் தானும் சாப்பிடாமல் எழுந்து கொண்டார்..
இரவுப் பொழுதின் குளுமை யார் மனதையும் தொடாமல் போக.. எப்போதும் இரவு நேரச் செய்திகளை தகப்பனாரின் அருகில் அமர்ந்து.. விவாதித்துக் கொண்டே பார்க்கும் வழக்கமுடைய மாளவிகா அன்று அதை மறந்தவளாக அவளுடைய அறைக்குப் போய் விட்டாள்..
மனதின் புழுக்கம் மறைய சரண் தோட்டத்தில் உலவப் போய்விட்டான்..
வாசவன் மட்டும் தனிமையில் அமர்ந்து செய்திகளைப் பார்த்தார். செய்தி முடியவும் தொலைக்காட்சியை அணைத்துவிட்டு தோட்டத்திற்குச் சென்றார். தோட்டத்து இருளில் சரண் உலவிக் கொண்டிருந்தது நிழலோவியமாக அவரது கண்களுக்குத் தெரிந்தது. படியிறங்கி..
அவனருகில் சென்றார்.
"சரண்.." மெதுவான குரலில் அழைததார்..
"மாமா.." சரணின் நடை நின்று விட்டது.
வாசவன் அவன் முகத்தைப் பார்த்தவாறு முன்னால் போய் நிற்க.. அவன் வியப்புடன் அவரைப் பார்த்தான்..
அந்த இருளிலும் அவரது பார்வையில் தெரிந்து கோரிக்கையை அவனால் கண்டு கொள்ள முடிந்தது..

## 5

அவர் அவனை வளர்த்தவர். யாருமற்று அவன் நின்றபோது... யாதுமாகி அவனை அரவணைத்தவர். நெருங்கிய ரத்த பந்தங்கள் விலகி நிற்க... ஒன்று விட்ட சொந்தத்திலும் ஒன்றுபட்டவர்.

இதுவரை அவர் அவனை நன்றிக் கடனில் சிக்கவைத்ததில்லை. தன் கருத்துக்களை அவன் மேல் திணிக்க முயன்றதில்லை. அவனுடைய முடிவுகளில் தலையிட்டதில்லை.
அவனுடைய பதினாறு வயதுப் பிராயத்தில் ஓர் அன்னையாக அடைக்கலம் கொடுத்தார். அவனது இருபதாம் வயதுப் பிராயத்தில் ஒரு பார்வையாளனாக விலகி நின்றார். அவனது இருபத்தி ஆறாம் வயதுப் பிராயத்தில் தோழனாக.. தோளில் கை போட்டார்.
அவரின் நிழலைப் பின்பற்றி இந்த வீட்டுப் படியேறிய அந்த நாள் முதல், இந்த நாள் வரை இந்த வீட்டில் ஒரு வினாடிப் பொழுதுகூட சரண் தன்னை அன்னியனாக உணர்ந்ததில்லை.
இயல்பாக வாசவனின் வீடு அவனை உள்வாங்கிக் கொண்டது. தன்னில் ஓர் அங்கமாக அவனை ஏற்றுக்கொண்டது.
அந்த வாசவனின் குரலில் தெரிந்த கோரிக்கை அவனைப் பதற வைத்தது.
அவனுடைய வாசவன் மாமா... அவனிடம் வேண்டி நிற்பதா...? அதை அவன் காது கொடுத்து கேட்பதா...?
"என்ன மாமா...?" என்று பதட்டத்துடன் கேட்டான்.
"ஏன் சாப்பிடாம வந்துட்டப்பா...?" அவர் ஆதுரமாக வினவினார்.
சரண் பதில் பேசவில்லை. அவன் மனம் சிணுங்குவதைப் புரிந்து கொண்டவராய் அவன் தோள் மீது கை போட்டுக் கொண்டார் வாசவன்.
"உனக்கு தெரியுமா சரண்... மாளவிகாவும் சாப்பிடவில்லை."
இதைக் கேட்டதும் சரணின் மனதில் இதமான தென்றலடித்தது. வழக்கம்போல.. இனம்புரியாத திருப்தியையும் கொண்டது.
"நீ எழுந்தவுடன்... அவளும் எழுந்து போயிட்டா..."
சரண் மௌனித்தான்.
"சரண்... நீ, நான் வளர்த்த பிள்ளை... மாளவிகா, நான் பெற்ற மகள்..."
"மாமா..."

"நீங்க இரண்டு பேருமே எனக்கு இரண்டு கண்கள் சரண்..." சரண் அதைக் கேட்டதும் நெகிழ்ந்து விட்டான். அவனால் பேச முடியவில்லை...

"உங்க இரண்டு பேருக்குள்ளேயும் நான் வித்தியாசத்தை பார்த்ததில்லை சரண்... வித்தியாசம் காட்டி வளர்த்ததுமில்லை..."

"இதை நீங்க சொல்லித்தான் நான் தெரிந்துக்கணுமா... மாமா..."

"என் இரண்டு கண்களில்... எந்தக் கண்ணுக்கு அடிபட்டாலும் வலி எனக்குத்தான் சரண்... இது உனக்குப் புரியுதா...?"

"மாமா..."

சட்டென்று வாசவனின் கைபிடித்துக் கொண்டான் சரண்... அவன் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

"ஒரு கண்ணுக்கு அடிபட்டால் இன்னொரு கண்ணுக்கும்... தானாக வலி உண்டாகும். மாமா... அதை நீங்களும் மறந்துட்டிங்களா...?"

"சரண்..."

"மாளவிகாவிற்கு துன்பம் ஏற்படுத்த மாட்டேன் மாமா. அவள் தானாக துன்பத்தை விலை கொடுத்து வாங்குகிறாளே என்ற வருத்தம்தான் எனக்கு... நீங்களும் இதைப் புரிந்தக்கணும்."

"வாழ்க்கையோ... வேலையோ... அது மனதுக்குப் பிடித்ததாக இருக்கணும் சரண்... அது ரொம்ப முக்கியம், மனம் விரும்பாத எதையும் செய்யக்கூடாது... இதுதான் என் கருத்து..."

"நான் சொல்கிறேன்னு தவறா நினைத்துக்காதீங்க... நீங்க உங்க மனதுக்குப் பிடித்த வேலையைத்தான் செய்துக்கிட்டு இருக்கீங்களா...?"

"இல்லைதான்... ஆனா இதை என் பேரண்ட்ஸ் விரும்பினாங்க. அவங்க மகன் ஒரு கலெக்டர்ன்னு செல்லிக்க ஆசைப்பட்டாங்க... நான் அவங்க கனவை நனவாக்கினேன்..."

"அவங்க செஞ்ச அதே தப்பைத்தானே மாமா நீங்களும் செய்கிறீங்க...? உங்க கனவை உங்க பெண் மேல திணித்திருக்கீங்க..."

சரண் சொல்லிவிட்டான். தன் நெடுநாளைய நினைவை சொல்லிவிட்டான். அவர் மீதான அவனது குற்றச்சாட்டை வெளிப்படுத்தி விட்டான்...
வாசவன் சரணை வியப்புடன் பார்த்தார். அவர் வார்த்தைகளில் ஆச்சரியம் இருந்தது.
"நீ இத்தனை நாளா இந்த நினைவோடதான் இருந்தியா சரண்...?"
"மாமா..."
"நான் என் கனவை ஒருநாளும் மாளவிகாவின் மேல் திணித்தில்லை... திணிக்கவும் மாட்டேன். உன் மனசில எதனால இப்படி ஒரு நினைவு வந்ததுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"
"உங்களின் கனவையும் கருத்துக்களையும் தினம்... தினம்... மாளவிகாவிடம் சொல்லிச்சொல்லி வளர்த்து விட்டிங்க மாமா... அது அவள் மனதில் பதிந்து விட்டது."
"அவளிடம் மட்டுமா நான் என் கனவைச் சொன்னேன்...? உன்னிடம் சொல்லவில்லையா...? நீ உன் வழியில் போகும்போது நான் அதை தடுத்தேனா...? இல்லையா..."
"நான் வேறு... மாளவிகா வேறு மாமா..."
"எனக்கு நீங்க இரண்டு பேருமே ஒன்றுதான் சரண்.. நான் சொன்னதை நீ கேட்டுக் கொண்டாய்... பட்... உன் கனவு வேறாக இருந்தது. மாளவிகாவும் கேட்டுக் கொண்டாள். அவள் கனவும்... என்கனவும் ஒன்றாக இருந்து விட்டது... அவ்வளவுதான்."
"நான் உங்கள் நிழலுக்கு வந்தபோது... எனக்கு பதினாறு வயது மாமா; மாளவிகா பிறந்ததிலிருந்து உங்க மடியில் வளர்கிறவள்."
"அப்படிச் சொல்லிவிட முடியாது சரண்... பெத்தவங்க கனவை பிள்ளைகள் அப்படியே ஏற்றுக்கிறது கிடையாது. எனக்குக்கூட என் வீட்டில் சொல்லிச்சொல்லித் தான் வளர்த்தாங்க. நான் விதியேன்னுதான் இந்த உத்தியோகத்தைப் பார்க்கிறேன் எனக்கு மட்டும் சுதந்திரம் கிடைத்து என் மனதைப் போல வாழ்க்கையை அமைத்துக்-கொள்ள முடிந்திருந்தால் விட்டுச் சிறகடித்திருப்பேன்."
சரண் பேசாமல் இருந்தான். தனது பேச்சு... அவனை அமைதிப் படுத்தவில்லை என்பதை வாசவனால்

புரிந்துகொள்ள முடிந்தது.
"என்ன சரண் பேசாமல் இருக்கிற...?"
"நான் பேசி என்ன ஆகப்போகிறது மாமா... இப்பவும் சொல்கிறேன். டீச்சிங் புரொபசனல் பிடித்திருந்தா... மாளவிகா தாராளமாக டீச்சராக வேலை செய்யட்டும். அதை விட்டுவிட்டு... ஸ்கூல் நடத்தப் போகிறேன்னு கிளம்புகிறது எனக்குப் பிடிக்கவில்லை..."
"அவள் அதை விரும்புகிறாளேப்பா..."
"இவள் ஏன் சுமையை இழுத்து விட்டுக்கணும்...?"
"சுதந்திரமாய் செயல்பட முடியும்ன்னு நினைக்கலாமில்லையா....?"
"அப்படி நினைத்தால்... நான் சொல்வதைப் போல... செய்யலாமே... அவளுக்கு தேவை ஸ்கூல்தானே... அதை எங்கே கட்டினால் என்ன...?"
"ஜனங்கள் இல்லாத இடத்தில் ஸ்கூல் கட்டுவதால் யாருக்கு என்ன பிரயோஜனம்...?"
"ஜனங்க கூடுகிற இடத்தில் பிஸினஸ் சென்டர் கட்டணும்... அதுதான் புத்திசாலித்தனம். அதை விட்டுட்டு ஸ்கூல் நடத்துவதால் யாருக்கு என்ன லாபம்..."
"இது கல்வி சம்பந்தப்பட்ட விசயம்... இதில் லாப நஷ்டக் கணக்குக்கு இடமே இல்லை..."
'ம்ஹூம்.. விடிய விடிய ஓதினாலும் என் மாமன் கீறல் விழுந்த ரிகார்டாக பேசியதையேதான் திரும்பத் திரும்ப பேசிக்கிட்டு இருப்பார். இந்தச் சொன்னதையே சொல்கிற கிளிப்பிள்ளைகிட்ட பேசுகிறதை விட்டுட்டு பேசாம தூங்கப் போகலாம்...'
"நல்ல மாணவர்களை உருவாக்கணும். அதுதான் இந்த நாட்டுக்கு நாம் செய்கிற உண்மையான தொண்டு..."
'ஊஹூம்... நீங்களும் உருப்படமாட்டிங்க... உங்க மகளையும் உருப்பட விட மாட்டிங்க.. தொண்டு செய்ய மகளுக்கு சொல்லிக் கொடுக்கிற தகப்பனை வைத்துக்கிட்டு... நான் என்னதான் பண்ணித் தொலைக்கிறது...?'
"மாறணும் சரண்... இந்த நாடு மாறணும்... கல்வியை வியாபாரம் ஆக்குகிற இந்த நிலைமை மாறணும்..."

'முதல்லே நீங்க மாறித் தொலைங்க மாமா. கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதிச்சாலும்-மாறவே மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சுக்கிட்டு நிற்கிற நீங்க... மாற்றத்தைப் பற்றிப் பேசுகிறீங்க...'
"ஒருநாள் என் மகள்... நினைத்ததை செய்து காட்டுவாள்..."
'இப்பவே அப்படித்தான் இருந்து தொலைக்கிறா... கொஞ்சமாவது சொன்ன பேச்சைக் கேட்கிறாளா...?'
"அவ சாதிக்கப் பிறந்தவள்..."
'ஊஹூம்... என்னை சோதிக்கப் பிறந்தவள்.'
"நீ வேணும்னா பார் சரண்..."
'இத்தனை நேரமா உங்க வாயைப் பார்த்துக் கிட்டுத்தானே மாமா இருக்கேன். இனியும் எதைப் பார்க்கச் சொல்கிறீங்க...?'
"நாளை விடியும் விடியல் நல்லதாகத்தான் விடியும்."
சரண் பொறுக்க மாட்டாமல் வாசவனைப் பார்த்தான். வளர்த்த கொடுமைக்காக இவர் இப்படி ஒரு மொட்டை ரம்பத்தைப் போடக்கூடாது என்று அவனுக்குத் தோன்றியது. அதை அவரிடம் சொல்ல முடியாமல்... பூம்பூம் மாடு போல தலையை ஆட்டிவிட்டுக் கிளம்பினான்.

## 6

மாளவிகா போர்டிகோவில்தான் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டும் காணாதவன் போல...
"யெஸ் மிஸ்டர் நசீர்... பிஸினஸ் லன்ச்சில் பேசிக்கலாம். ஓ.கே.. ஸீ யு லேட்டர்..." என்று பேசிக் கொண்டே கார் கதவைத் திறந்து டிரைவிங் சீட்டில் ஏறப்போனாள்.
"சரண்... ஒரு நிமிஷம்..." என்றாள் மாளவிகா.
சரண் நின்றான். அவளை அன்றுதான் அறிமுகமானவளைப் பார்ப்பதைப் போல... ஒரு பார்வை பார்த்து வைத்தான். கைக்கடிகாரத்தை பார்த்துக் கொண்டான்.
நேரமாகிறதாம்... சொல்ல வந்ததை அவள் சீக்கிரமாக சொல்ல வேண்டுமாம். அதை குறிப்பில் உணர்த்துகிறானாம்.

பட்டுக்கொள்ளாத அவனது நடவடிக்கையைக் கண்டு மாளவிகாவிற்கு கண்கள் கரித்தன.
எப்படி அவளைப் புறக்கணிக்கிறான்...? என்ன என்று வாய்திறந்து ஒரு வார்த்தை கேட்க மாட்டானாமா...?
முதல்நாள் மாலையில் அவளைத் தன் மார்பில் சாய்த்துக் காதல் சொன்னவனா இவன்...? என்ற சந்தேகம் அவளுள் எழுந்தது.
காதல் என்ற விலங்கால் அவளைப் பிணைக்க முயல்கிறானா...? அவளுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க மாட்டானா...? நான் சொல்வதை நீ கேட்டுக் கொள்ள வேண்டும். கேட்காவிட்டால் என்னோடு பேசாதே என்பது எந்த விதத்தில் நியாயமாகும்...?
"நான் உங்களிடம் பேச வேண்டும்..."
"பேசு..." என்றான் அவன் ஒற்றைச் சொல்லாய்...
"காரில் போய்க்கிட்டே பேசலாமே... எனக்கு லிப்ட் கொடுக்கமாட்டிங்களா....?"
"உன் கார் என்ன ஆச்சு...?"
"ரிப்பேர்..."
"புதுசாய் வாங்கினால் ஒழுங்காக வேலை செய்யும். காயலான் கடைக்குப் போக வேண்டியதை செகண்ட் ஹேண்டாய் வாங்கினால் இப்படித்தான் மாதத்தின் முப்பது நாளும் ரிப்பேர் ஆகும்..."
"எங்க பட்ஜெட்டிற்கு அதுதான் முடியும்."
"நான்தான் வெளிநாட்டுக் காரை வாங்கிக் கொடுத்தேனே..."
மாளவிகா மௌனமாக-சரண் பல்லைக்கடித்தான்.
"இதுக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டியே..."
"எனக்கு காலேஜுக்கு நேரமாச்சு...."
"போகலாம். காரில் ஏறு..."
காரை மிதமான வேகத்தில் ஓட்டியபடியே... மாளவிகாவை திரும்பிப் பார்த்தான் சரண்...
அழகாக இருந்தாள். பட்டு ரோஜா வண்ணத்தில் சந்தனநிறப்புள்ளிகள் வைத்த சுடிதார் அணிந்து சந்தனநிறத்தில் துப்பட்டாவைப் போட்டிருந்தாள்.
காற்றில் அவளது கேசம் அலைபாய... அதைக் கண்ட சரணின் மனமும் அலைபாய்ந்தது.

"பேசணும்னு சொன்னே... பேச்சு வரலையா?" என்று வம்புக்கு இழுத்தான் அவன்.
"ஐ ஆம் ஸாரி..."
அவள் இதை மெதுவான குரலில் சொன்னதும் அவன் மனம் லேசாகி விட்டது.
"எதுக்கு...?" என்றான் புரியாதவனைப் போல...
"நான் அப்படிப் பேசியிருக்கக்கூடாது...."
"எப்படி...?"
"பணத்தையும் நகைகளையும் பற்றிப் பேசியிருக்கக் கூடாது.."
"என்னைப் பற்றிய உன் மதிப்பீட்டைச் சொன்னாய்... அதுக்கு ஏன் வீணாக ஸாரி சொல்கிற..."
அவனின் குத்தல் மொழி அவளுக்குப் புரிந்தது. மனம் கனத்தது...
"தெரியாமல் சொல்லிட்டேன்..."
"மனதில் இருக்கிறதுதானே வார்த்தையாய் வரும்..."
"எனக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை..."
"பேய் பிடிச்சிருக்கு..."
சரண் இதை நிதானமாகச் சொன்னான்...
"உனக்கு பேய் பிடிச்சிருக்குடி... லட்சியப் பேய்.. உன் லட்சியத்துக்கு குறுக்கே யார் வந்தாலும் உன் பார்வைக்கு அவங்க வில்லன்களாகத்தான் தெரிவாங்க..."
"வில்லனா நினைக்கிறேனா... உங்களையா...?"
"ஆமாம்... அதனால்தானே... உனக்காக வைரங்களை வாங்கிக் குவிக்கிறவனிடம் நகைக்கு ஆசைப்படுவதாகச் சொல்வாய்... உன் யெரில் ஃபாரின் கார் புக் பண்ணு-கிறவனைப் பார்த்து உன் பணத்துக்காக பல்லைக் காட்டுவதாகச் சொல்லுவாய்..."
"தெரியாமல் ஒருவார்த்தை வந்துவிட்டால்... நீங்க அதைப்பிடித்துக் கொண்டே தொங்குவீங்களா...?"
"நீ நல்ல மூடில் இருந்தால்... நல்ல விஷயம் பேசுவாய்... நான் உடனே உன்னிடம் பல்லைக் காட்டணும்.. உன் பேச்சுக்கு எதிராய் நான் பேசிவிட்டால்.. எக்குத்தப்பாய் பேசிவைப்பாய். அதை சொரணை கெட்டதனமாக கேட்டுக்கணும்... அப்படித்தானே மாளவிகா...?"
"சரண்..."

"நீ சிட்டுக்குருவிடி... நீ விட்டுச் சிறகடிக்கணும்... பனங்காயை தூக்கி உன் தலையில் வைத்துக் கொள்ளக்கூடாது... அவ்வளவுதான் நான் சொல்வேன்... அதுக்கு மேல உன் இஷ்டம்... உன் காலேஜ் வந்துருச்சு... இறங்கு..."

மாளவிகா இறங்குவதற்கு முன்னால் தயங்கித் திரும்பிப் பார்த்தாள்.

"என்ன?" அவன் புருவம் உயர்த்தினான்.

"ஸாரி..." அவள் மீண்டும் கொஞ்சும் குரலில் கூறினாள்.

அவன் மனதில் இதம் படர்ந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெறுமையான பார்வை யொன்றை பார்த்து வைத்தான்.

"ஹாய் மாளவிகா..."

அவளுடைய தோழி ஆஷா, குனிந்து காருக்குள்ளிருந்த சரணைப் பார்த்தபடி... மாளவிகாவிற்கு 'ஹாய்' போட்டாள்.

"ம்ம்ம்..."

மாளவிகா முகம் சுருங்கி... இறங்கப் போனாள். அதற்குள்-

"ஹாய் சரண்..." என்றாள் ஆஷா.

"ஹாய்..." என்று பதிலுக்குச் சொன்னான் சரண்.

"யு லுக் வெரி ஹேண்ட் சம் டு டே.." அவள் வழிந்தாள்.

"ஈஸிட்? அப்போ... நேற்று நான் நல்லா இல்லையா?" அவன் கேலியாக சிரித்தான்.

"நோ... நோ... யு ஆர் ஆல்வேஸ் ஹேண்ட்சம்ய்யா..." அவள் அவசரமாக மறுத்தாள்.

மாளவிகாவிற்கு சகிக்கவில்லை. அவள் ஆஷாவை முறைத்தபடி...

"கொஞ்சம் தள்ளிக்கிறயா... நான் கார் கதவைத் திறக்கணும்..." என்று கடுப்பாகச் சொன்னாள்.

"பொறேண்டி... இப்பவே காலேஜுக்குள் போய் என்ன வெட்டி முறிக்கப் பேகிற...? கிளாஸ் ஆரம்பிக்க இன்னும் நேரமிருக்கு..." என்றாள் ஆஷா...

"இதோ பார்... நீ என் அத்தானிடம் எதையாவது 'ஜொள்ள' வேணும்னா... தாராளமா 'ஜொள்ளு'. அவரும் பதிலுக்குப் பதில் 'ஜொள்ளு'வார்... அதை விட்டுவிட்டு ஊடே என்னை உட்கார வைத்துக்கிட்டு 'மாட்டாடும்' வேலையையெல்லாம்

வைத்துக் கொள்ளாதே. எனக்கு இந்த மீடியேட்டர் வேலையே பிடிக்காது."
மாளவிகா இறங்கி காலேஜிற்குள் வேகநடையுடன் சென்று விட... சரண் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். மையலுடன் அவன் முகம் பார்த்து,
"அவ ரொம்ப சார்ட் டெம்பர் சரண்..." என்றாள் ஆஷா.
"பட் ஐ லவ் ஹெர் ஸோ மச்" என்று கூறிக்கொண்டே காரை ஸ்டார்ட் செய்து விட்டான் சரண்.
கம்பெனிக்குள் நுழைந்ததும்... வேலைகள் காத்திருக்க... மாளவிகாவை மறந்து விட்டான்.
"சார்... இன்றைக்கு நீங்க மிஸ்டர் நஸீருடன் பிஸினஸ் லன்ச்சை அட்டண்ட் பண்ணவேண்டும்..."
அவனுடைய செக்ரக்டரி நீபா... கூறினாள்.
"காலையிலேயே அவரை இன்வைட் பண்ணிட்டேன். ஐ ரிமம்பர் இட்." அவளது முகத்தைப் பார்க்காமல் கம்ப்யூட்டர் திரையில் கண் பதித்திருந்தான் சரண்.
அறையை விட்டு நீபா வெளியேற... ஊர்வசி உள்ளே நுழைந்தாள்.
"குட் மார்னிங் சார்..."
"மார்னிங்... வாட் ஸ் தி மேட்டர்...?"
"என் டீம் சரியில்லை சார்..."
"நீங்கதானே டீம் லிடர்...?"
"யெஸ் சார்..."
"நீங்கதான் டீமை சரி பண்ணணும்..."
அடுத்த அரைமணி நேரம் ஊர்வசி, சரணுடன் விவாதித்தாள். அவளது முகத்தை கண்டிப்பான தோரணையுடன் பார்த்தபடிதான் பேசினான் சரண்.

7

சரணைக் கவர்ந்திழுக்க பல பெண்கள் முயன்றனர். சரண் பிடி கொடுத்ததில்லை. அவனே மாளவிகாவிடம் சொன்னதைப் போல... அவன் பெண்களை அறியாதவன் அல்லதான்.

ஆனால்... அவனுடைய மனக் கதவு.. அந்தப் பெண்களில் யாருக்காகவும் திறந்து கொண்டதில்லை. வெளிநாடுகளில் பறந்து கொண்டிருக்கும் அவன் சில பழக்கங்களுக்கு ஆட்பட நேர்ந்தது. அதில் எந்தப் பழக்கமும் அவனது இதயத்திற்குள் நுழைந்ததில்லை.
அந்த அளவிற்கு யாருடனும் அவனால் பழக முடியவில்லை. அவனது மனக்கதவை தட்டும் வல்லமை... மாளவிகாவிற்கு மட்டுமே இருந்தது அவனது இதயத்தில் புகுந்து விடும் திறமையும் அவளுக்கு மட்டுமே இருந்தது.
அவன் மனதில் மாளவிகாவிற்கு மட்டுமே இடம் இருந்தது... மற்றவர்கள் அதில் இடம் பிடிக்க முயன்று தோற்றார்கள்.
மாளவிகா அவளுடைய காதலை... வாய் வார்த்தையால் முதல்நாள் மாலை வரை ஒப்புக்கொள்ளவில்லை.
முதன்முதலாக அவள் அதை ஒப்புக்கொண்டவுடனே அவர்களுக்குள் மனப்பிணக்கு ஏற்பட்டு விட்டது.
அவன் பேசிவிட மாட்டானா என்ற ஏக்கத்துடன் அவன் முகம் பார்த்து... சுற்றிச் சுற்றி வந்த மாளவிகாவின் முகம் அன்று மாலையில்தான் நினைவுக்கு வர... சரண் கம்ப்யூட்டரை அணைத்து விட்டு எழுந்து கொண்டான்.
'கார்... ரிப்பேருன்னு சொன்னாளே...'
மாளவிகாவின் கல்லூரி வாசலுக்கு அவன் போவதற்கும்... யாரோ ஒரு பெண்ணிடம் பேசியபடி மாளவிகா கல்லூரியை விட்டு வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.
சரணின் காரைக் கண்டதும்.. அவளது முகமும் கண்களும் ஒளிர்ந்ததைப் பார்த்தபடி கார் கதவைத் திறந்து விட்டான் சரண்.
"பை... நீலா..."
மாளவிகா காரில் ஏறிக்கொண்டாள். கார் கிளம்பியது.
"ஆஷாவை விட்டுவிட்டு நீலாவைப் பிடித்துக் கொண்டு விட்டியா... ஆஷா என்னவானாள்..?" என்று விசாரித்தான் சரண்.
"அவளை என்றைக்குமே எனக்குப் பிடித்ததில்லை. அவள் கூடவெல்லாம் நான் நின்றுகூடப் பேசமாட்டேன்..."
"இன்றைக்கு காலையில் பேசினயே..." சரண் பேச்சை விடாமல் இருக்க மாளவிகா அவனை முறைத்தாள்.

"அவகூட யார் பேசினது.. நீங்களா... இல்லை நானா...?"
"போச்சுடா... நீயா நானான்னு கோபிநாத்தைப் போல கேட்க ஆரம்தபிச்சுட்டியா... கொஞ்சம் மனச்சாட்சியோட பேசு மாளவிகா..."
"மனச்சாட்சியில்லாம பேசறது நீங்களா... இல்லை நானா...?"
"திரும்பவும் கோபிநாத்தா...லுக் மாலு... நானா அவளைத் தேடி வந்தேன்...?"
"காலையில்ன்னா நீங்க சொல்றதை ஏத்துக்கலாம்..."
"ஏன் ஈவினிங்கில் அதை ஏத்துக்க கூடாதுன்னு சட்டமிருக்கா..?"
"ம்ம்ம்... என் கார் ரிப்பேருன்னு என்னைக் காலேஜில் கொண்டு வந்து விடச்சொல்லி... காலையில் நான் கேட்டுக்கிட்டேன்..."
"இதுவாவது நினைவில் இருக்கே... பிழைத்தேன். உன்னைக் கொண்டு வந்து விட வந்தேன். அந்த ஆஷா வந்தாள். 'ஹாய்'ன்னாள்... நானும் 'ஹாய்'ன்னேன். இது ஒரு தப்பா?"
"உங்க லெவலுக்கு இதெல்லாம் ஒரு தப்பேயில்லைதான்..."
அவள் எங்கே வருகிறாள் என்று புரிந்து போக... சரண் திரும்பி அவளையே பார்த்தான்.
"நீ மட்டும் எனக்கு கழுத்தை காலாகாலத்தில் நீட்டியிருந்தா இப்படி ஒரு கேள்வியை நீயும் கேட்டிருக்க மாட்ட... நானும் பதில் சொல்லிக்கிட்டு உட்கார்ந்திருக்க மாட்டேன்.."
இப்போது அவன் எங்கே வருகிறான் என்று மாளவிகாவுக்கு புரிந்து போக... அவள் உடல் சூடேற உதட்டைக் கடித்துக் கொண்டு முகம் சிவந்தாள்.
தன் லஜ்ஜையை அவன் உணர்ந்து கொண்டு விடுவானோ என்ற தவிப்புடன் அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.
அவனா... அதை உணர மாட்டான்..? கள்ளச் சிரிப்புடன் அவளது கன்னச் சிவப்பை ரசித்தவாறு-
"என்னடி பேச்சையே காணோம்..." என்று விசாரித்தான்.
"காலையில் 'ஹாய்' போட்டதுக்கு காரணம் சொல்லிட்டிங்க. ஈவினிங் அவளைத் தேடிக்கிட்டு வந்ததுக்கு என்ன சொல்லப் போகிறீங்களாம்.."

"இது அபாண்டம் மாளவிகா... உன்னை கூப்பிட்டுக் கிட்டு போக வந்தவனைப் பார்த்து கேட்கிற கேள்வியா இது...?"
"அந்த நினைப்புக்கூட உங்க மனசில் இருக்கா...?"
"உன் நினைப்பு என் மனசில் இல்லாம இருந்தால்தான் நீ ஆச்சரியப்படணும்..."
மீண்டும் அவள் முகம் சிவக்க...
'இவளுடைய வெட்கம்தான் எத்தனை அழகாக இருக்கிறது...?' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் சரண்.
'ஒருவார்த்தை 'ம்'ன்னு சொல்லமாட்டேன்கிறாளே... அப்படிச் சொல்லிட்டால்... உடனே இவள் கழுத்தில் தாலியைக் கட்டி... நான் போகும் இடத்துக்கெல்லாம் கூப்பிட்டுக் கொண்டு பறந்து விடுவேனே...' மனம் தாளாமல் வெதும்பினான்.
அவனுக்குத் தெரியும் - அவன் அப்படிச் செய்து விடுவான் என்றுதான் மாளவிகா மௌனிக்கிறாள் என்பது.
அவளே சொன்னதைப் பேல... அவளின் வேர் சென்னையில் இருந்தது. அவனின் வேரோ அவளிடம் இருந்தது.
அந்த ஒரு காரணத்திற்காகத்தான்.... எங்கே சுற்றினாலும் அவன் அவளிடமே திரும்பி வந்தான்.
"ஈவினிங்... அவகிட்ட கடலை போட வந்ததுக்கு இது ஒரு சாக்கு..."
"கம்ப்யூட்டர்காரனிடம் கடலையைப் பற்றிப் பேசுகிற... அவளெல்லாம் பெரிய இவள்.. அவகிட்ட கடலை போட நான் அலைகிறேன்.... 'ஹாங்காங்' காரனை மீட்பண்ண வேண்டியிருந்தது. அந்த மீட்டிங்கை கேன்சல் பண்ணிட்டு உன்னைக் கூப்பிட ஓடோடி வந்தேன் பாரு... நீ இதுவும் பேசுவ... இதுக்கு மேலயும் பேசுவ..."
சரணின் வார்த்தைகளில் அப்பட்டமான கோபம் தெரிந்தது.
மாளவிகாவிற்குத் தெரியும் - அவனது மனத்தாங்கலுக்கான காரணம் கடலை போடுவதைப் பற்றிய பேச்சினால் அல்ல என்பது.
அவனுடைய உடலும்... மனமும் மாளவிகாவின் அண்மையைத் தேடுவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

புரிந்தும் புரியாதவளைப் போல... அவள் விலகி நிற்பதுதான் அவனுடைய கோபத்தை அதிகப் படுத்திக் கொண்டிருக்கிறது.
அவனது மனச் சிணுங்கலை சரி செய்யும் வல்லமை தனக்கு மட்டுமே உண்டு என்பதை மாளவிகா அறிவாள். அவனை எப்படிச் சமாதானம் செய்வது... என்று மனம் குறுகுறுக்க... காரிலிருந்த சிடியை ஒலிக்க விட்டாள். சரணுக்கு பிடித்த பாடல் ஒலிக்க ஆரம்பித்தது. அவன் முகம் மென்மையாக குறும்புப் பார்வையுடன்... அவள் அவனைப் பார்த்து... புருவம் உயர்த்தினாள்... அவன் கண்கள் மின்ன.. அவளைப் பார்த்தான்.

"தாமரைப் பூவுக்கும்
தண்ணிக்கும் என்னைக்கும்.
சண்டையே வந்ததில்லை.
மாமனை அள்ளி நீ...
தாவணி போட்டுக்க
மச்சினி யாருமில்லை..."

பாடலைக் கேட்டவன் வாய் விட்டுச் சிரித்தான்

"கம்மங் கூழில் போட்ட உப்பு...
கஞ்சியெல்லாம் சேர்தல் போல...
கண்டபோதே இந்த மூஞ்சி...
நிறைஞ்சு போச்சு நெஞ்சுக்குள்ள..."

மாளவிகா கன்னம் சிவக்க... அந்தப் பாடலுடன் சேர்ந்து பாடினாள். இப்போது அவன் முகம் முற்றிலும் கனிந்து விட்டிருந்தது. வலது கையில் காரை ஓட்டியபடி.. இடதுகரத்தால் அவள் கன்னம் தொட்டான்.

"சொந்தக்காரன் நான்தானே...
தொட்டுப் பார்க்கக் கூடாதா...?"

அவள் தட்டி விட்டதும்... அவன் பாடலின் வரிகளை கண்களால் கேட்டான்.

"கன்னம் தொடும் கை ரெண்டும்
மேலே கொஞ்சம் நீளாதா...?"

அவள் அதே பதில் வரிகளை கண்களால் சுட்டிக் காட்டினாள்.

"இந்த நாட்டில் தீண்டாமைதான்
இன்னும் உள்ளதா...?"

அவன் காரை நிறுத்தியே விட்டான். அவளை நெருங்கி அமர்ந்தான்.

"வயசுக்கு வந்த பூ...
ஆசையே பேசுமா...?
வண்டுக்கும்... பூவுக்கும்.
சண்டையா சத்தமா?"

மாளவிகா அவனது கைகளை இப்போது மறுக்கவில்லை. மனதில் இருந்த காதலின் கனல் தாங்காமல் எங்கெங்கோ சுற்றியவன், அவளது மௌனத்தில் இதம்கண்டு... அவள் கன்னத்தில் இதழ்பதித்தான்.

## 8

"மாளவிகா..."
"ம்ம்ம்..."
"நாம கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்டி..."
சரணின் வார்த்தைகளில் அளவற்ற தாபம் இருந்தது. மாளவிகா பதில் சொல்லவில்லை. சட்டென்று அவன் கோபப்பட்டு விலகி அமர்ந்தான்.
"த்சு... உன்கூட இதுஒண்ணு இருக்குடி... கல்யாணத்தைப் பத்தி மட்டும் பேசினா... பிடிகொடுக்கமாட்ட..."
"அப்படியில்லை சரண்... நான் அதைப்பத்தி இன்னும் யோசிக்க ஆரம்பிக்கலை..."
"இப்ப யோசிக்காம... பின்னே எப்ப யோசிக்கப் போகிற...? பெண்களின் கல்யாண வயது இருபத்தி ஒண்ணுன்னு சட்டம் சொல்லுது... உனக்கு இருபத்தி ஒருவயசாகலையா...?"
"எனக்குன்னு லட்சியம் இருக்கு..."
"உனக்குன்னு நானில்லைன்னு சொல்கிற..."
"நான் அப்படிச் சொன்னேனா...?"
"நீ சொன்னதுக்கு இப்படியும் ஒரு அர்த்தமுண்டு."
"இப்படி குதர்க்கமாவே யோசிச்சா நான் என்ன பண்ண...?"
"ஏய்ய்.. உனக்கு என்னைப் பிடிச்சுத் தொலைக் கலைன்னா பரவாயில்லைடி.. பிடிக்குது. என்னை உனக்கு ரொம்ப

பிடிச்சிருக்கு. அது உன் கண்ணில் தெரியுது. அப்புறமும் ஏண்டி பிடிவாதம் பிடிக்கிற...?"
"சரண்..."
மாளவிகாவின் குரலில் இறைஞ்சல் இருந்தது. அவன் தோளில் அவள் தலை சாய்த்துக் கொண்டாள். அந்த செயலில் கோபம் இறங்கிய சரண் பேசாமல் இருந்தான். பின் மனத்தாங்கலுடன் கேட்டான்.
"ஏண்டி என்னை இப்படி சித்திரவதை செய்கிற...?"
"கொஞ்ச நாள் சரண்... எனக்கு கொஞ்ச நாள் கொடுங்க..."
"என்னைக் கொஞ்ச உனக்குக் கொஞ்ச நாள் வேணுமா...?"
'இவன் அதிலேயேதான் நிற்பான்...' அவள் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.
"நான் ஸ்கூல் கட்டணும் சரண்.."
"கட்டி...?"
"ஸ்கூல் நடத்தணும்..."
"நடத்தி...?"
"அதில் சக்ஸஸ் பண்ணிக்காட்டணும்..."
"அதுக்குள்ள... நான் தடியூண்டி நடக்கிற கிழவனாகிடுவேன்... அதுக்கப்பறம் நாம கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னத்தை கிழிக்கப் போகிறோம்...?"
"அவ்வளவு தூரத்துக்கு என் திறமை மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லாம போய் விட்டதா...?"
"ஏண்டி... அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பாவாகட்டும்ன்னு நீ கதை சொல்லலாம். அது வேண்டாம்ன்னு நான் அப்ஜெக்ட் பண்ணக் கூடாதா...?"
"எண்ணி இரண்டே வருசம் போதும் சரண்... நான் சாதித்துக் காட்டுகிறேன்... அதை மட்டும் எனக்கு கொடுங்க..."
"இரண்டு வருசத்தில் நீ கோட்டையை பிடித்து கொடியை நாட்டி விடுவாயா...? நெவர்..."
"குடுத்துத்தான் பாருங்களேன்.."
"ஒரு வேளை உன்னால் முடியலைன்னா...?"
"நான் வாயைத் திறக்காமல் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்க பின்னாடி வந்திடுவேன்..."
"வார்த்தை மாற மாட்டாயே..."
"இந்த மாளவிகா சொன்னால்... சொன்னதுதான்..."

சரணின் முகத்தில் சந்தோசம் மீண்டது... அவன் சன்னமாக விசிலடித்தபடி காரை ஓட்டினான்.
வாசவன் மகளின் ஆசைப்படி.. கட்டிட வேலைகளை ஆரம்பித்து விட்டார். மாளவிகா பி.எட். படிப்பில் சேர்ந்து விட்டாள். அவளது பயிற்சி காலம் முடிவதற்கும் கட்டிடம் பூர்த்தியாகவதற்கும் சரியாக இருந்தது.
'வாசவன் ஹையர் செகண்டரி ஸ்கூல்' ஆரம்பமாகி விட்டது.
"ஊரெல்லாம் மெட்ரிகுலேசன் ஸ்கூல் ஆரம்பிக்கிறாங்க. நீ ஸ்டேட்போர்டு சிலபஸிலேயே நிற்கிற..." சரண் எரிச்சல் பட்டான்...
"எல்லோருக்கும் கல்வி, இதுதான் என் லட்சியம் அதுக்கு ஸ்டேட் போர்டுதான் பெட்டர் வே..." மாளவிகா அமைதியாகச் சொன்னாள்.
"எல்லாத்துக்கும் உன்னிடம் பதிலிருக்கும். என்னவோ செய்து தொலை.. ஆனால்... இரண்டு வருசம்தான் உனக்கு நான் கொடுத்திருக்கும் சாதனைக்கான டைம்... நினைவிருக்கில்ல..."
"நினைவிருக்கு... நிச்சயம் அதற்குள் நான் ஜெயித்துக் காட்டுவேன்."
"ஜெயித்தால் சரி... தோற்றால் இன்னும் சரி..."
ஆனால்.. சரணின் கணிப்பு பொய்த்தது... மாளவிகா ஜெயித்துக் காட்டினாள். முதல் வருடத்திலேயே அவளது பள்ளிக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டது. இரண்டாம் வருடத்தில் அந்தப் பகுதியில் பெயர் பெற்ற பள்ளியாக அது மாறியது.
"எப்படி உன்னால் இது முடிஞ்சது...? இரண்டே வருசத்தில் இவ்வளவு பெரிய வெற்றியா...? உன் ஸ்கூலில் குழந்தைகளைச் சேர்க்க எல்லாரும் இன்ட்ரெஸ்ட் காட்டறாங்களே..." சரண் ஆச்சரியப்பட்டான்.
"இப்பவாவது நான் தோற்றுப் போகமாட்டேன்னு நம்பறீங்களா...?"
"எல்லாத்தையும் ஜெயிக்கிறாய். என்னை ஜெயிக்க மட்டும் யோசிக்கறயே..." சரணின் கண்களில் தாகம் தெரிந்தது.
"ஸ்ஸ்... இது ஸ்கூல்..." மாளவிகா முகம் சிவந்தாள்.
"ஸ்கூல்தான்... யாரு இல்லேன்னது? இப்ப நான் என்ன செய்தேன்...? உன்னைக் கையைப் பிடித்த இழுத்தேனா..

கன்னத்தில் முத்தமிட்டேனா...? இல்லை..." சரண் அதையெல்லாம் செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கத்தோடு சொல்லிக் கொண்டே போக... மாளவிகா அவசரமாக இடைமறித்தாள்.
"பஸ்... பஸ்..."
"என்னது பஸ்ஸா...?"
"பஸ்... பஸ்ன்னு சொன்னா... போதும்... போதும்ன்னு அர்த்தம்.."
"இதுக்கெல்லாம் அர்த்தத்தைக் கண்டுபிடி... நான் சொல்கிறதில மட்டும் எதையும் கண்டு பிடிக்காதே.."
"ஊஹூம்...?"
மாளவிகா ஒற்றைப் புருவத்தை மேலே உயர்த்தி, மையலுடன் அவனைப் பார்க்கவும்... சரண் ஆச்சரியப்பட்டுப் போனான்.
"ஏய்ய்... இது நீhயடி... உனக்கு இதெல்லாம் கூடத் தெரியுமா...?"
"உஸ்ஸ்... சத்தம் போடக்கூடாது... இது ஸ்கூல்..."
மாளவிகா உதட்டில் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தாள்.
"ம்ஹூம். ஒரு நிமிடம் என் காதலியா இருக்கிற... மறுநிமிடமே டீச்சரம்மாவா ஆயிடற... நீ மல்ட்டி பெர்ஸனாலிட்டி கேரக்டர்டி... உனக்கு மாளவிகான்னு பெயர் வைத்திருக்கக்கூடாது. அந்நியன்னு பெயர் வைத்திருக்கணும். எதுக்கும் என்கூடவா..."
"எதுக்கு...?"
"அதுக்கு ஏண்டி இவ்வளவு சந்தேகமா பார்த்து வைக்கிற...? ஒரு நல்ல டாக்டரைப் பார்த்து செக்-அப் பண்ணிக்கத்தான்..."
மாளவிகா அவனை முறைக்க ஆரம்பிக்கவும்... அவன் கைகளை உயர்த்தி
"அம்பேல்..." என்றான்.
"உங்களைப் போய் என்னால் ஜெயிக்க முடியுமா சரண்...?"
"ஏண்டி... உனக்கு அந்த ஆசையே வந்து தொலைக்காதா...?"
"ஐயய்யோ... நீங்க ஜெயிக்க முடியாத வல்லவர்ன்னு சொல்ல வந்தேன். நீங்க என்னடான்னா... இப்படி பேசி வைக்கறீங்க..."

சரண்... மாளவிகாவிற்கும் அவனுக்கும் இடையே இருந்த மேஜையின் மேல் கைகளை ஊன்றி அதில் முகம் பதித்து அவளைப் பார்த்து கண் சிமிட்டினான்..
அவன் என்னவோ சொல்லப் போகிறான் என்ற நினைவில் அவளது கன்னங்கள் சூடேறின..
"என்னை உன்னால் ஈஸியா ஜெயிக்க முடியும்டி.. டிரை பண்ணித்தான் பாரேன்.."
"ச்சீ.."
மாளவிகா தன் கையிலிருந்த செல்போனை.. அவனை நோக்கி விட்டெரிய...
"கேட்ச்.." என்று அதைப் பிடித்தான் சரண்..
அவளின் செல்போன் ஒலித்தது. 'வாசவன் அழைக்கிறார்..' என்ற வாசகம் ஒளிர...
"மாமாதான்.." என்றபடி அவளிடம் போனை நீட்டினான். செல்லமாக அவனை முறைத்தபடி போனை வாங்கி காதில் வைத்த மாளவிகாவின் முகம் மாறியது. பதட்டத்துடன் சீட்டை விட்டு எழுந்தாள்..
"வாட்..? எங்கே..? எப்போது..?" என்று கேட்டபடி மயங்கிச் சரிந்தாள்..
"மாளவிகா.." என்றபடி அவளைத் தாங்கிக் கொண்ட சரண்.. அவள் நழுவவிட்ட போனை எடுத்துக் காதில் வைத்தான்..
"ஹலோ.. ஹலோ.. மிஸ் மாளவிகா.. லைனில் இருக்கீங்களா..?" மறுமுனையில் குரல் கேட்க..
"நான் சரண் பேசுகிறேன். அவளுடைய வுட்பி.. என்ன விசயம் சொல்லுங்க.." என்று கேட்டான் சரண்..
மறுமுனையில் ஒலித்த குரல் சொல்லிய செய்தியைக் கேட்டதும் அவனுக்கும் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது..

## 9

கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த வாசவனின் உடல் சிரித்த முகத்துடன் இருந்தது..
காலையில் கம்பீரமாக வேலைக்குப் போனவர் மாலையில் சடலமாக வீடுதிரும்புவார் என்பதை எதிர்பார்த்திராத

மாளவிகா.. நிலை குலைந்து போயிருந்தாள்..
"அப்பா.. அப்பா.." இதைத் தவிர வேறு வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வரவில்லை..
தாய் இல்லாத அவளுக்கு தாயுமானவனாக இருந்த தயாளன்.. தந்தையைப் போல இல்லாமல்.. அவளுடன் அனைத்துச் செய்திகளையும் சரிசமமாக அமர்ந்து பகிர்ந்து கொண்ட தோழன்... 'உன் வாழ்க்கைப் பாதையை நீ தேர்ந்தெடு' என்று ஒதுங்கி நின்ற நியாயவாதி.. அவள் கேட்டதற்காக கையிருப்பையெல்லாம் போட்டு.. அவளது கனவுப் பள்ளிக் கூடத்தை கட்டித்தந்த அன்புமிகு அப்பா.. இப்போது உயிரோடு இல்லை...
இனி மாளவிகா அநாதை.. தாயில்லாத அவளுக்கு தந்தையும் இனி இல்லை...
"என்ன ஆச்சு சரண்..?"
"ஹார்ட் அட்டாக் சார்.."
"அடக்கடவுளே.. காலையில் நல்லாத்தானே இருந்தார்..?"
"ஆமாம் சார்.. யூசுவலா ஆபிஸ் கிளம்பிப் போகிறதைப் போலத்தான் போனார்.. வேலை செய்து கொண்டிருக்கும் போதே.. நெஞ்சைப் பிடித்துக்கிட்டாராம். பியூன் தண்ணீரைக் குடுப்பதற்குள் உயிர் போய் விட்டதாம்.."
"ஸின்ஸியர் ஆபிஸர்.. அதனால்தான் ஆபிஸிலேயே உயிர் போயிருக்கு.."
சரண், வாசவனின் இறுதிக் காரியத்தை குறைவின்றி நடத்தினான். வந்தவர்களை அழைத்துச் சென்று.. வாசவனின் உடலைப் பார்க்க வைத்து... அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லி.. உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தகவல் சொல்லி.. கிராமத்தில் இருந்து வருபவர்கள் வரும் வரை காத்திருந்து.. என்று அனைத்தையும் பொறுப்பாக கவனித்துக் கொண்டான்...
மாளவிகா எதையும் உணராதவளாய் தகப்பனாரின் உடல் இருந்த பெட்டிக்கு அருகில் சரிந்து அமர்ந்திருந்தாள்.
'ஏன்ப்பா.. என்னை விட்டுப் போனீங்க..? நான் என்ன செய்வேன்ப்பா..? என் பலமெல்லாம் நீங்கதானேப்பா.. நீங்க இல்லாம இனி எப்படிப்பா இந்த உலகில் தனியாய் வாழ்வேன்..?'

அவள் மனம்.. வாசவனிடம் கேட்டுக் கொண்டிருந்தது.
அவள் இன்னும் அவர் உயிரோடு இருக்கிறார் என்ற நினைவோடே இருந்தாள்..
'இல்லப்பா.. இதெல்லாம் பொய்.. இவங்க அவசரப் பட்டு உங்களை கண்ணாடிப் பெட்டிக்குள்ளே படுக்க வைச்சிட்டாங்க.. இப்ப நீங்க எழுந்துக்கப் போகிறீங்க.. மாலுன்னு என்னை கூப்பிடப் போறீங்க...'
அவர் கூப்பிடவில்லை.. மகளின் மனதின் குரல் கேட்காதவராய் மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தார்...
வாசவனைக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்து வெளியே எடுத்ததும் அவளது கண்கள் பிரகாசித்தன..
"அப்பாவுக்கு ஒண்ணுமில்லைதானே.." அவள் பரபரத்தாள்..
"மாலு.. மாமாவை விடு.." சரண் துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான்..
"அப்பா தூங்கறார் சரண்.. எழுப்பிவிட்டால் எழுந்துடுவார்.. அப்பா.. அப்பா.. எழுந்திருங்கப்பா.."
மாளவிகா அவரை உலுக்கி எழுப்ப முயல...
"ஐயோ.. பாவம்.. இந்தப் பொண்ணுக்கு பைத்தியம் பிடிச்சிருச்சு போல இருக்கு.." என்று கூட்டத்தில் யாரோ சொல்ல.. ஆங்காங்கே "த்சு.. த்சு.." என்ற சப்தங்கள் எழ ஆரம்பித்தன..
சரண் மாளவிகாவை வாசவனிடமிருந்து பிரித்தெடுத்தான்...
"சரண்.. அப்பாவை ஏன் வேனில் ஏத்தாறாங்க.."
"ஒண்ணுமில்லை..."
"அவரை இறக்கி விடச் சொல்லுங்க.."
"நீயும் வா.. போவோம்..."
உடும்புப் பிடியாய் அவள் கைகளைப் பிடித்துக் காரில் ஏற்றி அமர்ந்து கொண்டான் சரண்...
மின்சாரத் தகனம் நடக்கும் இடத்தில்..
"யாரு காரியங்களைச் செய்கிறது.." என்ற குரல் வந்ததும் மாளவிகாவை முன்னே நிறுத்தினான்..
"பொண்ணு கொள்ளி போடலாமா..?" ஆட்சேபக் குரல்கள் எழுந்தன..

"என் மாமா இவளைப் பெண்ணுக்குப் பெண்ணா.. பிள்ளைக்குப் பிள்ளையாய் வளர்த்தார்.. இவ கொள்ளி போட்டாத்தான் அவர் ஆத்மா சாந்தியடையும்..." சரண்.. தீர்மானமாக சொல்லிவிட்டான்..

"அப்பா..." என்ற கதறலுடன் மாளவிகா அனைத்தையும் செய்து முடித்து விட்டு மயக்கமானாள்..

வாசவன் என்ற மாமனிதர் ஒரு பிடி சாம்பலாக மாறிவிட.. 'இவ்வளவுதான் மனித வாழ்க்கை..' என்ற நிதர்சனத்தை உணர்ந்தவனாய்.. மாளவிகாவை தோள் சாய்த்து.. துக்கத்துடன் காரோட்டினான் சரண்...

'காற்றினிலே... பெருங்காற்றினிலே..
ஏற்றிவைத்த தீபத்திலும் இருளிருக்கும்..
காலமென்னும் கடலினில்..
சொர்க்கமோ.. நரகமோ..
அக்கரையோ.. இக்கரையோ...'

எங்கோ தொலை தூரத்தில் பாடல் ஒலித்தது.. அந்த தொலை தூரம் எது.. என்று பார்வையால் துழாவுகிறவளைப் போல.. தூரத்தில் தன் தொலைந்து போன கடந்த காலத்தை பார்வையால் துழாவிக் கொண்டிருந்தாள் மாளவிகா..

'ஏன் கடவுளே.. என் அப்பாவை என்னிடமிருந்து பிரித்தாய்..?' அவள் மனம் குமுறியது..

அவளது கேள்விக்குப் பதிலாக பாடல் ஒலிதான் காற்றில் மிதந்து வந்து அவள் காதினில் நுழைந்தது..

'ஆண்டவனும் கோவினில்
தூங்கி விடும் போது..
யாரிடத்தில் கேள்வி கேட்பது..?
ஏழைகளின் ஆசையும்..
கோவில் மணியோசையும்..
வேறுபட்டால் என்ன செய்வது..?
தர்மமே.. மாறுபட்டால் எங்கு செல்வது..?'

அவளைத் தேடி மாடிக்கு வந்த சரணின் அடிவயிறு.. அவள் அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டதும் பிசைந்தது..

'எப்படியிருந்தவள்.. எப்படி ஆகிவிட்டாள்..?' அவனுக்கு கண்கள் கசிந்தன..

அவளருகில் அமர்ந்து அவளை மடிசாய்த்துக் கொண்டான். அவளது கண்ணீர் அவன் மடியை நனைத்தது.. அவளது துயரத்திற்கு குறையாத சோகம் அவன் மனதை வாட்டியது...

'ஆடுவது நாடகம்.. ஆளுக்கொரு பாத்திரம்..
இறைவனுக்கு வேகமென்னவோ..?
ஆட விட்டுப் பாடுவான்..
மூடுதிரை போடுவான்..
மேடை அவன் மேடையல்லவோ..
வாழ்க்கையின்..
பாதை அவன் பாதையல்லவோ..'

தொலைதூரப் பாடல்.. மெல்ல.. தேய்ந்து மறைந்தது..
அவர்கள் இருவரையும் பேசிக்கொள்ளத் தேவையில்லாத மௌனம் சூழ்ந்து கொண்டது..
அவர்கள் நெடுநேரம் அப்படியே அமர்ந்திருந்தார்கள்..
"சொன்னால் கேள் மாலு.. மாமா போய் விட்ட துக்கம் உனக்கு மட்டும்தானா.. எனக்கு இல்லையா..? உனக்கு அவர் பெற்றவர்.. என்னை வளர்த்தவர்.. அதை மறந்துவிட்டுப் பேசாதே.."
"அந்த நினைவு உங்களுக்கிருந்தா.. இப்படி ஒரு பேச்சை எடுக்கமாட்டிங்க.."
"அறிவு கெட்ட தனமாய் பேசாதேடி..."
"அப்படிப் பேசுறது நீங்களா இல்லை நானா..?"
"புரியாமல் பேசாதே.. உன்னை நான் தனியா விடமுடியாது.."
"யார் விடச் சொன்னது..?"
"கல்யாணம் ஆகாம.. நீயும்.. நானும் சேர்ந்து இந்த வீட்டில் இருக்க முடியுமா..?"
"ஏன் இருந்தால் என்ன..?"
"ஊர் என்ன சொல்லும்..?"
"இதுக்கு முன்னாலேயும்.. நாம இந்த வீட்டில்தான் சேர்ந்து இருக்கிறோம்.. அப்ப ஊர் ஒண்ணும் சொல்ல வில்லையே.."
மாளவிகா விடாமல் வாதாடிக் கொண்டிருக்க -பல்லைக்கடித்தான் சரண்.. பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்..

"இதுக்கு முன்னால்.. மாமா நம்மகூட இருந்தார் மாலு.. மறந்து விட்டாயா..?"
மாளவிகாவின் பேச்சு சட்டென்று நின்று விட்டது. அவளின் பார்வை.. சூன்யத்தை துழாவ ஆரம்பித்தது..
'அப்பா...' அவள் மனம் அரற்றுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..
அவனும்தான் என்ன செய்வான்..? எத்தனை சொல்லியும்.. புரிந்து கொள்ளாமல் - அவள் அடம் பிடிக்கவும்.. அவனும் பட்டென்று சொல்லி விட்டான்..
"மாளவிகா.."
"அப்பா.. ஏன் போனார் சரண்..?"
அவள் குழந்தையாகக் கேட்கவும்.. அவனுக்குள் விசனம் பொங்கியது...
"ஏய்ய்.. விட்டுவிடுடி..."
"எதை விடச் சொல்றீங்க சரண்.. அப்பாவையா..?"
"இந்தப் பேச்சை விடு.."
"எப்படி விடமுடியும்..?"
சரண் சோர்ந்து போனான்.. அவளை அந்த சோகத்தின் பிடியிலிருந்து விடுவிக்கும் வகை தெரியாமல் திண்டாடினான்.. அவனுடைய தொழிலில் தினமும் போன் மேல் போன் வந்து குவிந்தது.. அவனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை.. மாளவிகா நத்தை தன் கூட்டிற்குள் சுருண்டு கொள்வதைப் போல சுருண்டு கொண்டாள்..
தலையைப் பிடித்துக் கொண்டு சரண் அமர்ந்திருந்த போது..
"சார்.." என்றபடி அறைக்குள் வந்தான் பாஸ்கரன்..
"யெஸ்.." அலுப்புடன் வினவினான் சரண்..
"இந்த வீக் எண்டில் நீங்க கனடா போகணும்.."
"டிரிப்பை கேன்சல் பண்ணுங்க.."
"பட்.. இது இம்பார்டண்ட் பிஸினெஸ் டிரிப்.. நீங்க அந்தக் கம்பெனியுடைய கான்ட்ராக்டில் சைன் போட்டாகனும்.."
"அவங்களை இங்கே வரச் சொல்லுங்க.."

"தட் இஸ் நாட் இம்பாஸிபிள்.."
"வொய்..?"
"ஆல்ரெடி.. அவங்க சென்னைக்கு வந்து விட்டு போயிட்டாங்க.. நாம தான் அங்கே இன்னும் போகலை.."
"இது என்ன.. கல்யாண விசயமா-அவங்க பொண்ணு வீட்டுக்கு வந்து விட்டுப் போயிட்டாங்க.. நாம மாப்பிள்ளை வீடு பார்க்கப் போகணும்ன்னு சொல்ல..? இது பிஸினெஸ் மேன்.."
"பிஸினெஸ் கான்ட்ராக்டிலயும்.. கல்யாணம் மாதிரியான ஃபார்மாலிட்டிஸை நாம ஃபாலோ பண்ணியாகணும் சார்.."
"என்னால இப்ப சென்னையை விட்டு எங்கேயும் நகரமுடியாது பாஸ்கர்.. கனடா போனால்.. திரும்பிவர ஒன் ஆர் டூ மன்த்ஸ் ஆகலாம்.. அவ்வளவு நாள் மாளவிகாவை தனியாக விட்டுட்டு என்னால் போக முடியாது.."
"சார்.. இந்த கான்ட்ராக்டிற்கு எத்தனை கம்பெனிகள் போட்டி போட்டாங்கன்னு உங்களுக்குத் தெரியும்தானே.."
"தெரியும்.."
"தெரிந்துமா.. இப்படி அலட்சியம் காட்டறீங்க..?"
"வாட் கேன் ஐ டூ பாஸ்கர்..?"
"இது பலகோடி வொர்த் இருக்கிற கான்ட்ராக்ட்.."
"ஸோ.. வாட்..? எனக்கு அதைவிட மாளவிகாதான் முக்கியம்.."
பாஸ்கர் திகைத்தான்.. ஒரு யோசனை தோன்ற.. மாளவிகாவிற்கு போன் செய்தான்.. மறுமுனையில் மாளவிகாவின் தீனமான குரல் கேட்டது...
"ஹலோ..."
"மேடம்.. ஐ ஆம் பாஸ்கரன்.. சரண்சார் கம்பெனியில் சாப்ட்வேர் என்ஜினீயர்.."
"சொல்லுங்க.."
"நான் உங்களைப் பார்க்கணுமே.."
"வாட் ஃபார்..?"
"நேரில் சொல்கிறேன்.."
"வாங்க.."
பாஸ்கரன் சொன்ன விவரங்களை கவனத்துடன் கேட்டாள் மாளவிகா.. அவள் நெற்றியில் சிந்தனை ரேகை படிந்திருந்தது...

"கோடிக்கணக்கில் லாஸ் ஆகும்ன்னு தெரிஞ்சிருந்தும் பாஸ் கனடா போக மாட்டேன்னு சொல்கிறார்.. இந்த ஹெவி லாஸை கம்பெனி தாங்காது மேடம்.."
"ஏன்னு ரீஸன் கேட்டிங்களா..?"
"கேட்டேன்..?"
"என்ன சொல்கிறார்.."
"உங்களைச் சொல்கிறார்..?"
"என்னையா..? நானா இதுக்குக் காரணம்..?"
"யெஸ் மேடம்.. உங்களை தனியாக விட்டு விட்டு இரண்டு மாதங்கள் வெளிநாடு போக முடியாதுன்னு பாஸ் சொல்கிறார்.. கோடிக்கணக்கான பணத்தை விட.. எனக்கு மாளவிகாதான் முக்கியம்ன்னு சொல்கிறார்.."
'என்ன மாதிரியான அன்பு இது..!'
மாளவிகா உதட்டைக் கடித்துத் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்..
வாழ்க்கையை யதார்த்தமாக நோக்கும் யதார்த்தவாதி.. கோடிக்கணக்கான ரூபாய்களை அவளுக்காக இழக்கத் துணிகிறான்.. அவன் பணம் பண்ணுகிறவன்.. நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருப்பவன்.. எந்த ஒரு செயல்பாட்டிலும் உள்ள லாப நஷ்டங்களை யோசித்து செயல்படுகிறவன்.. உணர்ச்சிகரமான முடிவுகளைத் தவிர்த்து.. அறிவு பூர்வமான முடிவை எடுப்பவன்.. அப்படிப்பட்டவன், இன்று அனைத்து செல்பாடுகளையும் நிறுத்தி விட்டு அவளைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறான்..
இப்படி ஒரு அன்பு கிடைக்க மாளவிகா என்ன தவம் செய்தாள்..?
"நீங்க போங்க பாஸ்கர்.. சரண் கட்டாயம் கனடா போவார்..."
"அவர் மாட்டேன்னு சொல்லி விட்டாரே..."
"நாளைக்கே சரின்னு சொல்லுவார்.."
அன்று மாலை கம்பெனியிலிருந்து வீடு திரும்பிய சரண்.. ஆச்சரியத்தை உள் வாங்கினான்..
பளிச்சென்ற முகத்துடன்.. அழகான உடையணிந்து மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்றாள் மாளவிகா..
"சீக்கிரம் காபி.. டிபன் சாப்பிடுங்க சரண்.."
"ஏன்..?"

"எனக்கு அவுட்டிங் போகணும்..."
அடுத்த ஆச்சரியம் தாக்க வியப்புடன் அவளைப் பார்த்தான் சரண்.. வருந்தி.. வருந்தி அவன் அழைத்தும் வெளியே வர மறுத்து வீட்டுக்குள் புதைந்திருந்தவளின் கோரிக்கையைக் கேட்டதும்.. அவனால்.. அவனுடைய காதுகளையே நம்ப முடியவில்லை..
மின்னல் வேகத்தில் அவள் கொடுத்தவைகளைக் காலி செய்து விட்டு எழுந்தான்...
"எங்கே போகணும்..?" என்று கேட்டான்..
"எங்கே போகலாம்..?" அவள் பதிலுக்கு கேட்டாள்..
"நீதானேடி அவுட்டிங் போகணுமுன்னு சொன்ன..?"
"பட்.. பிளேஸ் இஸ் யுவர் சாய்ஸ்.."
"பீச்சுக்குப் போகலாமா..?"
"ஓ...!"
அதிக ஜனக் கூட்டமுள்ள இடத்திற்கு அவளை அழைத்துப் போனால் மாறுதலாக இருக்கும் என்ற எண்ணத்துடன்தான் சரண் கடற்கரையைத் தேர்ந்தெடுத்தான்..
அவனது நோக்கம் நிறைவேறியது.. பரந்திருந்த மெரினாகடற்கரையின் மணலில் கால் புதைய நடந்த மாளவிகாவின் முகத்தில் ஒரு தெளிவு வந்திருந்தது..
சுற்றிலும் இருந்த மனிதர்களைப் பார்த்தபடியே-
கடல்காற்றில் புடவையின் முந்தானை காற்றில் பறக்க - அவள் அவனோடு இணைந்து நடந்தாள்.. அவள் மேல் ஒரு பந்து வந்து விழுந்தது..
"அக்கா.. பால்.."
ஓடி வந்த சிறுவனிடம் சிரித்த முகத்துடன் பந்தை நீட்டினாள் மாளவிகா..
"தேங்க்ஸ்க்கா..."
அவன் ஓடிவிட.. அவனது ஓட்டத்தை ரசித்தவாறே..
"குழந்தைகளின் உலகமே தனி இல்லையா சரண்..?" என்று கேட்டாள்.
சரணுக்கு அன்றைய தினம் அழகான தினமாக தோன்றியது. ஒரே வீட்டில் இருந்திருந்தாலும், கூட வளர்ந்திருந்தாலும்.. இதற்கு முன்னால்.. மாளவிகா.. சரணுடன் தனியாக கடற்கரைக்கு வந்ததில்லை..

அவர்கள் இது போன்ற இடங்களுக்கு வாசவனுடன் தான் வருவார்கள்.. பள்ளிக்கும்.. கல்லூரிக்கும் மட்டுமே சரணுடன் தனியாக காரில் போய்.. வருவாள் மாளவிகா.. அன்று முதன் முறையாக அவள் அவனுடன் தனியாக வெளியே வந்திருந்தாள்..
"நம் உலகம் கூட தனிதான் மாளவிகா.."
"யெஸ்.. அப்கோர்ஸ்.. அதைப்பத்திப் பேசத்தான் நான் அவுட்டிங் வந்தேன் சரண்.."
கடல்காற்று உடல்தழுவ.. கடலைப் பார்த்தபடி அவர்கள் இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.. தூரத்தில் அலையில் மிதந்து வந்து கொண்டிருந்த படகு தெரிந்து.. சரண் மனதிற்குள் மிக இதமாக உணர்ந்தான்..

## 11

"ஏன் கனடா போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கறீங்க சரண்..?" முகத்தில் விழுந்த குழல்கற்றையை விலக்கிக் கொண்டே மாளவிகா கேட்ட விதம் சரணின் மனதில் பதிந்தது..
"உனக்கு எப்படித் தெரியும்..?"
"எப்படியோ தெரியும்.."
"பாஸ்கர் சொன்னானா..?"
"ம்ம்ம்.."
"மாளவிகா.."
"சொல்லுங்க.."
"உன்னை விட்டு விட்டு நான் கனடா போகமாட்டேன்.."
"உங்க பிஸினெஸ்ஸிற்கு நீங்க ஒரு இடத்தில் நிற்க முடியாது சரண்.. பறந்துகிட்டுத்தான் இருக்கணும்.."
"எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.. உன்னைப் பற்றி மட்டும்தான் கவலை.."
மாளவிகா சரணின் முகத்தையே பார்த்தாள்.. மாநிறத்தில் சிரிக்கும் கண்களுடன் கம்பீரமாக இருந்த அவனின் தோற்றத்தில் அவள் மனம் சிக்கிக் கொண்டது..

'இவன் என்னுடையவன்.. இவனுக்கு நான் மட்டும் பெரிது..' இந்த உணர்வை அவள்.. அவனுக்குக் கொடுக்க வில்லை என்பது அவள் மனதில் நிழலாடியது..
"நான் உங்களுக்கு வேகத்தடையாக ஆகிட்டேனில்லையா..?"
"அடிதான் வாங்கப் போகிற.. உன்னைத் தடையாய் நினைக்கிற வேகம் எனக்கு வேணாம்டி.."
"ஏன் என்மேல இவ்வளவு பாசம் காட்டறீங்க சரண்..?"
மாளவிகாவின் கண்களில் இருந்து கீழே விழுந்து சிதறியது ஒரு கண்ணீர் துளி.. அது விலை மதிக்க முடியாத வைரம் என்று சரணுக்குத் தோன்றியது.. அவனுக்குள் ஆயிரமாயிரம் உணர்வின் அலைகள் எழும்பின..
"எனக்கு உன்னை விட்டால் இந்த உலகத்தில் சொந்தமுன்னு சொல்லிக்க வேற யாரிருக்கா மாளவிகா.."
'அதற்காகத்தானா..? அதற்காக மட்டும் தானா..? நீ என் மேல் பரிவு காட்டி.. சுற்றிச் சுற்றி வருவதற்கு இது மட்டும் தான் காரணமா..?'
மாளவிகாவிற்குள் எதுவோ பொங்கியது.. அவளை மார்போடு சேர்த்தணைத்து காதோரம் அவன் ரகசியம் பேசிய தருணங்களை நினைத்துப் பார்த்தாள் அவள்..
"ஸோ.. நான் சொந்தக்காரிங்கறதினால மட்டும் தான் உங்களுக்கு என்மேல் இவ்வளவு அக்கறைன்னு சொல்லுங்க.."
"கூடுதலா இன்னொண்ணும் இருக்கே மாலு.."
"என்னவாம்..? என் அப்பா உங்களை வளர்த்தார்.. அந்த நன்றியுணர்ச்சி இருக்குன்னு சொல்லப் போகிறீங்க.. அதுதானே.."
மாளவிகாவின் உதடு துடித்தது.. அவளது இமையோரம் நீர்முத்து திரண்டு விட்டது. சரண் அவளையே பார்த்தான்.. அவனுக்கு அவளைப் புரிந்தது.. அவளது மனம் புரிந்தது.. அது துடிக்கும் துடிப்பு புரிந்தது..
அவன் மௌனமாக அவளைப் பார்க்க.. அவளோ சொல்லத் தெரியாத சோகத்திற்கு ஆட்பட்டவளாக.. வார்த்தைகளைக் கொட்டி விடும் துடிப்புடன் பேசினாள்..
"வேண்டாம் சரண்.. எனக்கு உங்க சொந்தம் வேண்டாம்.. உங்க நன்றியுணர்ச்சி வேண்டாம். அப்பா உங்களை

பாதுகாத்தார்.. பதிலுக்கு நீங்க என்னை பாதுகாக்கணும்ன்னு நினைக்கறீங்க.. அந்தக்கடமை உங்களுக்கு வேண்டாம்.."
"ஈஸிட்..?"
"யெஸ்.. அப்பா எனக்கு படிப்பைக் கொடுத் திருக்கிறார்.. நான் கனவு கண்ட லட்சியத்தை நனவாக்கி என் கையில் கொடுத்திருக்கிறார்.. எனக்கு என் ஸ்கூல் இருக்கு.. அதில் நான் மனதைச் செலுத்தி.. வாழ்ந்து முடித்து விடுவேன்.. நீங்க என்னைப் பற்றிக் கவலைப் படாம.. கனடா போங்க.."
"பேசி முடிச்சிட்டயா..?"
சரண் அவள் தோள் மீது கைபோட்டு நெருங்கி அமர்ந்தான்.. மாளவிகாவின் உடலில் சிலிர்ப்பு ஓடியது.. கடலில் மூழ்கிக் கொண்டிருந்தவளின் கையில் கட்டுமரம் கிடைத்ததைப் போல அவள் உணர்ந்தாள்.. அவன்தந்த நெருக்கம் அப்போது அவளுக்கு மிகவும் தேவைப்பட்டது..
"ஏய்.. அழுமூஞ்சி.. நீ எனக்கு சொந்தக்காரி தாண்டி.. என் மனசுக்கு சொந்தக்காரி.. என் காதலுக்கு சொந்தக்காரி.. என் வாழ்க்கைக்கு சொந்தக்காரி.."
"சரண்.."
மாளவிகா அவன் தோள் சாய்ந்து விசும்ப.. அவன் கைக்குட்டையை எடுத்து அவளது விழிநீரை துடைத்தான்..
"மாமா நம்ம ரெண்டு பேரையும்.. அவரோட ரெண்டு கண்களா நினைச்சாருடி.. இரண்டு கண்களும் வேற.. வேற திசையில் பார்க்குமா..? ஒரு கண்ணுக்கு அடிபட்டால் மறு கண்ணும் கலங்காதா..?"
"சரண்.."
"ஸ்ஸ்.. அழுகாதே.. உனக்கு நான்.. எனக்கு நீ.. நமக்கு நம் குழந்தைகள்.. வாழ்ந்து பார்க்கலாம் வா.."
"சரண்.."
"மாமாவின் ஆத்மா இதைத்தான் விரும்பும்.. நீயும் நானும் உறவில்லாமல் தனித்தனியாய் நிற்பதை அவர் விரும்ப மாட்டார்.. அவர் நம்ம ரெண்டு பேரையும் வளர்த்தவர்டி.. நாம் சேர்வதைத்தான் விரும்புவார்.. பிரிந்திருப்பதை விரும்ப மாட்டார்.."
மாளவிகா குழந்தையாய் அவன் மடிசாய்ந்தாள்.. அவன் அவளது முடிகோதி.. ஆறுதலாகப் பேசிக்

கொண்டிருந்தான்.. எதிரே சுழன்றடித்த கடலலையின் கலக்கத்தை அவள் மனமும் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தவனாக சன்னக்குரலில் பாடினான்..

"அலையே.. கடலலையே..
நீ கலங்காதே.. மனம் மயங்காதே..
உன் அருகினில் நானிருப்பேன்..
என்னென்னவோ.. உன் எண்ணங்கள்.."

மாளவிகாவிற்கு மனம் அமைதியடைந்திருந்தது.. அவள் எழுந்து கொண்டாள்.. முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டவள், அவனைப் பார்த்து நிர்மலமாய் புன்னகைத்தாள்..

"ஓகே சரண்.. நாம ரெண்டு பேருமே கனடா போகலாம்.."

"நிஜமாகவா.. சொல்கிற..?" அவன் பரபரத்தான்..

"பட்.. ஒன் கண்டிஷன்.."

"அதுதானே பார்த்தேன்.."

"நாம ஹஸ்பெண்டு அண்ட் வொய்ஃபா போகலாம்.."

அந்த நொடியை தன் வாழ்நாளில் மறக்க முடியாது என்று சரணுக்கு தோன்றியது.. எந்த வார்த்தைகளை அவள் வாய் உதிர்க்க கேட்க வேண்டுமென்று இத்தனை நாள்களாக அவன் காத்திருந்தானோ.. அந்த வார்த்தைகளை அவள் சொல்லி விட்டாள்..

"மாலு..."

அவளது நெற்றியில் முத்தமிட்டவன்.. பரவசமாக உணர்ந்தான்..

"நான் ஸ்கூலுக்கு போகணும் சரண்.. ஸ்கூல் எப்படி ரன் ஆகுதுன்னே தெரியலை.."

"நாளைக்குப் போகலாம்.."

"கல்யாணம் சிம்பிளா இருக்கட்டும்.."

"உன் இஷ்டம்.. பட்.. ரிசப்ஷன் கிராண்டாய் பண்ணியாகணும்.. என் பிஸினெஸ் வட்டாரத்தை இன்வைட் பண்ணனுமில்ல.."

"வேண்டாமே..."

"ப்ளீஸ் மாலு.. எனக்காக.."

அவள் மறுத்துப் பேச முடியாமல் மௌனமானாள்..

மறுநாள் பள்ளிக்கு போனபோது அது வழக்கமான சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்ததை வியப்புடன்

பார்த்தாள்...
"எப்படி சரண்.. நான் இங்கே வந்தே மாதக் கணக்கில் ஆகுதே.. டீச்சர்ஸ்க்கும்.. லேபர்ஸுக்கும் யார் சம்பளம் கொடுத்தது..? மற்ற டெய்லி ரொட்டீன் கரெஸ்பாண்டென்ட் வேலைகளை யார் பார்த்தது..? ஹெச்.எம்.பொஸிஸனில் யார் இருந்தது..?"
அவளது கேள்விகள் அனைத்துக்குமான விடைகள்.. அடுத்த சில நிமிடங்களில் அவளுக்கு கிடைத்தன... பள்ளியில் பணிபுரிந்த ஆசிரிய ஆசிரியைகளும் மற்ற தொழிலாளிகளும் ஒருமித்து நீட்டிய சுட்டு விரல் சரணை நோக்கி நீண்டது.. அவனே அனைத்துமானவானக இருந்தான்..
"நீங்களா சரண்.. இது எல்லாத்தையும் நீங்களா பார்த்துக்கிட்டிங்க..?"
அந்த நொடியில் அவள் அவனின் காதல் கிடைத்தற்காக மனதிற்குள் பெருமிதம் கொண்டாள்..
"உங்களுக்கு ஸ்கூல் நடத்த பிடிக்காதே சரண்.."
"உனக்கு பிடிக்குதே மாலு.."
"என்காக.. உங்க பிஸியான நேரத்திலும் ஸ்கூலைக் கவனிச்சுக்கிட்டிங்களா..? என்னைக் கவனிப்பது போதாதுன்னு இந்த வேலையையும் தூக்கி உங்க தலைமேல் வைத்து விட்டேனா..?"
"உன் ஸ்கூல் ஒழுங்காக ரன் ஆக வேண்டாமா..? இப்பவும் சொல்கிறேன். நீ செலக்ட் பண்ணியிருக்கும் புரொபசனல் எனக்குப் பிடிக்கலைதான்.. வருத்தம்தான்.. பட்.. எனக்கு உன்னை ரொம்ப பிடிக்குதேடி.. உன் ஸ்கூலை கவனிக்க முடியாம நீ முடங்கிக் கிடக்கிறப்போ உனக்குப் பதில் நான் கவனிக்காம எப்படி விட்டுக் கொடுக்க முடியும்..?" அவன்.. அவனது அனைத்துச் செய்கைகளாலும் அவளை ஆட் கொண்டான்..

## 12

நெருக்கமான உறவினர்களும்.. நண்பர்களும் மட்டுமே வருகை தர சரண் - மாளவிகவின் திருமணம்.. கோவிலில்

மிக எளிமையாக நடந்து முடிந்தது.. திருமணத்தை முறைப்படி பதிவு செய்து விட்டான் சரண்..
"நாளைக்கு விசா.. பாஸ்போர்ட் வாங்க வேணுமே.." காரணம் சொன்னான்..
எவ்வளவுக்கெவ்வளவு.. திருமணம் எளிமையான முறையில் நடந்ததோ.. அவ்வளவுக்கவ்வளவு வரவேற்பு ஆடம்பரமாக நடந்தது..
ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடந்த அந்த திருமண வரவேற்பிற்கு வந்திருந்தவர்களைப் பார்க்கும் போது தான் வேறு உலகத்தில் இருப்பதாக உணர்ந்தாள் மாளவிகா..
எளிமையும்.. அழகும்.. மாளவிகாவின் அடையாளங்கள்..
ஆனால் அன்று அவள் சரணின் ஆடம்பரமான அடையாளத்தை உணர்ந்தாள்..
அவனிடம் வந்து கை குலுக்கியவர்களின் தோற்றத் திலிருந்தே அவர்களின் பின்புலம் புரிய.. கணவன் எட்ட முடியாத உயரத்தில் இருப்பதை அன்றுதான் அவள் கண்டு கொண்டாள்...
'இவ்வளவு உயரத்திலிருந்தும் இவன் ஏன்.. எங்களுடனே இருந்தான்..?'
பதிலுக்கு கண் சிமிட்டி.. தன் வரிசைப் பற்கள் தெரிய பிரத்யேகமான புன்னகை ஒன்றை உதிர்த்தான் சரண்..
அன்றைய இரவுக்கு ஹனிமூன் சூட் ஒன்றை புக் பண்ணியிருந்தான்..
"ஹோட்டலிலா..?" மாளவிகா சங்கடப்பட்டாள்..
"வீட்டில் நீ மாமாவை நினைப்பாய்.. இந்த நைட்டில் நீ என்னை மட்டும்தான் நினைக்கணும்.." அவன் புயலாய் அவளை ஆக்ரமித்தான்..
மனதிலிருந்த சோக நினைவுகள் பறந்தோடி விட -அவளை.. புதியதோர் உலகிற்கு அழைத்துச் சென்றான் சரண்..
புயலில் சிக்கிய பூங்கொடியாய் களைத்துச் சரிந்தவளின் கன்னத்தில் முத்தமிட்டு காதோரமாக கிசுகிசுத்தான்..
"தேங்க்.. யு.."
அவள் வெட்கத்துடன் கண்மூடிச் சுருண்டுகொள்ள.. முகத்தை மூடியிருந்த அவளது கைகளை விலக்கி.. முகம் பார்த்துச் சிரித்தான்...

கனடாவில் அவர்கள் இருந்த நாள்களை ஹனிமூன் நாள்களாக மாற்றிக்காட்டினான் சரண்.. பகலில் அவனுடைய தொழிலைக் கவனிக்கச் செல்பவன்-மாலை வேளைகளில் அவளோடு ஊரைச் சுற்றி வந்தான்.. மாளவிகாவிற்கு உலகம் அழகாகத் தெரிந்தது.. சரணின் ஆண்மை கலந்த அண்மை அவளை ஆகர்ஷித்தது.. இரவுகளில் அவன் காட்டிய வேகத்தில் அவள் தன்னைத் தொலைத்து அவனோடு கலந்தாள்..

அவனோடு நடக்கும் வேளைகளில் பேச்சுகளற்ற மௌனம் அவளைச் சூழ்ந்தது.. அதை அவன் ரசித்தான்.. இரவின் இனிமையில்..

"மலரே.. மௌனமா..?
மௌனமே வேதமா..?
மலர்கள் பேசுமா..?
பேசினால் ஓயுமா.? அன்பே.."

என்று அவள் காதோரமாக பாடினான்.. அவள் கிளர்ந்து அவன்மேல் சரிந்தாள்.. அவன் அவளை வெற்றி கொண்ட கர்வத்தோடு...

"பாதி ஜீவன் கொண்டு
தேகம் வாழ்ந்து வந்ததோ..
மீதி ஜீவன் என்னை
பார்த்தபோது வந்ததோ..
ஏதோ.. சுகம்.. உள்ளூறுதே..
ஏதோ.. மனம்.. தள்ளாடுதே..."

என்று பாடலைத் தொடர்ந்தான்.. மாளவிகாவிற்கு இது புதிது.. அவன் புதியவனில்லை.. ஆனால்.. அவன் உணர்த்திய அந்த அனுபவம் புதிது..

"இதழ்கள் தொடவா.. விருந்தைப் பெறவா..
மார்போடு கண்கள் மூடவா..."

அவள் அவன் மார்பில் தலை சாய்த்து கண்களை மூடிக் கொண்டபோது அவளின் அடையாளத்தை மறந்து.. அவனோடு ஐக்கியமாகியிருந்தாள்..

"நானாக நானில்லை..
நீயாக மாறிப்போனேன்.."

அவளுடைய டைரியில் கவிதைகளை எழுதித் தள்ளினாள்..

"ஒருபார்வை நீ பார்த்தால் - என்

உயிர்பூவே.. தானாய் மலரும்.."
அந்தக் கவிதைகள் அவன் மேல் அவள் கொண்ட காதலை படம் பிடித்துக் காட்ட - அவளுக்குத் தெரியாமல் அவற்றைப் படிப்பதில் அவன் சுவாரஸ்யம் கொண்டான்..
கனடாவில் வேலை முடிந்து.. அவர்கள் சென்னை திரும்பினார்கள்..
"மாளவிகா.."
"வந்துவிட்டேன்.."
"என் டை எங்கே..?"
"இதோ.. இங்கேதானே இருக்கு.."
மாளவிகா அவன் முன்னால் இருந்த டையை எடுத்துக் காட்ட.. அவன் அவள் இடுப்பை வளைத்தான்..
"கட்டி விடு.."
"ஏன்.. உங்களுக்கு கட்டிக்கத் தெரியாதா..?"
"ஏன் தெரியாது..?"
அவன் அவளை இறுகக் கட்டிக் கொள்ள.. அவள் சிணுங்கினாள்..
"ஆரம்பிச்சுட்டிங்களா..?"
"நீதானேடி.. எனக்குக் கட்டிக்கத் தெரியாதான்னு கேட்ட..? எனக்கு அது தெரியும்ன்னு புரூவ் பண்ண வேண்டாமா..?"
"ப்ளீஸ் சரண்.. நானும் ஸ்கூலுக்குக் கிளம்பணும்.. நேரமாகுது... விடுங்களேன்.."
இனிமையான நாதத்தின் இடையே அபஸ்வரம் ஒலித்ததைப் போல.. சரண் முகம் மாறிப் போனான்...
"ஸ்கூலுக்குப் போகிறாயா..?"
"ம்ம்.. இது என்ன புதிதாய் கேட்கறீங்க..?"
"கட்டாயம் நீ போகத்தான் வேணுமா..?"
"இதே கேள்வியை நானும் உங்களைக் கேட்கலாம் தானே..."
பழைய மாளவிகாவைப் பார்க்கும் உணர்வு வர.. கனவு கலைந்ததைப் போல உணர்ந்தான் சரண்..
"நீ போனாலும்.. போகாட்டியும் வேலை நடக்கும் மாளவிகா.. நான் ஸ்கூலை மேனேஜ் பண்ணிக்கறேன்.."
"உங்களுக்கு உங்கள் பிஸினெஸ்ஸை கவனிக்கவே நேரம் பத்தாது சரண்.. புதிதாய் இந்தச் சுமையும் எதற்கு..?"
"அது என் பிரச்னை.. உனக்கெதுக்கு அந்தக் கவலை.."

"ஸாரி சரண்.. இது என் பிரச்னை.. ஸ்கூல் நடத்தறது என் வேலை.. அதை நான் பார்த்துக்கறேன்.."
'இது என் ஏரியா.. நீ உள்ள வராதே' என்ற தொனியில் மாளவிகா பேசுவதாக உணர்ந்தான் சரண்.. அவனுக்குள் கோபம் குமிழ் விட்டது..
"இத்தனை மாதமாய் உன் ஸ்கூலை நான் கவனிச்சுக்கலையா..?"
"தேங்க்ஸ் ஃபார்தட்.. பட்.. நான்தான் சரியாகி விட்டேனே..."
"பிரிச்சுப் பேசற மாளவிகா.. இதுவே நீ என் பிஸினெஸ்ஸில் பொறுப்பெடுத்துக்க வந்தால்.. நான் சந்தோசமாய் விட்டுக் கொடுப்பேன்.."
"அது என் அடையாளமில்லை சரண்.. இந்த ஸ்கூல் தான் என்னுடைய அடையாளம்.."
"உன்னுடைய அடையாளம் நான்தான்.."
"புரியவில்லை.."
"நீ மிஸஸ் சரண்.."
"யார் அதை இல்லைன்னு சொன்னது..? ஸேம் டைம். மிஸஸ் மாளவிகா சரண்.. ஒரு ஸ்கூலோட பிரின்ஸிபால் கம் கரெஸ்பாண்டென்ட் ஆகவும் இருக்கலாமில்லையா..?"
"ரெட்டைக் குதிரை சவாரி உனக்கெதுக்கு..?"
"அந்த ரெட்டைக் குதிரையில் ஒற்றைக் குதிரையாய் உங்கள் பிஸினெஸ் இருந்தால் தான் சந்தோசப் படுவீங்க.. அப்படித்தானே..?"
"ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்.. நான் உடைத்தே சொல்கிறேனே.. உனக்கு பிஸினெஸ் மைண்ட்கிடையாது.."
"அதுக்காக.. ஸ்கூலில் பிஸினெஸ்ஸை கலக்கச் சொல்றீங்களா..?"
"செய்தால் தான் என்ன..? எங்கே குவாலிட்டி இருக்கோ அங்கே விலையும் அதிகமாகத்தானே இருக்கணும்..? உன் ஸ்கூலுக்கு நல்ல பெயர் இருக்கு.. அதை நீயூஸ் பண்ணிக்கிறது பெட்டர் மாலு.."
"எப்படி யூஸ் பண்ணிக்கணும்னு நீங்க நினைக்கறீங்க..?"
"இது அட்மிசன் டைம்.. ஸ்கூல் ஃபீஸை ரெய்ஸ் பண்ணு.. பில்டிங் கட்ட டொனேஷன் வாங்கு.. எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிடிஸ் அது இதுன்னு சொல்லி பணத்தை வசூல்

பண்ணு.. இப்படியெல்லாம் நீ செய்தால்தான்... லாபகரமாக ஸ்கூல் நடத்த முடியும்.."
சரணின் முகத்தை இறுக்கமாக பார்த்தாள் மாளவிகா..
அவர்களுக்குள் அபிப்ராய பேதங்கள் ஆரம்பமாகின...

"ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்வதைவிட ஒரு ஏழைக்கு கல்வியளிப்பது மேன்மையானதுன்னு அப்பா சொல்வார்.."
"இப்படி உருப்படாத வசனத்தை யெல்லாம் உருப்போட வைத்து உன்னை உருப்படியில்லாமல் வளர்த்து விட்டார் உன் அப்பா.."
"வேண்டாம் சரண்.. அப்பாவைப் பற்றி எதுவும் பேசாதீங்க.. எனக்கு கோபம் வரும்.."
"வந்தால் என்னடி செய்வ.. அவர் உனக்கு அப்பான்னா.. எனக்கு மாமா.. உனக்கிருக்கிற உரிமை.. எனக்கும் இருக்கு..."
"அந்த உரிமையை செயலில் காட்டணும்.. வெறும் பேச்சில் காட்டக்கூடாது.."
"செயலில் காட்டலையா.. நீ உன் கழுத்தில் இருக்கிற தாலியைத் தொட்டுப் பாரு தெரியும்.."
"ஒஹ்ஹோ.. நன்றிக்கடனை கழிக்கத்தான் என் கழுத்தில் தாலி கட்டினீங்களா..?"
சரண் அவளையே இமைக்காமல் பார்த்தான்.. மாளவிகா பார்வையை விலக்கிக் கொண்டாள்..
"ஸோ.. உன்னைக் கன்ட்ரோல் பண்ண நான் நினைக்கக் கூடாது.. நினைத்தால்.. நீ எதையெதையோ சொல்லி என்னிடம் சண்டைக்கு வருவே.. அப்படித்தானே.."
"அது உங்க கற்பனை.."
"கற்பனையில இருக்கிறவ நீதாண்டி.."
"இருந்துட்டுப் போறேன்.. என்னைப் பொறுத் தவரைக்கும் என் ஸ்கூல்தான் என் லட்சியம்.. அதை என் விருப்பம் போலத்தான் நடத்துவேன்.."
"நடத்து.."
அவன் விர்ரென்று போய் விட்டான்.. மாளவிகா.. வாசவனின் காரில் ஏறி அமர்ந்து கிளப்பினாள்.. அத்தனை நாளும் அவனருகே அமர்ந்து பயணித்து விட்டு.. அன்றைக்கு தனியாகப் பயணிக்க அவளுக்கு மனக்கஷ்டமாக இருந்தது..

'என் போராட்டம் ஆரம்பமாகி விட்டதுப்பா..' அவள் மனம் கனக்க வாசவனை நினைத்துக் கொண்டாள்..
அவர் உயிரோடு இருந்திருந்தால் மகளை ஒரு வார்த்தை கூடப் பேச அனுமதித்திருக்க மாட்டார்.. அவர் தான் இல்லையே...
தகப்பன் அருகில் இல்லாத குறையை அன்றுதான் உணர்ந்தாள் மாளவிகா..
அத்தனை நாளும் தன் அன்பில் குளிப்பாட்டிய சரண்.. வாசவனின் நினைவுகளை மாளவிகாவின் மனதிற்குள் வர விட்டதில்லை.. அன்றுதான் அவனுக்கு கோபம் வந்து விட்டதே..
கிழக்கும்.. மேற்கும் இணையும் பந்தம்.. தங்களின் திருமண பந்தம் என்பதை மாளவிகா நன்கு உணர்வாள்..
பணத்தை துரத்தும் சரணுக்கும் லட்சியத்துடன் வாழ நினைக்கும் தனக்கும் ஏழாம் பொருத்தம் என்பதை உணர்ந்திருந்ததால்தான் அவள் சரணின் மேல் அவளுக்கிருந்த காதலை ஒப்புக் கொள்ளத் தயங்கினாள். திருமணத்தை தள்ளிப் போட்டாள்..
ஆனால்.. எவ்வளவுதான் விலகிச் செல்ல நினைத்தாலும்.. இரும்பை இழுக்கும் காந்தமாக சரண் அவளைக் கவர்ந்து தன்னிடம் இழுத்துக் கொண்டு விட்டான்..
வாசலில் நின்றிருந்த வாட்ச்மேன் அவளுடைய காரைக் கண்டதும் சல்யூட் வைத்து கேட்டைத் திறந்து விட்டான்..
"குட்மார்னிங் மேம்.." எதிர்பட்ட ஆசிரிய ஆசிரியைகள் வணக்கம் சொன்னார்கள்..
'எவ்வளவு நாளாச்சு.. இந்த மண்ணில் மிதித்து..' அவள் வாஞ்சையுடன் தன் பள்ளிக் கட்டிட வளாகத்தைப் பார்த்தாள்..
அடுத்து வந்த தினங்களில் அவள் புதிய மாணவ மாணவிகளின் சேர்க்கையில் மும்முரமாகி விட்டாள்...
அதிகாலையில் பள்ளிக்குப் போனால்.. இருட்டின பின்புதான் வீடு திரும்பினாள்.. அதற்குப்பின்னால் அலுப்புடன் சமையல் வேலை செய்யும் பஞ்சவர்ணத்தின் சாப்பாட்டை ருசித்து விட்டு உறங்கப் போய் விடுவாள்..
நேரம் கழித்து வீடு திரும்பும் சரண்.. தன்னிடமிருக்கும் சாவியால் கதவைத் திறந்து கொண்டு வந்து.. டைனிங்

டேபிளில் மூடிவைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களை சினத்துடன் பார்த்துவிட்டு சாப்பிடாமல் தூங்கப் போய் விடுவான்..
அதிகாலையில் அவன் கண் விழிக்கும் போது காபி கொடுக்க மாளவிகா இருக்க மாட்டாள்...
"அம்மா.. விடியற்காலையிலேயே ஸ்கூலுக்குப் போயிட்டாங்கய்யா.." பஞ்சவர்ணம் கூறியவாறு காபியை நீட்டுவாள்..
'இது என்ன வாழ்க்கை..?' சரணுக்கு வெறுத்துப் போய் விட்டது.. இதற்காகவா அவன் காத்திருந்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்..?
இந்தக் கேள்வியை அவளிடம் கேட்க அவனது ஈகோ இடம் கொடுக்கவில்லை..
'உனக்குத்தான் தெரியுமா..?' வன்மத்துடன்.. அவன் அவளுக்கு முன்னாலேயே வீட்டை விட்டு போகத் தொடங்கினான்...
முதலில் இதை மாளவிகா கவனிக்கவில்லை.. பள்ளியில் சேர்க்கை முடிந்து.. வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டு.. இயல்பான நடைமுறைக்குத் திரும்பிய போதுதான் இது அவளது கவனத்துக்கு வந்தது...
சரண் தன்னைப் புறக்கணிப்பதாக மாளவிகா நினைத்தாள்..
'இதற்காகவா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்..?' என்று அவனிடம் கேட்க அவள் மனம் துடித்தது.. அவளது ஈகோ அதைத் தடுத்தது...
'என்னைப் பற்றித் தெரிந்துதானே கல்யாணம் பண்ணிக் கொண்டான்..? இப்போது வந்து எல்லாத்தையும் விடுடின்னு சொன்னால் என்ன அர்த்தம்..?'
இருவருக்கும் ஒருவரை.. ஒருவர் மிகவும் பிடிக்கும்.. ஆனால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் சண்டைக் கோழிகள் போல வீட்டை வலம் வந்தனர்..
'காபி குடிச்சியான்னு ஒரு வார்த்தை கேட்கிறாளா..?'
'காபி குடுன்னு ஒரு வார்த்தை கேட்கிறாரா..?'
'என்னை ஸ்கூலில் டிராப் பண்ணி விடுன்னு சொன்னால் என்னவாம்.. திமிர்.. என் தயவு வேண்டாம்ன்னு நினைக்கிற திமிர்.. தானாய் காரை ஓட்டிக்கிட்டு போறாளே..'

'நானாய் காரை ஓட்டிக்கிட்டு போகிறேனே.. பார்த்துக் கிட்டு பேசாமல் இருக்கிறாரே.. நான் உன்னை டிராப் பண்ணுகிறேன்னு ஒருவார்த்தை சொல்கிறாரா.. கல் நெஞ்சக்காரர்..'
'தினசரி லேட்டா வருகிறேனே.. ஏன்னு கேட்கிறாளா..?'
'தினமும் லேட்டா வருகிறாரே.. கொஞ்சமாவது என்னைப் பற்றி நினைச்சுப் பார்த்தாரா..?'
'டைனிங் டேபிளில் சாப்பாட்டை மூடிவைச்சால் என்ன அர்த்தம்..?'
'எழுப்பி.. சாப்பாடு போடுடின்னு சொன்னால் குறைந்தா போவார்..?'
'ஒரு சினிமாவுக்கு கூப்பிட்டுக்கொண்டு போகச் சொல்லிக் கேட்கிறாளா..? பீச்.. கோவில்ன்னு.. கூட வர ஆசைப்படுகிறாளா..?'
'இவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்..? ஒரு சினிமா உண்டா..? பீச் உண்டா..? கோவில் உண்டா..? வீட்டிலயும் நான்கு சுவர்.. ஸ்கூலிலேயும் நான்கு சுவர்...'
'இவளுக்கு கொஞ்சம் கூட என்மேல் காதல் இல்லை..'
'இவருக்கு கொஞ்சம் கூட என்மேல் ஆசை இல்லை..'
'ஜடம்..!'
'பாறாங்கல்..!'
'ராட்ஸஸி..!'
'இரக்கமில்லாதவன்..!'
இருவரும் ஒருவரைப் பற்றி.. மற்றொருவர் குறை சொல்லி மனதிற்குள் நினைத்து பொருமிக் கொண்டிருந்தனர்..
இருபத்தி நான்கு மணி நேரமும் மாளவிகாவின் நினைவில் அவனும்.. அவனின் நினைவில் மாளவிகாவும் இருக்கையில்தான்.. ஒருநாள் மாலையில் மாளவிகா வீட்டில் மயங்கி விழுந்தாள்..
"ஐயா.. அம்மா மயக்கம் போட்டுட்டாங்க.." பஞ்சவர்ணம் அலறியடித்துக் கொண்டு சரணுக்கு போன் செய்தாள்..
அவன் பறந்து கொண்டு வீட்டுக்கு வந்தான்..

"என்ன ஆச்சு பஞ்ச  வர்ணம்..?"
"ஸ்கூல் விட்டு இப்பத்தான் வீட்டுக்கு வந்தாங்க.. நான் காபி கொண்டு வர்றதுக்குள்ளாற.. மயக்கம் போட்டு விழுந்திட்டாங்க..."
"அதிகமா வேலையை இழுத்துப் போட்டுக்காதேன்னு சொன்னால் கேட்கிறாளா..? பெரிய லட்சியம் அது.. இதுன்னு அலட்டிக்கிட்டு உடம்பைக் கெடுத்துக்கிறா.. சொன்னால் கேட்டுக்கற பிறவியுமில்லை.."
சரண் அங்கலாய்த்துக் கொண்டே.. அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்தான்.. அவள் லேசாக இமையைத் திறந்தாள்..
"மாளவிகா.. என்னடி செய்யுது..?"
அவளைக் கைத்தாங்கலாக எழுப்பி விட்டு தோளில் சாய்த்துக் கொண்டு பஞ்சவர்ணம் கொண்டு வந்த காபியை  புகட்டி விட்டான்.. இரண்டு வாய் குடித்தாள்..
"உவ்வே.." என்று வாஷ்பேசினுக்கு ஓடினாள்..
"மெல்லடி.. மயக்கத்தில் கீழே விழுந்து வைக்கப் போகிற.."
பதட்டத்துடன் சரண் அவளருகில் ஓடினான்..
வாந்தி எடுத்த சோர்வுடன் சோபாவில் சுருண்டு விட்டவளைக் கவலையுடன் பார்த்தபடி சரண் செல்போனை கையில் எடுக்க...
"யாருக்குய்யா போன் பண்ணப் போகிறீங்க..?" என்று கேட்டாள் பஞ்சவர்ணம்...
"நம்ம ஃபேமிலி டாக்டருக்குத்தான்.." என்றான் சரண்..
"வேண்டாங்கய்யா.. அம்மாவை ஏதாவது ஒரு லேடி டாக்டர்கிட்ட கூப்பிட்டுக்கிட்டுப் போய் காமிங்கய்யா.." என்று பஞ்சவர்ணம் சொன்னாள்..
"ஏன்..?" சரண் புரியாமல் விழிக்க..
"எனக்கென்னவோ.. இது வேற மாதிரித் தோணுதுங்கய்யா.." என்றாள் அவள்..
"வேற மாதிரின்னா..?" அவன் விடாமல் வினவ..
"அது வந்து.. வந்து.." அவள் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் சங்கடப்பட்டாள்...
'இவ ஏன் இப்படி நாணிக் கோணறா..?' விசித்திரமாக பஞ்சவர்ணத்தைப் பார்த்தவனின் மூளையில் மின்னலடித்தது...

'அப்படியும் இருக்குமோ...'
ஆனந்தத்துடன் மனைவியைப் பார்த்தவன்.. அவளைக் கைகளில் அள்ளிக் கொண்டான்..
"கார் கதவைத் திறந்து விடு பஞ்சவர்ணம்..."
மாளவிகாவைப் பரிசோதித்த லேடி டாக்டர்..
திரைப்படங்களில் வரும் லேடி டாக்டர்கள் வழக்கமாக சொல்லும் வசனத்தைச் சொன்னாள்..
"கங்கிராஜுலேசன்ஸ் மிஸ்டர் சரண்.." என்று அவள் ஆரம்பிக்கும் போதே சரணுக்கு அடுத்த வாக்கியம் என்னவாக இருக்கும் என்று தெரிந்து விட்டது..
"நான் அப்பாவாகப் போகிறேன்.. அதைத்தானே சொல்லப் போகிறீங்க டாக்டர்..?" என்று கேட்டுவைத்தான் அவன்..
முழுதாகப் பேசவிடாமல் அவன் தடுத்து விட்டதால் அவனை ஒரு முறைப்பு.. முறைத்தாள் அந்த டாக்டர்..
"அவங்க ரொம்ப வீக்கா இருக்காங்க.. இப்ப ஓய்வு ரொம்ப அவசியம்..." அவள் சொல்லிக் கொண்டே போகையில்...
"நான் ஒண்ணு சொன்னால் நீங்க தப்பா எடுத்துக்க கூடாது டாக்டர்..!" சரண் பீடிகையுடன் ஆரம்பிக்க..
'அடப்பாவி.. நீ என்ன சொல்லி வைக்கப் போகிறாய்..?' என்ற பார்வையை பார்த்தாள் அவள்..
"இதையெல்லாம் என்கிட்ட சொல்லாமல.. இவகிட்டயே நீங்க சொல்லிடறது பெட்டர் டாக்டர்.." என்று அவன் சொல்லவும்..
'பாதகா..' என்ற பார்வையையும் சேர்த்துப் பார்த்த டாக்டர்..
"ஏன் மிஸ்டர்.. இவங்க உங்க வொய்ஃப்தானே..?" என்று சந்தேகமாக கேட்டாள்..
"சத்தியமாக என் வொய்ஃப்தான் டாக்டர்.. வேண்டுமானால் என் கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ணின செர்டிபிகேட்டைத் தருகிறேன்.. வெரிஃபை பண்ணிக்கங்க.." சரண் அவசரமாகச் சொன்னான்..
"பின்னே எதுக்காக.. என்னை அவங்ககிட்ட இதையெல்லாம் சொல்லச் சொல்கிறீங்க..?"
"நான் சொன்னால் இவ கேட்க மாட்டா டாக்டர்.."
சரண் அழமாட்டாத குறையாகச் சொன்னதும்..
"வாட்..?" என்று திகைத்தாள் டாக்டர் சுகந்தி..

"அந்தக் கதையை ஏன் கேட்கறீங்க.." என்று சரண் ஆரம்பித்து கதையை சொல்லி முடிக்க.. கன்னத்தில் கை வைத்து படு சுவராஸ்யமாக கதையும் கேட்டாள்..
"அப்புறம் என்ன ஆச்சு..?" என்று வேறு அவள் வினவிவைக்க.. சரணுக்கு சுவரில் தலையை முட்டிக் கொள்ள வேண்டும் போல ஆகிவிட்டது..
"ஏன் டாக்டர்.. நானென்ன கதையா சொல்கிறேன்..?"
"ஓ.. ஐ.. ஆம் ஸாரி.."
"இட்ஸ் ஆல்ரைட்.. இப்ப.. எனக்கு ஒரு வழியைச் சொல்லுங்க.."
"யு.. ஸீ.. மிஸ்டர் சரண்.." என்று சொன்ன சுகந்தி பார்க்க வெகு அழகாக இருந்து வைக்க.. பக்கத்தில் கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை வைத்துக் கொண்டு எப்படி அவளைப் பார்ப்பது என்று யோசிக்க ஆரம்பித்தான் சரண்..
"என்ன பதில் சொல்லாம இருக்கீங்க..?"
"நீங்க சொல்லுங்க மேடம்.. கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்.."
"இந்த டயத்தில்தான் ஒரு பெண்ணுக்கு.. கணவனோட அன்பும்.. ஆதரவும் அதிகமாக தேவைப்படும்.."
"எந்த டயத்திலும் அதைக் கொடுக்க நான் ரெடியாத்தான் இருக்கேன் மேடம்.. ஆனா.. இவதான் முருங்கை மரத்தில் ஏறிக்கிட்டு இறங்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறாளே..."
"பேய்க்கு வாழ்க்கைப்பட்டால்.. முருங்கை மரத்தில் ஏறித்தான் ஆகணுமுன்னு நினைச்சிட்டாங்களோ.. என்னவோ..."
சுகந்தி தன் அழகிய பல்வரிசை தெரிய சிரித்து வைக்க.. பதிலுக்கு சிரிக்காமல் மௌனப் பார்வை யொன்றைப் பார்த்து வைத்தான் சரண்..
"ஜஸ்ட் ஃபார் எஜோக்.." அவள் சமாதானத்திற்கு வந்தாள்..
'உனக்கு என் பிழைப்பைப் பார்த்தால்.. ஜோக் மாதிரித் தெரிகிறதா..?' மனதிற்குள் நொந்து கொண்டான் சரண்..
"என்னை உங்க சிஸ்டராக நினைச்சுக்கிட்டு.. இந்த அட்வைஸைக் கேளுங்க.." என்று சுகந்தி தன்மையாகக் கூறவும்..
'அதுசரி.. கர்ப்பமான பெண்டாட்டியை பக்கத்தில் வைத்திருக்கிறவன்கிட்ட தடாலடியா சிஸ்டர்ன்னு

சொல்லிடுவீங்களே..' என்ற நினைவுடன்..
"சொல்லுங்க.." என்றான் சரண்..
"அவங்க பேசணும்னு நீங்க எதிர்பார்க்காதீங்க.. ஈகோ பார்க்கும் நேரம் இது வல்ல..."
"நான் பேசினால் அவ முறுக்கிக்கிட்டு போவா மேடம்.. இவகூட லோல் படறதே எனக்கு பிழைப்பாய் போச்சு.."
"இப்படியாகுமுன்னு கல்யாணத்துக்கு முன்னாலேயே உங்களுக்குத் தெரியும்தானே.."
"நல்லாத் தெரியும்.."
"தெரிஞ்சுதானே கல்யாணம் பண்ணிக்கிட்டிங்க..? அப்பவே அவாய்ட் பண்ணியிருக்கலாமே..."
இப்படிச் சொன்னவளை நிமிர்ந்து தீர்க்கமாகப் பார்த்தான் சரண்..
"இவளை அவாய்ட் பண்ணின வாழ்க்கை எனக்குத் தேவையில்லை மேடம்.."
"தட்ஸ் குட்.. உங்க வொய்ஃப் ரொம்ப லக்கி.."
இதைச் சொன்ன சுகந்தியின் குரலில் ஒரு வித பொறாமை உணர்வு தொனித்ததோ என்ற ஐயத்துடன்-
"நானும் ரொம்ப லக்கிதான் மேடம்.. ஷி இஸ் ஸோ ஸ்வீட்.." என்றான் சரண்..
"ஓ.." சுகந்தி உதட்டைக் குவித்து வியப்புடன் சொன்னாள்..
"இவ்வளவு பிரியத்தை அவங்க மேல வைத்திருக்கீங்களே மிஸ்டர் சரண்.. இதை வெளிக்-காட்டாம மனசுக்குள்ள போட்டு பூட்டி வைத்து என்ன
ஆகப் போகுது.. அவங்ககிட்ட இதை வெளிப்படுத்துங்க.."
"அவளுக்கு இது தெரியும்.. தெரிஞ்சும் பிடிவாதம் பிடிக்கிறா.."
"இது அவங்களுக்கு அவசியமான பிடிவாதம்ன்னு நான் நினைக்கிறேன் சரண்.."
சுகந்தி நிதானமாக இதைக்கூறிவிட்டு.. நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.. சரணின் புருவங்கள் முடிச்சிட.. அவன் முகஇறுக்கத்தோடு அவளைப் பார்த்தான்..

"நீங்க மட்டுமில்லை சரண்.. பொதுவாக ஜென்ட்ஸ் எல்லோருக்குமே இந்த எண்ணம் இருக்கு.."
"என்ன எண்ணம்..?"
"ஆதிக்க மனப்பான்மை.."
"ஸோ.. நீங்க என்னை 'மேல் ஸாவனிஸ்ட்'ன்னு சொல்கிறீங்க.."
"நோ.. நோ.. இதுக்கு அது அர்த்தமில்லை.."
என்னவோ.. 'நான் அவனில்லை..' என்ற பாணியில் சுகந்தி அவசரமாகப் பேசவும்..
"வேறு எது அர்த்தம்..?" என்று நிதானமாக வினவினான் சரண்..
"நான் பெமினசம் பேசவில்லை சரண்.. சைக்காலஜிகலாக பேசறேன்.. ஆண்களின் பொதுவான மனநிலையைச் சொல்கிறேன்.."
"சொல்லுங்க..."
"காதலனோ.. கணவனோ.. அவங்க என்ன நினைக்கிறாங்களோ அதையே அந்தப் பெண்ணும் நினைக்கணும்னு நினைக்கிறாங்க.. அந்தப் பெண்ணுக்குன்னு தனிப்பட்ட ஒரு மனமிருக்கும், அதில் கனவுகள் இருக்கும், லட்சியங்கள் இருக்கும்ன்னு அவங்க நினைச்சுப் பார்க்கிறதில்லை.."
"ஓஹோ.. அவளுக்கென்று ஒரு மனம்ன்னு சொல்கிறீங்க..?"
"பழைய படங்கள் நிறைய பார்ப்பீங்களோ.."
"இப்ப பழசுதான் லேட்டஸ்ட் பேஷன்.."
"இதைப் பற்றி நாம இன்னொரு நாள் பேசலாம்.. இப்ப மாளவிகாவைப் பற்றிய விசயத்துக்கு வரலாம்..."
அந்த இன்னொரு நாள் எப்போது என்று நினைவுடன் சாய்ந்து அமர்ந்து கொண்டான் சரண்..
"மாளவிகாவின் லட்சியத்தைப் பற்றி எனக்கு நிறைய அப்ஜெக்சன் இருக்கு மேடம்.."
"உங்க பிஸினெஸ்ஸைப் பற்றி அவங்க அப்ஜெக்சன் சொன்னா நீங்க ஏத்துக்குவீங்களா..."
"அவளுக்கு பிஸினெஸ்ஸைப் பற்றி என்ன தெரியும்..?"
"இதைப் போலத்தானே.. அவங்க லட்சியத்தைப் பற்றியும் உங்களுக்கென்ன தெரியும்ன்னு அவங்க நினைப்பாங்க..?"

"ஏங்க.. பணம் கொட்டுகிற தொழில் என்னுடையதுங்க.. அவ கையில் இருக்கிற காசையுமில்ல கரியாக்கிக்கிட்டு உட்கார்ந்திருக்கிறா..?"
"எதை வைச்சு அப்படிச் சொல்கிறீங்க..?"
"தி.நகரில் அவ ஸ்கூல் கட்டியிருக்கிற இடம்.. பக்கா பிஸினெஸ் சென்டர்.. எந்த மடையனாவது அங்கே ஷாப்பிங் காம்ளெக்ஸ் கட்டாமல் வேறு கட்டிடத்தைக் கட்டணும்னு நினைப்பானா..? அபார்ட்மெண்ட் கட்டுறதுகூட வேஸ்டுங்க.."
சுகந்தி மௌனமாக சேரில் சாய்ந்து கொண்டு.. சரண் பேசியதை கவனமாக கேட்டாள்..
"இவ புத்திசாலியா இருந்தா.. அந்த இடத்தில் கால்வாசியை விற்றே.. அவுட்டரில் ஸ்கூல் கட்டி முடித்திருக்கலாம்.. முக்கால் வாசி இடத்தில் பணம் கொட்டும் ஷாப்பிங் காம்ளெக்ஸ்களை கட்டியிருக்கலாம்.."
"நீங்க எடுத்துச் சொன்னீங்களா..?"
"அவதான் சொன்னதைக் கேட்கிற பிறவியில்லைன்னு நான் சொன்னேனே..."
"அதுதான் உங்க கோபமா..?"
"கோபமில்லை மேடம்.. மனவருத்தம்.. பிஸினெஸ் சென்டரில் ஸ்கூலையும் கட்டி விட்டு.. கையிலிருந்த பணத்தையெல்லாம் கட்டிடத்தில் போட்டா.. சொல்லிப் பார்த்தேன்.. கேட்கலை.. போதாக் குறைக்கு அவ நகைகளையும் சேர்த்து 'ஸ்வாஹா' பண்ணினா.. இப்ப நான் சொன்னதுக்கு என் பணமும்.. நகையும் இல்லாமல் போச்சுன்னு கவலைப்படறீங்களான்னு கேட்டு வைச்சா.. ஒரு மனுசனுக்கு எப்படியிருக்கும்.. நீங்களே சொல்லுங்க.."
'இதில் நான் என்னத்தைச் சொல்ல..?' என்ற பார்வையுடன் சுகந்தி.. அசையாமல் அமர்ந்திருந்தாள்..
"ஒவ்வொரு ஃபாரின் ட்ரிப்புக்கும் ஒரு காஸ்ட்லி டயமெண்ட் ஸெட் வாங்கிக் கொடுப்பேன்.. தொட்டுக்கூடப் பார்க்கமாட்டா.. நான்.. இவ நகைக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டேனாம்.."
சுகந்திக்கு சரணின் ஆதங்கம் புரிந்தது..
"இதெல்லாம் பாஸ்ட் மிஸ்டர் சரண்.."

"பாஸ்டின் கன்டினியுட்டிதானே பிரஸெண்ட் மேடம்..? என் மாமா இறந்தப்போ அவ மனசளவிலே நொறுங்கிப் போயிட்டா.."
"அவங்க அப்பாமேல அவ்வளவு பாசமா..?"
"யெஸ்.. அந்தப் பாசத்திற்கு அவர் தகுதியானவர் மேடம்.."
"அவங்களுக்கு குறையாத பாசம் உங்களுக்கும் இருக்கு போல.."
"இருக்காதா பின்னே..? என்னை அவர் வளர்த்தவராச்சே.. அவர் போய் விட்டதில் எனக்கும் பாதிப்பு வந்தது.. பட்.. நான் ஆண்.. மனதுக்குள்ள போட்டுக்கிட்டு சோகத்தை வெளிக்காட்டாம.. நடைமுறை வாழ்க்கைக்கு திரும்பிட்டேன்.. மாளவிகா அப்படியில்லை.. சுருண்டுட்டா.. அந்தப் பீரியடில.. அவ ஸ்கூல் பொறுப்பை நான் எடுத்துப் பார்த்தேன்.."
"கிரேட்.."
"அப்போதுதான் அது எனக்குப் புரிந்தது.."
"எது..?"
"ஸ்கூலிலும்.. லாபகரமாக நடத்தினால்.. போட்ட பணத்தை எடுத்து விடலாம் என்பது.."
"நீங்க பிஸினெஸ் மைண்டில் அதைப் பார்த்திருக்கீங்க.."
"ஸோ வாட்..? அவ ஆசைப்படி.. ஆசைப்பட்ட இடத்தில்.. ஸ்கூலை கட்டிட்டா.. அதை வெற்றிகரமாய் கொண்டு வந்துட்டா.. இப்போ அந்த ஸ்கூலுக்கு நல்ல பெயர் இருக்கு இதை யூஸ் பண்ணிக்கிட்டு பீஸை ரெய்ஸ் பண்ணுவதில் தப்பில்லையே..."
"மாளவிகாவின் லட்சியம் வேறாக இருக்கலா மில்லையா..?"
"வேறாகத்தான் இருந்து தொலைக்குது.. அதுதான் அவளுக்கும் எனக்கும்.. வாக்குவாதம் ஆரம்பிக்க காரணமாப் போச்சு.."
"நீங்க என்ன சொல்கிறீங்க..?"
"அவளோட ஆசை.. டீச்சிங் லைன்தானே.. ஸ்கூல் பிரின்ஸிபாலாய் அவள் இருக்கட்டும்.. நிர்வாகத்தை என் கையில் கொடக்கலாமில்லையா..? அதை சக்ஸஸ் புல்லா நான் நடத்திக்காட்ட மாட்டேனா..? இப்ப நீங்களே இருக்கீங்க.. ஹாஸ்பிடலை கைப் பணத்தைக் கொட்டி..

வசதியாய் கட்டிட்டு.. இலவசமாய் சேவை பண்ணனும்னு நினைப்பீங்களா..? அப்படி நீங்க நினைச்சா.. உங்க ஹஸ்பெண்ட் அதை ஒப்புக் கொள்வாரா..?"
'இவன் யதார்த்தவாதி..' என்று நினைத்துக் கொண்டாள் சுகந்தி..
'இவன் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை..' சுகந்தியினால் சரணைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அவன் வெற்றிகரமாக தொழில் நடத்தும் விதம் அறிந்தவன்.. பல வெற்றிகளை ருசித்தவன்.. மாளவிகாவின் பண நஷ்டத்தை ஈடுகட்டி.. அந்தப் பள்ளியை பணம் கொட்டும் ஸ்தாபனமாக மாற்ற நினைக்கிறான். அவன் நினைவில் தவறு இல்லை என்றே சுகந்தி நினைத்தாள்..
"ஐ அக்ரி வித் யுவர் வேர்ட்ஸ் மிஸ்டர் சரண்.. பட்.. மாளவிகா கன்சீவ் ஆகியிருக்காங்க.. இப்ப இந்த ஆர்கியு மென்டினால் அவங்க மனது பாதிக்கப்படலாம்.. அது வயிற்றில் இருக்கும் குழந்தையைப் பாதிக்குமில்லையா..?"
"என் குழந்தைக்காகன்னு இல்லை டாக்டர்.. அவளுக்காகவே.. அவளை நான் துன்புறுத்த மாட்டேன்.. இது ஜஸ்ட் எ ஸ்மால் பிராப்ளம்.."
"பெரிசா வளர விட்டுட்டீங்க..."
"ஐ நோ.. ஐ நோ.."
"சரிபண்ணப் பாருங்க.. உங்களுடைய ஒபீனியன் சரியா.. தவறாங்கிறது இப்ப முக்கியமில்லை.. அவங்களுக்கு நீங்க மாரல் சப்போர்ட் பண்ண வேண்டிய நேரம் இதுங்கிறதுதான் ரொம்ப முக்கியம்.."
சரண்.. டாக்டரின் அறையை விட்டு வெளியே வந்தான்.. வரவேற்பில் சோர்வாக அமர்ந்திருந்த மாளவிகாவின் அருகே சென்றான்..
"வா.. போகலாம்.."
அவள் பதில் சொல்லாமல் எழுந்து கொண்டாள்.. நிற்க முடியாமல் தள்ளாடியவளின் தோளைச் சுற்றிக் கைகளை போட்டுக் கொண்டவன், அவளை கைத்தாங்கலாக காருக்கு அழைத்துச் சென்றான்..
"என்ன விசயங்க ஐயா..?"

வீட்டு வாசலிலேயே கவலையுடன் காத்துக் கொண்டிருந்த பஞ்சவர்ணம் ஓடி வந்து கார் கதவைத் திறந்தபடி கேட்டாள்...
"நீ சொன்னதுதான் பஞ்சவர்ணம்.." சரண் புன்னகைத்தான்..
"நிசமாலுமா..? ஆத்தாடி.. எங்க பெரியய்யாவோட பொண்ணே ஒரு குழந்தை.. இவங்க குழந்தை பெத்துக்கப் போறாங்களா.."
பஞ்சவர்ணம் குதூகலத்துடன்.. வீட்டுக்குள்ளிருந்த மற்ற வேலையாள்களிடம் செய்தியை ஒளிபரப்ப ஓடி விட.. சரண் மாளவிகாவை மாடிக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தான்..
கண்மூடிப் படுத்திருந்தவளின் முகத்தில் தெரிந்த நிராதவான தோற்றம் சரணின் மனதைப் பாதிக்க.. அவளது முடி கோதி "நீயாய் இழுத்துக்கறேடி.." என்று முணுமுணுத்தான்..

16

இளங்காலையின் கதிர்கள் அறைக்குள் படர்ந்தபோது.. மாளவிகா கண் விழித்தாள்.. எழுந்து கொள்ள முயன்றாள்.. முடியவில்லை.. உடல் அவளது மனதின் வேகத்திற்கு ஒத்துழைக்காமல் சண்டித்தனம் செய்தது...
'சை... என்ன இது.. குடிகாரனின் போதை போல இப்படி தலை சுத்துதே...'
மாளவிகா தலையில் இருந்த கிறக்கத்தை விரட்டியடிக்க முயன்றவளாக தலையை வலம்.. இடமாக வேகமாக ஆட்டினாள்..
"தலையணையில் தலையை உருட்டினா.. மசக்கை ஓடிப்போயிருமா..?" சரண் காபிக் கோப்பையோடு அறைக்குள் வந்தான்..
அவன் இயல்பாகப் பேசி விட்டத்தில் மாளவிகாவின் மனம் மலர்ந்து விட்டது..
'எவ்வளவு நாளாச்சு.. இவன் இப்படிப் பேசி..?' ஆவலாக கணவனின் முகம் பார்த்தாள்..

"என்ன பார்க்கிற..? எழுந்திருச்சு.. காபியைக் குடி.." அவன் அவளை எழுப்பி அமர வைத்தான்..
"என்னை பேஷண்ட் போல ட்ரீட் பண்ணாதீங்க.."
"ஆரம்பிச்சுட்டியா..? கொஞ்ச நாளைக்கு அலட்டிக்காம அடக்கி வாசிடி.."
"எதுக்காம்..?"
"வேற எதுக்கு.. நம்ம பிள்ளை ஒழுங்காகப் பிறக்கிறதுக்குத்தான்.."
குழந்தையின் பேச்சு வந்ததும்.. மாளவிகாவின் முகம் கனிந்தது.. அவள் வாக்குவாதம் செய்யாமல் காபியை வாங்கிக் குடித்தாள்.. பாதிகாபியில் வாந்தி வர வாஷ் பேசினுக்கு ஓடினாள்..
"மெல்ல.. மாளவிகா.."
சரண் அவளது நெற்றியில் கைவைத்துப் பிடித்துக் கொண்டான்..
"இதுக்குத்தான் எதையும் குடிக்கவோ.. சாப்பிடவோ.. கூடாதுங்கிறது.."
"அது எதுக்கு..?"
"ம்ப்ச்.. தண்ணீரைக் குடித்தாலும் குமட்டிக்கிட்டு வெளியே வந்துருது.. சாப்பாடில்லாம இருக்கலாம்.. தண்ணியில்லாம இருக்க முடியுமா..?"
"முடியாதுன்னு தெரியுதில்ல.. அதனால.. எதையும்.. அவாய்ட் பண்ணாதே..."
"வாமிட் வருதே.."
"வந்தால் எடு.. பாதியாவது உடம்பில் சேருமில்ல..?"
"இதுக்கே இப்படி தள்ளாடுதே.. இந்தக் குடிகாரங்க எல்லாம் எப்படித்தான் குடிச்சு.. இந்த போதையை ஏத்திக்கிறாங்களோ.. தன் நினைப்பு இல்லாம இருக்கிறதுக்கு குடிக்கணுமா..?"
"இதுக்கான பதிலை.. குடிகாரங்ககிட்ட கேட்டுட்டு.. உனக்கு விளக்கம் சொல்றேன்.. இப்பப் படு.."
"படுக்கிறதா..? நோ.. நோ.."
"எதுக்கு இத்தனை நோ..?"
"எனக்கு ஸ்கூலுக்கு கிளம்பணும்.. நேரமாச்சு.."
"இந்த உடம்போட எப்படிடீ ஸ்கூலுக்குப் போவ..?"

இதைக் கேட்டதும் மாளவிகா சரணை சந்தேகமாக பார்க்க.. சரணுக்கு பற்றிக் கொண்டு வந்தது..
"இதோ பாரு மாளவிகா.. எனக்கு உன் ஸ்கூல் மேல் இன்ட்ரெஸ்ட் இல்லை.. போதுமா..? என் இன்ட்ரெஸ்ட் உன் மீதுதான்.."
"நான் எதுவும் கேட்கலையே.."
"கேட்டால்தானா..? மகராசி.. மனசுக்குள் என்னைப் பற்றி எத்தனை உயர்வா நினைச்சுக்குவீங்கன்னு எனக்குத் தெரியாதா..? நீங்க வாயைத் திறந்து வேற அதைக் கேட்டு வைக்கணுமா..?"
மாளவிகா பதில் சொல்லாமல்.. கைவிரல்களை ஆராய ஆரம்பிக்க.. சரண் அவளருகில் அமர்ந்தான்.. அவளை லேசாக அணைத்துக் கொண்டான்.. அவளது உடலில் சிலிர்ப்பு ஓடுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..
"நீ ஸ்கூல் அட்மிசனை முடிச்சிட்ட மாளவிகா.."
"அதுக்கென்ன..?"
"ஸ்கூல் ரன் ஆக ஆரம்பிச்சு.. ஒரு மாதமாச்சு.."
"அதுக்கும் என்ன..?"
"இனி.. அதில் தலையிட்டு எனக்கென்ன ஆகப் போகுது..?"
"ரிசல்ட் காண்பிக்க வேணாமா..?"
"உன் ஸ்கூல் டீச்சருக்கு ஒழுங்காய் சம்பளம் கொடுக்கிறயா.. இல்லையா..,?" மாளவிகா சரணை முறைத்தாள்..
"என்னை ஏன் முறைக்கிற.. வாங்கின சம்பளத்துக்கு அவங்க வேலையை செய்ய மாட்டாங்களா..?"
"கேப்டன் இல்லாம கப்பல் ஓடினா நல்லாயிருக்காது.."
"இதையெல்லாம் உணைக்கையாய் பேசிரு.. சொன்ன பேச்சை மட்டும் கேட்டு விடாதே.. ஏண்டி.. இந்தக் கேப்டன்.. மசக்கை வந்து வாந்தியும்.. மயக்கமுமா இருக்கிறாளே.. கேப்டன் தள்ளாடினா.. கப்பலும் சேர்ந்து தள்ளாடும்.. அடங்கிப் படு.."
"என்னை வீட்டுக்குள்ள முடக்கப் பார்க்கறிங்க சரண்.."
"புயலை பூ ஜாடிக்குள்ள அடக்கி வைக்க முடியுமா..? கடலை கைப்பிடிக்குள் நிறுத்த முடியுமா..? வானத்தை சேலையைப் போல மடிச்சுத்தான் வைக்க முடியுமா..?"
"உங்களுக்கு என்ன ஆச்சு..?"

"இப்படி பன்ச் டயலாக்கை பேசினாலாவது என் பேச்சு உன் காதில் ஏறாதாங்கிற நப்பாசைதான்.. வேறு என்ன..?"
"இப்ப என்னை என்னதான் பண்ணச் சொல்கிறீங்க..?"
இப்படிக் கேட்ட மனைவியை.. 'நீதானா.. அந்தக் குயில்..?' என்ற ரீதியில் ஆச்சரியமாக பார்த்து வைத்தான் சரண்..
"ஏன்.. அப்படிப் பார்க்கறீங்க..?" மாளவிகாவிற்கு வெட்கமா போய்விட்டது..
"நீயாடி இது..? எப்போதிலிருந்து இப்படி சொல்போச்சு கேட்கிற சுந்தரியாய் மாறின..? இப்படி என் பன்ச் டயலாக்கிற்கு மசிவேன்னு தெரிஞ்சிருந்தா.. முன்னாலேயே நித்தம் ஒரு பன்ச் டயலாக்கை அள்ளி வீசியிருப்பேனே.."
"நல்லவேளை.. நீங்க அப்படிச் செய்யலை.."
"என்னடி.. திடீர்ன்னு அந்தர் பல்டி அடிக்கிற..?"
"ஆமாம்.. இங்கே தானாய் எழுந்திருச்சு நிற்கவே முடியலை.. இதில பல்ட்டி ஒண்ணுதான் குறைச்சல்.. இந்த பன்ச் டயலாக்கை முன்னாலேயே அள்ளி விட்டிருந்தீங்கன்னு வையுங்க.."
"என்னடி செய்திருப்ப..? காதலாகி.. கசிந்துருகி-யிருப்பியா..?"
"ஊம்..? உங்க காதலை மறுபரிசீலனை செய்திருப்பேன்.."
"அடிப்பாவி.. காரியத்தையே கெடுக்கப் பார்க்கறியே.."
"எனக்கு பன்ச் டயலாக்குன்னாலே செம அலர்ஜி.."
"இதுக்கு மேல இந்த விசப்பரீட்சையை நான் செய்ய மாட்டேன்.."
"பரீட்சைன்னதும் நினைவுக்கு வருது.."
"ஆன்ஸரா..?"
"இல்லை.. ஸ்கூலில் குவார்ட்டரிலி எக்ஸாம் ஆரம்பிக்கப் போகுதே.."
"அதுக்கு.. ஸ்டூடன்ஸ்தானே கவலைப்படணும்..? நீயேன் கவலைப்படறே..? நீயா பரீட்சை எழுதப் போகிற..?"
"சரண்.."
"சொல்லு.."
"தினமும் போய் என் ஸ்கூலை பார்த்துடறீங்களா..?"
இதைச் சொல்லுவது தன் மனைவிதானா.. என்ற சந்தேகத்துடன் மாளவிகாவை ஒரு விதமாக பார்த்தான்

சரண்..
"என்ன ஒரு மார்க்கமா பார்த்து வைக்கறீங்க..?" என்று கேட்டு வைத்தாள் அவள்..
"ஏண்டி சொல்ல மாட்ட..? இத்தனை நாளாய் பட்டினி போட்டு விட்டு.. இப்ப வாந்தியும் மயக்கமுமா இருக்கிற நிலைமையில் ஒரு மார்க்கமாய் கேள்வி கேட்டு வைக்கறியே.. உனக்கே இது நியாயமாய் படுதாடி..?" சரண் விட்ட பெருமூச்சில்.. அந்த அறையே அனலானது..
"நானா உங்ககூட சண்டைக்கு வந்தேன்..?"
"இல்லைங்கறியா..?"
"இல்லைங்கறதுதானே உண்மை.."
"இவ பெரிய உண்மை விளம்பி.."
"நீங்கதான் என்னை சண்டைக்கு இழுத்தீங்க.."
"கையைப் பிடித்து இழுத்தேன்னு சொல்லு.. கேட்டுக்கறேன்.. அதை விட்டுட்டு சண்டைக்கு இழுத்தேன்னு அபாண்டமா பொய் சொல்லாதே.."
"இப்ப என்னாங்கறீங்க..?"
"இப்படி உரிமையோடு சண்டை போடுடி.. அதை விட்டுட்டு உம்மணாம் மூஞ்சி போல முகத்தை திருப்பிக்காதே.. இப்ப உனக்கு என்ன வேணும்..? தினமும் உன் ஸ்கூலுக்கு ஒரு விசிட் போகணும்.. அவ்வளவுதானே.. நான் பார்த்துக்கறேன்.."
"எனக்கு உடம்பு சரியாகிற வரைதான்.."
மாளவிகா அப்போதும் எச்சரிக்கையுடன் சொல்ல..
"ஏண்டி.. நீ திருந்தவே மாட்டியா..?" என்றான் சரண்..
அன்று இரவு.. அவன் கைகளுக்குள் அடைக்கலமாகி.. நிம்மதியாய் தூங்கினாள் மாளவிகா..

## 17

"நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்..
சீராரும் வதனமென
திகழ்பரத கண்டமிதில்.."

வரிசையாக சீருடை அணிந்த மாணவ.. மாணவிகள்.. நின்று பாடிக்கொண்டிருக்க.. மற்ற ஆசிரிய..

ஆசிரியைகளுடன்.. அவர்களின் அணிவகுப்பைப் பார்த்தபடி.. அசையாமல் நின்றாள் மாளவிகா..
"தமிழ்தாய் வாழ்த்தா..? எந்த பீரியடில் இருக்க மாளவிகா..?"
"ஏன்..? அது என்ன பீரியட் பிரைம் பாட்டா..?"
"இது கம்ப்யூட்டர் காலம்டி.."
"அதுக்காக.. தாய் மொழியை மறக்கணுமுன்னு கட்டாயம் எதுவும் இருக்கா..?"
"இங்கிலீஷ்.. லாங்வேஜ்.. உன் ஸ்கூலின் குவாலிட்டியை தூக்கிக் காட்டும்.."
"என் ஸ்கூல்.. இயல்பாக உயரட்டும்.. என் தாய் மொழியை அவமதித்து உயரவேண்டாம்.."
சரண் 'எக்கேடோ கெட்டுப் போ..' என்ற பாவனையில் அமைதியாகி விட்டான்..
மாளவிகாவின் பிரசவ சமயத்திலேயே.. டாக்டர் சுகந்தி அவனிடம் மனதில் பதியும்படி கூறிவிட்டாள்..
"மிஸ்டர் சரண்.. நீங்க உங்க வொய்ஃபை உயிருக்குயிராய் காதலிக்கிறீங்க.. அவங்களுக்காக.. எதையும் செய்யத் தயாராய் இருக்கீங்க.. அப்படியிருக் கையில்.. இந்த ஸ்கூல் விசயத்தில் தலையிடாமல் இருப்பதில் உங்களுகென்ன கஷ்டம் வந்து விடப்போகுது..? கோடி கோடியாய் பணத்தை நீங்க அவங்க கையில் கொட்டினாலும்.. அவங்க மனசு திருப்தியடையாதுன்னு நீங்கதானே சொன்னீங்க..? அவங்க திருப்தி.. அந்த ஸ்கூலை நடத்துவதில் இருக்குன்னா.. அந்த திருப்தியை நீங்க அவங்களுக்கு கொடுங்க.."
சரண் கொடுத்தான்.. மாளவிகா விரும்பிய லட்சியப் பாதையில் அவளை நடக்கவிட்டான்..
பள்ளிக்கூட விவகாரங்களில் தலையிடாமல் சரண் முற்றிலுமாக ஒதுங்கிக் கொள்ள.. மாளவிகா அவனை முழுமையாக காதலிக்கத் தொடங்கினாள்...
"எனக்கு அந்த ஸ்கைபுளூ கலர் சேலையை பிடிச்சிருக்கு.. எடுத்துத் தாங்களேன்.."
முதன் முறையாக அவள் வாய் விட்டு தன் விருப்பத்தைக் கேட்ட அன்று சரண் வானில் பறந்தான்..
"உனக்கு என்னவெல்லாம் பிடிச்சிருக்கோ.. எடுத்துக்க.."
அவளை ஜவுளிக்கடையில் நிறுத்தினான்..

"நான் சம்பாதிப்பதற்கான அர்த்தமே இப்போத்தான் கிடைச்சிருக்கு.." புடவைகளுக்கான பில் பணத்தை கொடுத்து விட்டு.. படிகளில் இறங்கும் போது.. மனைவியிடம் சொன்னான்..
"பெண்டாட்டி.. ஜவுளிக்கடைக்குள் நுழைந்தால்.. பர்ஸுக்கு வேட்டு வைக்கப் போகிறாள்ன்னு எல்லா ஆண்களும் அழுவாங்க.. நீங்க என்ன விதி விலக்காப் பேசறீங்க..?"
"எல்லாருடைய பெண்டாட்டி மாதிரியா என் பெண்டாட்டி இருக்கா? ஊரைப் போல.. நாட்டைப் போல.. பெண்டாட்டி அமைகிற கொடுப்பினை தான் எனக்கு இல்லையே.."
"அடேங்கப்பா.. ரொம்பத்தான் அலுத்துக்கறீங்க.. எனக்கு என்ன குறையாம்..?"
நிறை மாத கர்ப்பிணியாக லேசாக மூச்சிரைக்க கேட்ட மாளவிகா குறை எதுவும் சொல்ல முடியாத.. தாய்மையின் வசீகரத்தோடு நிற்க.. சரண்.. தெருவென்றும் பாராமல்.. அவள் கன்னத்தில் முத்தமிட்டான்..
"ஐ லவ் யு மாளவிகா.."
அவள் அவனின் மகனைப் பெற்றுக் கொடுத்தபோது அவனது காதல் இன்னும் அதிகமானது..
"குட்டிக்கு பெயர் வைக்கணும் சரண்.."
"கிராண்டாய் ஃபங்சனை கொண்டாடிலாம்.."
"உங்களுக்கு பார்ட்டி கொடுக்க.. இது ஒரு சாக்கு.."
"பிஸினெஸ் மேன்டி.."
"குட்டிக்கு என்ன பெயர் வைக்கலாம்..?"
அவன் 'வாசவன்..' என்று அவள் தந்தையின் பெயரைச் சொல்வானென்று அவள் எதிர்பார்க்க..
"தருண்.." என்றான் அவன்..
மாளவிகா சட்டென்று எழுந்து உள்ளே போய் விட்டாள்.. அவள் முகம் கூம்பி விட்டது..
'அப்பா பெயர் இல்லையா..' அவள் மனம் சிணுங்கியது...
அன்று இரவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது.. சரண் புருவம் உயர்த்தினான்.. அவள் புரியாதவளைப் போல பார்த்தாள்..
"என்னடி.. மௌனராகம் பாடிக்கிட்டு இருக்க..?"
"ஒன்றுமில்லை..."

"இங்கே பாரு.. மனசில் பட்டதைக் கேட்கிறவதான் மாளவிகான்னு என் மனசுக்குள்ள உன்னைப் பத்தி ஒரு இமேஜ் இருக்கு.. அதை உடைக்காம உண்மையைச் சொல்லு..."
"அப்பா பெயரை ஏன் வைக்கல..?"
"யாருக்கு..?"
"நம்ம பிள்ளைக்கு.."
"அதுக்குத்தான் இப்படிக் குற்றப் பத்திரிகை வாசிச்சுக்கிட்டு இருக்கியா..? மாமா பெயரை என் மகனுக்கு வைக்காம.. என் அப்பாவின் பெயரையா வைத்து விட்டேன்..?"
"நான் அப்படிச் சொன்னேனா...?"
மாளவிகா மகனைத் தூக்கிக் கொண்டு மாடிக்குப் போய்விட.. இரவுச் செய்தியைப் பார்த்துவிட்டு.. சரண் மாடியேறினான்..
அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தபோது விடி விளக்கின் மெல்லிய வெளிச்சம்.. அறையில் பரவியிருந்தது.. அந்த மெல்லிய ஒளியில் கண்மூடிப் படுத்திருந்த மாளவிகா தேவதையைப் போல இருந்தாள்.. கட்டிலை சமீபித்த சரண்.. குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்.. அதன் பிஞ்சு விரல்களில் முத்துமிட்டான்..
"தூங்குகிற பிள்ளையை எழுப்பி விடாதீங்க..."
"நீயேன்டி தூங்கறவளைப் போல நடிச்சே..?"
"ம்ச்ச்.."
"லுக் மாளவிகா.. இவன் நம் மகன்.. இவனை 'வாடா.. போடா'ன்னு நாம் கூப்பிடுவோமா.. மாட்டோமா..?"
"இது என்ன கேள்வின்னு கேட்கறிங்க.."
"முதல்ல.. என் கேள்விக்கென்ன பதில்டி..?"
"பெத்த பிள்ளையை வாடா.. போடான்னு கூப்பிடாம.. வேற எப்படிக் கூப்பிடறது..? இது ஒரு கேள்வின்னு கேட்க வந்திட்டார்.."
"டீச்சரம்மாவுக்கு கேள்வி கேட்கத்தானே தெரியும்.. பதிலை சொல்லத் தெரியாதே..."
"அதுக்காக டெஸ்ட் பண்ணிப் பார்த்தீங்களாக்கும்..?"
"அதுக்கு மட்டுமில்லடி.. என் மக்கு பெண்டாட்டி.."
"மக்கா.. நானா..?"

"நீதான்.. வேறு யாரு..? இவனுக்கு உங்க அப்பா பெயரையோ.. இல்லை.. என் அப்பாவின் பெயரையோ வைத்தால்.. வாடா.. போடான்னு பெயர் சொல்லிக் கூப்பிட முடியுமா..? கொஞ்சம் இமாஜின் பண்ணிப்பாரு.."
'வாடா வாசவா.. டேய் வாசவா..' மாளவிகா மனதிற்குள் சொல்லிப் பார்த்துவிட்டு நாக்கைக் கடித்தாள்..
'அப்பா பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதா..?'
"பெயர் சொல்லிக் கூப்பிடத்தான் பிள்ளைக்கு பெயர் வைக்கிறோம்.. மனசிலாயி..?"
சரண்.. மகனைத் தொட்டிலில் படுக்க வைத்து விட்டு.. மனைவியை அணைத்துக் கொண்டான்...
"ஐ ஆம் ஸாரி.." என்றாள் அவள்..
"எதுக்கு..?"
"உங்களைத் தப்பா நினைச்சதுக்கு.."
"புதுசா நினைக்கறியா..? விவரம் தெரிந்த நாளில் இருந்து இதுதானே உன் பிழைப்பாய் இருக்கு.."
மாளவிகா வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்...
தருணுக்கு நான்கு வயதான போது.. மாளவிகாவிற்கு மீண்டும் மசக்கை வந்தது..
"ஸ்கூல்..?" என்று அவள் இழுக்க..
"என் மகளைப் பெற்றுக் கொடுத்துட்டு உன் ஸ்கூலைக் கவனிக்கப் போ.." என்று கறாராக சொல்லி விட்டான் சரண்...
தருணுக்கு தங்கை பிறந்தாள்..
"தாரிணின்னு பெயர் வைக்கலாம் மாளவிகா.."
மாளவிகா மறுப்புச் சொல்லவில்லை. தருணும்.. தாரிணியும். 'வாசவ் ஹையர் செகண்டரி ஸ்கூலிலேயே சேர்ந்து படித்தனர்..'
"என் பிள்ளைகளை இன்டர்நேசனல் ஸ்கூலில் சேர்க்கப்போகிறேன்.." சரண் அலட்டிக் கொண்டான்...
"அவங்க எனக்கும் பிள்ளைகள்.." மாளவிகா அழுத்தமான குரலில் சொல்லவும் அடங்கிப் போனான்..
போர் முழக்கத்தை கைவிட்டு விட்ட மனைவியை முறைத்துகொள்ள அவன் விரும்பவில்லை..

தருண் பத்தாம் வகுப்பிலும்.. தாரிணி ஆறாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தனர்.. அவர்களின் பள்ளி.. நான்கு ஆண்டுகளாக.. மாநிலத்தில் முதல் ரேங்க் எடுத்த மாணவ மாணவிகளை தந்து கொண்டிருக்க.. தமிழ்நாடு மாளவிகாவின் பள்ளியைத் திரும்பிப் பார்த்தது..
கூடவே.. பணத்தாசை கொண்ட வஜ்ரவேலுவும் திரும்பிப் பார்த்து தொலைத்தான்..
அவன் அந்த வட்டாரத்தின் பெரிய மனிதன். மிகப் பெரிய பணக்காரன்.. அரசியல் பின்புலம் கொண்டவன்.. இது வெளியே அவன் காட்டும் முகம்..
அவனுடைய மறுபக்கம்.. அவனை 'தாதா' என்று அடையாளம் காட்டியது. எல்லாத் தொழில்களிலும் கால் பதித்த அவன்.. அந்தக் கல்வியையும் தொழிலாக நினைத்து கால்பதிக்க துடித்ததுதான்.. மாளவிகாவை பாதித்து விட்டது..
"வணக்கங்கம்மா..."
இரு கைகளையும் உயரத்தூக்கி கும்பிட்டவாறே.. ஏதோ தேர்தல் காலத்தில்.. ஓட்டுக் கேட்க வந்த அரசியல் வாதியைப் போல்.. அவன் ஒருநாள் மாளவிகாவின் அறைக்குள் பிரவேசித்தான்..
"யார் நீங்க..?" என்ற கேள்வியுடன் மாளவிகா மேஜை மேலிருந்த அழைப்பு மணியை அழுத்தினாள்..
பியூன் ஓடி வந்து நின்றான்..
"விசிட்டர்ஸ் வந்தா வெளியே உட்கார வைத்து விட்டு எனக்குத் தகவல் சொல்லி.. பெர்மிஷன் வாங்கணுமுன்னு உனக்குத் தெரியுமா.. தெரியாதா..?"
அவளின் கண்டிப்பான கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் அவன் மலங்க மலங்க விழித்தான்..
"அவனை ஏன் திட்டறீங்க வாத்தியாரம்மா..
உங்களுக்குத்தான் என்னை யாருன்னு தெரியலை..
அவனுக்குத் தெரியுமே.. தெரிஞ்ச பின்னாடியும் என்னை தடுத்து நிறுத்த அவனுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?"

வஜ்ரவேலு மாளவிகாவின் அனுமதியை எதிர் பார்க்காமல் அவளுக்கு எதிரேயிருந்த சேரில் அமர்ந்து கொண்டான்.. அத்தோடும் நிற்காமல்..
"நீ போப்பா.. நான் வாத்தியாரம்மாகிட்ட பேச வேண்டியிருக்கு.." என்று பியூனுக்கு உத்தரவு போடவும் செய்தான்..
அவனுடைய உத்தரவிற்கு கீழ்படிந்து பியூன் உடனடியாக அறையை விட்டு வெளியேறவும்.. மாளவிகா யோசனையுடன் எதிரே அமர்ந்திருந்தவனைப் பார்த்தாள்..
வஜ்ரவேலு.. வெள்ளை.. வேட்டி சட்டையில் இருந்தான்.. அவனுக்குப் பின்னால் கைகட்டி நின்ற வாட்டசாட்டமான நான்கு ஆள்களும்.. அவனைப் போலவே.. வெள்ளை வேட்டி சட்டையில் இருந்தனர்..
'என்னவோ.. சொட்டு நீல விளம்பரத்துக்கு வருகிறதைப் போலஇல்ல போஸ் கொடுத்திக்கிட்டு நிற்கிறானுங்க..' மாளவிகா பல்லைக் கடித்தாள்...
"நீங்க யாருன்னு கேட்டேன்..?" மாளவிகாவின் குரலில் கண்டிப்பு குறையவில்லை..
"வஜ்ரவேலுன்னா.. இந்த ஏரியாவில் பிறந்த குழந்தைக்குக்கூடத் தெரியும்மா.." அவன் கெத்தாகக் கூறினான்..
"நான் பிறந்த குழந்தையில்லை.."
"பார்த்தாலே தெரியுதே.."
ஏற்கெனவே அவனது பார்வையில் எரிச்சலைடந் திருந்த மாளவிகா இதைக் கேட்டதும்.. ரௌத்திரமாகி விட்டாள்..
"மிஸ்டர் இது ஸ்கூல்.."
"நம்ம ஸ்கூலுன்னு சொல்லுங்கம்மா.."
"நம்ம ஸ்கூலா..?"
"ஆமா.. இன்னைக்கு இது உங்களோட ஸ்கூல்.. நாளைக்கே.. இது என்னோட ஸ்கூல் ஆகணும்.."
அதுவரை நிதானமாகப் பேசிக்கொண்டிருந்த மாளவிகாவின் பொறுமை காற்றில் பறந்தது..
"ஹூ ஆர் யு மேன்..? யாருகிட்ட வந்து என்ன பேச்சுப் பேசற..? இது என் உழைப்பில் உருவான ஸ்கூல்.. உன்னைப் போல ஆளுகளின் காலடி இந்த ஸ்கூல் மண்ணில் படுவதே

பாவம்... இதில ஸ்கூலை விலை பேச வரியா..? இதுக்கு விலை மதிப்பு கிடையாது.. வெளியே போ.."
மாளவிகா பெண் சிங்கமாய் கர்ஜிக்க.. அவன் சாவதானமாக கேட்டான்..
"போகலைன்னா..?"
"போக வைப்பேன்.."
"அது உன்னால் முடியாது.. அதே சமயம் இந்த ஸ்கூலை எனக்கு நீ பத்திரம் போட்டுக் குடுக்கிற.. அது மட்டும்தான் உன்னால் முடியும்.."
"கனவு காணாதே.. அது ஒருநாளும் நடக்காது.."
"நான் நடத்திக்காட்டறேன்.."
வஜ்ரவேலு போய் வெகுநேரமாகியும் - மாளவிகாவிற்கு படபடப்பு அடங்கவில்லை. மேஜை மேலிருந்த தண்ணீர் பாட்டிலை.. தொண்டையில் சரித்துக் கொண்டவளுக்கு.. கண் முன் போர்க்களம் தெரிந்தது..
'இதை எப்படி டீல் பண்ணுவது..?'
இதே சிந்தனையுடன் வீடு வந்தவளை.. இறுகிய முகத்துடன் எதிர்கொண்டான் சரண்..
"வஜ்ரவேலு உன் ஸ்கூலை விலைக்கு கேட்டானா..?"
"ஆமாம்.. அது எப்படி உங்களுக்குத் தெரியும்..?"
"என்னைப் பார்க்க என் கம்பெனிக்கு வந்திருந்தான்.."
"ராஸ்கல்.. ஸ்கூலை வாங்கியே தீருவேன்னு சவால் விட்டுட்டுப் போகிறான்.. நானா.. அவனான்னு.. ஒருகை பார்க்காம நான் விடறதாயில்லை.."
"நீ தனி மனுஷியில்லை மாளவிகா.."
கண்டிப்புடன் இதைக் கூறிய சரணின் முகத்தில் அப்பட்டமான கோபம் தெரிந்தது..
"சரண்.." என்றாள் அவள் திகைப்புடன்..
"உனக்கு குடும்பம் இருக்கு மாளவிகா.. உன்னைக் குறிவைக்கிறவங்களோட கோபப் பார்வை.. நம்ம பிள்ளைகள் மேல விழுந்து விடக்கூடாது.."
"என்ன சரண்.. இப்படி பயமுறுத்தறீங்க..?"
"அவன் பயப்பட வேண்டியவன்.."
"அதுக்காக.. ரௌடியைப் பார்த்து நாம பயப்படலாமா..?"
"ஏண்டி.. அவனென்ன ஒத்தைக்கு ஒத்தைன்னு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு.. நேரே வந்து நிற்கிற ஆளா..? முதுகிற்கு

பின்னால் குத்தறவண்டி.."
"பாரதியாரே சொல்லியிருக்கிறார் சரண்.."

"பாதகம் செய்பவனைக் கண்டால் - நீ
பயங் கொள்ளாலாகாது பாப்பா..
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பான்னு.."

"மாளவிகா.."
சரண் போட்ட சத்தத்தில் அந்த வீடே அதிர்ந்தது.. படித்துக் கொண்டிருந்த.. தருணும், தாரிணியும்.. அறைக்குள் எட்டிப் பார்த்தார்கள்.. அதைக்கூட கண்டு கொள்ளாமல் மாளவிகாவிடம் இரைந்து கொண்டிருந்தான் சரண்..
"நான் சொல்லிக்கிட்டு இருக்கிறதென்ன.. நீ பேசறது என்ன..? பாப்பா பாட்டை பாடிட்டு நீ முட்டாளைப் போல நிற்கறியே.. உனக்கு அறிவுங்கிறதே இல்லையா..? அதை கடன் கொடுத்துட்டியா..?"
"நீங்கதான் புரியாம பேசறீங்க.. அது என்னுடைய ஸ்கூல்.. அதை அவன் கேட்டதும் தூக்கி தந்துட முடியுமா..?"
"வேற வழியில்லை மாளவிகா.. நான் அப்பவே படிச்சுப் படிச்சு சொன்னேன்.. இந்த ஸ்கூல் நடத்துற விசயமெல்லாம் நமக்கு உதவாதுன்னு.."
"என்ன பேசறிங்க சரண்..? எனக்கு பிடித்த வேலையை நான் செய்ய நினைக்கிறது குற்றமா..?"
"உனக்கு எப்படிச் சொல்லி புரிய வைப்பேன் மாளவிகா.. அவன் உன் ஸ்கூலை விலை பேச வந்தானே.. உன் ஸ்கூலை விட.. அதிகமா கோடிக்கணக்கில் பணம் கொட்டுகிற தொழில்.. என்னுடைய தொழில்.. என் கம்பெனியை விலை பேசினானா..?"
சரண் இப்படிக் கேட்டதுமே.. மாளவிகா.. புரியாமல் விழித்தாள்..
"ஆமாமில்ல.. ஏன் கேட்கலை..?"
"அது அவனுக்கு புரியாத ஏரியாடி.. கம்ப்யூட்டர்ன்னா அவன் பயப்படுவான்.. அதுவே கண்ணுக்கு முன்னால் இருக்கிற ஸ்கூல்ன்னா ஆசைப்படுவான்.."
மாளவிகாவிற்கு கோபம் வந்தது...

"ஸ்கூல் நடத்தறதுன்னா அவனுக்கு அவ்வளவு ஈஸியா போச்சா..?"
"அவனாடி நடத்தப் போறான்..? டீச்சர்ஸ் ஸ்கூலை ரன் பண்ணப் போகிறாங்க.. அவன்.. ஃபீஸை வாங்கி மடியில் போட்டுக்கப் போகிறான்.."
"சரண்.. நீங்க அவனுக்கு சப்போட்டா பேசறது போல எனக்குப் படுது.." மாளவிகாவின் குரலில் கோபம் தென்பட்டது..
"நான் நடப்பைச் சொன்னேன் மாலு.. இதில் சப்போர்ட் பண்ண என்ன இருக்கு..? நீ அந்த ஸ்கூலை எந்த அளவுக்கு நேசிக்கிறாய்ன்னு எனக்குத் தெரியும் - அதே சமயம் உன்னையும்.. பிள்ளைகளையும் நான் எந்த அளவுக்கு நேசிக்கிறேன்னு உனக்கும் தெரியும்.."
சரணின் வார்த்தைகளில் இருந்த உண்மையை மாளவிகா நன்கு அறிவாள்...
"இந்தப் பிரச்னை உங்க கம்பெனிக்கு வந்திருந்தால் நீங்க என்ன செய்வீங்க..?"
"உன்னையும்.. பிள்ளைகளையும்.. முதல் வேலையா.. பாரினில்.. ஏதாவது ஒரு கன்ட்ரியில் செட்டில் பண்ண வைத்துவிட்டு.. என் கம்பெனியின் கேபிடலை வேறு ஊருக்கு மாற்றியிருப்பேன்.. உனக்கே தெரியும்- உனக்காகத்தான் நான் சென்னையில் இருக்கிறேன் என்பது.."
மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமானாள்.. அவர்கள் இருவரின் பேச்சையும் கவனித்தவாறு நின்றிருந்த தருணும்.. தாரிணியும்.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..
"டாட்.. ரௌடியிசத்துக்கு பயப்படுகிறீங்களா..?" தருண் முகம் சுளித்தான்.. மாளவிகா மகனை பெருமிதத்துடன் பார்த்தாள்..
'இவன் என் மகன்.. என் வளர்ப்பு..' அவளது நெஞ்சம் ஆறுதலடைந்தது..

"நோ.. பட்.. எனக்கு நீங்களும் உங்க அம்மாவும் ஷேஃபா இருக்கணும்.. அது எனக்கு முக்கியம்..."
"அதுக்காக.. நாம கட்டிக்காத்த ஸ்கூலை.. யாரோ ஒரு ரௌடிகிட்ட தாரை வார்த்துக் கொடுக்கிறதா..?"
"இது அந்த வியூவில் பார்க்க வேண்டிய விசயமில்லை தருண்.. உங்க அம்மா பாரதியின் பாட்டைச் சொல்கிறாளே.. துஷ்டரைக் கண்டால் தூர விலகுன்னு பெரியவங்க சொல்லி வைச்சிருக்காங்களே.. அது இவளுக்குத் தெரியாதா..? "
"அது வீட்டுக்குள்ளே இருக்கறவங்களுக்குச் சொன்னது.. அம்மா ஒரு கிரியேட்டர்.. ஸ்கூல் கரெஸ் பாண்டென்ட் கம் பிரின்ஸிபால்..."
தருணின் வார்த்தைகளில் அவன் அந்த ஸ்கூல் கரெஸ்பாண்டெண்டின் மகன் என்ற பெருமை தொனித்தது.. தருணின் வார்த்தைகளில் தொனித்த பெருமையை.. தாரிணி தன் முகத்தில் பிரதிபலிக்க.. சரணின் மனதில் மெல்லிய பொறாமையுணர்வு எழுந்தது.. அவனும்தான்.. கோடி கோடியாக சம்பாதித்துக் கொட்டிக் கொண்டிருக்கிறான். வீட்டை இடித்து.. அதி நவீனமாக.. நீச்சல் குளத்துடன் கட்டியிருக்கிறான். தருணுக்கும், தாரிணிக்கும் தனித்தனியாக வெளிநாட்டுக் கார்களை இறக்குமதி பண்ணியிருக்கிறான்...
இருந்தும்.. அதிலெல்லாம் அவனுடைய பிள்ளைகள் இந்த அளவுக்கு பெருமைப்படவில்லையே...
'ஜஸ்ட் லைக் தட்..' என்று எடுத்துக் கொண்டு போய் விட்டார்களே...
இப்போது அவர்களுடைய அம்மா நடத்துகிற ஒரு பள்ளிக்கூடத்தைப் பற்றி இந்த அளவுக்கு பெருமைப் படுகிறார்களே..
சரணுக்கு.. குழந்தைகளின் மனோபாவம் பிடிபடவில்லை.. தருணும், தாரிணியும்.. மூன்று வயதிலிருந்தே மாளவிகாவின் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தவர்கள்...
"நம்ம கரெஸ்ஸோட குழந்தைகள்.." என்ற கவனிப்பைப் பெற்றவர்கள்..
இருபத்தி நான்கு மணி நேரம் கொண்ட ஒருநாளில் பத்து மணி நேரம் தூங்கி எழுகிறோம்.. மீதி நேரத்தில்

பெரும்பான்மையான நேரம்.. பள்ளியிலும்.. கல்லூரியிலும்.. வேலை செய்யும் இடங்களிலும்தானே கழிகின்றது..?
அப்படிப்பட்ட நாளின் பெரும்பான்மையான நேரத்தை செலவிட வேண்டிய பள்ளியில்.. தனிக் கவனிப்புடனும்.. பெருமையுடனும் வளர்ந்தவர்கள்.. சரணின் பிள்ளைகள்.. அந்தப் பெருமையை அவர்களுக்கு அளித்த மாளவிகாவின் பள்ளியின் மீது அவர்களுக்கு அபிமானம் அதிகமாக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைதான்.. அத்தோடு அது அவர்கள் படிக்கும்.. அவர்களின் பள்ளிக்கூடம்..
"டாட்... அம்மாவுக்கு சப்போர்ட் பண்ணுங்க.." தாரிணி கறாராகக் கூறினாள்..
குண்டுக் கண்களுடன்.. கொழு கொழு கன்னங்களுடன்.. மாளவிகாவின் சிறுவயது பிம்பமாக இருக்கும் மகளிடம் சரணுக்கு தனி வாஞ்சை உண்டு. எதிலும் தீர்க்கமான.. தீர்மானமான முடிவை இயல்பாக எடுக்கும் தருண்.. சரணின் ஜெராக்ஸ் காபி போல.. குணத்திலும் உருவத்திலும் இருப்பவன்..
பிள்ளைகள் இருவரும் தாயின் பக்கம் சாய்ந்து பேசவும்.. பெரும்பான்மையான பலம் மாளவிகாவின் பக்கம் இருப்பதை உணர்ந்தவனாக சரண் அப்போதைக்கு...
"என்ன குட்டிம்மா.. நீயும் உன் அண்ணனும்.. அம்மாவுக்கு சப்போர்ட்டா..?" என்று மட்டும் கேட்டு விட்டு பேச்சை விட்டு விட்டான்...
ஆனால்.. அன்று இரவில் மாளவிகா இயல்பாக அவன் தோள் சாய்ந்து உறங்க முயன்றபோது விலகிப் படுத்தான்.. மாளவிகா.. அந்த புறக்கணிப்பை கண்டு கொண்டவளாக... "சரண்..?" என்று அதிர்ச்சியுடன் அழைத்தாள்..
"ம்ச்ச்.." அவன் கண்கள் மூடிக் கொண்டான்.. அவனுடைய அதிருப்தியை அறிந்த பின்னால் மாளவிகா வினால் நிம்மதியாக உறங்க முடியவில்லை..
பள்ளியின் மேல் தளத்தில்.. அவள் சுற்றி வந்து கொண்டிருந்த போது.. அவளது செல் போனின் மணியொலித்தது.. எடுத்துப் பார்த்தாள்.. மணிமேகலை அழைத்துக் கொண்டிருந்தாள்...
"என்ன மேகலை..?"

"மேம்.. என் கிளாஸ் பொண்ணுங்க இரண்டு பேர் அழுதுகிட்டு இருக்கிறாங்க..!"
"எதுக்கு..?"
"ஈவ் டீஸிங்.."
"வாட்..? அவங்களை என் ரூமுக்கு கூப்பிட்டுக் கொண்டு வாங்க.."
அந்த சிறுமிகள் இருவரும் பிளஸ் டூ படிப்பவர்கள்.. அழுது.. அழுது.. முகம் சிவந்திருந்தார்கள்..
"என்னம்மா.. என்ன ஆச்சு..?" என்று மாளவிகா கேட்டவுடன்.. இரண்டு பேரும் ஒன்று போல அழ ஆரம்பித்தார்கள்..
"டோண்ட்கிரை.. வாட் ஹேப்பன்..?"
"மேம்.. நாங்க ஸ்கூலுக்கு வந்துக்கிட்டு இருந்தோம்.. அப்ப.. தெரு முனையில் ஒரு ரெளடி.. எங்க ஸ்கூட்டிகளை வழி மறிச்சு நின்னான்..."
"தென்..?"
"நாங்க பயந்துக்கிட்டே நிப்பாட்டினோம்.. அதுக்குள்ள நாலைந்து ரெளடிக.. எங்களைச் சுத்திக்கிட்டு.."
அந்தச் சிறுமி மேலே பேச முடியாமல் கதறியழுக.. நடந்தகை அவளுடைய கிழிந்த துப்பாட்டாவும்.. கலைந்த தலைமுடியும் சொல்லின..
'பட்டப் பகலில்.. நடுரோட்டில்.. சின்னப் பெண்களை.. ச்சே..' மாளவிகாவின் இதயம் அதிர்ந்தது..
அவள் உடனடியாக போலீஸ் கமிஷனரை தொடர்பு கொண்டாள்..
"சார்.. சம்பந்தப்பட்டது என் ஸ்கூல் ஸ்டூண்ட்ஸ்.. சின்னப் பெண்கள்.. என் ஸ்கூலை நம்பி படிக்க வந்தவங்க.. அவங்க கம்ப்ளெயிண்ட் கொடுக்க வரமுடியாது.. அவங்க பெயர் வெளியே தெரியும்.. இதை ஓரலா நீங்க டீல் பண்ண முடியுமா..?"
அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில்.. அந்த ரெளடிகள் கைது செய்யப்பட்டனர்.. மாளவிகா தன் போராட்டத்தில் முதல் வெற்றியைச் சந்தித்தாள்..

சரணிடம் அதைப் பற்றி அவள் சொன்ன போது.. நிமிர்ந்து அவளைப் பார்த்த அவனது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை துணுக்குறச் செய்தது...
"சரண்..?" என்று கேள்வியாக அழைத்தாள்..
"இருபத்தி நாலுமணி நேரத்தில் அவங்க கைதானது தான் உனக்குத் தெரியும்.. அடுத்த நாலு மணி நேரத்துக்குள் அவங்க வெளியே வந்துட்டது உனக்குத் தெரியுமா..?" அவன் நிதானமாக வினவினான்..
"எப்படி..? எப்படி இது நடக்க முடியும்..?"
"எதுவுமே நடக்கலை.. அந்த ரௌடிகள் யாருன்னே எங்களுக்குத் தெரியாதுன்னு சம்பந்தப்பட்ட கேர்ள்ஸ் சொன்னா.. அது நடக்காதா..?"
"ஓ... காட்..?"
மாளவிகா சிலையாக சமைந்தாள்.. அடுத்தநாள்.. அந்தச் சிறுமிகளின் பெற்றோர்கள் பள்ளிக்கு வந்து.. அவர்களின் டி.ஸி.யை வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்..
"அந்தப் பெண்களை வேற ஸ்கூலில் சேர்த்துட்டாங்க மேடம்.." என்றாள் மணிமேகலை..
ஒரு வார காலம்.. எந்த சலசலப்பும் இல்லாமல் போனது.. அந்த வார இறுதியில்.. எல்.கே.ஜியில் படித்த பையன் ஒருவன் காணாமல் போனான்..
"எப்படி.. நாங்க வந்து கூப்பிட்டுக் கொண்டு போகிற வரைக்கும் அவன் ஸ்கூலின் கண்ட்ரோலில்தானே இருக்கணும்..."
பெற்றவர்கள் மாளவிகாவின் மேல் பாய்ந்தனர்.. மாளவிகா அந்தப் பையனின் வகுப்பு ஆசிரியை முதல்.. வாட்ச் மேன் வரை.. அனைவரையும் விசாரித்து விட்டாள்..
"அந்தப் பையனின் அம்மாதான் வந்து கூப்பிட்டுக் கொண்டு போனாங்க மேடம்.."
அனைவரின் பதிலும் ஒன்றாக இருந்தது.. பெற்றவளோ இல்லவே.. இல்லையென்று சாதித்தாள்.. அவளது கண்ணீரில் உண்மை தெரிந்தது...
மாளவிகா மீண்டும் காவல் துறையின் உதவியை நாடினாள்.. இந்த முறை.. அடுத்த ஆறே மணி நேரத்தில் குற்றவாளி பிடிபட்டாள்...

கடத்தப்பட்ட பையனின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் புதிதாய் குடிவந்தவளாம்.. குடிவந்து இரண்டே நாள்கள் தான் ஆகிறதாம்.. அந்தப் பையனின் தாய் கட்டியிருந்த சேலையைப் போலவே கட்டிக் கொண்டு வந்திருக்கிறாள்..
"உன் அம்மாவும்.. நானும்தான் உன்னைக் கூப்பிட வந்தோம்.. அம்மா ஸ்கூல் வாசலில் நிற்கிறாங்க.. போகலாமா..?" என்று அவள் கேட்டதும்.. அறிமுகமான பெண்தானே என்று அந்தப் பையனும் கூடப் போய் விட்டான்..
"குடிவந்த நாளில் இருந்து.. இந்த இரண்டு நாளும் என்வீடே கதின்னு கிடந்தாள்.. பால் பாக்கெட் எங்கே வாங்குறதுன்னு ஆரம்பித்து.. மளிகை சாமான்வரை என்னை துணைக்கு கூப்பிட்டாள்.. வீட்டுக்கு வரப் போக இருந்தவங்கதானேன்னு.. என் பையன் நம்பி இவள் பின்னால் போய் விட்டான்.." அந்தப் பையனின் அம்மா அழுதாள்..
இந்தக் கதையும்.. முதல் கதையைப் போலவே முடிந்தது..
"வீடு புகுந்து மிட்டறாங்க மேடம்.. கம்ப்ளெயிண்டை வாபஸ் வாங்கிக்கச் சொல்கிறாங்க.. எங்களுக்கு வேறு வழியில்லை.."
அந்தப் பையனும் வேறு ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டான்..
வாசவன் ஹையர் செகண்டரி ஸ்கூலில் படிக்கும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு நிச்சயமில்லை என்ற வாய்மொழிச் செய்தி பரவி.. கண்.. காது.. மூக்கு வைத்து.. அனைத்து மாணவ.. மாணவிகளின் குடும்பங்களுக்கும் போய் சேர்ந்தது..
அவர்கள் பள்ளியை நோக்கி.. படையெடுத்தனர்...
"என்னென்னவோ சொல்கிறாங்க.. பிள்ளைகளை படிக்க அனுப்பி வைச்சா.. நிம்மதியாயிருக்கணும்.. ஸ்கூலுக்கு போன பிள்ளைக.. பத்திரமாய் வீடு திரும்புவாங்களான்னு பதக்கு பதக்குன்னு இருக்கக் கூடாது.."
ஒவ்வொரு நாளும்.. அந்தப் பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க வரிசையில் பெற்றோர்கள் நின்ற காலம் மாறி.. பிள்ளைகளின் டி.ஸி.யை வாங்க.. நின்ற பெற்றவர்களின் கூட்டம் நின்ற காலம் வந்து சேர்ந்தது..

"வேண்டாம் மாளவிகா.. அவன் நல்ல விலை தருகிறேன்னு சொல்கிறான்.. ஸ்கூலை விற்று விடு.." சரண்.. தனிமையில் அவளை எச்சரித்தான்..
"நாம வேற பேச்சிருந்தால் பேசலாம்.." மாளவிகா பிடிவாதமாக கூறிவிட்டாள்..
"ஏய்ய்.. இன்னைக்கு அந்த ஸ்டூடண்ட்ஸிற்கு வந்த நிலைமை நாளைக்கே.. நம்ம பிள்ளைகளுக்கு வராதுன்னு என்ன நிச்சயம்..?"
"சரண்.."
"அலறாதே.. இதுதான் உண்மை.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பாவத்திற்காக நான்தான் என் வாழ்வை பணயம் வைத்திருக்கிறேன்னா.. உன் வயிற்றில் பிறந்த பாவத்திற்காக.. என் பிள்ளைகளும் அவங்க வாழ்வை பணயம் வைக்கணுமா..?"
இதுவரை மாளவிகாவின் மனதில் அந்த பயம் எழாமல் இல்லை.. அவள் தன் கண் பார்வையிலேயே பிள்ளைகளை வைத்திருந்தாள்.. அதற்கும் சரண் காரணம் சொன்னான்..
"உன் கண்பார்வையிலே இருக்கிற மற்ற பையன்கள் காணாமல் போகும்போது.. உன் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு என்னடி உத்திரவாதம் இருக்கு..?"
"இல்லை.. அப்படி எதுவும் நடக்காது.."
"நடக்காதுதான்.. நான் இருபத்தி நாலுமணி நேர செக்யூரிட்டிக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேனே.. என் பிள்ளைகளுக்கு மட்டுமில்லை.. உனக்கும் சேர்த்துத்தான்.."
சரண் முகம் இறுகச் சொல்லி விட்டு திரும்பிப் படுத்துக் கொண்டான்.. சமீபகாலமாக தங்களின் காரை.. இரண்டு மோட்டார் பைக்குகள் பின் தொடர்வது மாளவிகாவின் நினைவுக்கு வந்தது.. அவள் கண்கள் கலங்கின..
அவளுக்குத் தெரியும்.. சரண்.. அவளையும்.. பிள்ளைகளையும் தன் மூச்சாக நினைப்பவன் என்று..
"தேங்க்யு சரண்.." என்றாள்..
பதிலுக்கு திரும்பிப் பார்த்த சரணின் அனல் பார்வையைக் கண்டதும் அவசரமாக வாயை மூடிக் கொண்டாள்..
அந்த மாதத் தேர்வுகளின் மதிப்பெண் பட்டியலை வகுப்பு வாரியாக மாளவிகா பார்வையிட்டுக் கொண்டிருந்த

போது.. அவளது மேஜையில் இருந்த தொலைபேசி ஒலித்தது.. எடுத்தக் காதில் வைத்து-
"ஹலோ.." என்றாள்...
"என்னம்மாகண்ணு... சௌக்கியமா..?" என்றது மறுமுனை..
சட்டென்று அந்தக் குரலை இனம் கண்டு கொண்டாள்..
'வஜ்ரவேலு!' பல்லைக் கடித்தாள்...
"என்ன கண்ணு.. பேச்சையே காணோம்.. ஆடிப் போயிட்ட போல.. அப்புறம் பேச்சு எங்கேயிருந்து வரும்.."
"கண்ணு.. கிண்ணுன்ன பல்லைக் கழட்டிடுவேன்.. ராஸ்கல். யாருகிட்ட எப்படிப் பேசறதுன்னு கூடத் தெரியாத பொறுக்கி நீ.. உனக்கு ஸ்கூல் நடத்தணுமா..?"
"எதுக்கு கண்ணு இப்படிப் போட்டுத் தாளிக்கற..? சும்மா தளதளன்னு பெங்களூர் தக்காளியைப் போல இருக்கே.. உன்னைப் பார்த்தா.. பதினைந்து வயசுப் பையனுக்கு அம்மான்னு யாராச்சும் சொல்லுவாங்களா..?"
"டேய்ய்.. ராஸ்கல்.."
"நீ என்ன வேணும்னாலும் திட்டு.. எனக்கு அதைப் பத்திக் கவலையே இல்ல.. யாரு என்னத் திட்டறது..? நீதானே.. உனக்கில்லாத உரிமையா..?"
"எருமைமாடே.. சூடு சுரணையில்லாத ஜென்மமே.. எதைப் பேசினாலும் தட்டி விட்டுப் போகிற பிறவியே.. நீயெல்லாம் எதில் சேர்த்திடா..?"
"நீ வேணும்னா என்னைச் சேர்த்துக்க.. நான் வேணாம்னா சொல்றேன்..?"
மாளவிகா தாங்க முடியாமல் போனை வைத்து விட்டாள்..
சரணிடம் இதைப் பற்றி முறையிட முடியாது...
'சொன்னேனே.. கேட்டியா..?' என்று மாளவிகாவை கொன்று புதைத்து விட்டு.. வஜ்ரவேலுவையும் கொல்லக் கிளம்பி விடுவாள்.. வேறு என்ன செய்வது..?

மாளவிகா ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியின் மகள்.. தந்தையின் சிநேகிதர்களை அணுக முடிவு செய்து.. அவர்களின் பெயர்களை யோசித்து.. மனதிற்குள் வரிசைப் படுத்திக் கொண்டிருந்த போது.. பியூன் பதட்டமாக ஓடி வந்தான்...
"மேடம்.. நம்ம ஸ்கூலுக்குள்ள வெடிகுண்டு வெடிச்சிருக்கு..."
"வாட்..?"
மாளவிகா பதறி எழுந்தபோது.. அடுத்த அணுகுண்டைத் தூக்கி அவள் தலையில் போட்டான் அவன்..
"நம்ம தாரிணிப் பாப்பாவுக்கு பக்கத்திலேதான் வெடிகுண்டு வெடிச்சது மேடம்.."
மாளவிகாவின் உயிரே பறந்தது.. அவள் மகளைத் தேடி ஓடினாள்.. பள்ளி மைதானத்திற்கு கூட்டம் குழுமியிருந்தது.. தாரிணி மயங்கிக் கிடந்தாள்..
"பயம்தான்.. வேற ஒண்ணுமில்லை.."
அந்தப் பள்ளியில் ஆசிரியராக வேலைபார்க்கும் கண்ணன் சமாதானப்படுத்தினார்..
ஆனால்.. அடுத்த சில நிமிடங்களில் புயலைப்போல பள்ளிக்குள் வந்து நின்ற சரண் சமாதானமாகவில்லை.. அது பள்ளிக்கூடம்.. மாளவிகா அதன் நிர்வாகி.. தலைமை ஆசிரியை.. என்பது எல்லாவற்றையும் மறந்து.. அவன் கத்தித் தீர்த்து விட்டான்..
"என்ன செக்யூரிட்டி போட்டாலும்.. என் பிள்ளைகளை ஆபத்து தொடர்ந்துகிட்டு இருக்கு.. இது யாரால்..? உன்னால்தாண்டி.. இது எல்லாமே உன்னால்தான்.. உனக்கு உன் கொள்கை முக்கியம்.. லட்சியம் முக்கியம்.. உன் வறட்டுப் பிடிவாதத்திற்கு பலி கொடுக்க என் பிள்ளைகள் தான் கிடைச்சாங்களா..? போதும்டி.. உனக்கும் எனக்குமான உறவு போதும்.."
"சரண்.."
"பேசாதே.. உன் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெறுப்பா இருக்கு.. உன் நிழலை விட்டு அகற்றினால் தான் நான் என் பிள்ளைகளைக் காப்பாற்ற முடியும்.."
சரண் தீவிரமாக - சொன்னதைச் செய்தான்.. தருணுக்கும், தாரிணிக்கும் விசா வாங்கினான்.. அவர்கள் படிக்க கனடாவில் இடம் பார்த்து விட்டான்.. கிளம்ப மறுத்த

குழந்தைகளை கிளப்பும் பொறுப்பையும் இரக்கமில்லாமல் மாளவிகாவிடம் ஒப்படைத்தான்..
"கனடாவில் வீடு வாங்கியிருக்கேன்.."
"ம்ம்ம்.."
"தருணுக்கும், தாரிணிக்கும் அங்கே ஸ்கூலில் சீட் வாங்கிவிட்டேன்.."
"ம்ம்ம்.."
"நீயும் வரணும்னா.. எங்களோடு வரலாம்.."
"நோ.. தேங்க்ஸ்.."
வெறுமையான பதிலளித்தவளை ஒரு கணம் நிமிர்ந்து ஊன்றிப் பார்த்தான் சரண். அவன் பார்வையின் ஜுவாலையின் வீச்சைத் தாங்க முடியாமல் மாளவிகா முகம் திருப்பிக் கொண்டாள்..
"புருசன் வேணாம்.. பிள்ளைகள் வேணாம்.. எங்களையெல்லாம் விட்டுவிட்டு அப்படி என்னத்தைடி சாதிக்கப் போகிற..?"
"வேறு பேசலாம்.."
"ஷ்யூர்.. பிள்ளைகள் என்னோடு கிளம்பி வர மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறாங்க.. உன் வயிற்றில் பிறந்ததுகளாச்சே.. உன் பிடிவாதம் அப்படியே இருக்கு.."
"அதுக்கு நான் என்ன செய்யணும்..?"
"என் பிள்ளைகளை என்னோடு அனுப்பி வைக்கணும்.."
'அவங்க என் பிள்ளைகள்தானே..' மாளவிகாவின் இதயம் பொங்கியது.. கண்களில் நீர் தழும்பியது...
பொத்திப் பொத்தி பிள்ளைகளை வயிற்றில் சுமந்து.. பெற்று வளர்த்தவள்.. இன்று பிரிய வேண்டும்.. எதற்காக அவளுக்கு இந்த தண்டனை...? பெண்ணாகப் பிறந்து விட்டால்.. சுயத்தை இழக்க வேண்டுமா..? லட்சியத்தை மறக்க வேண்டுமா..?
மாளவிகா கண்ணீரை விழுங்கிக் கொண்டாள்..
பிள்ளைகளைத் தேடிச் சென்றாள்..
"தருண்.."
"நான் டாடியோடு போகமுடியாதும்மா.."
அவள் ஆரம்பிக்கும்போதே.. பதிலைச் சொல்லும் புத்திசாலிப் பிள்ளை.. அடக்கி வைத்திருந்த கண்ணீர் அவள் கண்களில் வழிந்தது.. தாரிணி அவளருகே வந்து

கண்ணீரைத் துடைக்க.. மகளைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள்..
மனத்தை கல்லாக்கிக் கொண்டு பேச ஆரம்பித்தாள்..
"தருண்.. அம்மா போராட வேண்டும்.. ஐ நீட் யுவர் ஹெல்ப்..."
"நாங்க அதுக்கு என்ன பண்ணணும்மா..?"
"உங்களை பாதுகாத்துக்கணும்.. நீங்க ஷேஃபா இருந்தால்தான் நான் நிம்மதியா ஃபைட் பண்ண முடியும்.."
"அதுக்காக..?"
"டாடியோட கிளம்பிப் போங்க.."
"நீங்க தனியாய் இருப்பீங்களே.."
மகனின் அக்கறையில் மனம் நெகிழ்ந்தவள். மனத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்...
'மாளவிகா.. மனதை விட்டு விடாதே.. சரண் பதறுவதிலும் அர்த்தமிருக்கு.. பிள்ளைகளின் நன்மைக்காக.. நீ பிள்ளைகளைப் பிரியத்தான் வேண்டும்..' மனதிற்குள் உருப்போட்டுக் கொண்டாள்..
"எவ்வளவு நாள் தனியாய் இருக்கப் போகிறேன் தருண்..? இங்கே பிரச்னைகளை சமாளித்து முடித்தவுடனேயே நீங்க திரும்பி வந்து விடலாமே.."
அரை மனதாக அவர்கள் கிளம்பிப் போனார்கள்.. கிளம்பும் நாளன்றும்.. சரண் அவளோடு போராடிப் பார்த்தான்..
"கடைசியாகக் கேட்கிறேன் மாளவிகா.. எங்களோடு வந்துவிடு.."
"பத்திரமா போயிட்டு வாங்க சரண்.."
"எனக்கு நீ வேணும்டி.."
"பிள்ளைகளைப் பார்த்துக்கங்க.."
"ஒரு நிமிஷம் என்னைப் பத்தி யோசிச்சுப் பாரு.. உன்மேல் உயிரையே வைச்சிருக்கேண்டி.. என்னோடு வந்துவிடு.."
"தினமும் போன் பண்ணுங்க.."
பொறுக்க முடியாமல் ஓங்கி ஒரு அறை விட்டான் சரண்.. அவள் சுருண்டு விழுந்தாள்.. அவளது தலை முடியைப் பற்றி வெறிகொண்டவனாக அவன் உறுமினான்..
"ராட்ஸஸி.. மனசுக்குள்ள ஈரமே இல்லாத பிறவிடி நீ.. இவ்வளவு கெஞ்சுகிறேன்.. கொஞ்சமாவது இரங்கி வரயா..? நானும் பிள்ளைகளும் இல்லாத வாழ்வை வாழும் துணிச்சல் உனக்கு வந்துருச்சுல்ல...?"

சரண் போய் விட்டான்.. பிள்ளைகளும் அவனோடு போய் விட்டார்கள்.. வெறுமையான உணர்வு.. மாளவிகாவை சுற்றிக் கொள்ள.. யாருமில்லாத தனிமையில்.. இருளின் அந்தகாரப் போர்வைக்குள் புகுந்து கொண்டாள் மாளவிகா...
மனதில் சரணின் குரல் ஒலித்தது...
'நானும்.. பிள்ளைகளும்.. கூட இல்லாமல் சாதிக்கும் சாதனை எதுக்குடி உனக்கு..?'
அவன் கேட்டதிலும் நியாயம் இருக்கிறதுதானே.. மாளவிகா முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்...
"அப்பா.." மனம் விட்டு அழ ஆரம்பித்தாள்..
"ஒவ்வொரு செங்கலாக பார்த்துப் பார்த்துக் கட்டின கட்டிடம்ப்பா அது.. என் கனவு.. லட்சியம் எல்லாம் சேர்ந்து குழைத்துக் கட்டின கட்டிடம் அது.. வெறும் செங்கலும்.. சிமிண்டும் மட்டும் அதை உருவாக்கவில்லை.. அப்பா.. என் உணர்வுக்கு நீங்க மதிப்புக்கொடுத்து உங்க பாசத்தையும்.. வியர்வையையும்.. உழைப்பையும்.. அதில் போட்டு உருவாக்கினீங்க.. நீங்க கொடுத்த தந்தை வீட்டுச் சீதனம்பா அது.. ஒரு அயோக்கியனுக்குப் போய் அதை எப்படி நான் விட்டுக் கொடுப்பேன்..?"
"அம்மா.."
பஞ்சவர்ணம் அறைவாசலில் காபிக் கோப்பையோடு நின்றிருந்தாள்.. மாளவிகா.. அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டாள்...
"அழுதீங்களாம்மா..." ஆதங்கத்துடன் கேட்டாள் பஞ்சவர்ணம்.. மாளவிகா பதில் சொல்லவில்லை..
"எதுக்கும்மா அழுகறீங்க.. பொட்டைக் கோழி கூவி பொழுது விடியாதுன்னு இவங்க சொல்கிறாங்க.. அது விடியும்ன்னு காட்டுங்கம்மா.. இருட்டுன்னு ஒண்ணு இருந்தா.. வெளிச்சமுன்னு ஒண்ணு வராமலா போயிரும்..?"
அது வேலைக்காரியின் வார்த்தைகளா..?

வாழ்வென்றால் போராடும் போர்க்களமே...
ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே...
இரவானால் பகலொன்று வந்திடுமே...
நம்பிக்கை என்பது வேண்டும்
நம் வாழ்வில்...
லட்சியம் நிச்சயம் வெல்லும்
ஒரு நாளில்...
மனமே... ஓ... மனமே...
நீ மாறி விடு...
மலையோ அது பனியோ நீ மோதி விடு...'

அவளுக்குப் பிடித்த பாடல்... காரில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது... அலைபாயும் மனத்தை அந்தப் பாடலைக் கேட்டு அமைதிப்படுத்த முயன்றாள் அவள்...

"உள்ளம் என்றும் எப்போதும்
உடைந்து போகக் கூடாது...
என்ன இந்த வாழ்க்கையென்ற..
எண்ணம் தோன்றக்கூடாது...
எந்த மனிதன் நெஞ்சுக்குள்...
காயமில்லை  சொல்லுங்கள்...
காலப் போக்கில் காயமெல்லாம்...
மறைந்து போகும் மாயங்கள்...
உளி தாங்கும் கற்கள் தானே
மண் மீது சிலையாகும்...?
வலி தாங்கும் உள்ளம்தானே
நிலையான சுகம் காணும்...?
யாருக்கில்லை போராட்டம்...?
கண்ணில் என்ன நீரோட்டம்...?
ஒரு கனவு கண்டால்... அதை தினம் முயன்றால்...
ஒரு நாளில் நிஜமாகும்..."

வாசவன் இருக்கும் போது... அவர் கூறிய அறிவுரைகளை... அந்தப் பாடல் கூறியது... மாளவிகா மனத்தைரியம் வரப் பெற்றாள்...

அவள் என்ன தவறு செய்தாள் என்று இருளுக்குள் பதுங்க வேண்டும்...? எதற்காக மூலையில் ஒடுங்க வேண்டும்...? அது அவளுடைய பள்ளிக்கூடம்... எல்லோரும் அதை விட்டுப் போனாலும்... அவள் ஒருத்தி மட்டுமாவது அங்கே

நிச்சயம் இருப்பாள். அவளே பயிற்றுவிப்பாள். அவளே கல்வியும் கற்பாள்...
வஜ்ரவேலுவின் வார்த்தைகள் அவள் மனதில் சுழன்றடித்தன... அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த வக்கிரம்... அவளை அவமானப்படுத்தியது... அவள் வேதனையோடு கண்களை மூடிக் கொண்டாள்...

"வாழ்க்கை கவிதை வாசிப்போம்...
வானமளவு யோசிப்போம்...
முயற்சி என்ற ஒன்றை மட்டும்...
மூச்சுப் போல சுவாசிப்போம்...
லட்சம் கனவு கண்ணோடு...
லட்சியங்கள் நெஞ்சோடு...
உன்னை வெல்ல யாருமில்லை...
உறுதியோடு போராடு...
மனிதா... உன் மனதைக் கீறி...
விதை போடு... மரமாகும்...
அவமானம்... படுதோல்வி...
எல்லாமே... உரமாகும்...
தோல்வியின்றி வரலாறா...,
துக்கமென்ன என் தோழா...?"

அவளது துக்கம் புரிந்த தோழமையோடு அந்தப் பாடல் அவளை தட்டி எழுப்பியது. மாளவிகா வஜ்ரவேலுவின் வக்கிர வார்த்தைகளை புறம் தள்ளினாள். மனதில் ஒரு தெளிவான முடிவை எடுத்தாள். பள்ளிக்கூடத்தை நோக்கி.. திட மனத்துடன் காரைச் செலுத்தினாள்.

"ஒரு முடிவிருந்தால்...
அதில் தெளிவிருந்தால்...
அந்த வானம் வசமாகும்..."

கார் கதவைத் திறந்த மாளவிகாவின் கண் முன்னால்... தொடுவானம் தெரிந்தது... அதைக் தொட்டு... வானத்தை வசப்படுத்திவிடும் வேகத்துடன் அவள் பள்ளிக்குள் விரைந்தாள். தன் அறையில் அமர்ந்து மைக்கை ஆன் செய்தாள். பேச ஆரம்பித்தாள். அனைத்து வகுப்புகளிலும்... ஓய்வு அறையிலும்... அவளது குரல் ஒலிக்க... அனைவரும் அமைதியாகி... அவளது பேச்சை கவனிக்க ஆரம்பித்தார்கள்.

"டியர் ஸ்டூடன்ஸ் அண்ட் டீச்சர்ஸ்... அர்ஜன்ட் மீட்டிங் ஆரம்பமாகப் போகுது. கான்பரன்ஸ் ஹாலுக்கு வாங்க... க்விக்..."
அடுத்த சில நிமிடங்களில் கான்பரன்ஸ் ஹால் நிரம்பி வழிந்தது... எல்லோரும் வந்து விட்டார்களா என்பதை உறுதிபடுத்திக் கொண்ட மாளவிகா... பியூனை அழைத்து... வாட்ச் மேனையும் அந்தப் பள்ளியை துப்பரவு செய்யும் தொழிலாளிகளையும் அழைத்துக் கொண்டு வரச்சொன்னாள்...
"என்னவாக இருக்கும்..." ஆசிரியைகள் கிசுகிசுத்துக் கொண்டனர். மாணவ மாணவிகள்... வகுப்புகளில் இருந்து தப்பித்து விட்ட உற்சாகத்தோடு... நடப்பவற்றை சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்தனர்.
மாளவிகா எழுந்தாள்... மைக்கின் அருகே சென்றாள்...
"நம் ஸ்கூலுக்கு கொஞ்ச நாள்களாகவே பிரச்னைகள் வந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது என் முன் இரண்டு முடிவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது... இந்த ஸ்கூலை விலை பேசும்... வஜ்ரவேலுக்கு இந்த ஸ்கூலை விற்று விடுவது... அப்படி நான் விற்ற பின்னால் நடக்கப் போவதை என் மாணவ மாணவிகளுக்கும்... ஆசிரியப் பெருமக்களுக்கும் சொல்கிறேன்... மனிதர்களை மதிக்கத் தெரியாத நிர்வாகியிடம் வேலை பார்க்க நேரும். ஆண் ஆசிரியர்கள் அவமானப்படுத்தப் படலாம்... பெண்களை போகப் பொருளாக நினைப்பவனின் கீழ் வேலை பார்க்க நேரும் பெண் ஆசிரியைகளின் நிலைமையைப் பற்றி நான் சொல்லவே வேண்டியதில்லை... நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்..."
ஆசிரியர்களின் முகத்தில் பதட்டமும்... ஆசிரியைகளின் முகத்தில் பயமும் வந்தது... மாளவிகா பேச்சைத் தொடர்ந்தார்...
"மாணவ.. மாணவிகளின் கல்விக் கட்டணம்... நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு கூடி விடும்... சேவை மனப்பான்மை போய்... லாப நோக்கு வந்தால்... கல்வித்தரம் குறையும்... இதை மாணவ.. மாணவிகள் யோசிக்க வேண்டும்..."

கூட்டத்திலிருந்து முதல் குரல் எழுந்தது...
"இரண்டாவது முடிவு என்ன மேம்...?"
"போராடுவது..." மாளவிகா உறுதியான குரலில் சொன்னாள்...
"நிற்க வேண்டும்... இது நம் ஸ்கூல்... இதை அந்நியருக்கு விட்டுக் கொடுக்க முடியாது என்று துணிந்து நிற்க வேண்டும். ஆசிரியர்கள் முதல்... துப்புரவு செய்யும் தொழிலாளிகள் வரை... இந்தப் போராட்டத்தில் ஒற்றுமையாக நிற்க வேண்டும்... முடியுமா?"
"முடியும்..." மாணவ... மாணவிகள் முழங்கினார்கள்.
"அப்படி முடிய வேண்டுமென்றால்... டியர் ஸ்டூடண்ட்ஸ்... உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்... உங்களைப் பெற்றவர்களின் பயத்தை போக்கவேண்டும்... இந்த ஸ்கூலில் பிரச்னை வந்து விட்டது என்று வேறு ஸ்கூலுக்குப் போகக்கூடாது. நம் தாய் மண்ணுக்கு ஒரு பிரச்சனை வந்தால்... நாம் வேறு நாட்டுக்கு ஓடுவோமா...?" மாளவிகா கேட்டாள்.
"மாட்டோம்..." கூட்டம் கூவியது.
"அப்படியென்றால்... இந்த ஸ்கூலை விட்டு... வேறு ஸ்கூலுக்குப் போவது சரியா...?"
"சரியில்லை..."
"நீங்கள் என்ன செய்வீர்கள்...?"
"தைரியமாக இருப்போம்..."
மாளவிகாவின் கண்களில் நீர் துளிர்த்தது... அவள் வாஞ்சையுடன் தன் பள்ளியின் மாணவ-மாணவிகளைப் பார்த்தாள்....
"உங்களைப் பார்க்கும் போது எனக்குப் பெருமையாக இருக்கிறது... நான் என் ஸ்டூடன்ட்ஸை விட்டுக் கொடுத்து விடமாட்டேன்... ஸ்கூலின் பாதுகாப்புக்கும்... உங்களின் பாதுகாப்புக்கும் என்னbல்லாம் செய்ய வேண்டுமோ... அதைவிட... அதிகமாகவே செய்வேன்... கவலைப் பட வேண்டாம்..."
அவள் பேசிக் கொண்டு இருந்த போதே... அங்கு வந்த வஜ்ரவேலுவின் கைக்கூலி ஒருவன் பலத்த குரலில் கத்தினான்...

"ஆ... நல்லாயிருக்கு டீச்சர்... உங்க பிள்ளைகளை மட்டும் டி.ஸி. கொடுத்து வெளியே அனுப்பி... வெளிநாட்டில் படிக்க வைப்பீங்க... எங்க வீட்டு பிள்ளைகளை மட்டும் காவு கொடுக்கப் பார்ப்பீங்க... இது எந்த ஊரு நியாயம்...?"
மாணவ... மாணவிகளின் முகத்தில் குழப்பம் சூழ்வதை உணர்ந்தாள் மாளவிகா.. சிந்தனையை ஒருமுகப்படுத்திக் கொண்டு மைக்கில் தொடர்ந்து பேசினாள்.

"டியர் ஸ்டூண்ட்ஸ்.... கணவன் ஒரு ஊரிலும்... மனைவி ஒரு ஊரிலும் வேலை பார்த்தால் பிள்ளைகள் இரண்டு பேரில் யாராவது ஒருவரிடம்தானே... வளர முடியும்..? என் கணவரின் தொழில் வெளிநாட்டில் இருக்கிறது. அவரிடம் என் பிள்ளைகள் இருக்கிறார்கள்.. நான் இங்கே தானே இருக்கிறேன்..? எது நடந்தாலும்.. எனக்குத்தானே முதலில் நடக்கும்..? அதை ஏற்றுக் கொள்ளும் துணிச்சலோடுதானே உங்களுடன் கலந்து நிற்கிறேன்..?"

மாணவர்கள் முகம் தெளிந்தார்கள்.. மாளவிகா நிம்மதி அடைந்தாள்.. தொடர்ந்து ஆசிரியர்களின் ஆதரவை வேண்டினாள்.. வாட்ச் மேனிடம் பாதுகாப்பைக் குறித்து வலியுறுத்தினாள். துப்புரவுத் தொழிலாளிகளிடம்.. வகுப்புகளை மட்டுமின்றி.. இதர இடங்களிலும் தீவிரமாக கண்காணித்துக் கொண்டிருக்கும்படி கேட்டுக் கொண்டாள்..

## 23

"நீ கட்சித் தலைவரைப் பார் மாளவிகா.." சாம்பசிவம் யோசனை சொன்னார்..
அவர்.. வாசவனின் நெருங்கிய நண்பர்.. தலைமைச் செயலகத்தில் வேலை செய்பவர்..
"ஏன் அங்கிள்..?" மாளவிகா புரியாமல் கேட்டாள்..

"வஜ்ரவேலு... கட்சியின் பெயரைச் சொல்லிக் கிட்டுத்தான் ஆட்டம் போடுகிறான்.. தலைவருக்கு இதை தெரியப் படுத்தினா.. அவர் அவனை அடக்கி வைப்பார்.."
"ஒரு வேளை.. அவர் அவனுக்கு சப்போர்ட் பண்ணினா..?"
"நிச்சயம் செய்ய மாட்டார்.. இது ஸ்கூல் சம்பந்தப் பட்ட விஷயம்.. நீ தைரியமா போய்ப் பாரு.. நான் அவரை மீட் பண்ண டைம் வாங்கித்தரேன்.."
மாளவிகா அவர் சொன்னதைச் செய்தாள்.. வாசவனின் இன்னொரு நண்பர்.. பரந்தாமன்.. போலீஸ் கமிஷனரிடம் அவளை நேரடியாக அழைத்துச் சென்றார்.
"இவங்க மாளவிகா.. இவங்க அப்பா ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர்.. என் குளோஸ் பிரண்ட்.. வாசவன்னு பெயர்.. டியூட்டியில் இருக்கும் போதே செத்துட்டான்.. அவன் பெயரில் இந்தப் பெண் ஸ்கூல் நடத்துகிறா..."
"யு மீன்.. வாசவன் ஹையர் செகண்டரி ஸ்கூல்..?"
"யெஸ்.. யெஸ்.."
"அதில்தான்.. தினத்துக்கும் ஒரு கம்ப்ளெயிண்ட் வருதே..."
"தினம்.. தினம் இவங்களுக்கு தொல்லை கொடுக்கிறாங்க.."
"செய்கிறது யார்..?"
"வஜ்ரவேலு..."
"என்ன மோடிவ்..?"
"அந்த ஸ்கூலை அவனுக்கு விற்கணுமாம்..!"
"மழைக்குக் கூட ஸ்கூல் பக்கம் ஒதுங்காதவன் அவன்.. ஸ்கூலை வாங்கி என்ன செய்யப் போகிறானாம்..?"
"அதிலேயும் காசுபார்க்க ஆசைப்படுகிறான்..."
போலீஸ் கமிஷனர் தான் முழுவீச்சில் உதவி செய்வதாக வாக்களித்தார்..
பரந்தாமனோ.. இன்னும் ஒருபடி மேலே போய்.. மாளவிகாவை மீடியாக்களுக்கு அறிமுகப்படுத்தினார்..
"இது எதுக்கு அங்கிள்..?"
"தனி மனுஷியாய் போராடுகிறாய்.. உன் போராட்டம் உலகுக்கு தெரிய வேண்டாமா..?"
மாளவிகா.. நியூஸ் சேனல்களில் முகம் காட்டினாள்.. தினம் தினம் தான் சந்திக்க நேரும் ஆபத்துக்களைப் பற்றி எடுத்துரைத்தாள்..

'ஒரு பள்ளியைக் காப்பாற்ற போராட்டம்...'
தினசரிகளில் செய்திகள் வந்தன.. மாளவிகாவின் போராட்டம் வெளியே தெரிய ஆரம்பித்தது.. வஜ்ரவேலு அடங்கிப் போனான்..
"உங்களைப் பார்க்கும் போது நினைச்சேன்ம்மா.."
வேலை மெனக்கெட்டு.. பள்ளிக்கு வந்து மாளவிகாவிடம் கை கூப்பிச் சொன்னான்..
அவன் என்ன நினைத்தான் என்பதை அறிந்து வைத்திருந்த மாளவிகா அவனை முறைத்தாள்..
"கையில வீணை மட்டும்தான் இல்லை.. மத்தபடி.. அப்படியே அந்த சாட்சாத் சரஸ்வதி தேவியோட அம்சம் தான் நீங்க.."
'அடப்போடா.. பெங்களூர் தக்காளின்னு சொன்னவன் தானே நீ.. உன்னை எனக்குத் தெரியாதா..?'
"நானெல்லாம் படிக்காத கூதரை.."
'அது இப்போதுதான் உனக்குத் தெரிந்ததா..?'
"நீங்க நடத்தினா.. அது ஸ்கூலு.. நான் நடத்தினா.." அவன் சொல்லாமல் நிறுத்த..
"சொல்ல வேண்டாம்.. மிஸ்டர் வஜ்ரவேலு.." என்று கண்டிப்பான தொனியில் கூறினாள் மாளவிகா..
"அதில்லைம்மா.."
"அது எதுவாக இருந்தாலும்.. எனக்கு அதைப் பற்றி கவலையில்லை.. இனிமேல் தேவையில்லாமல் எங்கள் ஸ்கூல் காம்ப்பவுண்டுக்குள் நீங்க நுழையக்கூடாது. மீறி நுழைந்தால் நடக்கிறதே வேற.."
வஜ்ரவேலுவின் நடையில் தோல்வி தெரிந்தது.. மாளவிகா வெற்றியின் மிதப்பில்லாமல் தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்..
அந்த வருடத்தின் 'நல்லாசிரியர்' விருது அவளுக்குக் கிடைத்தது.. தமிழகத்தின் சிறந்த பள்ளிகளின் தர வரிசையில் அவளது பள்ளி ஆறாம் இடத்துக்கு வந்தது.. மாளவிகா வெற்றிப் படிக்கட்டில் ஏற ஆரம்பித்தாள்.. தொடுவானாய் விலகி நின்று கண் சிமிட்டிய வானம் அவளுக்கு வசப்பட்டு விட்டது... அவளுடைய லட்சியத்தில் அவள் ஜெயித்து விட்டாள்.. ஆனால்.. அதற்கான மகிழ்வை முழு மனதாக உணரமுடியாமல்.. அவளது நெஞ்சில் ஒரு

நெருஞ்சி முள் இடை விடாமல் குத்திக் கொண்டே இருந்தது...
மனச்சுமையை இறக்க வழி தெரியாமல்.. அஷ்டலட்சுமி கோவிலைத் தேடிச் சென்றாள்.. அஷ்டலஷ்மிகளையும் வணங்கி விட்டு.. அலை கொஞ்சும் கடலோரம் வந்து நின்ற போது...
"மாளவிகா.." என்ற குரல் கேட்டது...
திரும்பிப் பார்த்தாள்.. கார்த்திகேயன் நின்றிருந்தார்..
"சௌக்கியமாம்மா..?" என்றபடி அருகில் வந்தார்..
"சௌக்கியம்தான் அங்கிள்.. நீங்க என்ன செய்கிறீங்க..?"
"ரிட்டயர் ஆகிட்டேன்.. மேலே என்ன செய்கிறதுன்னுதான் தெரியலை.."
"ஓய்வெடுக்க வேண்டியதுதானே.."
"வாழ்க்கை பூராவும் ஓடிக்கிட்டே இருந்த கால்கள்.. ஓரிடத்தில்
நிற்குமாம்மா.. ? நானும்.. உன் அப்பாவும்.. ஒன்றாகத்தான் டிரெயினிங் போனோம்.. அவன் ஐ.ஏ.எஸ். ஆனான்.. நான் ஐ.பி.எஸ் ஆனேன்.. இரண்டு பேருக்குமே வேறு வேறு உத்தியோகம். ஆனா இரண்டு பேருக்குமே நாங்க பார்த்த வேலையில் அவ்வளவா ஈடுபாடு
இல்லை.."
"அப்பாவுக்கு ஈடுபாடு இல்லைன்னு தெரியும்.. உங்களுக்குமா..?"
"இரண்டு பேரும் ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தவங்க தானேம்மா.. எனக்கும் டீச்சராகப் போகணுமுன்னுதான் ஆசை இருந்தது. ஐ.பி.எஸ் ஆனவன்.. டீச்சராப் போறேன்னு சொன்னால் வீட்டில் சும்மா விட்டு விடுவாங்களா..?"
"இன்ட்ரெஸ்டிங்..."
"உனக்கு என் சோகக் கதையைக் கேட்டால் இன்ட்ரெஸ்ட்டா இருக்கு.. ம்ஹூம்.. ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்கிறதுக்கு ஈடானது ஒரு ஏழைக்கு படிப்பைச் சொல்லிக் கொடுப்பது.."
மாளவிகா அந்த வார்த்தைகளில் சட்டென்று நின்றாள்.. முகம் ஜொலிக்க.. கார்த்திகேயனின் முகம் பார்த்தாள்...
"என்ன சொன்னீங்க அங்கிள்..?"

# 24

பனி படர்ந்த தெருக்களில்.. கார் வளைந்து திரும்பியது.. குளிருக்காக அணிந்திருந்த நீண்ட கோட்டையும் மீறி.. குளிர் உடலைத் தாக்கியது..
ஒரு வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும் இடையே.. அதிகமான இடைவெளி விட்டுக் கட்டப்பட்டிருந்த வீடுகளில் ஒன்றின் முன்னால் கார் நின்றது.. மாளவிகா இறங்கி தன் பெட்டிகளை எடுத்துக் கொண்டாள்.. வீட்டை நோக்கி.. நீண்டு சென்ற சிமிண்ட் பாதையில் நடந்தாள்..
அழைப்பு மணியின் ஓசையைக் கேட்டதும்.. சமையலறையிலிருந்து சரண் குரல் கொடுத்தான்...
"தருண்... வாசலில் யாருன்னு பாரு.."
"ஐ ஹேவ் சம் வொர்க் டாடி.."
"தாரிணி.. நீபோ.."
"ஐ ஆம் ஸோ டயர்டு டாடி.."
'கொஞ்சமாவது சொன்ன பேச்சைக் கேட்கிறதுகளா..? அப்படியே அம்மாவின் குணம்..' சலித்துக் கொண்டான் சரண்..
இருபத்தி நான்கு மணி நேரத்தின் ஒவ்வொரு வினாடியிலும் மனதில் உறைந்து கொண்டிருந்த மாளவிகாவின் நினைவு.. அப்போதும் தோன்ற.. சரண் அவளுக்காக ஏங்கினான்...
'என் காதலையும்.. என் தாலியையும் நினைத்துப் பார்க்காதவளை நான் ஏன் நினைக்கணும்..?' வீம்பாக நினைத்துக் கொண்டான்..
'அவளுக்கே இவ்வளவு இருந்தால்.. எனக்கு எவ்வளவு இருக்கும்..?' கோபத்துடன் கதவைத் திறந்தவன் திகைத்து நின்றான்..
"என்ன சமையல் சரண்.. வாசனை ஆளைத் தூக்குது..?" என்று, கரண்டியுடன் நின்ற கணவனைப் பார்த்துக் கேட்டாள் மாளவிகா...
"ஏய்.. எப்படிடீ.. சொல்லவே இல்லையே.." வார்த்தைகள் வராமல் தடுமாறினான் சரண்...

"என்மேல் கோபம்ன்னா.. உள்ளே கூப்பிட்டுக்கிட்டு போய் நாலு மொத்து.. மொத்துங்க.. இப்படி வழியை விடாமல் வாசலை மறைக்காதீங்க.." மாளவிகா சுவாதீனமாக கூறவும்..

"ஸாரி.. ஸாரி.. உள்ளே வா.." என்று கதவை விரியத் திறந்தான் சரண்...

"வீடு அழகா இருக்கு சரண்.." மாளவிகா உள்ளே வந்தாள்..

"வேர் இஸ் தருண் அண்ட்.. தாரிணி.." அவள் ஹாலுக்குள் வந்ததும்.. திரும்பிப் பார்த்த பிள்ளைகள் விழிவிரித்தனர்..

"அம்மா.." என்றபடி இருவரும் தாவிவர அவள் தாய் பறவையாய் அவர்கள் இருவரையும் அணைத்துக் கொண்டாள்..

"தருண்.. வளர்ந்துட்டடா.. தாரிணி நீ இளைச்சுட்டே.." ஹாலின் சோபாவில் அவர்கள் சரிந்தனர்.. தருணுக்கும்.. தாரிணிக்கும்.. மாளவிகாவிடம் சொல்ல ஆயிரம் கதைகள் இருந்தன.. அதை முக்கியத்துவம் கொடுத்துக் கேட்க மாளவிகாவிற்குத் தெரிந்திருந்தது..

'இப்படி ஒரு நாளாவது என்னிடம் இவர்கள் பேசியிருப்பார்களா..?' சரணுக்கு பொறாமையாக இருந்தது..

தாய்மைப் பெருக்குடன் பேசிக் கொண்டிருந்த மாளவிகாவைப் பார்க்கும்போது.. அவனுக்குள் பிரவாகமாய் தாபம் பொங்கியது...

'எத்தனை மாதங்களாச்சு.. கோபமாய் நான் வந்தால்.. இவள் தேடிவரக் கூடாதா.. இப்போது வந்திருக்கிறவள்.. எத்தனை நாள் கூட இருப்பாளோ..'

"எல்லோரும் சாப்பிடலாமா..?"

அவன் சமைத்தவைகளை டைனிங் டேபிளில் பரப்பிக் கொண்டே அழைத்தான்...

"நாளையிலிருந்து கிச்சன் டிபார்ட்மென்டை நான் எடுத்துக்கறேன் சரண்..."

"உனக்கெதுக்கு அந்த சிரமம்...?"

"இதில் சிரமப்பட என்ன இருக்கு..?"

"நீயே கொஞ்ச நாள் இங்கே ரெஸ்ட் எடுக்க வந்திருக்கிற.. உன்னை எதுக்கு நாங்க டிஸ்டர்ப் பண்ணனும்..?"

சரண் ஒட்டாத குரலில் கூற.. மாளவிகா சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்..
அவன் கூறியதை.. தருணும்.. தாரிணியும் கண்களில் பிரதிபலிப்பதைப் புரிந்து கொண்டவளாக மென் சிரிப்பை சிரித்தாள்..
"இல்லை சரண்.. நான் என் புருசனோடும்.. பிள்ளைகளோடும் தான் இருப்பேன்.. தனியாக போக மாட்டேன்.."
"நிஜமாகவா அம்மா.."
பிள்ளைகள் குதூகலிக்க.. சரண் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்...
"ஸ்கூல் மேட்டர் என்ன ஆச்சும்மா..?" தருண் வினாவினான்..
மாளவிகா தான் ஜெயித்த கதையைச் சொன்னாள்.. நல்லாசிரியர் விருது வாங்கியதைக் கூறினாள்..
"பரவாயில்லையே.. இந்தச் சின்னவயதில் நினைத்ததை சாதிச்சிட்டயே.." சரண் உண்மையாகப் பாராட்டினான்..
தாய் தங்களைத் தேடி வந்து விட்டாள் என்ற நிம்மதியுடன்.. தருணும்.. தாரிணியும் தூங்கப் போன பின்னால்.. சரண்.. மாளவிகாவின் முகம் பார்த்தான்..
"நிஜமாகத்தான் சொன்னியா மாளவிகா..."
"எதைச் சொல்கிறீங்க..?"
"நீ திரும்பிப் போக மாட்டியா..?"
"மாட்டேன்.."
"உன் ஸ்கூல்..? உன் லட்சியம்..? உன் கனவு..?"
"என் லட்சியத்தில் ஜெயித்து விட்டேன்.. என் கனவு நிறைவேறி விட்டது.. என் ஸ்கூலை.. என்னைப் போல லட்சியத்துடன் இருக்கும் ஒருவரிடம் ஒப்படைத்து விட்டேன்.."
"விற்று விட்டாயா..?"
"இல்லை.. உரிமை என்னிடம். அதை நடத்தும் பொறுப்பு அவரிடம்... நமக்கு சென்னையில் சொத்துக்கள் இருக்கின்றன.. வீடு.. கம்பெனி.. அதோடு.. இந்த ஸ்கூல்.."
"யார் அவர்..?"

"கார்த்திகேயன். என் அப்பாவின் நண்பர்.. என் அப்பாவைப் போலவே இவருக்கும் கனவு இருக்கிறது.."
"இதையெல்லாம் எதற்காக செய்தாய் மாளவிகா..?"
சரணின் கண்களில் தாபம் தெரிந்தது.. தவிப்பு தெரிந்தது..
"உங்களுக்காக சரண்.." மாளவிகா அவன் கைகளில் புகுந்தாள்.. அவனோடு ஒட்டிக் கொண்டாள்..
"எனக்காக எவ்வளவோ செய்தீங்க.. உங்களுக்காக.. நான் என் வெற்றிப் படிக்கட்டில் இருந்து விலகி ஓடி வந்திருக்கிறேன்.. இனி காலமெல்லாம் உங்கள் நிழலில் தான் இருப்பேன்.."
அந்த வார்த்தைகளில் தெரிந்த காதலில் சரணின் மனம் அமைதியடைந்து விட்டது.. வானத்தை வசப்படுத்தி விட்டவனாக அவன் அவளை அணைத்துக் கொண்டான்..

...முற்றும்...

வானம் வசப்படும்...

1

எழும்பிக் கொண்டிருந்த அந்தக் கட்டிடத்தை பார்க்கும் போதே மனதில் ஓர் எழுச்சியினை உணர்ந்தாள் மாளவிகா...
அவளின் வெகுநாளைய கனவு அது..
"ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கு ஈடானது ஒரு ஏழைக்கு படிப்பறிவைச் சொல்லிக் கொடுப்பது மாளவிகா..."
மாளவிகாவின் தந்தை வாசவன் அடிக்கடி கூறும் வார்த்தைகள் இவை...
அவர் படித்ததென்னவோ ஐ.ஏ.எஸ். பார்த்த தென்னவோ கலெக்டர் உத்தியோகம். ஆனால் அவருடைய ஒரே மகளின் மனதில் ஏன் இந்த வார்த்தைகளை திரும்பத் திரும்பக் கூறி

உருவேற்றி வைத்தார் என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...
அவருடைய அடி மனதின் ஆசையை மகளிடம் திணித்தாரோ என்னவோ...?
எப்போதுமே எல்லோருடைய வீடுகளிலும் இயல்பாக நடக்கும் இந்தச் செயல்தான் மாளவிகாவின் வாழ்க்கையிலும் நடந்தது.
பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள், தங்களது நிறைவேறாத அபிலாஷைகளை பிள்ளைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள விழைவது.
வாசவனும் அதற்கு விதி விலக்கல்ல.
அவர் என்னவோ ஆசிரியராகத்தான் ஆசைப்பட்டார். ஆனால் ஐ.ஏ.எஸ் ஆகிவிட்டார். ஆசிரியர் ஆகமுடியாத அந்த ஆட்சித் தலைவர்... தன் மனதிலிருந்த எண்ணங்களை மகளிடம் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்.
நாடாளும் ராஜாவுக்கும்... வேறு ஒரு வேலையில் விருப்பம் இருக்கலாம். அவன் செய்யும் வேலையில் திருப்தி இல்லாமல் போகலாம்...
உயர்வான வேலை என்பதால் மட்டுமே மனம் திருப்தி அடைந்து விடாது.
அது பிடித்தமான வேலையாகவும் இருக்க வேண்டும்.
"மக்களுக்கு நல்லது செய்யத்தான் நினைக்கிறேன் மாலு... ஆனால் ஆயிரம் அரசியல் தலையீடு...
நினைத்ததையெல்லாம் என்னால் செய்ய முடிகிறதா..?
இது தங்கக்கூண்டு மாளவிகா... பயன்படுத்த முடியாத அதிகாரத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய...?" என்ற வாசவனின் ஆதங்கத்தை மாளவிகாவினால் புரிந்து கொள்ள முடிந்தது..
"இதுவே நான் ஒரு ஆசிரியராக இருந்தேன்னு வைத்துக்கொள்... நினைத்தது போல... என் மாணவ.. மாணவிகளை உருவாக்குவேன்... அதில் எந்தத் தலையீடும் இருக்காது... திறமையிருக்கிறவங்களை வெற்றி பெற வைப்பேன்... அவங்களுக்கு வழிகாட்டுவேன்..." அவரது கண்களில் நிறைவேறாத கனவு தெரியும்...
"அந்தக் கனவை நனவாக்க நீ நினைக்கிற மாளவிகா.. உன் மனதுப் பிரகாரம் உன் படிப்பையும் வாழ்க்கையையும் நீ

தீர்மானிக்கல... உன்னை உன் அப்பாவின் கனவு வழிநடத்தது... நீயாக இந்தப் பாதையில் நடக்கவில்லை."
அவளது ஆசிரியை கனவை அறிந்த போது சரண் நெற்றி சுருங்க அதை ஆட்சேபித்தான்.
"இந்தக் காலத்தில் எல்லோரும் இன்ஜினீயரிங் கனவை மனதில் வைத்துக்கிட்டு இருக்காங்க... ஆளுக்கொரு திசையில் வெளிநாட்டுக்கு பறந்துக்கிட்டு இருக்காங்க..."
"நம்ம நாட்டில் இல்லாத அழகா வெளிநாட்டில் இருக்குது...?"
"இது குண்டுச்சட்டியில் குதிரையை ஓட்டுகிறவங்க பேசுகிற பேச்சு... நீ வீட்டை விட்டு முதலிய வெளியே வந்து பாரு... இந்த வானத்தைப் போல... உலகம் பரந்து விரிந்திருக்கு..."
"விரிந்திருக்கும் இந்த உலகில்... என் வேர்கள் இங்கேதானே இருக்கு சரண்..."
தன் வார்த்தைகளில் தெளிவாகவும்... பிடிவாதமாகவும் இருந்தவளை கண்கள் இடுங்கப் பார்த்தான் சரண்...
"தூங்குகிறவங்களை எழுப்பிவிடலாம்... தூங்குவதைப் போல நடிப்பவர்களை எழுப்பி விட முடியாது... நீ கண்களை மறைச்சு திரைபோட்டுக்கிட்டு வண்டியை இழுத்துக்கிட்டு ஓடுகிற குதிரைபோல உன் வாழ்க்கையில ஓடிக்கிட்டு இருக்கே..."
"என் கண்களை மறைக்கிற திரை எது சரண்...?"
"உன் அப்பாவின் மேல் உனக்கிருக்கும் கண் மூடித்தனமான பாசம்... உனக்கு அவர் வாய் உதிர்க்கும் வார்த்தைகள்தான் வேதவாக்கு... நான் சொன்னால் கேட்க மாட்ட இல்ல...?"
அவன் வார்த்தைகளில் அப்பட்டமான பொறாமை வெளிப்பட மாளவிகா கலகலவென்று சிரித்தாள்.
"ஊஹூம்...? இதை அப்படியே அப்பாவிடம் சொல்ல உங்களால் முடியுமா சரண்...?"
"எனக்குத் தைரியம் பத்தாதுன்னு சொல்கிறயா...?"
"அப்பாவின் மேல் அந்த அளவுக்கு மரியாதை வைத்திருக்கிறீங்கன்னு சொல்கிறேன்.."
"மாளவிகா... நீயேன் என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன்னு அடம் பிடிக்கிற...? மாமாவின் மேல் எனக்கிருக்கிறது நன்றியுணர்ச்சி. அம்மா, அப்பா இல்லாத

என்னை மாமா எடுத்து வளர்த்தார். படிக்க வைத்து ஆளாக்கினார். இத்தனைக்கும் நான் அவருக்கு சொந்தத் தங்கையின் மகனில்லை... என் அம்மா.. அவருக்கு சித்தப்பா மகள்தான்..."
"வேறுபடுத்திப் பேசாதீங்க சரண்... பாசத்தில் சொந்தத் தங்கைன்னா என்ன? ஒன்று விட்ட தங்கைன்னா என்ன...? அப்பாவுக்கு இரண்டும் ஒன்றுதான்..."
"அந்தப் பொருந்தன்மையை யார் குற்றம் சொன்னது...? அவருடைய கனவை உன் மேல் திணிக்கப் பார்க்கிறாரே... இதுதானே எனக்குப் பிடிக்க மாட்டேன்கிறது..."
"இப்ப என்ன ஆச்சு சரண்...?"
"இன்னும் என்ன ஆகணும்... ப்ளஸ் டூவில் ஸ்கூல் பர்ஸ்ட்.. உன் மார்க்குக்கு நீ மெடிகலோ... இல்லை... இன்ஜினீயரிங்கோ படிக்கணும்... நீயானால் ஆர்ட்ஸ் காலேஜில் அப்ளை பண்ணியிருக்கிற..."
"அப்போத்தானே நான் மேலே பிஎட் படித்துவிட்டு டீச்சராக முடியும்...?"
"நீ டாக்டராக வேண்டியவள்னு நான் சொல்றேன்... நீயானா டீச்சராகப் போகிறேன்னு சொல்கிற..."
"ஒரு டீச்சரால் எத்தனை டாக்டர்களை உருவாக்க முடியும் தெரியுமா...?"
"இதை நீயாய் பேசவில்லை. உன் அப்பா சொல்லிக் கொடுத்து வளர்த்தை அப்படியே ஒப்பிக்கிறாய்..."
"ஸோ... நான் சுயமாய் யோசிக்கவே மாட்டேன்னு நீங்க முடிவு கட்டிட்டிங்க..."
"அப்படிச் சொல்ல நானென்ன முட்டாளா...? சுயமாய் யோசிக்கத் தெரியாதவளா.. என் ஒவ்வொரு கேள்விக்கும்.. யோசிக்காம பதிலை அள்ளிவீசுவா...? என்ன ஒண்ணு... எல்லாத்திலயும் தெளிவா இருக்கிறவ... இதில மட்டும் குழப்பிக்கிறாளே.."
"இதில் குழப்பிக்க ஒண்ணுமே இல்லை சரண்... அப்பா எனக்கு மட்டுமா இதைச் சொன்னார்...? உங்களிடமும் இதைச் சொல்லித்தானே வளர்த்தார்...? நீங்க அவர் ஆசையை நிறைவேற்றினீங்களா...?"
"ம்ஹூம்.. உனக்கு அந்தக் குறை வேற மனசில் இருக்கா... நான் ஒருத்தனாவது உருப்படியாய் இருக்கிறது உனக்குப்

பிடிக்கலையா...?"
"உங்க அகராதியில்... கம்யூட்டரை படிச்சுட்டு... வெளிநாட்டுக் கம்பெனிகளோட ஒப்பந்தம் போட்டுக்கிட்டு ராத்திரி பகலாய்... செயற்கை வெளிச்சத்தில் வெளியுலகத்தைப் பார்க்காமல் கம்ப்யூட்டரே கதின்னு கிடக்கிறதுதான் உருப்படுவதாக அர்த்தமா...? டீச்சர் வேலைக்கு போவது உருப்படாததா..?"
"இந்த பீல்டில்தானே காசு கொட்டுது..."
"டீச்சிங் புரொபசனிலும் காசு கிடைக்கத்தான் செய்யுது... நீங்க அந்தக் காலத்து திண்ணைப் பள்ளிக் கூடத்திலேயே இருக்காதீங்க..."
"ஓஹோ... அப்போ பேச்சுக்கு பேச்சு எதிர் பேச்சுப் பேசுவ... ஆனா சொன்னதைக் கேட்க மாட்டே..."
"அப்பா சொன்னதைத்தான் கேட்கிறேனே..."
சரணின் முகத்தில்... ஆயிரம் உணர்வலைகள் தோன்றி மறையும்... அவன் கேள்வியில் மனத்தாங்கல் வெளிப்படும்... மாளவிகா புன்னகைப்பாள். ஆனால் அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லமாட்டாள்.
அவளுக்கு சரணைப் பிடிக்கும்.. மிக.. மிகப் பிடிக்கும்... அவளுடைய எட்டாவது வயதிலேயே தாயை இழந்தவள் அவள்... தன்னைப் போலவே தாயை இழந்து விட்டு அவர்களின் வீட்டில் அடைக்கலமாகியிருந்த சரணின் மேல் இயல்பாகவே அவளுக்குள் ஓர் ஒட்டுதல் ஏற்பட்டது. அத்தோடு தனக்காவது தாய்க்குத் தாயாக தகப்பன் இருக்கிறார். சரணுக்கு யாருமேயில்லை என்ற பெண் மனத்துக்கே உரிய கருணை உணர்வு அவளுக்குள் சுரக்க... அவள் மனதில் சரணின் மீது அளவற்ற அன்பும் சுரந்தது. கூடவே வளர்ந்ததால்... பெயர் சொல்லித்தான் அவள் சரணை அழைப்பாள். ஒரு சமயம் அவர்களின் வீட்டுக்க வந்திருந்த உறவுக்கார பெண்மணி ஒருத்தி...
"இதென்ன... அத்தானைப் போய் பெயர் சொல்லிக் கூப்பிடறே..." என்று கேட்டு வைத்துவிட்டுப் போனாள்...
'அத்தான்...' என்று அழைக்க முடியாமல் அவள் திணறிய போது... சரண் இலகுவாகப் புன்னகைத்தான்.
"மக்கு... மத்தவங்க என்ன சொன்னாலும் கேட்டுக்கணுமா... இத்தனை நாளாய் எப்படிக் கூப்பிட்டாயோ... அப்படியே

கூப்பிடு..."
அந்த நட்பும்.. கனிவும்தான் அவனின் அடையாளம்..
அவளை விட எட்டுவயது மூத்தவன். இன்ஜினீயரிங் முடித்தவுடன் அடுத்த கம்பெனியில் வேலைக்குப் போகாமல் சொந்தமாக கம்பெனி ஆரம்பித்தவன்.
"அப்பா... அம்மாவின் சொத்தையெல்லாம் வித்து இதில் இன்வெஸ்ட் பண்ணனுமா...? கொஞ்சம் யோசித்துச் செய் சரண்" வாசவன் கவலைப்பட்டார்.
"இதில் யோசிக்க ஒண்ணுமே இல்லை மாமா... அந்தச் சொத்து... இந்தச் சொத்தாக மாறியிருக்கு. அழியவில்லையே..."
"ஆனாலும்... அது உன் பூர்வீக சொத்துப்பா..."
"இது கம்ப்யூட்டர் காலம் மாமா... நோ... சென்டிமெண்ட்..."
சரண் யதார்த்தவாதி... எந்தப் பழமையும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது... தன்போக்கில் செயல்படுபவன்.
மாளவிகாவிடம் சொன்னதையே சரணிடம் வாசவன் சொல்லிய போது...
"எனக்கு அடுத்தவங்களை உருவாக்கறதில ஆர்வமில்லை மாமா... என்னை உருவாக்கி ஜெயிச்சுக் காட்டறதில்தான் ஆர்வம்..." என்று தீர்மானமாக சொல்லி விட்டான்.
சொன்னபடி அவன் வாழ்க்கையில் ஜெயித்துக் காட்டினான். அசுர வேகத்தில்... கம்ப்யூட்டர்களின் ஆட்சி... உலகை வளைத்துப் பிடித்த காலம் அது...
நான்கே நண்பர்களுடன் சேர்ந்து எளிமையாக மிகச் சிறிய அளவில்... ஒரு சின்ன அறையில் ஆரம்பிக்கப்பட்ட கம்ப்யூட்டர் நிறுவனங்கள்... 'இன்போஸிஸ்' போல உயர்ந்து சக்கை போடு போட்ட கம்ப்யூட்டர்களின் பொற்காலத்தில் சரண் ஆரம்பித்திருந்த 'சரண் கம்ப்யூட்டர் வெர்ல்டு...'ம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது.
அவன் இளம் தொழிலதிபராகி... வெளிநாடுகளுக்கு பறக்க ஆரம்பித்த போது, மாளவிகா பிளஸ் டூ படிப்பை முடித்து... கல்லூரியில் அடியெடுத்து வைத்தாள்.
"கம்ப்யூட்டர் என்ஜினீயரிங் படி மாளவிகா... நம்ம கம்பெனியில் ஜாயின் பண்ணிக்க அதுதான் தோது..." என்று சரண் கூறியபோது-

"அது நம்ம கம்பெனியில்லை சரண்... உங்க கம்பெனி..." என்று பதில் சொன்னாள் மாளவிகா...
அப்போதுதான் முதன் முறையாக புருவங்களை உயர்த்தினான் சரண். இப்படிப்பட்ட வார்த்தைகளை மாளவிகாவிடமிருந்து அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் வேறு; மாளவிகா வேறு என்று அதுவரை அவன் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.
அன்னை தந்தையில்லாமல் அநாதையாக அந்த வீட்டுப் படியேறி வந்தவனை... குண்டுக் கண்களுடனும்.. கொழுகொழு கன்னத்துடனும் விழித்துப் பார்த்த அந்த சின்னஞ் சிறுமியின் கண்களில் தெரிந்த கனிவையும் பாசத்தையும் இன்று வரை அவன் மறக்கவில்லை.
அவன் யதார்த்தவாதிதான். பணத்தை துரத்திக் கொண்டு ஓடியவாறு இருப்பவன்தான். ஆனால் அவன் மனிதன். அவனுக்குள்ளும் மனம் இருந்தது. அதற்குள் மாளவிகாவின் மேல் வற்றாத காதல் இருந்தது.

2

சரணின் காதலை மாளவிகா அறியாமல் இல்லை. இப்போது அவள் சிறுமி இல்லை... டீன் ஏஜ் பருவத்தின் முடிவு நிலையில் இருப்பவள்தான். கல்லூரியில் காலடி வைக்கப் போகிறவளுக்கு காதலைப் பற்றிய அரிச்சுவடியாவது தெரிந்திருக்கும் தானே...

அவள் மனதில் சரணைப் பார்த்தாள். பூ... பூக்கத்தான் செய்தது. அவளுக்கு சரணை மிகவும் பிடிக்கும். ஆனால் அதற்காக தனது கொள்கைகளை விட்டுக் கொடுத்து விட்டு... அவனுடைய கொள்கைகளை ஏற்க அவள் தயாராக இல்லை.

அவளுடைய லட்சியக் கனவுகள் அவனுக்கு ஏற்புடையதாக இருக்கிறதா... என்று அறியாமல்... அவனைப் பற்றிக் கனவு காணவும் அவள் தயாராக இல்லை...

எல்லாவற்றிலும் யதார்த்தவாதியாக இருந்த சரண்... மாளவிகாவின் மீதான அவனது காதலில் மட்டும் உணர்வு பூர்வமான மனிதனாக இருந்தான்... அவளுக்காக உருகித் தவித்தான்.

அதே போல... எல்லாவற்றிலும் உணர்வு பூர்வமாக இருந்த மாளவிகா, அவனுடைய காதலை ஏற்பதில் மட்டும் யதார்த்தவாதியாக இருந்தாள். கலைந்து விடப் போகும் கனவுகளுக்காக... சீட்டுக்கட்டு மாளிகை கட்டுவதற்கும் தயங்கிப் பின்வாங்கினாள்.

"புத்தியோடுதான் பேசிவைக்கிறாயா மாளவிகா...?" அவன் விழிகளில் கோபம் கொளுந்து விட்டு எரிந்தது.

"ஏன் சரண்... என் புத்திக்கென்ன குறைச்சல்...? இப்பத்தான் நான் ஸ்கூல் பர்ஸ்ட் ரேங்குன்னு சொன்னீங்க...?" அறிந்தும் அறியாதவள் போல் நிதானமாக வினவினாள் மாளவிகா...

"என் கம்பெனியில் உனக்கு உரிமையில்லையா...?"

"அது எப்படி சரண்...? உங்க அப்பா... அம்மா உங்களுக்கு விட்டுப் போயிருந்த வீட்டையும்... பேங்க் பேலன்ஸையும்... நிலங்களையும் போட்டு நீங்க உருவாக்கியிருக்கும் கம்பெனி... உங்களுடைய புரொபெர்ட்டி இல்லையா...? அதில் நான் உரிமை கொண்டாடினால் நல்லா இருக்குமா...?"

"இப்ப என்கிட்ட நீ அடி வாங்கத்தான் போகிற... இது என்ன புதுப்பழக்கம் மாளவிகா...? உன்னது... என்னதுன்னு பிரித்துப் பேசிக்கிட்டு? இது உன் வீடுன்னு எப்போதுமே நான் நினைத்ததில்லையே.. ஒரு வேளை இத்தனை நாளும் நீ அப்படித்தான் உன் மனசில நினைத்துக்கிட்டு இருந்தயா...? அது தெரியாம நான் இதை... என் வீடு போல நினைச்சுக்கிட்டு உரிமையோட சுத்தி வந்தேனா...?"
"சரண்..."
மாளவிகா கண் கலங்கிவிட்டாள். அந்தக் கண்ணீரைப் பார்த்த சரணின் மனதில் இனம் புரியாத திருப்தி ஏற்பட்டது.
"இப்ப எதுக்கு அழுது வைக்கிற...?"
"உங்களை என்னைக்காவது வேற்றாள்னு நானும்... அப்பாவும் நினைத்திருக்கிறோமா... எப்படி நீங்க இப்படியொரு வார்த்தையைச் சொல்லலாம்...?"
"நீ மட்டும் என் கம்பெனின்னு சொல்லலாமா...?"
"ப்ளீஸ்... ஆர்கியுமென்டை அவாய்ட் பண்ணலாமே.."
"ஓ... கே... லீவ் இட்.. பட்... நீ என்ஜினீயரிங் படிக்கிறது உன் பியூச்சருக்கு நல்லது மாளவிகா... ஒரு வெல்விசரா இதை நான் உனக்குச் சொல்கிறேன் தயவு செய்து கேளு..."
"தயவு செய்து என் பாதையில் என்னைப் போகவிடுங்க சரண்..."
'உன் பாதையா....?'
மீண்டும் முகம் இறுக... அவளை வெறித்துப் பார்த்தான் சரண்; அவன் பார்வையை - தயங்காமல் தன் நேர் கொண்ட பார்வையுடன் சந்தித்தாள் மாளவிகா...
'அப்படியே அவளுடைய அப்பாவைப் போல...'
சரணின் இதழ்களில் புன்னகை உதித்தது.
வாசவனின் அஞ்சாத தன்மையையும் நேர்மையையும் அப்படியே பிரதிபலித்தாள் மாளவிகா. தகப்பனாரின் ஒட்டுமொத்த குணங்களின் வார்ப்பாக நின்றாள்.
'ம்ஹூம்... இந்த மாமா... தானும் பிழைக்கமாட்டார்... மகளையும் லட்சியம் அது இதுன்னு சொல்லி பிழைக்க விடமாட்டார்.' சரணுக்கு எரிச்சல் வந்தது.
அவனுக்கு வாசவனைப் பிடிக்கும். தாய் தந்தையில்லாத தன்னை அரவணைத்துக் கொண்டவர் என்பதால் அவர்மீது அவனுக்கு அன்பு அதிகம் உண்டு.

பெற்றோர்களை இழந்து நின்ற போதிலும், சரணுக்கு வசதி இருந்தது. பதினாறு வயதுப் பிராயம். அப்படி யொன்றும் பரிதவிக்கக்கூடிய பிராயம் அல்ல... அவன் ஓரளவு விவரம் தெரிந்தவனாகவே இருந்தான்.
பெற்றவர்கள் விட்டுச் சென்றிருந்த வங்கிப் பணத்தின் வட்டியிலே ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு அவன் படிப்பை முடித்திருக்க முடியும்.
ஆனால்.. கல்லூரி விடுதி ஒருநாளும் வீடாக மாற முடியாது. அங்கு அவனுக்கு தோழமை கிடைத்திருக்கும். பாசம் கிடைத்திருக்காது. தோள் கொடுக்க நண்பர்கள் இருந்திருப்பார்கள். பாசத்துடன் தலை தடவிக் கொடுக்கவும், அன்புடன் அவனுக்கு பரிமாறவும்... வாசவனும் மாளவிகாவும் இருந்திருக்க மாட்டார்கள்.
வீடு என்பது எது....? அன்பையும்... பாசத்தையும்... அரவணைப்பையும் நமக்குத் தரக்கூடியது அது... நம்மைத் தனியாக உணரவிடாமல்... குடும்பம் என்ற சூழலை உணர்த்துவது...
அந்த வீட்டின் சூழலை வாசவன் அவனுக்கு அளித்தார். அவனை அக்கறையோடு கவனித்துக் கொண்டார். அன்பு காட்ட மாளவிகா அங்கிருந்தாள்.
சரண் தன்னைத் தனியனாக உணராமல் அந்தக் குடும்பத்துடன் பின்னிப் பிணைந்து கொண்டான்.
அந்தப் பலனை எதிர்பார்க்காது பாசத்தை அளித்த வாசவனின் மேல் அளவற்ற பிரியத்தை அவன் வைத்திருந்தாலும்.. அவர்மேல் 'பிழைக்கத் தெரியாத மனிதர்..' என்ற எண்ணம் அவனுக்குள் இருந்தது...
வாசவனின் சகாக்கள் நெளிவு.. சுளிவுகளுடன் ஆட்சிசெய்யும் அரசியல்வாதிகளை அனுசரித்துப் போகிறவர்களாக இருந்தார்கள்..
வாசவனோ.. நேர்கொண்ட பார்வையும்.. நிமிர்ந்த நன்னெஞ்சுமாக இருந்து தொலைத்தார்..
விளைவு?
'நீ ஆட்சி செய்யும் அதிகாரத்தில் இருந்தால் தானே இல்லாத அழும்புகளைப் பண்ணுவாய்?' என்று அதிகாரமில்லாத துறைகளுக்கு அவரைத் தலைமையாக போட்டது மேலிடம்..

அப்படிப்பட்ட துறைகளிலும் அவர் சும்மாயிருக்காமல்.. வாங்குகிற சம்பளத்துக்கு வேலை செய்கிறேன் பேர்வழியென்று.. கிடப்பில் கிடந்த கோப்புகளையெல்லாம் தூசு தட்ட ஆரம்பிக்க.. அவருக்கு மாதத்திற்கு ஒரு துறை மாற்றம் நிகழ ஆரம்பித்தது...
"என்ன மாலு.. மாமா இந்த மாதம் எந்த டிபார்ட்மெண்ட்..?" என்று சரண் கிண்டலடிக்கவே ஆரம்பித்து விட்டான்...
"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்.. இறுதியில் தர்மமே ஜெயிக்கும் சரண்.." தன் சுட்டு விழிச் சுடரால் அவனைச் சுட்டெரிப்பாள் மாளவிகா..
"என்னவோ போ.. இந்தக் காலத்தில் இப்படி ஒரேயடியாய் நிமிர்ந்த தனமா இருக்கக் கூடாது மாலு... தங்கத்தில் கூட கொஞ்சம் செம்பைச் சேர்த்தால் தான் நகை செய்ய முடியும்.." சரண் கவலையுடன் சொல்வான்..
"ஏன்.. இதை நீங்களே அப்பாவிடம் சொல்ல வேண்டியதுதானே..?" சாவதானமாக கேட்பாள் மாளவிகா..
"நானா..? ஐயையோ.. நடக்கிற கதையைப் பேசும்மா.."
"ஏன்..? அப்பாவிடம் அவ்வளவு பயமா..? அவர் என்ன சிங்கம்.. புலி.. கரடியா..?"
"பயமில்லை.. மரியாதை.."
"அப்படியொண்ணும் மரியாதை மனசில இருக்கிறதைப் போல தெரியலையே.. கிண்டல் தூள் பரக்குது.."
"ஏய்ய்.. அவரைப் பற்றிக் கவலைப்படக்கூடாதா..?"
"இது கவலை மாதிரி தெரியலை.."
"வேற என்ன மாதிரித் தெரியுது.."
"ஏதோ ஒரு கோபம்.. எரிச்சல்.. இதுமாதிரித் தெரியுது.."
மாளவிகா புத்திசாலி.. மனதை சரியாக கணித்து விட்டாள்.. அவன் மனதில் கோபமும்.. எரிச்சலும் இருக்கத்தான் செய்தன.. அது மாளவிகாவிற்கு அவர் தவறான பாதையைக் காட்டுகிறார் என்ற கோபம்..
"இவர்தான் கலெக்டரா இருந்தும் பிழைக்கத் தெரியாம இருக்கிறார்ன்னா.. மகளையும் உருப்படியில்லாம ஆக்கணுமுன்னு கங்கணம் கட்டிக்கிட்டு நிற்கிறாரே..."
மாளவிகா எம்.ஏ. பட்டம் வாங்கிய போது மீண்டும் சரண் அவளது படிப்பைப் பற்றிய தனது யோசனைகளை

அவள்முன் வைத்தான்.. வழக்கம் போல.. அவள் புறக்கணித்தாள்..

3

"போஸ்ட் கிராஜுவேட் ஆகிவிட்ட.. ஓ.கே.. என் கம்பெனிக்கு நீ வரவேண்டாம்.. மாமாவைப் போல சிவில் சர்வீஸ் எக்ஸாம்களையாவது எழுது மாளவிகா..!"
"நோ சரண்.. நான் பி.எட். ஜாயின் பண்ணப் போறேன்.."
"டீச்சங் புரொபசனலை நான் குற்றம் சொல்லல மாலு.. ஆனால் உன் கண் முன்னால் இருப்பது இரண்டு பேர்.. ஒன்று மாமா.. அவர் ஐ.ஏ.எஸ். கலெக்டர்.. இன்னொன்று நான் எம்.ஈ.முடித்தவன்.. சாப்ட்வேர் இன்ஜினீயர்.. பெரிய கம்ப்யூட்டர் கம்பெனியின் முதலாளி.. எங்க இரண்டு பேரில் யாராவது ஒருவர் போல நீ ஆகக்கூடாதா..?"
"நான் ஏன் உங்களைப் போலவும்.. அப்பாவைப் போலவும் ஆகணும்..?"
"இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லச் சொல்கிற..?"
"கேள்வி கேட்டவருக்கு பதில் தெரியணுமா.. வேண்டாமா..?"
"ஓ.கே. உன் வழிக்கே நான் வருகிறேன்.."
"வேண்டாம் சரண்.. என்வழி தனிவழி.."
இத்தனை நாளும் அவளை மட்டும் நினைத்துக் கொண்டு காத்திருப்பவனின் கனல் வீசும் பார்வையைக் கண்டு கொள்ளாமல் பதிலளித்தாள் மாளவிகா..
"இதுக்கென்ன அர்த்தம்..?" அவன் முகம் ஜிவு ஜிவுத்தது...
"நீங்க வெரி டேலண்ட் பெர்சன்.. இதுக்கு அர்த்தம் தெரியாம இருப்பீங்கன்னு சொன்னா.. அதை நான் நம்பத் தயாராக இல்லை.."
"லுக் மாளவிகா.. நான் பெண்களைப் பார்க்காதவன் இல்லை.. வெளிநாடுகளிலும்.. இந்தியாவுக்குள் இருக்கிற அத்தனை மெகா சிட்டிகளிலும் சுற்றி வருபவன்.. நான் பார்க்காத பெண்களா..?"
அவனது கேள்வி போகும் திசையை அறிந்து கொண்டவளின் முகம் மாறியது...
"அது எனக்குத் தெரிந்த விசயம்தானே.."

"உலக அழகிகளை மிஞ்சிய அழகிகள் என்னிடம் வேலை பார்க்கிறாங்க.."
"ஸோ.. வாட்..?"
"நீயென்ன.. அவங்களை விடப் பேரழகியா..?"
"உங்ககிட்ட வந்து நான் அப்படிச் சொன்னேனா..?"
"இருந்தும் நான் ஏன் உன் பின்னால் சுற்றுகிறேன்..?"
இந்த நேரடியான கேள்வியில் முகம் சிவக்க.. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..
அந்த முகத்தை முரட்டுத்தனமாகப் பிடித்து தன்பக்கம் திருப்பினான் சரண்..
"மனசுடி.. இந்த மனசை உன்மேல வைச்சுத் தொலைச்சிட்டேன்.. மாற்றி நினைக்க முடியலைடி.."
"சரண்.."
"உனக்கு என்ன மனசுக்குள்ள பெரிய ரதின்னு நினைப்பா..? உன் பின்னாலேயே 'ஜொள்ளு' விட்டுக்கிட்டு அலைகிறேன்னு நினைக்கறியா..?"
"அப்படி நான் சொன்னேனா..?"
"வாய் விட்டுச் சொன்னால்தானா..? உன் பேச்சும்.. நடவடிக்கையும் அப்படித்தானே இருக்கு.. சொல்லு.. உன் மனசுக்குள்ள வேற எவனாவது இருந்து தொலைக்கிறானா..?"
அடிபட்ட பார்வை பார்த்தாள் மாளவிகா.. அவளது பார்வையில் நிம்மதியானவன்.. கோபம் குறையாதவனாக - குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தான்..
அவர்கள் இருவரும் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.. மாலை மயங்கி, இருள்சூழ ஆரம்பித்திருந்த அற்புதமான அந்திப் பொழுது...
பகலின் வெம்மை மறைந்து.. இரவின் குளுமை ஆரம்பிக்கும் அழகான நேரம். கடல் காற்று இதமாக அவர்களின் உடலைத் தழுவியது.. இதையெல்லாம் சரண் உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை..
மாளவிகாவிற்கு அவனை அமைதிப் படுத்தும் விதம் தெரியும். ஒரு பார்வை.. ஒரேயொரு பிரத்யேகப் பார்வையை காதலுடன் அவள் பார்த்து விட்டாலே போதும். அவன் அமைதியடைந்து விடுவான்..

'ஆனால்.. அதற்குப் பின்னால்..?' அவள் பெருமூச்சு விட்டாள்..
அது அத்துடன் நிற்காது.. அவளுடைய சம்மத்திற்காக காத்திருக்கும் சரண் திருமணத்திற்கு வற்புறுத்துவான்..
அவனுடனான திருமணத்தை மாளவிகாவும் மனதிற்குள் மிகவும் விரும்பினாள்..
அவனது மனைவியாகி.. அவனுடைய குழந்தைக்கு தாயாவது எவ்வளவு பெரிய பாக்கியம்..?
அவளது மனதின் ஆசைகளை உணர்ந்தது போல.. அவர்களது வீட்டுக் காம்பவுண்டு சுவருக்கு அப்பாலிருந்த அயர்ன் வண்டிக்காரனின் எப்.எம். ரேடியோவில் பாட்டு ஒலித்தது..
"கையோடு கை சேர்க்கும் காலங்களே..
        கல்யாண சங்கீதம் பாடுங்களே..."
மாளவிகாவின் கண்கள் கனவில் மிதந்தன.. அவள் முகம் பார்த்த சரணின் நடை நின்றது.. அவளது நினைவு புரிந்தவனின் கண்கள் மின்னின.. அவன் தாகத்துடன் அவளைப் பார்த்தான்..
"தெய்வீக பந்தம்
        நாம் கொண்டாடும் சொந்தம்.
        என்னுள்ளம் பொன்னென்று
        எந்நாளும் நம்பு..."
அவள் விழிகள் இறைஞ்சின. அதற்காகவே காத்திருந்தவன் ஒரே எட்டில் அவளருகே வந்தான். விலக மனமில்லாமல் - ஒரு விம்மலுடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள் அவள்..
"நான் பூவோடும்.. பொட்டோடும்..
        தாயாக வேண்டும்.. வேண்டும்.."
அவளின் கண்ணீர் அதிகமாக.. காரணம் புரியாமல் திகைத்தான் சரண்..
"என்னடி.." அவள் காதோரம் வினவினான்..
"வேண்டாம் சரண்.."
"எது வேண்டாம்.. நான் உனக்கு வேண்டாமா..?"
'இல்லை..' என்று அவள் மனம் கூவியது..
'நீ வேண்டும்.. காலமெல்லாம் உன் காலடியில் நான் வாழ வேண்டும்..'

நினைத்ததை வெளியில் சொல்ல முடியாமல் அவள் விம்மினாள்..
"மாளவிகா.." அவன் அதட்டினான்..
"மனதில் இருக்கிறதைச் சொல்லித் தொலைடி.."
"சரண்.. வாழ்க்கையைப் பற்றிய உங்கள் கண்ணோட்டம் வேறு.. என்னுடைய கண்ணோட்டம் வேறு.."
"அதுதான் தெரிந்த சங்கதியாச்சே.. இதுக்கா இப்படி அழுது வைக்கிற..? நான்.. என்னவோ.. ஏதோன்னு பயந்து விட்டேன்.."
"இல்லை சரண்.. நீங்க நினைப்பது போல்.. இது ஈஸியில்லை.."
"எது ஈஸியில்லை..?"
"நம்ம கல்யாணம்.."
"ஏன்..? நீயும் நானும் வேற ஜாதியா..?"
'ஜாதி ஒன்றாக இருந்தால் மட்டும் போதுமா..? கொடுப்பினை இருக்க வேணாமா..?'
"இல்லை.. நீ பெரிய பண்ணையார் மகள்.. நான் கூலிக்காரனா..?"
'இரண்டு பேரும் சம அந்தஸ்தில் இருந்து விட்டால் மட்டும்.. நினைத்ததெல்லாம் நடந்து விடுமா..?'
"நம்ம காதல் நிறைவேறாமல் போக என்ன காரணமிருக்கு..?"
'எல்லாமே இருந்தால் காதல் நிறைவேறி விடுமா..? தலைவிதின்னு ஒண்ணு இருக்கே.. அதை மறந்து விட்டிங்களா சரண்..?'
"என்னடி பேசாமல் இருக்கே.. டெல் மி த ரீஸன்.."
"நீங்க கோபித்துக்காம இருந்தா நான் சொல்கிறேன்.."
"நீ என் கோபத்திற்கு பயந்தவள்தான். பெரிசாய் பிலிம் காட்டாம விசயத்துக்கு வா.."
"எனக்கொரு லட்சியம் இருக்கு.."
"டீச்சராய் போகணுமுன்னுதானே.. ஓ.கே. நீ பி.எட்.படி.."
"அதுக்கும் மேலே.. நான் ஸ்கூல் நடத்த ஆசைப்படுகிறேன் சரண்.." மாளவிகா சொல்லிவிட்டாள்..
"வாட்..?" சரணின் கண்களில் கோபம் தெரிந்தது..
"உனக்கு உருப்படுற எண்ணமே இல்லையா..?"

"இதுக்குத்தான்.. இந்த மாதிரியான கேள்விகளை நீங்க கேட்டு வைப்பீங்கன்னுதான் நான் இதைப் பற்றியே உங்ககிட்ட பேசலை..."
"மாமாகிட்டப் பேசினயா..?"
"ம்ம்ம்.."
"எங்கே ஸ்கூல் கட்டப் போகிறீங்களாம்.."
"நம்ம தி.நகர் இடத்தில்.."
இதைச் சொல்லி விட்டு அச்சத்துடன் அவன் முகம் பார்த்தாள் மாளவிகா.. அவள் பயந்ததைப் போலவே அவன் முகம் மாறி விட்டது.. அவன் அவளை விலக்கி நிறுத்தி உறுத்துப் பார்த்தான்..
"ஆர் யு எ மேட்..?"
தன் லட்சியம் அவனால் பைத்தியக்காரத்தனமாக பார்க்கப்படும் என்று அறிந்திருந்தும்.. அவள் அவன் கேள்வியைத் தாங்கமுடியாமல் கண் மூடிக்கொண்டாள்..

4

"தி.நகர். பிஸினஸ் ஏரியா.. அங்கே ஒரு ஸ்கொயர் பீட் இப்ப என்ன விலைக்குப் போகுதுன்னு உனக்குத் தெரியுமா..?"
"தெரிந்து கொள்ள விரும்பலை.."
"இதைத்தான் அறிவுகெட்டதனம்ன்னு நான் சொல்கிறேன்.."
"சரண்.."
"உன் அப்பா உருப்படியாக உனக்கு சேர்த்து வைத்திருக்கிற பெரிய சொத்து.. இந்த வீடும்.. அந்த இடமும் தான்.. அந்த இடத்தில் போய் ஸ்கூல் கட்டணும்னு சொல்கிறயே.. கொஞ்சம்கூட நீ யோசிக்க மாட்டாயா..?"
"அது சென்டரான இடம் சரண்..."
"அதைத்தான் நானும் சொல்கிறேன்.. அதை விற்றால் எத்தனை கோடி போகுமுன்னு உனக்குத் தெரியுமா..?"
"எனக்கு பணத்தில் ஆசையில்லை.."
"இல்லாவிட்டால் எனக்கு அந்த இடத்தைக் கொடுத்து விடு.. நல்ல பிஸினெஸ் சென்டரான அந்த இடத்தில் ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டி விட்டேன்னு வை.. ஒரு தலைமுறைக்கும் உட்கார்ந்து சாப்பிடலாம்.."

இதை யாதர்த்தமாகத்தான் சொன்னான் சரண்.. பணத்தின் மதிப்புத் தெரியாமல் மாளவிகா இருக்கிறாளே என்ற ஆதங்கத்தில் தான் சொன்னான்..
ஆனால்.. அது மாளவிகாவின் மனதில் பதிந்து அடி ஆழத்தில் அமிழக்கூடும் என்று அவன் நினைத்தும் பார்க்கவில்லை..
மாளவிகா மௌனித்தாள்..
"என்ன உம்முன்னு ஆயிட்ட..? உன் இடத்தை நான் பிடுங்கிக்குவேன்னா..? எனக்கெதுக்கு உன் இடம்..? என் ஸ்டேட்டஸ்ஸிற்கு அதைப் போல ஆயிரம் இடத்தை நான் வாங்கிப் போடுவேன்.."
"நான் வாயே திறக்கவில்லையே.."
"இல்லைன்னா உன் மனதில் என்ன எண்ணம் ஓடுதுன்னு என்னால் கண்டுபிடிக்க முடியாதா..?"
"இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடலாம் சரண்.." அந்தப் பேச்சை அத்துடன் விட்டுவிட அவன் தயாராக இல்லை என்பது இரவு உணவின் போது வாசவனிடம் அவன் பேச ஆரம்பித்த போது மாளவிகாவிற்கும் புரிந்தது..
"மாலு.. ஏதோ சொல்கிறாளே மாமா.. அது உண்மையா..?"
"எது சரண்..?"
"ஸ்கூல் கட்டப் போகிறீங்களாமே.."
"யெஸ்.. யெஸ்.. தட் இஸ் தி ட்ரூ.."
"என்னோட ஒப்பினியனை நான் சொல்லலாமா மாமா..?"
"ஓ.. ஷியூர்.."
"அந்த இடத்தை விற்று விட்டு.. அவுட்டரில் இடம் வாங்கி ஸ்கூல் கட்டுங்க மாமா.. அதுதான் புத்திசாலித்தனம்.."
"அவுட்டரில் யாருக்காக ஸ்கூல் கட்டச் சொல்கிற சரண்..?"
"ஸ்கூல் கட்ட பணத்துக்கு என்ன செய்வீங்க..?"
"என் ஸேவிங்க்ஸ் இருக்கு.. மாளவிகாவின் நகைகள் இருக்கு.. பற்றாக்குறைக்கு பேங்க் லோன் இருக்கு.."
"இப்படிக் கஷ்டப்பட்டு.. இருக்கிற பணத்தை-யெல்லாம் தொலைத்து விட்டு கடனாளியாகி ஸ்கூல் கட்டணுமுன்னு என்ன அவசியம்..?"
"அது மாளவிகாவின் ஆம்பிசன் சரண்.."
"நீங்க உருவாக்கின ஆம்பிசன்தானே மாமா.. நீங்க சொன்னா அவ கேட்டுக்குவா.."

"கேட்டு..?"
"இந்த உருப்படாத ஆம்பிசனை தலை முழுகிட்டு-
உருப்படுகிற வழியைப் பார்ப்பா.."
சாப்பிட்டுக் கொண்டிருந்த வாசவன் நிமிர்ந்து சரணை
தீர்க்கமாகப் பார்த்தார்..
"என்ன மாமா..?"
"நீ மாளவிகாவை மதிக்கிறாய்தானே..?"
"இதிலென்ன சந்தேகம்..?" சரண் திகைத்துப் போனான்..
"அவளை மதித்தால் அவளுடைய ஆம்பிசனையும் மதி..
அதுதான் அவளுடைய உணர்வுகளுக்கு நீ கொடுக்கும்
மரியாதை.."
"மாமா.. ப்ளீஸ்.. நான் அவளையும் உங்களையும் எந்த
அளவுக்கு மதிக்கிறேன்னு உங்க மனச்சாட்சிக்கே நல்லாத்
தெரியும்.. தி.நகர் இடத்தை விற்றால் நிறையப் பணம்
கிடைக்கும். அதில் கால்வாசிப் பணத்தைப் போட்டாலே
போதும்.. அவுட்டரில் இடம் வாங்கி ஸ்கூலையும் கட்டி
முடித்து விடலாம். உங்க ஸேவிங்க்ஸ் குறையாது.
மாளவிகாவின் நகைகளும் தப்பும். கடனாளியா ஆகவும்
வேணாம். போதாக் குறைக்கு மீதிப் பணத்தை நல்ல
முறையில் வேறு ஏதாவது ஒன்றில் இன்வெஸ்ட்
செய்யலாம்.."
மனம் கேட்காமல் யோசனை சொன்னான் சரண்.. ஆனால்
மாளவிகா குனிந்த தலை நிமிராமல்.. சாப்பிட்டுக்
கொண்டிருக்க.. வாசவன் அவளைப் பார்த்து விட்டு..
சரணைப் பார்த்தார்...
"மாலு, இந்த இடத்தில்தான் ஸ்கூல் கட்டணுமுன்னு
ஆசைப்படுகிறாள் சரண்.. ஸோ.. நான் வேறு ஐடியாவை
யோசிக்கிறதாக இல்லை.."
"அவசரப்பட வேண்டாம் மாமா.. ஆற அமர யோசித்துப்
பாருங்க.."
வாசவன் இதைக் கேட்டுக் கொண்டிருந்தபோதே..
"ஒரு வேளை.. என் நகையும்.. உங்க பணமும்
போயிடுமோன்னு அவர் யோசிக்கிறார் போல இருக்கு
அப்பா...!" என்றாள் மாளவிகா...
இது மறைமுகமான தாக்குதல். அவள் என்ன சொல்ல
வருகிறாள் என்று நொடிப் பொழுதில் புரிந்து கொண்டான்

சரண்..
அன்று மாலை அவன் மார்பில் சாய்ந்து விட்டவள்.. என்ன சொல்வாள் என்று புரியாத கைக்குழந்தையா அவன். அவனைத் திருமணம் பண்ணிக்கொள்ள அவளுக்கு நகை போட வேண்டியிருக்குமாம்.. அவளுடைய அப்பா வரதட்சணையாய் பணம் கொடுக்க வேண்டியிருக்குமாம். அது போய் விடுமோன்னு அவன் யோசிக்கிறானாம்..
சரண் அவளையே இமைக்காமல் பார்த்தான்.. மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டு நிலம் பார்த்தாள்..
"ஓகே மாமா.. அவள் இஷ்டம் போல செய்யுங்க.. இனிமேல் இந்த விசயத்தில் நான் தலையிட மாட்டேன்.."
முகம் இறுகச் சொல்லி விட்டு சட்டென்று எழுந்து கைகழுவச் சென்று விட்டான் சரண்..
அவனது கோபம் அவளைத் தீயாகச் சுட.. அசையாமல் அமர்ந்திருந்தாள் மாளவிகா..
இப்போது அவள் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தாள்..
அவன் பின்னால் சென்று கெஞ்சுதலாக பேசியிருக்க வேண்டுமோ..? அவன் கைபிடித்து பாதிச்சாப்பாட்டில் போகாதே என்று தடுத்திருக்க வேண்டுமோ..?
தனக்கு ஏன் இதையெல்லாம் செய்ய வரவில்லை என்ற நினைவுடன் அவளும் சாப்பிடாமல் எழுந்து கொண்டாள்..
நினைவு தெரிந்த நாளிலிருந்து பாசம் வைத்து.. பின்னர் காதல் வைத்து.. அவனிடம் தன் மனதை வைத்திருந்தவளுக்கு அதை வாய் விட்டுச் சொல்லத் தெரியவில்லையே...
தன் மனதை அவனிடம் ஒப்புக்கொள்ள வருடக் கணக்கில் தயக்கம் காட்டியவளுக்கு - மற்ற காதலிகளைப் போல.. அவனை வசீகரிக்கத் தெரியாமல் போனதில் ஆச்சரியம் எதுவுமில்லைதான்..
"என்னம்மா பாதிச்சாப்பாட்டில் எழுந்துட்ட..?" வாசவனின் கூர்மையான பார்வை அவள் மேல் படிந்தது..
"போதும்பா.." அவள் கண்கள் கலங்கின..
அவருக்கா மகளின் மனம் புரியாது.
கோபத்துடன் போகும் சரணையும் கண்கள் கலங்கச் செல்லும் மாளவிகாவையும் யோசனையுடன் பார்த்தவர்

தானும் சாப்பிடாமல் எழுந்து கொண்டார்..
இரவுப் பொழுதின் குளுமை யார் மனதையும் தொடாமல் போக.. எப்போதும் இரவு நேரச் செய்திகளை தகப்பனாரின் அருகில் அமர்ந்து.. விவாதித்துக் கொண்டே பார்க்கும் வழக்கமுடைய மாளவிகா அன்று அதை மறந்தவளாக அவளுடைய அறைக்குப் போய் விட்டாள்..
மனதின் புழுக்கம் மறைய சரண் தோட்டத்தில் உலவப் போய்விட்டான்..
வாசவன் மட்டும் தனிமையில் அமர்ந்து செய்திகளைப் பார்த்தார். செய்தி முடியவும் தொலைக்காட்சியை அணைத்துவிட்டு தோட்டத்திற்குச் சென்றார். தோட்டத்து இருளில் சரண் உலவிக் கொண்டிருந்தது நிழலோவியமாக அவரது கண்களுக்குத் தெரிந்தது. படியிறங்கி.. அவனருகில் சென்றார்.
"சரண்.." மெதுவான குரலில் அழைததார்..
"மாமா.." சரணின் நடை நின்று விட்டது.
வாசவன் அவன் முகத்தைப் பார்த்தவாறு முன்னால் போய் நிற்க.. அவன் வியப்புடன் அவரைப் பார்த்தான்..
அந்த இருளிலும் அவரது பார்வையில் தெரிந்து கோரிக்கையை அவனால் கண்டு கொள்ள முடிந்தது..

5

அவர் அவனை வளர்த்தவர். யாருமற்று அவன் நின்றபோது... யாதுமாகி அவனை அரவணைத்தவர். நெருங்கிய ரத்த பந்தங்கள் விலகி நிற்க... ஒன்று விட்ட சொந்தத்திலும் ஒன்றுபட்டவர்.
இதுவரை அவர் அவனை நன்றிக் கடனில் சிக்கவைத்ததில்லை. தன் கருத்துக்களை அவன் மேல் திணிக்க முயன்றதில்லை. அவனுடைய முடிவுகளில் தலையிட்டதில்லை.
அவனுடைய பதினாறு வயதுப் பிராயத்தில் ஓர் அன்னையாக அடைக்கலம் கொடுத்தார். அவனது இருபதாம் வயதுப் பிராயத்தில் ஒரு பார்வையாளனாக விலகி நின்றார். அவனது இருபத்தி ஆறாம் வயதுப் பிராயத்தில் தோழனாக.. தோளில் கை போட்டார்.

அவரின் நிழலைப் பின்பற்றி இந்த வீட்டுப் படியேறிய அந்த நாள் முதல், இந்த நாள் வரை இந்த வீட்டில் ஒரு வினாடிப் பொழுதுகூட சரண் தன்னை அன்னியனாக உணர்ந்ததில்லை.
இயல்பாக வாசவனின் வீடு அவனை உள்வாங்கிக் கொண்டது. தன்னில் ஓர் அங்கமாக அவனை ஏற்றுக்கொண்டது.
அந்த வாசவனின் குரலில் தெரிந்த கோரிக்கை அவனைப் பதற வைத்தது.
அவனுடைய வாசவன் மாமா... அவனிடம் வேண்டி நிற்பதா...? அதை அவன் காது கொடுத்து கேட்பதா...?
"என்ன மாமா...?" என்று பதட்டத்துடன் கேட்டான்.
"ஏன் சாப்பிடாம வந்துட்டப்பா...?" அவர் ஆதுரமாக வினவினார்.
சரண் பதில் பேசவில்லை. அவன் மனம் சிணுங்குவதைப் புரிந்து கொண்டவராய் அவன் தோள் மீது கை போட்டுக் கொண்டார் வாசவன்.
"உனக்கு தெரியுமா சரண்... மாளவிகாவும் சாப்பிடவில்லை."
இதைக் கேட்டதும் சரணின் மனதில் இதமான தென்றலடித்தது. வழக்கம்போல.. இனம்புரியாத திருப்தியையும் கொண்டது.
"நீ எழுந்தவுடன்... அவளும் எழுந்து போயிட்டா..."
சரண் மௌனித்தான்.
"சரண்... நீ, நான் வளர்த்த பிள்ளை... மாளவிகா, நான் பெற்ற மகள்..."
"மாமா..."
"நீங்க இரண்டு பேருமே எனக்கு இரண்டு கண்கள் சரண்..."
சரண் அதைக் கேட்டதும் நெகிழ்ந்து விட்டான். அவனால் பேச முடியவில்லை...
"உங்க இரண்டு பேருக்குள்ளேயும் நான் வித்தியாசத்தை பார்த்ததில்லை சரண்... வித்தியாசம் காட்டி வளர்த்ததுமில்லை..."
"இதை நீங்க சொல்லித்தான் நான் தெரிந்துக்கணுமா... மாமா..."

"என் இரண்டு கண்களில்... எந்தக் கண்ணுக்கு அடிபட்டாலும் வலி எனக்குத்தான் சரண்... இது உனக்குப் புரியுதா...?"
"மாமா..."
சட்டென்று வாசவனின் கைபிடித்துக் கொண்டான் சரண்... அவன் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.
"ஒரு கண்ணுக்கு அடிபட்டால் இன்னொரு கண்ணுக்கும்... தானாக வலி உண்டாகும். மாமா... அதை நீங்களும் மறந்துட்டிங்களா...?"
"சரண்..."
"மாளவிகாவிற்கு துன்பம் ஏற்படுத்த மாட்டேன் மாமா. அவள் தானாக துன்பத்தை விலை கொடுத்து வாங்குகிறாளே என்ற வருத்தம்தான் எனக்கு... நீங்களும் இதைப் புரிந்தக்கணும்."
"வாழ்க்கையோ... வேலையோ... அது மனதுக்குப் பிடித்ததாக இருக்கணும் சரண்... அது ரொம்ப முக்கியம், மனம் விரும்பாத எதையும் செய்யக்கூடாது... இதுதான் என் கருத்து..."
"நான் சொல்கிறேன்னு தவறா நினைத்துக்காதீங்க... நீங்க உங்க மனதுக்குப் பிடித்த வேலையைத்தான் செய்துக்கிட்டு இருக்கீங்களா...?"
"இல்லைதான்... ஆனா இதை என் பேரண்ட்ஸ் விரும்பினாங்க. அவங்க மகன் ஒரு கலெக்டர்ன்னு செல்லிக்க ஆசைப்பட்டாங்க... நான் அவங்க கனவை நனவாக்கினேன்..."
"அவங்க செஞ்ச அதே தப்பைத்தானே மாமா நீங்களும் செய்கிறீங்க...? உங்க கனவை உங்க பெண் மேல திணித்திருக்கீங்க..."
சரண் சொல்லிவிட்டான். தன் நெடுநாளைய நினைவை சொல்லிவிட்டான். அவர் மீதான அவனது குற்றச்சாட்டை வெளிப்படுத்தி விட்டான்...
வாசவன் சரணை வியப்புடன் பார்த்தார். அவர் வார்த்தைகளில் ஆச்சரியம் இருந்தது.
"நீ இத்தனை நாளா இந்த நினைவோடதான் இருந்தியா சரண்...?"
"மாமா..."

"நான் என் கனவை ஒருநாளும் மாளவிகாவின் மேல் திணித்தில்லை... திணிக்கவும் மாட்டேன். உன் மனசில எதனால இப்படி ஒரு நினைவு வந்ததுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"
"உங்களின் கனவையும் கருத்துக்களையும் தினம்... தினம்... மாளவிகாவிடம் சொல்லிச்சொல்லி வளர்த்து விட்டிங்க மாமா... அது அவள் மனதில் பதிந்து விட்டது."
"அவளிடம் மட்டுமா நான் என் கனவைச் சொன்னேன்...? உன்னிடம் சொல்லவில்லையா...? நீ உன் வழியில் போகும்போது நான் அதை தடுத்தேனா...? இல்லையா..."
"நான் வேறு... மாளவிகா வேறு மாமா..."
"எனக்கு நீங்க இரண்டு பேருமே ஒன்றுதான் சரண்.. நான் சொன்னதை நீ கேட்டுக் கொண்டாய்... பட்... உன் கனவு வேறாக இருந்தது. மாளவிகாவும் கேட்டுக் கொண்டாள். அவள் கனவும்... என்கனவும் ஒன்றாக இருந்து விட்டது... அவ்வளவுதான்."
"நான் உங்கள் நிழலுக்கு வந்தபோது... எனக்கு பதினாறு வயது மாமா; மாளவிகா பிறந்ததிலிருந்து உங்க மடியில் வளர்கிறவள்."
"அப்படிச் சொல்லிவிட முடியாது சரண்... பெத்தவங்க கனவை பிள்ளைகள் அப்படியே ஏற்றுக்கிறது கிடையாது. எனக்குக்கூட என் வீட்டில் சொல்லிச்சொல்லித் தான் வளர்த்தாங்க. நான் விதியேன்னுதான் இந்த உத்தியோகத்தைப் பார்க்கிறேன் எனக்கு மட்டும் சுதந்திரம் கிடைத்து என் மனதைப் போல வாழ்க்கையை அமைத்துக்-கொள்ள முடிந்திருந்தால் விட்டுச் சிறகடித்திருப்பேன்."
சரண் பேசாமல் இருந்தான். தனது பேச்சு... அவனை அமைதிப் படுத்தவில்லை என்பதை வாசவனால் புரிந்துகொள்ள முடிந்தது.
"என்ன சரண் பேசாமல் இருக்கிற...?"
"நான் பேசி என்ன ஆகப்போகிறது மாமா... இப்பவும் சொல்கிறேன். டீச்சிங் புரொபசனல் பிடித்திருந்தா... மாளவிகா தாராளமாக டீச்சராக வேலை செய்யட்டும். அதை விட்டுவிட்டு... ஸ்கூல் நடத்தப் போகிறேன்னு கிளம்புகிறது எனக்குப் பிடிக்கவில்லை..."
"அவள் அதை விரும்புகிறாளேப்பா..."

"இவள் ஏன் சுமையை இழுத்து விட்டுக்கணும்...?"
"சுதந்திரமாய் செயல்பட முடியும்ன்னு நினைக்கலாமில்லையா....?"
"அப்படி நினைத்தால்... நான் சொல்வதைப் போல... செய்யலாமே... அவளுக்கு தேவை ஸ்கூல்தானே... அதை எங்கே கட்டினால் என்ன...?"
"ஜனங்கள் இல்லாத இடத்தில் ஸ்கூல் கட்டுவதால் யாருக்கு என்ன பிரயோஜனம்...?"
"ஜனங்க கூடுகிற இடத்தில் பிஸினஸ் சென்டர் கட்டணும்... அதுதான் புத்திசாலித்தனம். அதை விட்டுட்டு ஸ்கூல் நடத்துவதால் யாருக்கு என்ன லாபம்..."
"இது கல்வி சம்பந்தப்பட்ட விசயம்... இதில் லாப நஷ்டக் கணக்குக்கு இடமே இல்லை..."
'ம்ஹூம்.. விடிய விடிய ஓதினாலும் என் மாமன் கீறல் விழுந்த ரிகார்டாக பேசியதையேதான் திரும்பத் திரும்ப பேசிக்கிட்டு இருப்பார். இந்தச் சொன்னதையே சொல்கிற கிளிப்பிள்ளைகிட்ட பேசுகிறதை விட்டுட்டு பேசாம தூங்கப் போகலாம்...'
"நல்ல மாணவர்களை உருவாக்கணும். அதுதான் இந்த நாட்டுக்கு நாம் செய்கிற உண்மையான தொண்டு..."
'ஊஹூம்... நீங்களும் உருப்படமாட்டிங்க... உங்க மகளையும் உருப்பட விட மாட்டிங்க.. தொண்டு செய்ய மகளுக்கு சொல்லிக் கொடுக்கிற தகப்பனை வைத்துக்கிட்டு... நான் என்னதான் பண்ணித் தொலைக்கிறது...?'
"மாறணும் சரண்... இந்த நாடு மாறணும்... கல்வியை வியாபாரம் ஆக்குகிற இந்த நிலைமை மாறணும்..."
'முதல்லே நீங்க மாறித் தொலைங்க மாமா. கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதிச்சாலும்-மாறவே மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சுக்கிட்டு நிற்கிற நீங்க... மாற்றத்தைப் பற்றிப் பேசுகிறீங்க...'
"ஒருநாள் என் மகள்... நினைத்ததை செய்து காட்டுவாள்..."
'இப்பவே அப்படித்தான் இருந்து தொலைக்கிறா... கொஞ்சமாவது சொன்ன பேச்சைக் கேட்கிறாளா...?'
"அவ சாதிக்கப் பிறந்தவள்..."
'ஊஹூம்... என்னை சோதிக்கப் பிறந்தவள்.'

"நீ வேணும்னா பார் சரண்..."
'இத்தனை நேரமா உங்க வாயைப் பார்த்துக் கிட்டுத்தானே மாமா இருக்கேன். இனியும் எதைப் பார்க்கச் சொல்கிறீங்க...?'
"நாளை விடியும் விடியல் நல்லதாகத்தான் விடியும்."
சரண் பொறுக்க மாட்டாமல் வாசவனைப் பார்த்தான். வளர்த்த கொடுமைக்காக இவர் இப்படி ஒரு மொட்டை ரம்பத்தைப் போடக்கூடாது என்று அவனுக்குத் தோன்றியது. அதை அவரிடம் சொல்ல முடியாமல்... பூம்பூம் மாடு போல தலையை ஆட்டிவிட்டுக் கிளம்பினான்.

6

மாளவிகா போர்டிகோவில்தான் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டும் காணாதவன் போல...
"யெஸ் மிஸ்டர் நசீர்... பிஸினஸ் லன்ச்சில் பேசிக்கலாம். ஓ.கே.. ஸீ யு லேட்டர்..." என்று பேசிக் கொண்டே கார் கதவைத் திறந்து டிரைவிங் சீட்டில் ஏறப்போனாள்.
"சரண்... ஒரு நிமிஷம்..." என்றாள் மாளவிகா.
சரண் நின்றான். அவளை அன்றுதான் அறிமுகமானவளைப் பார்ப்பதைப் போல... ஒரு பார்வை பார்த்து வைத்தான். கைக்கடிகாரத்தை பார்த்துக் கொண்டான்.
நேரமாகிறதாம்... சொல்ல வந்ததை அவள் சீக்கிரமாக சொல்ல வேண்டுமாம். அதை குறிப்பில் உணர்த்துகிறானாம்.
பட்டுக்கொள்ளாத அவனது நடவடிக்கையைக் கண்டு மாளவிகாவிற்கு கண்கள் கரித்தன.
எப்படி அவளைப் புறக்கணிக்கிறான்...? என்ன என்று வாய்திறந்து ஒரு வார்த்தை கேட்க மாட்டானாமா...? முதல்நாள் மாலையில் அவளைத் தன் மார்பில் சாய்த்துக் காதல் சொன்னவனா இவன்...? என்ற சந்தேகம் அவளுள் எழுந்தது.
காதல் என்ற விலங்கால் அவளைப் பிணைக்க முயல்கிறானா...? அவளுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க மாட்டானா...? நான் சொல்வதை நீ கேட்டுக்

கொள்ள வேண்டும். கேட்காவிட்டால் என்னோடு பேசாதே என்பது எந்த விதத்தில் நியாயமாகும்...?
"நான் உங்களிடம் பேச வேண்டும்..."
"பேசு..." என்றான் அவன் ஒற்றைச் சொல்லாய்...
"காரில் போய்க்கிட்டே பேசலாமே... எனக்கு லிப்ட் கொடுக்கமாட்டிங்களா....?"
"உன் கார் என்ன ஆச்சு...?"
"ரிப்பேர்..."
"புதுசாய் வாங்கினால் ஒழுங்காக வேலை செய்யும். காயலான் கடைக்குப் போக வேண்டியதை செகண்ட் ஹேண்டாய் வாங்கினால் இப்படித்தான் மாதத்தின் முப்பது நாளும் ரிப்பேர் ஆகும்..."
"எங்க பட்ஜெட்டிற்கு அதுதான் முடியும்."
"நான்தான் வெளிநாட்டுக் காரை வாங்கிக் கொடுத்தேனே..."
மாளவிகா மௌனமாக-சரண் பல்லைக்கடித்தான்.
"இதுக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டியே..."
"எனக்கு காலேஜுக்கு நேரமாச்சு...."
"போகலாம். காரில் ஏறு..."
காரை மிதமான வேகத்தில் ஓட்டியபடியே... மாளவிகாவை திரும்பிப் பார்த்தான் சரண்...
அழகாக இருந்தாள். பட்டு ரோஜா வண்ணத்தில் சந்தனநிறப்புள்ளிகள் வைத்த சுடிதார் அணிந்து சந்தனநிறத்தில் துப்பட்டாவைப் போட்டிருந்தாள். காற்றில் அவளது கேசம் அலைபாய... அதைக் கண்ட சரணின் மனமும் அலைபாய்ந்தது.
"பேசணும்னு சொன்னே... பேச்சு வரலையா?" என்று வம்புக்கு இழுத்தான் அவன்.
"ஐ ஆம் ஸாரி..."
அவள் இதை மெதுவான குரலில் சொன்னதும் அவன் மனம் லேசாகி விட்டது.
"எதுக்கு...?" என்றான் புரியாதவனைப் போல...
"நான் அப்படிப் பேசியிருக்கக்கூடாது...."
"எப்படி...?"
"பணத்தையும் நகைகளையும் பற்றிப் பேசியிருக்கக் கூடாது.."

"என்னைப் பற்றிய உன் மதிப்பீட்டைச் சொன்னாய்... அதுக்கு ஏன் வீணாக ஸாரி சொல்கிற..."
அவனின் குத்தல் மொழி அவளுக்குப் புரிந்தது. மனம் கனத்தது...
"தெரியாமல் சொல்லிட்டேன்..."
"மனதில் இருக்கிறதுதானே வார்த்தையாய் வரும்..."
"எனக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை..."
"பேய் பிடிச்சிருக்கு..."
சரண் இதை நிதானமாகச் சொன்னான்...
"உனக்கு பேய் பிடிச்சிருக்குடி... லட்சியப் பேய்.. உன் லட்சியத்துக்கு குறுக்கே யார் வந்தாலும் உன் பார்வைக்கு அவங்க வில்லன்களாகத்தான் தெரிவாங்க..."
"வில்லனா நினைக்கிறேனா... உங்களையா...?"
"ஆமாம்... அதனால்தானே... உனக்காக வைரங்களை வாங்கிக் குவிக்கிறவனிடம் நகைக்கு ஆசைப்படுவதாகச் சொல்வாய்... உன் யெரில் ஃபாரின் கார் புக் பண்ணு-கிறவனைப் பார்த்து உன் பணத்துக்காக பல்லைக் காட்டுவதாகச் சொல்லுவாய்..."
"தெரியாமல் ஒருவார்த்தை வந்துவிட்டால்... நீங்க அதைப்பிடித்துக் கொண்டே தொங்குவீங்களா...?"
"நீ நல்ல மூடில் இருந்தால்... நல்ல விஷயம் பேசுவாய்... நான் உடனே உன்னிடம் பல்லைக் காட்டணும்.. உன் பேச்சுக்கு எதிராய் நான் பேசிவிட்டால்.. எக்குத்தப்பாய் பேசிவைப்பாய். அதை சொரணை கெட்டதனமாக கேட்டுக்கணும்... அப்படித்தானே மாளவிகா...?"
"சரண்..."
"நீ சிட்டுக்குருவிடி... நீ விட்டுச் சிறகடிக்கணும்... பனங்காயை தூக்கி உன் தலையில் வைத்துக் கொள்ளக்கூடாது... அவ்வளவுதான் நான் சொல்வேன்... அதுக்கு மேல உன் இஷ்டம்... உன் காலேஜ் வந்துருச்சு... இறங்கு..."
மாளவிகா இறங்குவதற்கு முன்னால் தயங்கித் திரும்பிப் பார்த்தாள்.
"என்ன?" அவன் புருவம் உயர்த்தினான்.
"ஸாரி..." அவள் மீண்டும் கொஞ்சும் குரலில் கூறினாள்.

அவன் மனதில் இதம் படர்ந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெறுமையான பார்வை யொன்றை பார்த்து வைத்தான்.
"ஹாய் மாளவிகா..."
அவளுடைய தோழி ஆஷா, குனிந்து காருக்குள்ளிருந்த சரணைப் பார்த்தபடி... மாளவிகாவிற்கு 'ஹாய்' போட்டாள்.
"ம்ம்ம்..."
மாளவிகா முகம் சுருங்கி... இறங்கப் போனாள். அதற்குள்-
"ஹாய் சரண்..." என்றாள் ஆஷா.
"ஹாய்..." என்று பதிலுக்குச் சொன்னான் சரண்.
"யு லுக் வெரி ஹேண்ட் சம் டு டே.." அவள் வழிந்தாள்.
"ஈஸிட்? அப்போ... நேற்று நான் நல்லா இல்லையா?" அவன் கேலியாக சிரித்தான்.
"நோ... நோ... யு ஆர் ஆல்வேஸ் ஹேண்ட்சம்ய்யா..." அவள் அவசரமாக மறுத்தாள்.
மாளவிகாவிற்கு சகிக்கவில்லை. அவள் ஆஷாவை முறைத்தபடி...
"கொஞ்சம் தள்ளிக்கிறயா... நான் கார் கதவைத் திறக்கணும்..." என்று கடுப்பாகச் சொன்னாள்.
"பொறேண்டி... இப்பவே காலேஜுக்குள் போய் என்ன வெட்டி முறிக்கப் பேகிற...? கிளாஸ் ஆரம்பிக்க இன்னும் நேரமிருக்கு..." என்றாள் ஆஷா...
"இதோ பார்... நீ என் அத்தானிடம் எதையாவது 'ஜொள்ள' வேணும்னா... தாராளமா 'ஜொள்ளு'. அவரும் பதிலுக்குப் பதில் 'ஜொள்ளு'வார்... அதை விட்டுவிட்டு ஊடே என்னை உட்கார வைத்துக்கிட்டு 'மாட்டாடும்' வேலையையெல்லாம் வைத்துக் கொள்ளாதே. எனக்கு இந்த மீடியேட்டர் வேலையே பிடிக்காது."
மாளவிகா இறங்கி காலேஜிற்குள் வேகநடையுடன் சென்று விட... சரண் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். மையலுடன் அவன் முகம் பார்த்து,
"அவ ரொம்ப சார்ட் டெம்பர் சரண்..." என்றாள் ஆஷா.
"பட் ஐ லவ் ஹெர் ஸோ மச்" என்று கூறிக்கொண்டே காரை ஸ்டார்ட் செய்து விட்டான் சரண்.
கம்பெனிக்குள் நுழைந்ததும்... வேலைகள் காத்திருக்க... மாளவிகாவை மறந்து விட்டான்.

"சார்... இன்றைக்கு நீங்க மிஸ்டர் நஸீருடன் பிஸினஸ் லன்ச்சை அட்டண்ட் பண்ணவேண்டும்..."
அவனுடைய செக்ரக்டரி நீபா... கூறினாள்.
"காலையிலேயே அவரை இன்வைட் பண்ணிட்டேன். ஐ ரிமம்பர் இட்." அவளது முகத்தைப் பார்க்காமல் கம்ப்யூட்டர் திரையில் கண் பதித்திருந்தான் சரண்.
அறையை விட்டு நீபா வெளியேற... ஊர்வசி உள்ளே நுழைந்தாள்.
"குட் மார்னிங் சார்..."
"மார்னிங்... வாட் ஸ் தி மேட்டர்...?"
"என் டீம் சரியில்லை சார்..."
"நீங்கதானே டீம் லிடர்...?"
"யெஸ் சார்..."
"நீங்கதான் டீமை சரி பண்ணணும்..."
அடுத்த அரைமணி நேரம் ஊர்வசி, சரணுடன் விவாதித்தாள். அவளது முகத்தை கண்டிப்பான தோரணையுடன் பார்த்தபடிதான் பேசினான் சரண்.

7

சரணைக் கவர்ந்திழுக்க பல பெண்கள் முயன்றனர். சரண் பிடி கொடுத்ததில்லை. அவனே மாளவிகாவிடம் சொன்னதைப் போல... அவன் பெண்களை அறியாதவன் அல்லதான்.
ஆனால்... அவனுடைய மனக் கதவு.. அந்தப் பெண்களில் யாருக்காகவும் திறந்து கொண்டதில்லை. வெளிநாடுகளில் பறந்து கொண்டிருக்கும் அவன் சில பழக்கங்களுக்கு ஆட்பட நேர்ந்தது. அதில் எந்தப் பழக்கமும் அவனது இதயத்திற்குள் நுழைந்ததில்லை.
அந்த அளவிற்கு யாருடனும் அவனால் பழக முடியவில்லை. அவனது மனக்கதவை தட்டும் வல்லமை... மாளவிகாவிற்கு மட்டுமே இருந்தது அவனது இதயத்தில் புகுந்து விடும் திறமையும் அவளுக்கு மட்டுமே இருந்தது.
அவன் மனதில் மாளவிகாவிற்கு மட்டுமே இடம் இருந்தது... மற்றவர்கள் அதில் இடம் பிடிக்க முயன்று தோற்றார்கள்.

மாளவிகா அவளுடைய காதலை... வாய் வார்த்தையால் முதல்நாள் மாலை வரை ஒப்புக்கொள்ளவில்லை. முதன்முதலாக அவள் அதை ஒப்புக்கொண்டவுடனே அவர்களுக்குள் மனப்பிணக்கு ஏற்பட்டு விட்டது.
அவன் பேசிவிட மாட்டானா என்ற ஏக்கத்துடன் அவன் முகம் பார்த்து... சுற்றிச் சுற்றி வந்த மாளவிகாவின் முகம் அன்று மாலையில்தான் நினைவுக்கு வர... சரண் கம்ப்யூட்டரை அணைத்து விட்டு எழுந்து கொண்டான்.
'கார்... ரிப்பேருன்னு சொன்னாளே...'
மாளவிகாவின் கல்லூரி வாசலுக்கு அவன் போவதற்கும்... யாரோ ஒரு பெண்ணிடம் பேசியபடி மாளவிகா கல்லூரியை விட்டு வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.
சரணின் காரைக் கண்டதும்.. அவளது முகமும் கண்களும் ஒளிர்ந்ததைப் பார்த்தபடி கார் கதவைத் திறந்து விட்டான் சரண்.
"பை... நீலா..."
மாளவிகா காரில் ஏறிக்கொண்டாள். கார் கிளம்பியது.
"ஆஷாவை விட்டுவிட்டு நீலாவைப் பிடித்துக் கொண்டு விட்டியா... ஆஷா என்னவானாள்..?" என்று விசாரித்தான் சரண்.
"அவளை என்றைக்குமே எனக்குப் பிடித்ததில்லை. அவள் கூடவெல்லாம் நான் நின்றுகூடப் பேசமாட்டேன்..."
"இன்றைக்கு காலையில் பேசினயே..." சரண் பேச்சை விடாமல் இருக்க மாளவிகா அவனை முறைத்தாள்.
"அவகூட யார் பேசினது.. நீங்களா... இல்லை நானா...?"
"போச்சுடா... நீயா நானான்னு கோபிநாத்தைப் போல கேட்க ஆரம்தபிச்சுட்டியா... கொஞ்சம் மனச்சாட்சியோட பேசு மாளவிகா..."
"மனச்சாட்சியில்லாம பேசறது நீங்களா... இல்லை நானா...?"
"திரும்பவும் கோபிநாத்தா...லுக் மாலு... நானா அவளைத் தேடி வந்தேன்...?"
"காலையில்ன்னா நீங்க சொல்றதை ஏத்துக்கலாம்..."
"ஏன் ஈவினிங்கில் அதை ஏத்துக்க கூடாதுன்னு சட்டமிருக்கா..?"

"ம்ம்ம்... என் கார் ரிப்பேருன்னு என்னைக் காலேஜில் கொண்டு வந்து விடச்சொல்லி... காலையில் நான் கேட்டுக்கிட்டேன்..."
"இதுவாவது நினைவில் இருக்கே... பிழைத்தேன். உன்னைக் கொண்டு வந்து விட வந்தேன். அந்த ஆஷா வந்தாள். 'ஹாய்'ன்னாள்... நானும் 'ஹாய்'ன்னேன். இது ஒரு தப்பா?"
"உங்க லெவலுக்கு இதெல்லாம் ஒரு தப்பேயில்லைதான்..."
அவள் எங்கே வருகிறாள் என்று புரிந்து போக... சரண் திரும்பி அவளையே பார்த்தான்.
"நீ மட்டும் எனக்கு கழுத்தை காலாகாலத்தில் நீட்டியிருந்தா இப்படி ஒரு கேள்வியை நீயும் கேட்டிருக்க மாட்ட... நானும் பதில் சொல்லிக்கிட்டு உட்கார்ந்திருக்க மாட்டேன்.."
இப்போது அவன் எங்கே வருகிறான் என்று மாளவிகாவுக்கு புரிந்து போக... அவள் உடல் சூடேற உதட்டைக் கடித்துக் கொண்டு முகம் சிவந்தாள்.
தன் லஜ்ஜையை அவன் உணர்ந்து கொண்டு விடுவானோ என்ற தவிப்புடன் அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.
அவனா... அதை உணர மாட்டான்..? கள்ளச் சிரிப்புடன் அவளது கன்னச் சிவப்பை ரசித்தவாறு-
"என்னடி பேச்சையே காணோம்..." என்று விசாரித்தான்.
"காலையில் 'ஹாய்' போட்டதுக்கு காரணம் சொல்லிட்டிங்க. ஈவினிங் அவளைத் தேடிக்கிட்டு வந்ததுக்கு என்ன சொல்லப் போகிறீங்களாம்.."
"இது அபாண்டம் மாளவிகா... உன்னை கூப்பிட்டுக் கிட்டு போக வந்தவனைப் பார்த்து கேட்கிற கேள்வியா இது...?"
"அந்த நினைப்புக்கூட உங்க மனசில் இருக்கா...?"
"உன் நினைப்பு என் மனசில் இல்லாம இருந்தால்தான் நீ ஆச்சரியப்படணும்..."
மீண்டும் அவள் முகம் சிவக்க...
'இவளுடைய வெட்கம்தான் எத்தனை அழகாக இருக்கிறது...?' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் சரண்.
'ஒருவார்த்தை 'ம்'ன்னு சொல்லமாட்டேன்கிறாளே... அப்படிச் சொல்லிட்டால்... உடனே இவள் கழுத்தில் தாலியைக் கட்டி... நான் போகும் இடத்துக்கெல்லாம்

கூப்பிட்டுக் கொண்டு பறந்து விடுவேனே...' மனம் தாளாமல் வெதும்பினான்.
அவனுக்குத் தெரியும் - அவன் அப்படிச் செய்து விடுவான் என்றுதான் மாளவிகா மௌனிக்கிறாள் என்பது.
அவளே சொன்னதைப் பேல... அவளின் வேர் சென்னையில் இருந்தது. அவனின் வேரோ அவளிடம் இருந்தது.
அந்த ஒரு காரணத்திற்காகத்தான்.... எங்கே சுற்றினாலும் அவன் அவளிடமே திரும்பி வந்தான்.
"ஈவினிங்... அவகிட்ட கடலை போட வந்ததுக்கு இது ஒரு சாக்கு..."
"கம்ப்யூட்டர்காரனிடம் கடலையைப் பற்றிப் பேசுகிற... அவளெல்லாம் பெரிய இவள்.. அவகிட்ட கடலை போட நான் அலைகிறேன்.... 'ஹாங்காங்' காரனை மீட்பண்ண வேண்டியிருந்தது. அந்த மீட்டிங்கை கேன்சல் பண்ணிட்டு உன்னைக் கூப்பிட ஓடோடி வந்தேன் பாரு... நீ இதுவும் பேசுவ... இதுக்கு மேலயும் பேசுவ..."
சரணின் வார்த்தைகளில் அப்பட்டமான கோபம் தெரிந்தது.
மாளவிகாவிற்குத் தெரியும் - அவனது மனத்தாங்கலுக்கான காரணம் கடலை போடுவதைப் பற்றிய பேச்சினால் அல்ல என்பது.
அவனுடைய உடலும்... மனமும் மாளவிகாவின் அண்மையைத் தேடுவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.
புரிந்தும் புரியாதவளைப் போல... அவள் விலகி நிற்பதுதான் அவனுடைய கோபத்தை அதிகப் படுத்திக் கொண்டிருக்கிறது.
அவனது மனச் சிணுங்கலை சரி செய்யும் வல்லமை தனக்கு மட்டுமே உண்டு என்பதை மாளவிகா அறிவாள்.
அவனை எப்படிச் சமாதானம் செய்வது... என்று மனம் குறுகுறுக்க... காரிலிருந்த சிடியை ஒலிக்க விட்டாள்.
சரணுக்கு பிடித்த பாடல் ஒலிக்க ஆரம்பித்தது. அவன் முகம் மென்மையாக குறும்புப் பார்வையுடன்... அவள் அவனைப் பார்த்து... புருவம் உயர்த்தினாள்... அவன் கண்கள் மின்ன.. அவளைப் பார்த்தான்.
"தாமரைப் பூவுக்கும்

தண்ணிக்கும் என்னைக்கும்.
சண்டையே வந்ததில்லை.
மாமனை அள்ளி நீ...
தாவணி போட்டுக்க
மச்சினி யாருமில்லை..."
பாடலைக் கேட்டவன் வாய் விட்டுச் சிரித்தான்
"கம்மங் கூழில் போட்ட உப்பு...
கஞ்சியெல்லாம் சேர்தல் போல...
கண்டபோதே இந்த மூஞ்சி...
நிறைஞ்சு போச்சு நெஞ்சுக்குள்ள..."
மாளவிகா கன்னம் சிவக்க... அந்தப் பாடலுடன் சேர்ந்து பாடினாள். இப்போது அவன் முகம் முற்றிலும் கனிந்து விட்டிருந்தது. வலது கையில் காரை ஓட்டியபடி.. இடதுகரத்தால் அவள் கன்னம் தொட்டான்.
"சொந்தக்காரன் நான்தானே...
தொட்டுப் பார்க்கக் கூடாதா...?"
அவள் தட்டி விட்டதும்... அவன் பாடலின் வரிகளை கண்களால் கேட்டான்.
"கன்னம் தொடும் கை ரெண்டும்
மேலே கொஞ்சம் நீளாதா...?"
அவள் அதே பதில் வரிகளை கண்களால் சுட்டிக் காட்டினாள்.
"இந்த நாட்டில் தீண்டாமைதான்
இன்னும் உள்ளதா...?"
அவன் காரை நிறுத்தியே விட்டான். அவளை நெருங்கி அமர்ந்தான்.
"வயசுக்கு வந்த பூ...
ஆசையே பேசுமா...?
வண்டுக்கும்... பூவுக்கும்.
சண்டையா சத்தமா?"
மாளவிகா அவனது கைகளை இப்போது மறுக்கவில்லை. மனதில் இருந்த காதலின் கனல் தாங்காமல் எங்கெங்கோ சுற்றியவன், அவளது மௌனத்தில் இதம்கண்டு... அவள் கன்னத்தில் இதழ்பதித்தான்.

"மாளவிகா..."
"ம்ம்ம்..."
"நாம கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம்டி..."
சரணின் வார்த்தைகளில் அளவற்ற தாபம் இருந்தது.
மாளவிகா பதில் சொல்லவில்லை. சட்டென்று அவன் கோபப்பட்டு விலகி அமர்ந்தான்.
"த்சு... உன்கூட இதுஒண்ணு இருக்குடி... கல்யாணத்தைப் பத்தி மட்டும் பேசினா... பிடிகொடுக்கமாட்ட..."
"அப்படியில்லை சரண்... நான் அதைப்பத்தி இன்னும் யோசிக்க ஆரம்பிக்கலை..."
"இப்ப யோசிக்காம... பின்னே எப்ப யோசிக்கப் போகிற...? பெண்களின் கல்யாண வயது இருபத்தி ஒண்ணுன்னு சட்டம் சொல்லுது... உனக்கு இருபத்தி ஒருவயசாகலையா...?"
"எனக்குன்னு லட்சியம் இருக்கு..."
"உனக்குன்னு நானில்லைன்னு சொல்கிற..."
"நான் அப்படிச் சொன்னேனா...?"
"நீ சொன்னதுக்கு இப்படியும் ஒரு அர்த்தமுண்டு."
"இப்படி குதர்க்கமாவே யோசிச்சா நான் என்ன பண்ண...?"
"ஏய்ய்.. உனக்கு என்னைப் பிடிச்சுத் தொலைக் கலைன்னா பரவாயில்லைடி.. பிடிக்குது. என்னை உனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அது உன் கண்ணில் தெரியுது. அப்புறமும் ஏண்டி பிடிவாதம் பிடிக்கிற...?"
"சரண்..."
மாளவிகாவின் குரலில் இறைஞ்சல் இருந்தது. அவன் தோளில் அவள் தலை சாய்த்துக் கொண்டாள். அந்த செயலில் கோபம் இறங்கிய சரண் பேசாமல் இருந்தான். பின் மனத்தாங்கலுடன் கேட்டான்.
"ஏண்டி என்னை இப்படி சித்திரவதை செய்கிற...?"
"கொஞ்ச நாள் சரண்... எனக்கு கொஞ்ச நாள் கொடுங்க..."
"என்னைக் கொஞ்ச உனக்குக் கொஞ்ச நாள் வேணுமா...?"
'இவன் அதிலேயேதான் நிற்பான்...' அவள் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.
"நான் ஸ்கூல் கட்டணும் சரண்.."
"கட்டி...?"
"ஸ்கூல் நடத்தணும்..."

"நடத்தி...?"
"அதில் சக்ஸஸ் பண்ணிக்காட்டணும்..."
"அதுக்குள்ள... நான் தடியூண்டி நடக்கிற கிழவனாகிடுவேன்... அதுக்கப்பறம் நாம கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னத்தை கிழிக்கப் போகிறோம்...?"
"அவ்வளவு தூரத்துக்கு என் திறமை மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லாம போய் விட்டதா...?"
"ஏண்டி... அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பாவாகட்டும்ன்னு நீ கதை சொல்லலாம். அது வேண்டாம்ன்னு நான் அப்ஜெக்ட் பண்ணக் கூடாதா...?"
"எண்ணி இரண்டே வருசம் போதும் சரண்... நான் சாதித்துக் காட்டுகிறேன்... அதை மட்டும் எனக்கு கொடுங்க..."
"இரண்டு வருசத்தில் நீ கோட்டையை பிடித்து கொடியை நாட்டி விடுவாயா...? நெவர்..."
"குடுத்துத்தான் பாருங்களேன்.."
"ஒரு வேளை உன்னால் முடியலைன்னா...?"
"நான் வாயைத் திறக்காமல் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்க பின்னாடி வந்திடுவேன்..."
"வார்த்தை மாற மாட்டாயே..."
"இந்த மாளவிகா சொன்னால்... சொன்னதுதான்..."
சரணின் முகத்தில் சந்தோசம் மீண்டது... அவன் சன்னமாக விசிலடித்தபடி காரை ஓட்டினான்.
வாசவன் மகளின் ஆசைப்படி.. கட்டிட வேலைகளை ஆரம்பித்து விட்டார். மாளவிகா பி.எட். படிப்பில் சேர்ந்து விட்டாள். அவளது பயிற்சி காலம் முடிவதற்கும் கட்டிடம் பூர்த்தியாகவதற்கும் சரியாக இருந்தது.
'வாசவன் ஹையர் செகண்டரி ஸ்கூல்' ஆரம்பமாகி விட்டது.
"ஊரெல்லாம் மெட்ரிகுலேசன் ஸ்கூல் ஆரம்பிக்கிறாங்க. நீ ஸ்டேட்போர்டு சிலபஸிலேயே நிற்கிற..." சரண் எரிச்சல் பட்டான்...
"எல்லோருக்கும் கல்வி, இதுதான் என் லட்சியம் அதுக்கு ஸ்டேட் போர்டுதான் பெட்டர் வே..." மாளவிகா அமைதியாகச் சொன்னாள்.
"எல்லாத்துக்கும் உன்னிடம் பதிலிருக்கும். என்னவோ செய்து தொலை.. ஆனால்... இரண்டு வருசம்தான் உனக்கு

நான் கொடுத்திருக்கும் சாதனைக்கான டைம்... நினைவிருக்கில்ல..."
"நினைவிருக்கு... நிச்சயம் அதற்குள் நான் ஜெயித்துக் காட்டுவேன்."
"ஜெயித்தால் சரி... தோற்றால் இன்னும் சரி..."
ஆனால்.. சரணின் கணிப்பு பொய்த்தது... மாளவிகா ஜெயித்துக் காட்டினாள். முதல் வருடத்திலேயே அவளது பள்ளிக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டது. இரண்டாம் வருடத்தில் அந்தப் பகுதியில் பெயர் பெற்ற பள்ளியாக அது மாறியது.
"எப்படி உன்னால் இது முடிஞ்சது...? இரண்டே வருசத்தில் இவ்வளவு பெரிய வெற்றியா...? உன் ஸ்கூலில் குழந்தைகளைச் சேர்க்க எல்லாரும் இன்ட்ரெஸ்ட் காட்டறாங்களே..." சரண் ஆச்சரியப்பட்டான்.
"இப்பவாவது நான் தோற்றுப் போகமாட்டேன்னு நம்பறீங்களா...?"
"எல்லாத்தையும் ஜெயிக்கிறாய். என்னை ஜெயிக்க மட்டும் யோசிக்கறயே..." சரணின் கண்களில் தாகம் தெரிந்தது.
"ஸ்ஸ்... இது ஸ்கூல்..." மாளவிகா முகம் சிவந்தாள்.
"ஸ்கூல்தான்... யாரு இல்லேன்னது? இப்ப நான் என்ன செய்தேன்...? உன்னைக் கையைப் பிடித்த இழுத்தேனா.. கன்னத்தில் முத்தமிட்டேனா...? இல்லை..." சரண் அதையெல்லாம் செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கத்தோடு சொல்லிக் கொண்டே போக... மாளவிகா அவசரமாக இடைமறித்தாள்.
"பஸ்... பஸ்..."
"என்னது பஸ்ஸா...?"
"பஸ்... பஸ்ன்னு சொன்னா... போதும்... போதும்ன்னு அர்த்தம்.."
"இதுக்கெல்லாம் அர்த்தத்தைக் கண்டுபிடி... நான் சொல்கிறதில மட்டும் எதையும் கண்டு பிடிக்காதே.."
"ஊஹூம்...?"
மாளவிகா ஒற்றைப் புருவத்தை மேலே உயர்த்தி, மையலுடன் அவனைப் பார்க்கவும்... சரண் ஆச்சரியப்பட்டுப் போனான்.

"ஏய்ய்... இது நீhயடி... உனக்கு இதெல்லாம் கூடத் தெரியுமா...?"
"உஸ்ஸ்... சத்தம் போடக்கூடாது... இது ஸ்கூல்..."
மாளவிகா உதட்டில் ஒற்றை விரலை வைத்து எச்சரித்தாள்.
"ம்ஹூம். ஒரு நிமிடம் என் காதலியா இருக்கிற... மறுநிமிடமே டீச்சரம்மாவா ஆயிடற... நீ மல்ட்டி பெர்ஸனாலிட்டி கேரக்டர்டி... உனக்கு மாளவிகான்னு பெயர் வைத்திருக்கக்கூடாது. அந்நியன்னு பெயர் வைத்திருக்கணும். எதுக்கும் என்கூடவா..."
"எதுக்கு...?"
"அதுக்கு ஏண்டி இவ்வளவு சந்தேகமா பார்த்து வைக்கிற...? ஒரு நல்ல டாக்டரைப் பார்த்து செக்-அப் பண்ணிக்கத்தான்..."
மாளவிகா அவனை முறைக்க ஆரம்பிக்கவும்... அவன் கைகளை உயர்த்தி
"அம்பேல்..." என்றான்.
"உங்களைப் போய் என்னால் ஜெயிக்க முடியுமா சரண்...?"
"ஏண்டி... உனக்கு அந்த ஆசையே வந்து தொலைக்காதா...?"
"ஐயய்யோ... நீங்க ஜெயிக்க முடியாத வல்லவர்ன்னு சொல்ல வந்தேன். நீங்க என்னடான்னா... இப்படி பேசி வைக்கறீங்க..."
சரண்... மாளவிகாவிற்கும் அவனுக்கும் இடையே இருந்த மேஜையின் மேல் கைகளை ஊன்றி அதில் முகம் பதித்து அவளைப் பார்த்து கண் சிமிட்டினான்..
அவன் என்னவோ சொல்லப் போகிறான் என்ற நினைவில் அவளது கன்னங்கள் சூடேறின..
"என்னை உன்னால் ஈஸியா ஜெயிக்க முடியும்டி.. டிரை பண்ணித்தான் பாரேன்.."
"ச்சீ.."
மாளவிகா தன் கையிலிருந்த செல்போனை.. அவனை நோக்கி விட்டெரிய...
"கேட்ச்.." என்று அதைப் பிடித்தான் சரண்..
அவளின் செல்போன் ஒலித்தது. 'வாசவன் அழைக்கிறார்..' என்ற வாசகம் ஒளிர...
"மாமாதான்.." என்றபடி அவளிடம் போனை நீட்டினான்.
செல்லமாக அவனை முறைத்தபடி போனை வாங்கி காதில்

வைத்த மாளவிகாவின் முகம் மாறியது. பதட்டத்துடன் சீட்டை விட்டு எழுந்தாள்..
"வாட்..? எங்கே..? எப்போது..?" என்று கேட்டபடி மயங்கிச் சரிந்தாள்..
"மாளவிகா.." என்றபடி அவளைத் தாங்கிக் கொண்ட சரண்.. அவள் நழுவவிட்ட போனை எடுத்துக் காதில் வைத்தான்..
"ஹலோ.. ஹலோ.. மிஸ் மாளவிகா.. லைனில் இருக்கீங்களா..?" மறுமுனையில் குரல் கேட்க..
"நான் சரண் பேசுகிறேன். அவளுடைய வுட்பி.. என்ன விசயம் சொல்லுங்க.." என்று கேட்டான் சரண்..
மறுமுனையில் ஒலித்த குரல் சொல்லிய செய்தியைக் கேட்டதும் அவனுக்கும் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது..

9

கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த வாசவனின் உடல் சிரித்த முகத்துடன் இருந்தது..
காலையில் கம்பீரமாக வேலைக்குப் போனவர் மாலையில் சடலமாக வீடுதிரும்புவார் என்பதை எதிர்பார்த்திராத மாளவிகா.. நிலை குலைந்து போயிருந்தாள்..
"அப்பா.. அப்பா.." இதைத் தவிர வேறு வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வரவில்லை..
தாய் இல்லாத அவளுக்கு தாயுமானவனாக இருந்த தயாளன்.. தந்தையைப் போல இல்லாமல்.. அவளுடன் அனைத்துச் செய்திகளையும் சரிசமமாக அமர்ந்து பகிர்ந்து கொண்ட தோழன்... 'உன் வாழ்க்கைப் பாதையை நீ தேர்ந்தெடு' என்று ஒதுங்கி நின்ற நியாயவாதி.. அவள் கேட்டதற்காக கையிருப்பையெல்லாம் போட்டு.. அவளது கனவுப் பள்ளிக் கூடத்தை கட்டித்தந்த அன்புமிகு அப்பா.. இப்போது உயிரோடு இல்லை...
இனி மாளவிகா அநாதை.. தாயில்லாத அவளுக்கு தந்தையும் இனி இல்லை...
"என்ன ஆச்சு சரண்..?"
"ஹார்ட் அட்டாக் சார்.."
"அடக்கடவுளே.. காலையில் நல்லாத்தானே இருந்தார்..?"

"ஆமாம் சார்.. யூசுவலா ஆபிஸ் கிளம்பிப் போகிறதைப் போலத்தான் போனார்.. வேலை செய்து கொண்டிருக்கும் போதே.. நெஞ்சைப் பிடித்துக்கிட்டாராம். பியூன் தண்ணீரைக் குடுப்பதற்குள் உயிர் போய் விட்டதாம்.."
"ஸின்ஸியர் ஆபிஸர்.. அதனால்தான் ஆபிஸிலேயே உயிர் போயிருக்கு.."
சரண், வாசவனின் இறுதிக் காரியத்தை குறைவின்றி நடத்தினான். வந்தவர்களை அழைத்துச் சென்று.. வாசவனின் உடலைப் பார்க்க வைத்து... அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லி.. உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தகவல் சொல்லி.. கிராமத்தில் இருந்து வருபவர்கள் வரும் வரை காத்திருந்து.. என்று அனைத்தையும் பொறுப்பாக கவனித்துக் கொண்டான்...
மாளவிகா எதையும் உணராதவளாய் தகப்பனாரின் உடல் இருந்த பெட்டிக்கு அருகில் சரிந்து அமர்ந்திருந்தாள்.
'ஏன்ப்பா.. என்னை விட்டுப் போனீங்க..? நான் என்ன செய்வேன்ப்பா..? என் பலமெல்லாம் நீங்கதானேப்பா.. நீங்க இல்லாம இனி எப்படிப்பா இந்த உலகில் தனியாய் வாழ்வேன்..?'
அவள் மனம்.. வாசவனிடம் கேட்டுக் கொண்டிருந்தது. அவள் இன்னும் அவர் உயிரோடு இருக்கிறார் என்ற நினைவோடே இருந்தாள்..
'இல்லப்பா.. இதெல்லாம் பொய்.. இவங்க அவசரப் பட்டு உங்களை கண்ணாடிப் பெட்டிக்குள்ளே படுக்க வைச்சிட்டாங்க.. இப்ப நீங்க எழுந்துக்கப் போகிறீங்க.. மாலுன்னு என்னை கூப்பிடப் போறீங்க...'
அவர் கூப்பிடவில்லை.. மகளின் மனதின் குரல் கேட்காதவராய் மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தார்...
வாசவனைக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்து வெளியே எடுத்ததும் அவளது கண்கள் பிரகாசித்தன..
"அப்பாவுக்கு ஒண்ணுமில்லைதானே.." அவள் பரபரத்தாள்..
"மாலு.. மாமாவை விடு.." சரண் துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான்..
"அப்பா தூங்கறார் சரண்.. எழுப்பிவிட்டால் எழுந்துடுவார்.. அப்பா.. அப்பா.. எழுந்திருங்கப்பா.."

மாளவிகா அவரை உலுக்கி எழுப்ப முயல...
"ஐயோ.. பாவம்.. இந்தப் பொண்ணுக்கு பைத்தியம் பிடிச்சிருச்சு போல இருக்கு.." என்று கூட்டத்தில் யாரோ சொல்ல.. ஆங்காங்கே "த்சு.. த்சு.." என்ற சப்தங்கள் எழ ஆரம்பித்தன..
சரண் மாளவிகாவை வாசவனிடமிருந்து பிரித்தெடுத்தான்...
"சரண்.. அப்பாவை ஏன் வேனில் ஏத்தாறாங்க.."
"ஒண்ணுமில்லை..."
"அவரை இறக்கி விடச் சொல்லுங்க.."
"நீயும் வா.. போவோம்..."
உடும்புப் பிடியாய் அவள் கைகளைப் பிடித்துக் காரில் ஏற்றி அமர்ந்து கொண்டான் சரண்...
மின்சாரத் தகனம் நடக்கும் இடத்தில்..
"யாரு காரியங்களைச் செய்கிறது.." என்ற குரல் வந்ததும் மாளவிகாவை முன்னே நிறுத்தினான்..
"பொண்ணு கொள்ளி போடலாமா..?" ஆட்சேபக் குரல்கள் எழுந்தன..
"என் மாமா இவளைப் பெண்ணுக்குப் பெண்ணா.. பிள்ளைக்குப் பிள்ளையாய் வளர்த்தார்.. இவ கொள்ளி போட்டாத்தான் அவர் ஆத்மா சாந்தியடையும்..." சரண்.. தீர்மானமாக சொல்லிவிட்டான்..
"அப்பா..." என்ற கதறலுடன் மாளவிகா அனைத்தையும் செய்து முடித்து விட்டு மயக்கமானாள்..
வாசவன் என்ற மாமனிதர் ஒரு பிடி சாம்பலாக மாறிவிட.. 'இவ்வளவுதான் மனித வாழ்க்கை..' என்ற நிதர்சனத்தை உணர்ந்தவனாய்.. மாளவிகாவை தோள் சாய்த்து.. துக்கத்துடன் காரோட்டினான் சரண்...
'காற்றினிலே... பெருங்காற்றினிலே..
ஏற்றிவைத்த தீபத்திலும் இருளிருக்கும்..
காலமென்னும் கடலினில்..
சொர்க்கமோ.. நரகமோ..
அக்கரையோ.. இக்கரையோ...'
எங்கோ தொலை தூரத்தில் பாடல் ஒலித்தது.. அந்த தொலை தூரம் எது.. என்று பார்வையால் துழாவுகிறவளைப் போல.. தூரத்தில் தன் தொலைந்து

போன கடந்த காலத்தை பார்வையால் துழாவிக் கொண்டிருந்தாள் மாளவிகா..
'ஏன் கடவுளே.. என் அப்பாவை என்னிடமிருந்து பிரித்தாய்..?' அவள் மனம் குமுறியது..
அவளது கேள்விக்குப் பதிலாக பாடல் ஒலிதான் காற்றில் மிதந்து வந்து அவள் காதினில் நுழைந்தது..
'ஆண்டவனும் கோவினில்
தூங்கி விடும் போது..
யாரிடத்தில் கேள்வி கேட்பது..?
ஏழைகளின் ஆசையும்..
கோவில் மணியோசையும்..
வேறுபட்டால் என்ன செய்வது..?
தர்மமே.. மாறுபட்டால் எங்கு செல்வது..?'
அவளைத் தேடி மாடிக்கு வந்த சரணின் அடிவயிறு.. அவள் அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டதும் பிசைந்தது..
'எப்படியிருந்தவள்.. எப்படி ஆகிவிட்டாள்..?' அவனுக்கு கண்கள் கசிந்தன..
அவளருகில் அமர்ந்து அவளை மடிசாய்த்துக் கொண்டான். அவளது கண்ணீர் அவன் மடியை நனைத்தது.. அவளது துயரத்திற்கு குறையாத சோகம் அவன் மனதை வாட்டியது...
'ஆடுவது நாடகம்.. ஆளுக்கொரு பாத்திரம்..
இறைவனுக்கு வேகமென்னவோ..?
ஆட விட்டுப் பாடுவான்..
மூடுதிரை போடுவான்..
மேடை அவன் மேடையல்லவோ..
வாழ்க்கையின்..
பாதை அவன் பாதையல்லவோ..'
தொலைதூரப் பாடல்.. மெல்ல.. தேய்ந்து மறைந்தது..
அவர்கள் இருவரையும் பேசிக்கொள்ளத் தேவையில்லாத மௌனம் சூழ்ந்து கொண்டது..
அவர்கள் நெடுநேரம் அப்படியே அமர்ந்திருந்தார்கள்..
"சொன்னால் கேள் மாலு.. மாமா போய் விட்ட துக்கம் உனக்கு மட்டும்தானா.. எனக்கு இல்லையா..? உனக்கு அவர் பெற்றவர்.. என்னை வளர்த்தவர்.. அதை மறந்துவிட்டுப் பேசாதே.."

"அந்த நினைவு உங்களுக்கிருந்தா.. இப்படி ஒரு பேச்சை எடுக்கமாட்டிங்க.."
"அறிவு கெட்ட தனமாய் பேசாதேடி..."
"அப்படிப் பேசுறது நீங்களா இல்லை நானா..?"
"புரியாமல் பேசாதே.. உன்னை நான் தனியா விடமுடியாது.."
"யார் விடச் சொன்னது..?"
"கல்யாணம் ஆகாம.. நீயும்.. நானும் சேர்ந்து இந்த வீட்டில் இருக்க முடியுமா..?"
"ஏன் இருந்தால் என்ன..?"
"ஊர் என்ன சொல்லும்..?"
"இதுக்கு முன்னாலேயும்.. நாம இந்த வீட்டில்தான் சேர்ந்து இருக்கிறோம்.. அப்ப ஊர் ஒண்ணும் சொல்ல வில்லையே.."
மாளவிகா விடாமல் வாதாடிக் கொண்டிருக்க -பல்லைக்கடித்தான் சரண்.. பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்..

10

"இதுக்கு முன்னால்.. மாமா நம்மகூட இருந்தார் மாலு.. மறந்து விட்டாயா..?"
மாளவிகாவின் பேச்சு சட்டென்று நின்று விட்டது. அவளின் பார்வை.. சூன்யத்தை துழாவ ஆரம்பித்தது..
'அப்பா...' அவள் மனம் அரற்றுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..
அவனும்தான் என்ன செய்வான்..? எத்தனை சொல்லியும்.. புரிந்து கொள்ளாமல் - அவள் அடம் பிடிக்கவும்.. அவனும் பட்டென்று சொல்லி விட்டான்..
"மாளவிகா.."
"அப்பா.. ஏன் போனார் சரண்..?"
அவள் குழந்தையாகக் கேட்கவும்.. அவனுக்குள் விசனம் பொங்கியது...
"ஏய்ய்.. விட்டுவிடுடி..."
"எதை விடச் சொல்றீங்க சரண்.. அப்பாவையா..?"
"இந்தப் பேச்சை விடு.."

"எப்படி விடமுடியும்..?"
சரண் சோர்ந்து போனான்.. அவளை அந்த சோகத்தின் பிடியிலிருந்து விடுவிக்கும் வகை தெரியாமல் திண்டாடினான்.. அவனுடைய தொழிலில் தினமும் போன் மேல் போன் வந்து குவிந்தது.. அவனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை.. மாளவிகா நத்தை தன் கூட்டிற்குள் சுருண்டு கொள்வதைப் போல சுருண்டு கொண்டாள்..
தலையைப் பிடித்துக் கொண்டு சரண் அமர்ந்திருந்த போது..
"சார்.." என்றபடி அறைக்குள் வந்தான் பாஸ்கரன்..
"யெஸ்.." அலுப்புடன் வினவினான் சரண்..
"இந்த வீக் எண்டில் நீங்க கனடா போகணும்.."
"டிரிப்பை கேன்சல் பண்ணுங்க.."
"பட்.. இது இம்பார்டண்ட் பிஸினெஸ் டிரிப்.. நீங்க அந்தக் கம்பெனியுடைய கான்ட்ராக்டில் சைன் போட்டாகனும்.."
"அவங்களை இங்கே வரச் சொல்லுங்க.."
"தட் இஸ் நாட் இம்பாஸிபிள்.."
"வொய்..?"
"ஆல்ரெடி.. அவங்க சென்னைக்கு வந்து விட்டு போயிட்டாங்க.. நாம தான் அங்கே இன்னும் போகலை.."
"இது என்ன.. கல்யாண விசயமா-அவங்க பொண்ணு வீட்டுக்கு வந்து விட்டுப் போயிட்டாங்க.. நாம மாப்பிள்ளை வீடு பார்க்கப் போகணும்ன்னு சொல்ல..? இது பிஸினெஸ் மேன்.."
"பிஸினெஸ் கான்ட்ராக்டிலயும்.. கல்யாணம் மாதிரியான ஃபார்மாலிட்டிஸை நாம ஃபாலோ பண்ணியாகணும் சார்.."
"என்னால இப்ப சென்னையை விட்டு எங்கேயும் நகரமுடியாது பாஸ்கர்.. கனடா போனால்.. திரும்பிவர ஒன் ஆர் டூ மன்த்ஸ் ஆகலாம்.. அவ்வளவு நாள் மாளவிகாவை தனியாக விட்டுட்டு என்னால் போக முடியாது.."
"சார்.. இந்த கான்ட்ராக்டிற்கு எத்தனை கம்பெனிகள் போட்டி போட்டாங்கன்னு உங்களுக்குத் தெரியும்தானே.."
"தெரியும்.."
"தெரிந்துமா.. இப்படி அலட்சியம் காட்டறீங்க..?"
"வாட் கேன் ஐ டூ பாஸ்கர்..?"

"இது பலகோடி வொர்த் இருக்கிற கான்ட்ராக்ட்.."
"ஸோ.. வாட்..? எனக்கு அதைவிட மாளவிகாதான் முக்கியம்.."
பாஸ்கர் திகைத்தான்.. ஒரு யோசனை தோன்ற.. மாளவிகாவிற்கு போன் செய்தான்.. மறுமுனையில் மாளவிகாவின் தீனமான குரல் கேட்டது...
"ஹலோ..."
"மேடம்.. ஐ ஆம் பாஸ்கரன்.. சரண்சார் கம்பெனியில் சாப்ட்வேர் என்ஜினீயர்.."
"சொல்லுங்க.."
"நான் உங்களைப் பார்க்கணுமே.."
"வாட் ஃபார்..?"
"நேரில் சொல்கிறேன்.."
"வாங்க.."
பாஸ்கரன் சொன்ன விவரங்களை கவனத்துடன் கேட்டாள் மாளவிகா.. அவள் நெற்றியில் சிந்தனை ரேகை படிந்திருந்தது...
"கோடிக்கணக்கில் லாஸ் ஆகும்ன்னு தெரிஞ்சிருந்தும் பாஸ் கனடா போக மாட்டேன்னு சொல்கிறார்.. இந்த ஹெவி லாஸை கம்பெனி தாங்காது மேடம்.."
"ஏன்னு ரீஸன் கேட்டிங்களா..?"
"கேட்டேன்..?"
"என்ன சொல்கிறார்.."
"உங்களைச் சொல்கிறார்..?"
"என்னையா..? நானா இதுக்குக் காரணம்..?"
"யெஸ் மேடம்.. உங்களை தனியாக விட்டு விட்டு இரண்டு மாதங்கள் வெளிநாடு போக முடியாதுன்னு பாஸ் சொல்கிறார்.. கோடிக்கணக்கான பணத்தை விட.. எனக்கு மாளவிகாதான் முக்கியம்ன்னு சொல்கிறார்.."
'என்ன மாதிரியான அன்பு இது..!'
மாளவிகா உதட்டைக் கடித்துத் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்..
வாழ்க்கையை யதார்த்தமாக நோக்கும் யதார்த்தவாதி.. கோடிக்கணக்கான ரூபாய்களை அவளுக்காக இழக்கத் துணிகிறான்.. அவன் பணம் பண்ணுகிறவன்.. நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருப்பவன்.. எந்த ஒரு

செயல்பாட்டிலும் உள்ள லாப நஷ்டங்களை யோசித்து செயல்படுகிறவன்.. உணர்ச்சிகரமான முடிவுகளைத் தவிர்த்து.. அறிவு பூர்வமான முடிவை எடுப்பவன்.. அப்படிப்பட்டவன், இன்று அனைத்து செல்பாடுகளையும் நிறுத்தி விட்டு அவளைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறான்..
இப்படி ஒரு அன்பு கிடைக்க மாளவிகா என்ன தவம் செய்தாள்..?
"நீங்க போங்க பாஸ்கர்.. சரண் கட்டாயம் கனடா போவார்..."
"அவர் மாட்டேன்னு சொல்லி விட்டாரே..."
"நாளைக்கே சரின்னு சொல்லுவார்.."
அன்று மாலை கம்பெனியிலிருந்து வீடு திரும்பிய சரண்.. ஆச்சரியத்தை உள் வாங்கினான்..
பளிச்சென்ற முகத்துடன்.. அழகான உடையணிந்து மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்றாள் மாளவிகா..
"சீக்கிரம் காபி.. டிபன் சாப்பிடுங்க சரண்.."
"ஏன்..?"
"எனக்கு அவுட்டிங் போகணும்..."
அடுத்த ஆச்சரியம் தாக்க வியப்புடன் அவளைப் பார்த்தான் சரண்.. வருந்தி.. வருந்தி அவன் அழைத்தும் வெளியே வர மறுத்து வீட்டுக்குள் புதைந்திருந்தவளின் கோரிக்கையைக் கேட்டதும்.. அவனால்.. அவனுடைய காதுகளையே நம்ப முடியவில்லை..
மின்னல் வேகத்தில் அவள் கொடுத்தவைகளைக் காலி செய்து விட்டு எழுந்தான்...
"எங்கே போகணும்..?" என்று கேட்டான்..
"எங்கே போகலாம்..?" அவள் பதிலுக்கு கேட்டாள்..
"நீதானேடி அவுட்டிங் போகணுமுன்னு சொன்ன..?"
"பட்.. பிளேஸ் இஸ் யுவர் சாய்ஸ்.."
"பீச்சுக்குப் போகலாமா..?"
"ஓ...!"
அதிக ஜனக் கூட்டமுள்ள இடத்திற்கு அவளை அழைத்துப் போனால் மாறுதலாக இருக்கும் என்ற எண்ணத்துடன்தான் சரண் கடற்கரையைத் தேர்ந்தெடுத்தான்..
அவனது நோக்கம் நிறைவேறியது.. பரந்திருந்த மெரினாகடற்கரையின் மணலில் கால் புதைய நடந்த

மாளவிகாவின் முகத்தில் ஒரு தெளிவு வந்திருந்தது..
சுற்றிலும் இருந்த மனிதர்களைப் பார்த்தபடியே-
கடல்காற்றில் புடவையின் முந்தானை காற்றில் பறக்க -
அவள் அவனோடு இணைந்து நடந்தாள்.. அவள் மேல் ஒரு பந்து வந்து விழுந்தது..
"அக்கா.. பால்.."
ஓடி வந்த சிறுவனிடம் சிரித்த முகத்துடன் பந்தை நீட்டினாள் மாளவிகா..
"தேங்க்ஸ்க்கா..."
அவன் ஓடிவிட.. அவனது ஓட்டத்தை ரசித்தவாறே..
"குழந்தைகளின் உலகமே தனி இல்லையா சரண்..?" என்று கேட்டாள்.
சரணுக்கு அன்றைய தினம் அழகான தினமாக தோன்றியது. ஒரே வீட்டில் இருந்திருந்தாலும், கூட வளர்ந்திருந்தாலும்.. இதற்கு முன்னால்.. மாளவிகா.. சரணுடன் தனியாக கடற்கரைக்கு வந்ததில்லை..
அவர்கள் இது போன்ற இடங்களுக்கு வாசவனுடன் தான் வருவார்கள்.. பள்ளிக்கும்.. கல்லூரிக்கும் மட்டுமே சரணுடன் தனியாக காரில் போய்.. வருவாள் மாளவிகா..
அன்று முதன் முறையாக அவள் அவனுடன் தனியாக வெளியே வந்திருந்தாள்..
"நம் உலகம் கூட தனிதான் மாளவிகா.."
"யெஸ்.. அப்கோர்ஸ்.. அதைப்பத்திப் பேசத்தான் நான் அவுட்டிங் வந்தேன் சரண்.."
கடல்காற்று உடல்தழுவ.. கடலைப் பார்த்தபடி அவர்கள் இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.. தூரத்தில் அலையில் மிதந்து வந்து கொண்டிருந்த படகு தெரிந்து.. சரண் மனதிற்குள் மிக இதமாக உணர்ந்தான்..

11

"ஏன் கனடா போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கறீங்க சரண்..?" முகத்தில் விழுந்த குழல்கற்றையை விலக்கிக் கொண்டே மாளவிகா கேட்ட விதம் சரணின் மனதில் பதிந்தது..
"உனக்கு எப்படித் தெரியும்..?"
"எப்படியோ தெரியும்.."

"பாஸ்கர் சொன்னானா..?"
"ம்ம்ம்.."
"மாளவிகா.."
"சொல்லுங்க.."
"உன்னை விட்டு விட்டு நான் கனடா போகமாட்டேன்.."
"உங்க பிஸினெஸ்ஸிற்கு நீங்க ஒரு இடத்தில் நிற்க முடியாது சரண்.. பறந்துகிட்டுத்தான் இருக்கணும்.."
"எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.. உன்னைப் பற்றி மட்டும்தான் கவலை.."
மாளவிகா சரணின் முகத்தையே பார்த்தாள்.. மாநிறத்தில் சிரிக்கும் கண்களுடன் கம்பீரமாக இருந்த அவனின் தோற்றத்தில் அவள் மனம் சிக்கிக் கொண்டது..
'இவன் என்னுடையவன்.. இவனுக்கு நான் மட்டும் பெரிது..'
இந்த உணர்வை அவள்.. அவனுக்குக் கொடுக்க வில்லை என்பது அவள் மனதில் நிழலாடியது..
"நான் உங்களுக்கு வேகத்தடையாக
ஆகிட்டேனில்லையா..?"
"அடிதான் வாங்கப் போகிற.. உன்னைத் தடையாய் நினைக்கிற வேகம் எனக்கு வேணாம்டி.."
"ஏன் என்மேல இவ்வளவு பாசம் காட்டறீங்க சரண்..?"
மாளவிகாவின் கண்களில் இருந்து கீழே விழுந்து சிதறியது ஒரு கண்ணீர் துளி.. அது விலை மதிக்க முடியாத வைரம் என்று சரணுக்குத் தோன்றியது.. அவனுக்குள் ஆயிரமாயிரம் உணர்வின் அலைகள் எழும்பின..
"எனக்கு உன்னை விட்டால் இந்த உலகத்தில் சொந்தமுன்னு சொல்லிக்க வேற யாரிருக்கா மாளவிகா.."
'அதற்காகத்தானா..? அதற்காக மட்டும் தானா..? நீ என் மேல் பரிவு காட்டி.. சுற்றிச் சுற்றி வருவதற்கு இது மட்டும் தான் காரணமா..?'
மாளவிகாவிற்குள் எதுவோ பொங்கியது.. அவளை மார்போடு சேர்த்தணைத்து காதோரம் அவன் ரகசியம் பேசிய தருணங்களை நினைத்துப் பார்த்தாள் அவள்..
"ஸோ.. நான் சொந்தக்காரிங்கறதினால மட்டும் தான் உங்களுக்கு என்மேல் இவ்வளவு அக்கறைன்னு சொல்லுங்க.."
"கூடுதலா இன்னொண்ணும் இருக்கே மாலு.."

"என்னவாம்..? என் அப்பா உங்களை வளர்த்தார்.. அந்த நன்றியுணர்ச்சி இருக்குன்னு சொல்லப் போகிறீங்க.. அதுதானே.."
மாளவிகாவின் உதடு துடித்தது.. அவளது இமையோரம் நீர்முத்து திரண்டு விட்டது. சரண் அவளையே பார்த்தான்.. அவனுக்கு அவளைப் புரிந்தது.. அவளது மனம் புரிந்தது.. அது துடிக்கும் துடிப்பு புரிந்தது..
அவன் மௌனமாக அவளைப் பார்க்க.. அவளோ சொல்லத் தெரியாத சேகாத்திற்கு ஆட்பட்டவளாக.. வார்த்தைகளைக் கொட்டி விடும் துடிப்புடன் பேசினாள்..
"வேண்டாம் சரண்.. எனக்கு உங்க சொந்தம் வேண்டாம்.. உங்க நன்றியுணர்ச்சி வேண்டாம். அப்பா உங்களை பாதுகாத்தார்.. பதிலுக்கு நீங்க என்னை பாதுகாக்கணும்ன்னு நினைக்கறீங்க.. அந்தக்கடமை உங்களுக்கு வேண்டாம்.."
"ஈஸிட்..?"
"யெஸ்.. அப்பா எனக்கு படிப்பைக் கொடுத் திருக்கிறார்.. நான் கனவு கண்ட லட்சியத்தை நனவாக்கி என் கையில் கொடுத்திருக்கிறார்.. எனக்கு என் ஸ்கூல் இருக்கு.. அதில் நான் மனதைச் செலுத்தி.. வாழ்ந்து முடித்து விடுவேன்.. நீங்க என்னைப் பற்றிக் கவலைப் படாம.. கனடா போங்க.."
"பேசி முடிச்சிட்டயா..?"
சரண் அவள் தோள் மீது கைபோட்டு நெருங்கி அமர்ந்தான்.. மாளவிகாவின் உடலில் சிலிர்ப்பு ஓடியது.. கடலில் மூழ்கிக் கொண்டிருந்தவளின் கையில் கட்டுமரம் கிடைத்ததைப் போல அவள் உணர்ந்தாள்.. அவன்தந்த நெருக்கம் அப்போது அவளுக்கு மிகவும் தேவைப்பட்டது..
"ஏய்ய்.. அழுமூஞ்சி.. நீ எனக்கு சொந்தக்காரி தாண்டி.. என் மனசுக்கு சொந்தக்காரி.. என் காதலுக்கு சொந்தக்காரி.. என் வாழ்க்கைக்கு சொந்தக்காரி.."
"சரண்.."
மாளவிகா அவன் தோள் சாய்ந்து விசும்ப.. அவன் கைக்குட்டையை எடுத்து அவளது விழிநீரை துடைத்தான்..
"மாமா நம்ம ரெண்டு பேரையும்.. அவரோட ரெண்டு கண்களா நினைச்சாருடி.. இரண்டு கண்களும் வேற.. வேற

திசையில் பார்க்குமா..? ஒரு கண்ணுக்கு அடிபட்டால் மறு கண்ணும் கலங்காதா..?"
"சரண்.."
"ஸ்ஸ்.. அழுகாதே.. உனக்கு நான்.. எனக்கு நீ.. நமக்கு நம் குழந்தைகள்.. வாழ்ந்து பார்க்கலாம் வா.."
"சரண்.."
"மாமாவின் ஆத்மா இதைத்தான் விரும்பும்.. நீயும் நானும் உறவில்லாமல் தனித்தனியாய் நிற்பதை அவர் விரும்ப மாட்டார்.. அவர் நம்ம ரெண்டு பேரையும் வளர்த்தவர்டி.. நாம் சேர்வதைத்தான் விரும்புவார்.. பிரிந்திருப்பதை விரும்ப மாட்டார்.."
மாளவிகா குழந்தையாய் அவன் மடிசாய்ந்தாள்.. அவன் அவளது முடிகோதி.. ஆறுதலாகப் பேசிக் கொண்டிருந்தான்.. எதிரே சுழன்றடித்த கடலலையின் கலக்கத்தை அவள் மனமும் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தவனாக சன்னக்குரலில் பாடினான்..
"அலையே.. கடலலையே..
நீ கலங்காதே.. மனம் மயங்காதே..
உன் அருகினில் நானிருப்பேன்..
என்னென்னவோ.. உன் எண்ணங்கள்.."
மாளவிகாவிற்கு மனம் அமைதியடைந்திருந்தது.. அவள் எழுந்து கொண்டாள்.. முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டவள், அவனைப் பார்த்து நிர்மலமாய் புன்னகைத்தாள்..
"ஓகே சரண்.. நாம ரெண்டு பேருமே கனடா போகலாம்.."
"நிஜமாகவா.. சொல்கிற..?" அவன் பரபரத்தான்..
"பட்.. ஒன் கண்டிஷன்.."
"அதுதானே பார்த்தேன்.."
"நாம ஹஸ்பெண்டு அண்ட் வொய்ஃபா போகலாம்.."
அந்த நொடியை தன் வாழ்நாளில் மறக்க முடியாது என்று சரணுக்கு தோன்றியது.. எந்த வார்த்தைகளை அவள் வாய் உதிர்க்க கேட்க வேண்டுமென்று இத்தனை நாள்களாக அவன் காத்திருந்தானோ.. அந்த வார்த்தைகளை அவள் சொல்லி விட்டாள்..
"மாலு..."

அவளது நெற்றியில் முத்தமிட்டவன்.. பரவசமாக உணர்ந்தான்..
"நான் ஸ்கூலுக்கு போகணும் சரண்.. ஸ்கூல் எப்படி ரன் ஆகுதுன்னே தெரியலை.."
"நாளைக்குப் போகலாம்.."
"கல்யாணம் சிம்பிளா இருக்கட்டும்.."
"உன் இஷ்டம்.. பட்.. ரிசப்ஷன் கிராண்டாய் பண்ணியாகணும்.. என் பிஸினெஸ் வட்டாரத்தை இன்வைட் பண்ணனுமில்ல.."
"வேண்டாமே..."
"ப்ளீஸ் மாலு.. எனக்காக.."
அவள் மறுத்துப் பேச முடியாமல் மௌனமானாள்..
மறுநாள் பள்ளிக்கு போனபோது அது வழக்கமான சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்ததை வியப்புடன் பார்த்தாள்...
"எப்படி சரண்.. நான் இங்கே வந்தே மாதக் கணக்கில் ஆகுதே.. டீச்சர்ஸ்க்கும்.. லேபர்ஸுக்கும் யார் சம்பளம் கொடுத்தது..? மற்ற டெய்லி ரொட்டீன் கரெஸ்பாண்டென்ட் வேலைகளை யார் பார்த்தது..? ஹெச்.எம்.பொஸிஸனில் யார் இருந்தது..?"
அவளது கேள்விகள் அனைத்துக்குமான விடைகள்.. அடுத்த சில நிமிடங்களில் அவளுக்கு கிடைத்தன...
பள்ளியில் பணிபுரிந்த ஆசிரிய ஆசிரியைகளும் மற்ற தொழிலாளிகளும் ஒருமித்து நீட்டிய சுட்டு விரல் சரணை நோக்கி நீண்டது.. அவனே அனைத்துமானவானக இருந்தான்..
"நீங்களா சரண்.. இது எல்லாத்தையும் நீங்களா பார்த்துக்கிட்டிங்க..?"
அந்த நொடியில் அவள் அவனின் காதல் கிடைத்தற்காக மனதிற்குள் பெருமிதம் கொண்டாள்..
"உங்களுக்கு ஸ்கூல் நடத்த பிடிக்காதே சரண்.."
"உனக்கு பிடிக்குதே மாலு.."
"என்காக.. உங்க பிஸியான நேரத்திலும் ஸ்கூலைக் கவனிச்சுக்கிட்டிங்களா..? என்னைக் கவனிப்பது போதாதுன்னு இந்த வேலையையும் தூக்கி உங்க தலைமேல் வைத்து விட்டேனா..?"

"உன் ஸ்கூல் ஒழுங்காக ரன் ஆக வேண்டாமா..? இப்பவும் சொல்கிறேன். நீ செலக்ட் பண்ணியிருக்கும் புரொபசனல் எனக்குப் பிடிக்கலைதான்.. வருத்தம்தான்.. பட்.. எனக்கு உன்னை ரொம்ப பிடிக்குதேடி.. உன் ஸ்கூலை கவனிக்க முடியாம நீ முடங்கிக் கிடக்கிறப்போ உனக்குப் பதில் நான் கவனிக்காம எப்படி விட்டுக் கொடுக்க முடியும்..?" அவன்.. அவனது அனைத்துச் செய்கைகளாலும் அவளை ஆட் கொண்டான்..

12

நெருக்கமான உறவினர்களும்.. நண்பர்களும் மட்டுமே வருகை தர சரண் - மாளவிகவின் திருமணம்.. கோவிலில் மிக எளிமையாக நடந்து முடிந்தது.. திருமணத்தை முறைப்படி பதிவு செய்து விட்டான் சரண்..
"நாளைக்கு விசா.. பாஸ்போர்ட் வாங்க வேணுமே.." காரணம் சொன்னான்..
எவ்வளவுக்கெவ்வளவு.. திருமணம் எளிமையான முறையில் நடந்ததோ.. அவ்வளவுக்கவ்வளவு வரவேற்பு ஆடம்பரமாக நடந்தது..
ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடந்த அந்த திருமண வரவேற்பிற்கு வந்திருந்தவர்களைப் பார்க்கும் போது தான் வேறு உலகத்தில் இருப்பதாக உணர்ந்தாள் மாளவிகா..
எளிமையும்.. அழகும்.. மாளவிகாவின் அடையாளங்கள்.. ஆனால் அன்று அவள் சரணின் ஆடம்பரமான அடையாளத்தை உணர்ந்தாள்..
அவனிடம் வந்து கை குலுக்கியவர்களின் தோற்றத் திலிருந்தே அவர்களின் பின்புலம் புரிய.. கணவன் எட்ட முடியாத உயரத்தில் இருப்பதை அன்றுதான் அவள் கண்டு கொண்டாள்...
'இவ்வளவு உயரத்திலிருந்தும் இவன் ஏன்.. எங்களுடனே இருந்தான்..?'
பதிலுக்கு கண் சிமிட்டி.. தன் வரிசைப் பற்கள் தெரிய பிரத்யேகமான புன்னகை ஒன்றை உதிர்த்தான் சரண்..
அன்றைய இரவுக்கு ஹனிமூன் சூட் ஒன்றை புக் பண்ணியிருந்தான்..

"ஹோட்டலிலா..?" மாளவிகா சங்கடப்பட்டாள்..
"வீட்டில் நீ மாமாவை நினைப்பாய்.. இந்த நைட்டில் நீ என்னை மட்டும்தான் நினைக்கணும்.." அவன் புயலாய் அவளை ஆக்ரமித்தான்..
மனதிலிருந்த சோக நினைவுகள் பறந்தோடி விட -அவளை.. புதியதோர் உலகிற்கு அழைத்துச் சென்றான் சரண்..
புயலில் சிக்கிய பூங்கொடியாய் களைத்துச் சரிந்தவளின் கன்னத்தில் முத்தமிட்டு காதோரமாக கிசுகிசுத்தான்..
"தேங்க்.. யு.."
அவள் வெட்கத்துடன் கண்மூடிச் சுருண்டுகொள்ள.. முகத்தை மூடியிருந்த அவளது கைகளை விலக்கி.. முகம் பார்த்துச் சிரித்தான்...
கனடாவில் அவர்கள் இருந்த நாள்களை ஹனிமூன் நாள்களாக மாற்றிக்காட்டினான் சரண்.. பகலில் அவனுடைய தொழிலைக் கவனிக்கச் செல்பவன்-மாலை வேளைகளில் அவளோடு ஊரைச் சுற்றி வந்தான்..
மாளவிகாவிற்கு உலகம் அழகாகத் தெரிந்தது.. சரணின் ஆண்மை கலந்த அண்மை அவளை ஆகர்ஷித்தது..
இரவுகளில் அவன் காட்டிய வேகத்தில் அவள் தன்னைத் தொலைத்து அவனோடு கலந்தாள்..
அவனோடு நடக்கும் வேளைகளில் பேச்சுகளற்ற மௌனம் அவளைச் சூழ்ந்தது.. அதை அவன் ரசித்தான்.. இரவின் இனிமையில்..
"மலரே.. மௌனமா..?
மௌனமே வேதமா..?
மலர்கள் பேசுமா..?
பேசினால் ஓயுமா.? அன்பே.."
என்று அவள் காதோரமாக பாடினான்.. அவள் கிளர்ந்து அவன்மேல் சரிந்தாள்.. அவன் அவளை வெற்றி கொண்ட கர்வத்தோடு...
"பாதி ஜீவன் கொண்டு
தேகம் வாழ்ந்து வந்ததோ..
மீதி ஜீவன் என்னை
பார்த்தபோது வந்ததோ..
ஏதோ.. சுகம்.. உள்ளூறுதே..
ஏதோ.. மனம்.. தள்ளாடுதே..."

என்று பாடலைத் தொடர்ந்தான்.. மாளவிகாவிற்கு இது புதிது.. அவன் புதியவனில்லை.. ஆனால்.. அவன் உணர்த்திய அந்த அனுபவம் புதிது..

"இதழ்கள் தொடவா.. விருந்தைப் பெறவா..
 மார்போடு கண்கள் மூடவா..."

அவள் அவன் மார்பில் தலை சாய்த்து கண்களை மூடிக் கொண்டபோது அவளின் அடையாளத்தை மறந்து.. அவனோடு ஐக்கியமாகியிருந்தாள்..

"நானாக நானில்லை..
 நீயாக மாறிப்போனேன்.."

அவளுடைய டைரியில் கவிதைகளை எழுதித் தள்ளினாள்..

"ஒருபார்வை நீ பார்த்தால் - என்
 உயிர்பூவே.. தானாய் மலரும்.."

அந்தக் கவிதைகள் அவன் மேல் அவள் கொண்ட காதலை படம் பிடித்துக் காட்ட - அவளுக்குத் தெரியாமல் அவற்றைப் படிப்பதில் அவன் சுவாரஸ்யம் கொண்டான்..

கனடாவில் வேலை முடிந்து.. அவர்கள் சென்னை திரும்பினார்கள்..

"மாளவிகா.."

"வந்துவிட்டேன்.."

"என் டை எங்கே..?"

"இதோ.. இங்கேதானே இருக்கு.."

மாளவிகா அவன் முன்னால் இருந்த டையை எடுத்துக் காட்ட.. அவன் அவள் இடுப்பை வளைத்தான்..

"கட்டி விடு.."

"ஏன்.. உங்களுக்கு கட்டிக்கத் தெரியாதா..?"

"ஏன் தெரியாது..?"

அவன் அவளை இறுகக் கட்டிக் கொள்ள.. அவள் சிணுங்கினாள்..

"ஆரம்பிச்சுட்டிங்களா..?"

"நீதானேடி.. எனக்குக் கட்டிக்கத் தெரியாதான்னு கேட்ட..? எனக்கு அது தெரியும்ன்னு புரூவ் பண்ண வேண்டாமா..?"

"ப்ளீஸ் சரண்.. நானும் ஸ்கூலுக்குக் கிளம்பணும்.. நேரமாகுது... விடுங்களேன்.."

இனிமையான நாதத்தின் இடையே அபஸ்வரம் ஒலித்ததைப் போல.. சரண் முகம் மாறிப் போனான்...

"ஸ்கூலுக்குப் போகிறாயா..?"
"ம்ம்.. இது என்ன புதிதாய் கேட்கறீங்க..?"
"கட்டாயம் நீ போகத்தான் வேணுமா..?"
"இதே கேள்வியை நானும் உங்களைக் கேட்கலாம் தானே..."
பழைய மாளவிகாவைப் பார்க்கும் உணர்வு வர.. கனவு கலைந்ததைப் போல உணர்ந்தான் சரண்..
"நீ போனாலும்.. போகாட்டியும் வேலை நடக்கும் மாளவிகா.. நான் ஸ்கூலை மேனேஜ் பண்ணிக்கறேன்.."
"உங்களுக்கு உங்கள் பிஸினெஸ்ஸை கவனிக்கவே நேரம் பத்தாது சரண்.. புதிதாய் இந்தச் சுமையும் எதற்கு..?"
"அது என் பிரச்னை.. உனக்கெதுக்கு அந்தக் கவலை.."
"ஸாரி சரண்.. இது என் பிரச்னை.. ஸ்கூல் நடத்தறது என் வேலை.. அதை நான் பார்த்துக்கறேன்.."
'இது என் ஏரியா.. நீ உள்ள வராதே' என்ற தொனியில் மாளவிகா பேசுவதாக உணர்ந்தான் சரண்.. அவனுக்குள் கோபம் குமிழ் விட்டது..
"இத்தனை மாதமாய் உன் ஸ்கூலை நான் கவனிச்சுக்கலையா..?"
"தேங்க்ஸ் ஃபார்தட்.. பட்.. நான்தான் சரியாகி விட்டேனே..."
"பிரிச்சுப் பேசற மாளவிகா.. இதுவே நீ என் பிஸினெஸ்ஸில் பொறுப்பெடுத்துக்க வந்தால்.. நான் சந்தோசமாய் விட்டுக் கொடுப்பேன்.."
"அது என் அடையாளமில்லை சரண்.. இந்த ஸ்கூல் தான் என்னுடைய அடையாளம்.."
"உன்னுடைய அடையாளம் நான்தான்.."
"புரியவில்லை.."
"நீ மிஸஸ் சரண்.."
"யார் அதை இல்லைன்னு சொன்னது..? ஸேம் டைம். மிஸஸ் மாளவிகா சரண்.. ஒரு ஸ்கூலோட பிரின்ஸிபால் கம் கரெஸ்பாண்டென்ட் ஆகவும் இருக்கலாமில்லையா..?"
"ரெட்டைக் குதிரை சவாரி உனக்கெதுக்கு..?"
"அந்த ரெட்டைக் குதிரையில் ஒற்றைக் குதிரையாய் உங்கள் பிஸினெஸ் இருந்தால் தான் சந்தோசப் படுவீங்க.. அப்படித்தானே..?"
"ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்.. நான் உடைத்தே சொல்கிறேனே.. உனக்கு பிஸினெஸ் மைண்ட்கிடையாது.."

"அதுக்காக.. ஸ்கூலில் பிஸினெஸ்ஸை கலக்கச் சொல்றீங்களா..?"
"செய்தால் தான் என்ன..? எங்கே குவாலிட்டி இருக்கோ அங்கே விலையும் அதிகமாகத்தானே இருக்கணும்..? உன் ஸ்கூலுக்கு நல்ல பெயர் இருக்கு.. அதை நீயூஸ் பண்ணிக்கிறது பெட்டர் மாலு.."
"எப்படி யூஸ் பண்ணிக்கணும்னு நீங்க நினைக்கறீங்க..?"
"இது அட்மிசன் டைம்.. ஸ்கூல் ஃபீஸை ரெய்ஸ் பண்ணு.. பில்டிங் கட்ட டொனேஷன் வாங்கு.. எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிடிஸ் அது இதுன்னு சொல்லி பணத்தை வசூல் பண்ணு.. இப்படியெல்லாம் நீ செய்தால்தான்... லாபகரமாக ஸ்கூல் நடத்த முடியும்.."
சரணின் முகத்தை இறுக்கமாக பார்த்தாள் மாளவிகா.. அவர்களுக்குள் அபிப்ராய பேதங்கள் ஆரம்பமாகின...

13

"ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்வதைவிட ஒரு ஏழைக்கு கல்வியளிப்பது மேன்மையானதுன்னு அப்பா சொல்வார்.."
"இப்படி உருப்படாத வசனத்தை யெல்லாம் உருப்போட வைத்து உன்னை உருப்படியில்லாமல் வளர்த்து விட்டார் உன் அப்பா.."
"வேண்டாம் சரண்.. அப்பாவைப் பற்றி எதுவும் பேசாதீங்க.. எனக்கு கோபம் வரும்.."
"வந்தால் என்னடி செய்வ.. அவர் உனக்கு அப்பான்னா.. எனக்கு மாமா.. உனக்கிருக்கிற உரிமை.. எனக்கும் இருக்கு..."
"அந்த உரிமையை செயலில் காட்டணும்.. வெறும் பேச்சில் காட்டக்கூடாது.."
"செயலில் காட்டலையா.. நீ உன் கழுத்தில் இருக்கிற தாலியைத் தொட்டுப் பாரு தெரியும்.."
"ஒஹ்ஹோ.. நன்றிக்கடனை கழிக்கத்தான் என் கழுத்தில் தாலி கட்டினீங்களா..?"
சரண் அவளையே இமைக்காமல் பார்த்தான்.. மாளவிகா பார்வையை விலக்கிக் கொண்டாள்..
"ஸோ.. உன்னைக் கன்ட்ரோல் பண்ண நான் நினைக்கக் கூடாது.. நினைத்தால்.. நீ எதையெதையோ சொல்லி என்னிடம் சண்டைக்கு வருவே.. அப்படித்தானே.."
"அது உங்க கற்பனை.."
"கற்பனையில இருக்கிறவ நீதாண்டி.."
"இருந்துட்டுப் போறேன்.. என்னைப் பொறுத் தவரைக்கும் என் ஸ்கூல்தான் என் லட்சியம்.. அதை என் விருப்பம் போலத்தான் நடத்துவேன்.."
"நடத்து.."
அவன் விர்ரென்று போய் விட்டான்.. மாளவிகா.. வாசவனின் காரில் ஏறி அமர்ந்து கிளப்பினாள்.. அத்தனை நாளும் அவனருகே அமர்ந்து பயணித்து விட்டு.. அன்றைக்கு தனியாகப் பயணிக்க அவளுக்கு மனக்கஷ்டமாக இருந்தது..

'என் போராட்டம் ஆரம்பமாகி விட்டதுப்பா..' அவள் மனம் கனக்க வாசவனை நினைத்துக் கொண்டாள்..
அவர் உயிரோடு இருந்திருந்தால் மகளை ஒரு வார்த்தை கூடப் பேச அனுமதித்திருக்க மாட்டார்.. அவர் தான் இல்லையே...
தகப்பன் அருகில் இல்லாத குறையை அன்றுதான் உணர்ந்தாள் மாளவிகா..
அத்தனை நாளும் தன் அன்பில் குளிப்பாட்டிய சரண்.. வாசவனின் நினைவுகளை மாளவிகாவின் மனதிற்குள் வர விட்டதில்லை.. அன்றுதான் அவனுக்கு கோபம் வந்து விட்டதே..
கிழக்கும்.. மேற்கும் இணையும் பந்தம்.. தங்களின் திருமண பந்தம் என்பதை மாளவிகா நன்கு உணர்வாள்..
பணத்தை துரத்தும் சரணுக்கும் லட்சியத்துடன் வாழ நினைக்கும் தனக்கும் ஏழாம் பொருத்தம் என்பதை உணர்ந்திருந்ததால்தான் அவள் சரணின் மேல் அவளுக்கிருந்த காதலை ஒப்புக் கொள்ளத் தயங்கினாள். திருமணத்தை தள்ளிப் போட்டாள்..
ஆனால்.. எவ்வளவுதான் விலகிச் செல்ல நினைத்தாலும்.. இரும்பை இழுக்கும் காந்தமாக சரண் அவளைக் கவர்ந்து தன்னிடம் இழுத்துக் கொண்டு விட்டான்..
வாசலில் நின்றிருந்த வாட்ச்மேன் அவளுடைய காரைக் கண்டதும் சல்யூட் வைத்து கேட்டைத் திறந்து விட்டான்..
"குட்மார்னிங் மேம்.." எதிர்பட்ட ஆசிரிய ஆசிரியைகள் வணக்கம் சொன்னார்கள்..
'எவ்வளவு நாளாச்சு.. இந்த மண்ணில் மிதித்து..' அவள் வாஞ்சையுடன் தன் பள்ளிக் கட்டிட வளாகத்தைப் பார்த்தாள்..
அடுத்து வந்த தினங்களில் அவள் புதிய மாணவ மாணவிகளின் சேர்க்கையில் மும்முரமாகி விட்டாள்...
அதிகாலையில் பள்ளிக்குப் போனால்.. இருட்டின பின்புதான் வீடு திரும்பினாள்.. அதற்குப்பின்னால் அலுப்புடன் சமையல் வேலை செய்யும் பஞ்சவர்ணத்தின் சாப்பாட்டை ருசித்து விட்டு உறங்கப் போய் விடுவாள்..
நேரம் கழித்து வீடு திரும்பும் சரண்.. தன்னிடமிருக்கும் சாவியால் கதவைத் திறந்து கொண்டு வந்து.. டைனிங்

டேபிளில் மூடிவைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களை சினத்துடன் பார்த்துவிட்டு சாப்பிடாமல் தூங்கப் போய் விடுவான்..
அதிகாலையில் அவன் கண் விழிக்கும் போது காபி கொடுக்க மாளவிகா இருக்க மாட்டாள்...
"அம்மா.. விடியற்காலையிலேயே ஸ்கூலுக்குப் போயிட்டாங்கய்யா.." பஞ்சவர்ணம் கூறியவாறு காபியை நீட்டுவாள்..
'இது என்ன வாழ்க்கை..?' சரணுக்கு வெறுத்துப் போய் விட்டது.. இதற்காகவா அவன் காத்திருந்து அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்..?
இந்தக் கேள்வியை அவளிடம் கேட்க அவனது ஈகோ இடம் கொடுக்கவில்லை..
'உனக்குத்தான் தெரியுமா..?' வன்மத்துடன்.. அவன் அவளுக்கு முன்னாலேயே வீட்டை விட்டு போகத் தொடங்கினான்...
முதலில் இதை மாளவிகா கவனிக்கவில்லை.. பள்ளியில் சேர்க்கை முடிந்து.. வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டு.. இயல்பான நடைமுறைக்குத் திரும்பிய போதுதான் இது அவளது கவனத்துக்கு வந்தது...
சரண் தன்னைப் புறக்கணிப்பதாக மாளவிகா நினைத்தாள்..
'இதற்காகவா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்..?' என்று அவனிடம் கேட்க அவள் மனம் துடித்தது.. அவளது ஈகோ அதைத் தடுத்தது...
'என்னைப் பற்றித் தெரிந்துதானே கல்யாணம் பண்ணிக் கொண்டான்..? இப்போது வந்து எல்லாத்தையும் விடுடின்னு சொன்னால் என்ன அர்த்தம்..?'
இருவருக்கும் ஒருவரை.. ஒருவர் மிகவும் பிடிக்கும்.. ஆனால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் சண்டைக் கோழிகள் போல வீட்டை வலம் வந்தனர்..
'காபி குடிச்சியான்னு ஒரு வார்த்தை கேட்கிறாளா..?'
'காபி குடுன்னு ஒரு வார்த்தை கேட்கிறாரா..?'
'என்னை ஸ்கூலில் டிராப் பண்ணி விடுன்னு சொன்னால் என்னவாம்.. திமிர்.. என் தயவு வேண்டாம்ன்னு நினைக்கிற திமிர்.. தானாய் காரை ஓட்டிக்கிட்டு போறாளே..'

'நானாய் காரை ஓட்டிக்கிட்டு போகிறேனே.. பார்த்துக் கிட்டு பேசாமல் இருக்கிறாரே.. நான் உன்னை டிராப் பண்ணுகிறேன்னு ஒருவார்த்தை சொல்கிறாரா.. கல் நெஞ்சக்காரர்..'
'தினசரி லேட்டா வருகிறேனே.. ஏன்னு கேட்கிறாளா..?'
'தினமும் லேட்டா வருகிறாரே.. கொஞ்சமாவது என்னைப் பற்றி நினைச்சுப் பார்த்தாரா..?'
'டைனிங் டேபிளில் சாப்பாட்டை மூடிவைச்சால் என்ன அர்த்தம்..?'
'எழுப்பி.. சாப்பாடு போடுடின்னு சொன்னால் குறைந்தா போவார்..?'
'ஒரு சினிமாவுக்கு கூப்பிட்டுக்கொண்டு போகச் சொல்லிக் கேட்கிறாளா..? பீச்.. கோவில்ன்னு.. கூட வர ஆசைப்படுகிறாளா..?'
'இவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்..? ஒரு சினிமா உண்டா..? பீச் உண்டா..? கோவில் உண்டா..? வீட்டிலயும் நான்கு சுவர்.. ஸ்கூலிலேயும் நான்கு சுவர்...'
'இவளுக்கு கொஞ்சம் கூட என்மேல் காதல் இல்லை..'
'இவருக்கு கொஞ்சம் கூட என்மேல் ஆசை இல்லை..'
'ஜடம்..!'
'பாறாங்கல்..!'
'ராட்ஸஸி..!'
'இரக்கமில்லாதவன்..!'
இருவரும் ஒருவரைப் பற்றி.. மற்றொருவர் குறை சொல்லி மனதிற்குள் நினைத்து பொருமிக் கொண்டிருந்தனர்..
இருபத்தி நான்கு மணி நேரமும் மாளவிகாவின் நினைவில் அவனும்.. அவனின் நினைவில் மாளவிகாவும் இருக்கையில்தான்.. ஒருநாள் மாலையில் மாளவிகா வீட்டில் மயங்கி விழுந்தாள்..
"ஐயா.. அம்மா மயக்கம் போட்டுட்டாங்க.." பஞ்சவர்ணம் அலறியடித்துக் கொண்டு சரணுக்கு போன் செய்தாள்..
அவன் பறந்து கொண்டு வீட்டுக்கு வந்தான்..

"என்ன ஆச்சு பஞ்ச  வர்ணம்..?"
"ஸ்கூல் விட்டு இப்பத்தான் வீட்டுக்கு வந்தாங்க.. நான் காபி கொண்டு வர்றதுக்குள்ளாற.. மயக்கம் போட்டு விழுந்திட்டாங்க..."
"அதிகமா வேலையை இழுத்துப் போட்டுக்காதேன்னு சொன்னால் கேட்கிறாளா..? பெரிய லட்சியம் அது.. இதுன்னு அலட்டிக்கிட்டு உடம்பைக் கெடுத்துக்கிறா.. சொன்னால் கேட்டுக்கற பிறவியுமில்லை.."
சரண் அங்கலாய்த்துக் கொண்டே.. அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்தான்.. அவள் லேசாக இமையைத் திறந்தாள்..
"மாளவிகா.. என்னடி செய்யுது..?"
அவளைக் கைத்தாங்கலாக எழுப்பி விட்டு தோளில் சாய்த்துக் கொண்டு பஞ்சவர்ணம் கொண்டு வந்த காபியை  புகட்டி விட்டான்.. இரண்டு வாய் குடித்தாள்..
"உவ்வே.." என்று வாஷ்பேசினுக்கு ஓடினாள்..
"மெல்லடி.. மயக்கத்தில் கீழே விழுந்து வைக்கப் போகிற.." பதட்டத்துடன் சரண் அவளருகில் ஓடினான்..
வாந்தி எடுத்த சோர்வுடன் சோபாவில் சுருண்டு விட்டவளைக் கவலையுடன் பார்த்தபடி சரண் செல்போனை கையில் எடுக்க...
"யாருக்குய்யா போன் பண்ணப் போகிறீங்க..?" என்று கேட்டாள் பஞ்சவர்ணம்...
"நம்ம ஃபேமிலி டாக்டருக்குத்தான்.." என்றான் சரண்..
"வேண்டாங்கய்யா.. அம்மாவை ஏதாவது ஒரு லேடி டாக்டர்கிட்ட கூப்பிட்டுக்கிட்டுப் போய் காமிங்கய்யா.." என்று பஞ்சவர்ணம் சொன்னாள்..
"ஏன்..?" சரண் புரியாமல் விழிக்க..
"எனக்கென்னவோ.. இது வேற மாதிரித் தோணுதுங்கய்யா.." என்றாள் அவள்..
"வேற மாதிரின்னா..?" அவன் விடாமல் வினவ..
"அது வந்து.. வந்து.." அவள் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் சங்கடப்பட்டாள்...
'இவ ஏன் இப்படி நாணிக் கோணறா..?' விசித்திரமாக பஞ்சவர்ணத்தைப் பார்த்தவனின் மூளையில் மின்னலடித்தது...

'அப்படியும் இருக்குமோ...'
ஆனந்தத்துடன் மனைவியைப் பார்த்தவன்.. அவளைக் கைகளில் அள்ளிக் கொண்டான்..
"கார் கதவைத் திறந்து விடு பஞ்சவர்ணம்..."
மாளவிகாவைப் பரிசோதித்த லேடி டாக்டர்..
திரைப்படங்களில் வரும் லேடி டாக்டர்கள் வழக்கமாக சொல்லும் வசனத்தைச் சொன்னாள்..
"கங்கிராஜுலேசன்ஸ் மிஸ்டர் சரண்.." என்று அவள் ஆரம்பிக்கும் போதே சரணுக்கு அடுத்த வாக்கியம் என்னவாக இருக்கும் என்று தெரிந்து விட்டது..
"நான் அப்பாவாகப் போகிறேன்.. அதைத்தானே சொல்லப் போகிறீங்க டாக்டர்..?" என்று கேட்டுவைத்தான் அவன்..
முழுதாகப் பேசவிடாமல் அவன் தடுத்து விட்டதால் அவனை ஒரு முறைப்பு.. முறைத்தாள் அந்த டாக்டர்..
"அவங்க ரொம்ப வீக்கா இருக்காங்க.. இப்ப ஓய்வு ரொம்ப அவசியம்..." அவள் சொல்லிக் கொண்டே போகையில்...
"நான் ஒண்ணு சொன்னால் நீங்க தப்பா எடுத்துக்க கூடாது டாக்டர்..!" சரண் பீடிகையுடன் ஆரம்பிக்க..
'அடப்பாவி.. நீ என்ன சொல்லி வைக்கப் போகிறாய்..?' என்ற பார்வையை பார்த்தாள் அவள்..
"இதையெல்லாம் என்கிட்ட சொல்லாமல.. இவகிட்டயே நீங்க சொல்லிடறது பெட்டர் டாக்டர்.." என்று அவன் சொல்லவும்..
'பாதகா..' என்ற பார்வையையும் சேர்த்துப் பார்த்த டாக்டர்..
"ஏன் மிஸ்டர்.. இவங்க உங்க வொய்ஃப்தானே..?" என்று சந்தேகமாக கேட்டாள்..
"சத்தியமாக என் வொய்ஃப்தான் டாக்டர்.. வேண்டுமானால் என் கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ணின செர்டிபிகேட்டைத் தருகிறேன்.. வெரிஃபை பண்ணிக்கங்க.." சரண் அவசரமாகச் சொன்னான்..
"பின்னே எதுக்காக.. என்னை அவங்ககிட்ட இதையெல்லாம் சொல்லச் சொல்கிறீங்க..?"
"நான் சொன்னால் இவ கேட்க மாட்டா டாக்டர்.."
சரண் அழமாட்டாத குறையாகச் சொன்னதும்..
"வாட்..?" என்று திகைத்தாள் டாக்டர் சுகந்தி..

"அந்தக் கதையை ஏன் கேட்கறீங்க.." என்று சரண் ஆரம்பித்து கதையை சொல்லி முடிக்க.. கன்னத்தில் கை வைத்து படு சுவராஸ்யமாக கதையும் கேட்டாள்..
"அப்புறம் என்ன ஆச்சு..?" என்று வேறு அவள் வினவிவைக்க.. சரணுக்கு சுவரில் தலையை முட்டிக் கொள்ள வேண்டும் போல ஆகிவிட்டது..
"ஏன் டாக்டர்.. நானென்ன கதையா சொல்கிறேன்..?"
"ஓ.. ஐ.. ஆம் ஸாரி.."
"இட்ஸ் ஆல்ரைட்.. இப்ப.. எனக்கு ஒரு வழியைச் சொல்லுங்க.."
"யு.. ஸீ.. மிஸ்டர் சரண்.." என்று சொன்ன சுகந்தி பார்க்க வெகு அழகாக இருந்து வைக்க.. பக்கத்தில் கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை வைத்துக் கொண்டு எப்படி அவளைப் பார்ப்பது என்று யோசிக்க ஆரம்பித்தான் சரண்..
"என்ன பதில் சொல்லாம இருக்கீங்க..?"
"நீங்க சொல்லுங்க மேடம்.. கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்.."
"இந்த டயத்தில்தான் ஒரு பெண்ணுக்கு.. கணவனோட அன்பும்.. ஆதரவும் அதிகமாக தேவைப்படும்.."
"எந்த டயத்திலும் அதைக் கொடுக்க நான் ரெடியாத்தான் இருக்கேன் மேடம்.. ஆனா.. இவதான் முருங்கை மரத்தில் ஏறிக்கிட்டு இறங்க மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறாளே..."
"பேய்க்கு வாழ்க்கைப்பட்டால்.. முருங்கை மரத்தில் ஏறித்தான் ஆகணுமுன்னு நினைச்சிட்டாங்களோ.. என்னவோ..."
சுகந்தி தன் அழகிய பல்வரிசை தெரிய சிரித்து வைக்க.. பதிலுக்கு சிரிக்காமல் மௌனப் பார்வை யொன்றைப் பார்த்து வைத்தான் சரண்..
"ஜஸ்ட் ஃபார் எஜோக்.." அவள் சமாதானத்திற்கு வந்தாள்..
'உனக்கு என் பிழைப்பைப் பார்த்தால்.. ஜோக் மாதிரித் தெரிகிறதா..?' மனதிற்குள் நொந்து கொண்டான் சரண்..
"என்னை உங்க சிஸ்டராக நினைச்சுக்கிட்டு.. இந்த அட்வைஸைக் கேளுங்க.." என்று சுகந்தி தன்மையாகக் கூறவும்..
'அதுசரி.. கர்ப்பமான பெண்டாட்டியை பக்கத்தில் வைத்திருக்கிறவன்கிட்ட தடாலடியா சிஸ்டர்ன்னு

சொல்லிடுவீங்களே..' என்ற நினைவுடன்..
"சொல்லுங்க.." என்றான் சரண்..
"அவங்க பேசணும்னு நீங்க எதிர்பார்க்காதீங்க.. ஈகோ பார்க்கும் நேரம் இது வல்ல..."
"நான் பேசினால் அவ முறுக்கிக்கிட்டு போவா மேடம்.. இவகூட லோல் படறதே எனக்கு பிழைப்பாய் போச்சு.."
"இப்படியாகுமுன்னு கல்யாணத்துக்கு முன்னாலேயே உங்களுக்குத் தெரியும்தானே.."
"நல்லாத் தெரியும்.."
"தெரிஞ்சுதானே கல்யாணம் பண்ணிக்கிட்டிங்க..? அப்பவே அவாய்ட் பண்ணியிருக்கலாமே..."
இப்படிச் சொன்னவளை நிமிர்ந்து தீர்க்கமாகப் பார்த்தான் சரண்..
"இவளை அவாய்ட் பண்ணின வாழ்க்கை எனக்குத் தேவையில்லை மேடம்.."
"தட்ஸ் குட்.. உங்க வொய்ஃப் ரொம்ப லக்கி.."
இதைச் சொன்ன சுகந்தியின் குரலில் ஒரு வித பொறாமை உணர்வு தொனித்ததோ என்ற ஐயத்துடன்-
"நானும் ரொம்ப லக்கிதான் மேடம்.. ஷி இஸ் ஸோ ஸ்வீட்.." என்றான் சரண்..
"ஓ.." சுகந்தி உதட்டைக் குவித்து வியப்புடன் சொன்னாள்..
"இவ்வளவு பிரியத்தை அவங்க மேல வைத்திருக்கீங்களே மிஸ்டர் சரண்.. இதை வெளிக்-காட்டாம மனசுக்குள்ள போட்டு பூட்டி வைத்து என்ன
ஆகப் போகுது.. அவங்ககிட்ட இதை வெளிப்படுத்துங்க.."
"அவளுக்கு இது தெரியும்.. தெரிஞ்சும் பிடிவாதம் பிடிக்கிறா.."
"இது அவங்களுக்கு அவசியமான பிடிவாதம்ன்னு நான் நினைக்கிறேன் சரண்.."
சுகந்தி நிதானமாக இதைக்கூறிவிட்டு.. நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.. சரணின் புருவங்கள் முடிச்சிட.. அவன் முகஇறுக்கத்தோடு அவளைப் பார்த்தான்..

"நீங்க மட்டுமில்லை சரண்.. பொதுவாக ஜென்ட்ஸ் எல்லோருக்குமே இந்த எண்ணம் இருக்கு.."
"என்ன எண்ணம்..?"
"ஆதிக்க மனப்பான்மை.."
"ஸோ.. நீங்க என்னை 'மேல் ஸாவனிஸ்ட்'ன்னு சொல்கிறீங்க.."
"நோ.. நோ.. இதுக்கு அது அர்த்தமில்லை.."
என்னவோ.. 'நான் அவனில்லை..' என்ற பாணியில் சுகந்தி அவசரமாகப் பேசவும்..
"வேறு எது அர்த்தம்..?" என்று நிதானமாக வினவினான் சரண்..
"நான் பெமினசம் பேசவில்லை சரண்.. சைக்காலஜிகலாக பேசறேன்.. ஆண்களின் பொதுவான மனநிலையைச் சொல்கிறேன்.."
"சொல்லுங்க..."
"காதலனோ.. கணவனோ.. அவங்க என்ன நினைக்கிறாங்களோ அதையே அந்தப் பெண்ணும் நினைக்கணும்னு நினைக்கிறாங்க.. அந்தப் பெண்ணுக்குன்னு தனிப்பட்ட ஒரு மனமிருக்கும், அதில் கனவுகள் இருக்கும், லட்சியங்கள் இருக்கும்ன்னு அவங்க நினைச்சுப் பார்க்கிறதில்லை.."
"ஓஹோ.. அவளுக்கென்று ஒரு மனம்ன்னு சொல்கிறீங்க..?"
"பழைய படங்கள் நிறைய பார்ப்பீங்களோ.."
"இப்ப பழசுதான் லேட்டஸ்ட் பேஷன்.."
"இதைப் பற்றி நாம இன்னொரு நாள் பேசலாம்.. இப்ப மாளவிகாவைப் பற்றிய விசயத்துக்கு வரலாம்..."
அந்த இன்னொரு நாள் எப்போது என்று நினைவுடன் சாய்ந்து அமர்ந்து கொண்டான் சரண்..
"மாளவிகாவின் லட்சியத்தைப் பற்றி எனக்கு நிறைய அப்ஜெக்சன் இருக்கு மேடம்.."
"உங்க பிஸினெஸ்ஸைப் பற்றி அவங்க அப்ஜெக்சன் சொன்னா நீங்க ஏத்துக்குவீங்களா..."
"அவளுக்கு பிஸினெஸ்ஸைப் பற்றி என்ன தெரியும்..?"
"இதைப் போலத்தானே.. அவங்க லட்சியத்தைப் பற்றியும் உங்களுக்கென்ன தெரியும்ன்னு அவங்க நினைப்பாங்க..?"

"ஏங்க.. பணம் கொட்டுகிற தொழில் என்னுடையதுங்க.. அவ கையில் இருக்கிற காசையுமில்ல கரியாக்கிக்கிட்டு உட்கார்ந்திருக்கிறா..?"
"எதை வைச்சு அப்படிச் சொல்கிறீங்க..?"
"தி.நகரில் அவ ஸ்கூல் கட்டியிருக்கிற இடம்.. பக்கா பிஸினெஸ் சென்டர்.. எந்த மடையனாவது அங்கே ஷாப்பிங் காம்ளெக்ஸ் கட்டாமல் வேறு கட்டிடத்தைக் கட்டணும்னு நினைப்பானா..? அபார்ட்மெண்ட் கட்டுறதுகூட வேஸ்டுங்க.."
சுகந்தி மௌனமாக சேரில் சாய்ந்து கொண்டு.. சரண் பேசியதை கவனமாக கேட்டாள்..
"இவ புத்திசாலியா இருந்தா.. அந்த இடத்தில் கால்வாசியை விற்றே.. அவுட்டரில் ஸ்கூல் கட்டி முடித்திருக்கலாம்.. முக்கால் வாசி இடத்தில் பணம் கொட்டும் ஷாப்பிங் காம்ளெக்ஸ்களை கட்டியிருக்கலாம்.."
"நீங்க எடுத்துச் சொன்னீங்களா..?"
"அவதான் சொன்னதைக் கேட்கிற பிறவியில்லைன்னு நான் சொன்னேனே..."
"அதுதான் உங்க கோபமா..?"
"கோபமில்லை மேடம்.. மனவருத்தம்.. பிஸினெஸ் சென்டரில் ஸ்கூலையும் கட்டி விட்டு.. கையிலிருந்த பணத்தையெல்லாம் கட்டிடத்தில் போட்டா.. சொல்லிப் பார்த்தேன்.. கேட்கலை.. போதாக் குறைக்கு அவ நகைகளையும் சேர்த்து 'ஸ்வாஹா' பண்ணினா.. இப்ப நான் சொன்னதுக்கு என் பணமும்.. நகையும் இல்லாமல் போச்சுன்னு கவலைப்படறீங்களான்னு கேட்டு வைச்சா.. ஒரு மனுசனுக்கு எப்படியிருக்கும்.. நீங்களே சொல்லுங்க.."
'இதில் நான் என்னத்தைச் சொல்ல..?' என்ற பார்வையுடன் சுகந்தி.. அசையாமல் அமர்ந்திருந்தாள்..
"ஒவ்வொரு ஃபாரின் ட்ரிப்புக்கும் ஒரு காஸ்ட்லி டயமெண்ட் ஸெட் வாங்கிக் கொடுப்பேன்.. தொட்டுக்கூடப் பார்க்கமாட்டா.. நான்.. இவ நகைக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டேனாம்.."
சுகந்திக்கு சரணின் ஆதங்கம் புரிந்தது..
"இதெல்லாம் பாஸ்ட் மிஸ்டர் சரண்.."

"பாஸ்டின் கன்டினியுட்டிதானே பிரஸெண்ட் மேடம்..? என் மாமா இறந்தப்போ அவ மனசளவிலே நொறுங்கிப் போயிட்டா.."
"அவங்க அப்பாமேல அவ்வளவு பாசமா..?"
"யெஸ்.. அந்தப் பாசத்திற்கு அவர் தகுதியானவர் மேடம்.."
"அவங்களுக்கு குறையாத பாசம் உங்களுக்கும் இருக்கு போல.."
"இருக்காதா பின்னே..? என்னை அவர் வளர்த்தவராச்சே.. அவர் போய் விட்டதில் எனக்கும் பாதிப்பு வந்தது.. பட்.. நான் ஆண்.. மனதுக்குள்ள போட்டுக்கிட்டு சோகத்தை வெளிக்காட்டாம.. நடைமுறை வாழ்க்கைக்கு திரும்பிட்டேன்.. மாளவிகா அப்படியில்லை.. சுருண்டுட்டா.. அந்தப் பீரியடில.. அவ ஸ்கூல் பொறுப்பை நான் எடுத்துப் பார்த்தேன்.."
"கிரேட்.."
"அப்போதுதான் அது எனக்குப் புரிந்தது.."
"எது..?"
"ஸ்கூலிலும்.. லாபகரமாக நடத்தினால்.. போட்ட பணத்தை எடுத்து விடலாம் என்பது.."
"நீங்க பிஸினெஸ் மைண்டில் அதைப் பார்த்திருக்கீங்க.."
"ஸோ வாட்..? அவ ஆசைப்படி.. ஆசைப்பட்ட இடத்தில்.. ஸ்கூலை கட்டிட்டா.. அதை வெற்றிகரமாய் கொண்டு வந்துட்டா.. இப்போ அந்த ஸ்கூலுக்கு நல்ல பெயர் இருக்கு இதை யூஸ் பண்ணிக்கிட்டு பீஸை ரெய்ஸ் பண்ணுவதில் தப்பில்லையே..."
"மாளவிகாவின் லட்சியம் வேறாக இருக்கலா மில்லையா..?"
"வேறாகத்தான் இருந்து தொலைக்குது.. அதுதான் அவளுக்கும் எனக்கும்.. வாக்குவாதம் ஆரம்பிக்க காரணமாப் போச்சு.."
"நீங்க என்ன சொல்கிறீங்க..?"
"அவளோட ஆசை.. டீச்சிங் லைன்தானே.. ஸ்கூல் பிரின்ஸிபாலாய் அவள் இருக்கட்டும்.. நிர்வாகத்தை என் கையில் கொடக்கலாமில்லையா..? அதை சக்ஸஸ் புல்லா நான் நடத்திக்காட்ட மாட்டேனா..? இப்ப நீங்களே இருக்கீங்க.. ஹாஸ்பிடலை கைப் பணத்தைக் கொட்டி..

வசதியாய் கட்டிட்டு.. இலவசமாய் சேவை பண்ணனும்னு நினைப்பீங்களா..? அப்படி நீங்க நினைச்சா.. உங்க ஹஸ்பெண்ட் அதை ஒப்புக் கொள்வாரா..?"
'இவன் யதார்த்தவாதி..' என்று நினைத்துக் கொண்டாள் சுகந்தி..
'இவன் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை..' சுகந்தியினால் சரணைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அவன் வெற்றிகரமாக தொழில் நடத்தும் விதம் அறிந்தவன்.. பல வெற்றிகளை ருசித்தவன்.. மாளவிகாவின் பண நஷ்டத்தை ஈடுகட்டி.. அந்தப் பள்ளியை பணம் கொட்டும் ஸ்தாபனமாக மாற்ற நினைக்கிறான். அவன் நினைவில் தவறு இல்லை என்றே சுகந்தி நினைத்தாள்..
"ஐ அக்ரி வித் யுவர் வேர்ட்ஸ் மிஸ்டர் சரண்.. பட்.. மாளவிகா கன்சீவ் ஆகியிருக்காங்க.. இப்ப இந்த ஆர்கியு மென்டினால் அவங்க மனது பாதிக்கப்படலாம்.. அது வயிற்றில் இருக்கும் குழந்தையைப் பாதிக்குமில்லையா..?"
"என் குழந்தைக்காகன்னு இல்லை டாக்டர்.. அவளுக்காகவே.. அவளை நான் துன்புறுத்த மாட்டேன்.. இது ஜஸ்ட் எ ஸ்மால் பிராப்ளம்.."
"பெரிசா வளர விட்டுட்டீங்க..."
"ஐ நோ.. ஐ நோ.."
"சரிபண்ணப் பாருங்க.. உங்களுடைய ஒபீனியன் சரியா.. தவறாங்கிறது இப்ப முக்கியமில்லை.. அவங்களுக்கு நீங்க மாரல் சப்போர்ட் பண்ண வேண்டிய நேரம் இதுங்கிறதுதான் ரொம்ப முக்கியம்.."
சரண்.. டாக்டரின் அறையை விட்டு வெளியே வந்தான்.. வரவேற்பில் சோர்வாக அமர்ந்திருந்த மாளவிகாவின் அருகே சென்றான்..
"வா.. போகலாம்.."
அவள் பதில் சொல்லாமல் எழுந்து கொண்டாள்.. நிற்க முடியாமல் தள்ளாடியவளின் தோளைச் சுற்றிக் கைகளை போட்டுக் கொண்டவன், அவளை கைத்தாங்கலாக காருக்கு அழைத்துச் சென்றான்..
"என்ன விசயங்க ஐயா..?"

வீட்டு வாசலிலேயே கவலையுடன் காத்துக் கொண்டிருந்த பஞ்சவர்ணம் ஓடி வந்து கார் கதவைத் திறந்தபடி கேட்டாள்...
"நீ சொன்னதுதான் பஞ்சவர்ணம்.." சரண் புன்னகைத்தான்..
"நிசமாலுமா..? ஆத்தாடி.. எங்க பெரியய்யாவோட பொண்ணே ஒரு குழந்தை.. இவங்க குழந்தை பெத்துக்கப் போறாங்களா.."
பஞ்சவர்ணம் குதூகலத்துடன்.. வீட்டுக்குள்ளிருந்த மற்ற வேலையாள்களிடம் செய்தியை ஒளிபரப்ப ஓடி விட.. சரண் மாளவிகாவை மாடிக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தான்..
கண்மூடிப் படுத்திருந்தவளின் முகத்தில் தெரிந்த நிராதவான தோற்றம் சரணின் மனதைப் பாதிக்க.. அவளது முடி கோதி "நீயாய் இழுத்துக்கறேடி.." என்று முணுமுணுத்தான்..

16

இளங்காலையின் கதிர்கள் அறைக்குள் படர்ந்தபோது.. மாளவிகா கண் விழித்தாள்.. எழுந்து கொள்ள முயன்றாள்.. முடியவில்லை.. உடல் அவளது மனதின் வேகத்திற்கு ஒத்துழைக்காமல் சண்டித்தனம் செய்தது...
'சை... என்ன இது.. குடிகாரனின் போதை போல இப்படி தலை சுத்துதே...'
மாளவிகா தலையில் இருந்த கிறக்கத்தை விரட்டியடிக்க முயன்றவளாக தலையை வலம்.. இடமாக வேகமாக ஆட்டினாள்..
"தலையணையில் தலையை உருட்டினா.. மசக்கை ஓடிப்போயிருமா..?" சரண் காபிக் கோப்பையோடு அறைக்குள் வந்தான்..
அவன் இயல்பாகப் பேசி விட்டத்தில் மாளவிகாவின் மனம் மலர்ந்து விட்டது..
'எவ்வளவு நாளாச்சு.. இவன் இப்படிப் பேசி..?' ஆவலாக கணவனின் முகம் பார்த்தாள்..

"என்ன பார்க்கிற..? எழுந்திருச்சு.. காபியைக் குடி.." அவன் அவளை எழுப்பி அமர வைத்தான்..
"என்னை பேஷண்ட் போல ட்ரீட் பண்ணாதீங்க.."
"ஆரம்பிச்சுட்டியா..? கொஞ்ச நாளைக்கு அலட்டிக்காம அடக்கி வாசிடி.."
"எதுக்காம்..?"
"வேற எதுக்கு.. நம்ம பிள்ளை ஒழுங்காகப் பிறக்கிறதுக்குத்தான்.."
குழந்தையின் பேச்சு வந்ததும்.. மாளவிகாவின் முகம் கனிந்தது.. அவள் வாக்குவாதம் செய்யாமல் காபியை வாங்கிக் குடித்தாள்.. பாதிகாபியில் வாந்தி வர வாஷ் பேசினுக்கு ஓடினாள்..
"மெல்ல.. மாளவிகா.."
சரண் அவளது நெற்றியில் கைவைத்துப் பிடித்துக் கொண்டான்..
"இதுக்குத்தான் எதையும் குடிக்கவோ.. சாப்பிடவோ.. கூடாதுங்கிறது.."
"அது எதுக்கு..?"
"ம்ப்ச்.. தண்ணீரைக் குடித்தாலும் குமட்டிக்கிட்டு வெளியே வந்துருது.. சாப்பாடில்லாம இருக்கலாம்.. தண்ணியில்லாம இருக்க முடியுமா..?"
"முடியாதுன்னு தெரியுதில்ல.. அதனால.. எதையும்.. அவாய்ட் பண்ணாதே..."
"வாமிட் வருதே.."
"வந்தால் எடு.. பாதியாவது உடம்பில் சேருமில்ல..?"
"இதுக்கே இப்படி தள்ளாடுதே.. இந்தக் குடிகாரங்க எல்லாம் எப்படித்தான் குடிச்சு.. இந்த போதையை ஏத்திக்கிறாங்களோ.. தன் நினைப்பு இல்லாம இருக்கிறதுக்கு குடிக்கணுமா..?"
"இதுக்கான பதிலை.. குடிகாரங்ககிட்ட கேட்டுட்டு.. உனக்கு விளக்கம் சொல்றேன்.. இப்பப் படு.."
"படுக்கிறதா..? நோ.. நோ.."
"எதுக்கு இத்தனை நோ..?"
"எனக்கு ஸ்கூலுக்கு கிளம்பணும்.. நேரமாச்சு.."
"இந்த உடம்போட எப்படிடீ ஸ்கூலுக்குப் போவ..?"

இதைக் கேட்டதும் மாளவிகா சரணை சந்தேகமாக பார்க்க.. சரணுக்கு பற்றிக் கொண்டு வந்தது..
"இதோ பாரு மாளவிகா.. எனக்கு உன் ஸ்கூல் மேல் இன்ட்ரெஸ்ட் இல்லை.. போதுமா..? என் இன்ட்ரெஸ்ட் உன் மீதுதான்.."
"நான் எதுவும் கேட்கலையே.."
"கேட்டால்தானா..? மகராசி.. மனசுக்குள் என்னைப் பற்றி எத்தனை உயர்வா நினைச்சுக்குவீங்கன்னு எனக்குத் தெரியாதா..? நீங்க வாயைத் திறந்து வேற அதைக் கேட்டு வைக்கணுமா..?"
மாளவிகா பதில் சொல்லாமல்.. கைவிரல்களை ஆராய ஆரம்பிக்க.. சரண் அவளருகில் அமர்ந்தான்.. அவளை லேசாக அணைத்துக் கொண்டான்.. அவளது உடலில் சிலிர்ப்பு ஓடுவதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..
"நீ ஸ்கூல் அட்மிசனை முடிச்சிட்ட மாளவிகா.."
"அதுக்கென்ன..?"
"ஸ்கூல் ரன் ஆக ஆரம்பிச்சு.. ஒரு மாதமாச்சு.."
"அதுக்கும் என்ன..?"
"இனி.. அதில் தலையிட்டு எனக்கென்ன ஆகப் போகுது..?"
"ரிசல்ட் காண்பிக்க வேணாமா..?"
"உன் ஸ்கூல் டீச்சருக்கு ஒழுங்காய் சம்பளம் கொடுக்கிறயா.. இல்லையா..,?" மாளவிகா சரணை முறைத்தாள்..
"என்னை ஏன் முறைக்கிற.. வாங்கின சம்பளத்துக்கு அவங்க வேலையை செய்ய மாட்டாங்களா..?"
"கேப்டன் இல்லாம கப்பல் ஓடினா நல்லாயிருக்காது.."
"இதையெல்லாம் உணைக்கையாய் பேசிரு.. சொன்ன பேச்சை மட்டும் கேட்டு விடாதே.. ஏண்டி.. இந்தக் கேப்டன்.. மசக்கை வந்து வாந்தியும்.. மயக்கமுமா இருக்கிறாளே.. கேப்டன் தள்ளாடினா.. கப்பலும் சேர்ந்து தள்ளாடும்.. அடங்கிப் படு.."
"என்னை வீட்டுக்குள்ள முடக்கப் பார்க்கறிங்க சரண்.."
"புயலை பூ ஜாடிக்குள்ள அடக்கி வைக்க முடியுமா..? கடலை கைப்பிடிக்குள் நிறுத்த முடியுமா..? வானத்தை சேலையைப் போல மடிச்சுத்தான் வைக்க முடியுமா..?"
"உங்களுக்கு என்ன ஆச்சு..?"

"இப்படி பன்ச் டயலாக்கை பேசினாலாவது என் பேச்சு உன் காதில் ஏறாதாங்கிற நப்பாசைதான்.. வேறு என்ன..?"
"இப்ப என்னை என்னதான் பண்ணச் சொல்கிறீங்க..?"
இப்படிக் கேட்ட மனைவியை.. 'நீதானா.. அந்தக் குயில்..?' என்ற ரீதியில் ஆச்சரியமாக பார்த்து வைத்தான் சரண்..
"ஏன்.. அப்படிப் பார்க்கறீங்க..?" மாளவிகாவிற்கு வெட்கமா போய்விட்டது..
"நீயாடி இது..? எப்போதிலிருந்து இப்படி சொல்போச்சு கேட்கிற சுந்தரியாய் மாறின..? இப்படி என் பன்ச் டயலாக்கிற்கு மசிவேன்னு தெரிஞ்சிருந்தா.. முன்னாலேயே நித்தம் ஒரு பன்ச் டயலாக்கை அள்ளி வீசியிருப்பேனே.."
"நல்லவேளை.. நீங்க அப்படிச் செய்யலை.."
"என்னடி.. திடீர்ன்னு அந்தர் பல்டி அடிக்கிற..?"
"ஆமாம்.. இங்கே தானாய் எழுந்திருச்சு நிற்கவே முடியலை.. இதில பல்ட்டி ஒண்ணுதான் குறைச்சல்.. இந்த பன்ச் டயலாக்கை முன்னாலேயே அள்ளி விட்டிருந்தீங்கன்னு வையுங்க.."
"என்னடி செய்திருப்ப..? காதலாகி.. கசிந்துருகி-யிருப்பியா..?"
"ஊம்..? உங்க காதலை மறுபரிசீலனை செய்திருப்பேன்.."
"அடிப்பாவி.. காரியத்தையே கெடுக்கப் பார்க்கறியே.."
"எனக்கு பன்ச் டயலாக்குன்னாலே செம அலர்ஜி.."
"இதுக்கு மேல இந்த விசப்பரீட்சையை நான் செய்ய மாட்டேன்.."
"பரீட்சைன்னதும் நினைவுக்கு வருது.."
"ஆன்ஸரா..?"
"இல்லை.. ஸ்கூலில் குவார்ட்டரிலி எக்ஸாம் ஆரம்பிக்கப் போகுதே.."
"அதுக்கு.. ஸ்டூடன்ஸ்தானே கவலைப்படணும்..? நீயேன் கவலைப்படறே..? நீயா பரீட்சை எழுதப் போகிற..?"
"சரண்.."
"சொல்லு.."
"தினமும் போய் என் ஸ்கூலை பார்த்துடறீங்களா..?"
இதைச் சொல்லுவது தன் மனைவிதானா.. என்ற சந்தேகத்துடன் மாளவிகாவை ஒரு விதமாக பார்த்தான்

சரண்..
"என்ன ஒரு மார்க்கமா பார்த்து வைக்கறீங்க..?" என்று கேட்டு வைத்தாள் அவள்..
"ஏண்டி சொல்ல மாட்ட..? இத்தனை நாளாய் பட்டினி போட்டு விட்டு.. இப்ப வாந்தியும் மயக்கமுமா இருக்கிற நிலைமையில் ஒரு மார்க்கமாய் கேள்வி கேட்டு வைக்கறியே.. உனக்கே இது நியாயமாய் படுதாடி..?" சரண் விட்ட பெருமூச்சில்.. அந்த அறையே அனலானது..
"நானா உங்ககூட சண்டைக்கு வந்தேன்..?"
"இல்லைங்கறியா..?"
"இல்லைங்கறதுதானே உண்மை.."
"இவ பெரிய உண்மை விளம்பி.."
"நீங்கதான் என்னை சண்டைக்கு இழுத்தீங்க.."
"கையைப் பிடித்து இழுத்தேன்னு சொல்லு.. கேட்டுக்கறேன்.. அதை விட்டுட்டு சண்டைக்கு இழுத்தேன்னு அபாண்டமா பொய் சொல்லாதே.."
"இப்ப என்னாங்கறீங்க..?"
"இப்படி உரிமையோடு சண்டை போடுடி.. அதை விட்டுட்டு உம்மணாம் மூஞ்சி போல முகத்தை திருப்பிக்காதே.. இப்ப உனக்கு என்ன வேணும்..? தினமும் உன் ஸ்கூலுக்கு ஒரு விசிட் போகணும்.. அவ்வளவுதானே.. நான் பார்த்துக்கறேன்.."
"எனக்கு உடம்பு சரியாகிற வரைதான்.."
மாளவிகா அப்போதும் எச்சரிக்கையுடன் சொல்ல..
"ஏண்டி.. நீ திருந்தவே மாட்டியா..?" என்றான் சரண்..
அன்று இரவு.. அவன் கைகளுக்குள் அடைக்கலமாகி.. நிம்மதியாய் தூங்கினாள் மாளவிகா..

## 17

"நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்..
சீராரும் வதனமென
திகழ்பரத கண்டமிதில்.."

வரிசையாக சீருடை அணிந்த மாணவ.. மாணவிகள்.. நின்று பாடிக்கொண்டிருக்க.. மற்ற ஆசிரிய..

ஆசிரியைகளுடன்.. அவர்களின் அணிவகுப்பைப் பார்த்தபடி.. அசையாமல் நின்றாள் மாளவிகா..
"தமிழ்தாய் வாழ்த்தா..? எந்த பீரியடில் இருக்க மாளவிகா..?"
"ஏன்..? அது என்ன பீரியட் பிரைம் பாட்டா..?"
"இது கம்ப்யூட்டர் காலம்டி.."
"அதுக்காக.. தாய் மொழியை மறக்கணுமுன்னு கட்டாயம் எதுவும் இருக்கா..?"
"இங்கிலீஷ்.. லாங்வேஜ்.. உன் ஸ்கூலின் குவாலிட்டியை தூக்கிக் காட்டும்.."
"என் ஸ்கூல்.. இயல்பாக உயரட்டும்.. என் தாய் மொழியை அவமதித்து உயரவேண்டாம்.."
சரண் 'எக்கேடோ கெட்டுப் போ..' என்ற பாவனையில் அமைதியாகி விட்டான்..
மாளவிகாவின் பிரசவ சமயத்திலேயே.. டாக்டர் சுகந்தி அவனிடம் மனதில் பதியும்படி கூறிவிட்டாள்..
"மிஸ்டர் சரண்.. நீங்க உங்க வொய்ஃபை உயிருக்குயிராய் காதலிக்கிறீங்க.. அவங்களுக்காக.. எதையும் செய்யத் தயாராய் இருக்கீங்க.. அப்படியிருக் கையில்.. இந்த ஸ்கூல் விசயத்தில் தலையிடாமல் இருப்பதில் உங்களுகென்ன கஷ்டம் வந்து விடப்போகுது..? கோடி கோடியாய் பணத்தை நீங்க அவங்க கையில் கொட்டினாலும்.. அவங்க மனசு திருப்தியடையாதுன்னு நீங்கதானே சொன்னீங்க..? அவங்க திருப்தி.. அந்த ஸ்கூலை நடத்துவதில் இருக்குன்னா.. அந்த திருப்தியை நீங்க அவங்களுக்கு கொடுங்க.."
சரண் கொடுத்தான்.. மாளவிகா விரும்பிய லட்சியப் பாதையில் அவளை நடக்கவிட்டான்..
பள்ளிக்கூட விவகாரங்களில் தலையிடாமல் சரண் முற்றிலுமாக ஒதுங்கிக் கொள்ள.. மாளவிகா அவனை முழுமையாக காதலிக்கத் தொடங்கினாள்...
"எனக்கு அந்த ஸ்கைபுளூ கலர் சேலையை பிடிச்சிருக்கு.. எடுத்துத் தாங்களேன்.."
முதன் முறையாக அவள் வாய் விட்டு தன் விருப்பத்தைக் கேட்ட அன்று சரண் வானில் பறந்தான்..
"உனக்கு என்னவெல்லாம் பிடிச்சிருக்கோ.. எடுத்துக்க.."
அவளை ஜவுளிக்கடையில் நிறுத்தினான்..

"நான் சம்பாதிப்பதற்கான அர்த்தமே இப்போத்தான் கிடைச்சிருக்கு.." புடவைகளுக்கான பில் பணத்தை கொடுத்து விட்டு.. படிகளில் இறங்கும் போது.. மனைவியிடம் சொன்னான்..
"பெண்டாட்டி.. ஜவுளிக்கடைக்குள் நுழைந்தால்.. பர்ஸுக்கு வேட்டு வைக்கப் போகிறாள்ன்னு எல்லா ஆண்களும் அழுவாங்க.. நீங்க என்ன விதி விலக்காப் பேசறீங்க..?"
"எல்லாருடைய பெண்டாட்டி மாதிரியா என் பெண்டாட்டி இருக்கா? ஊரைப் போல.. நாட்டைப் போல.. பெண்டாட்டி அமைகிற கொடுப்பினை தான் எனக்கு இல்லையே.."
"அடேங்கப்பா.. ரொம்பத்தான் அலுத்துக்கறீங்க.. எனக்கு என்ன குறையாம்..?"
நிறை மாத கர்ப்பிணியாக லேசாக மூச்சிரைக்க கேட்ட மாளவிகா குறை எதுவும் சொல்ல முடியாத.. தாய்மையின் வசீகரத்தோடு நிற்க.. சரண்.. தெருவென்றும் பாராமல்.. அவள் கன்னத்தில் முத்தமிட்டான்..
"ஐ லவ் யு மாளவிகா.."
அவள் அவனின் மகனைப் பெற்றுக் கொடுத்தபோது அவனது காதல் இன்னும் அதிகமானது..
"குட்டிக்கு பெயர் வைக்கணும் சரண்.."
"கிராண்டாய் ஃபங்சனை கொண்டாடிலாம்.."
"உங்களுக்கு பார்ட்டி கொடுக்க.. இது ஒரு சாக்கு.."
"பிஸினெஸ் மேன்டி.."
"குட்டிக்கு என்ன பெயர் வைக்கலாம்..?"
அவன் 'வாசவன்..' என்று அவள் தந்தையின் பெயரைச் சொல்வானென்று அவள் எதிர்பார்க்க..
"தருண்.." என்றான் அவன்..
மாளவிகா சட்டென்று எழுந்து உள்ளே போய் விட்டாள்.. அவள் முகம் கூம்பி விட்டது..
'அப்பா பெயர் இல்லையா..' அவள் மனம் சிணுங்கியது...
அன்று இரவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது.. சரண் புருவம் உயர்த்தினான்.. அவள் புரியாதவளைப் போல பார்த்தாள்..
"என்னடி.. மௌனராகம் பாடிக்கிட்டு இருக்க..?"
"ஒன்றுமில்லை..."

"இங்கே பாரு.. மனசில் பட்டதைக் கேட்கிறவதான் மாளவிகான்னு என் மனசுக்குள்ள உன்னைப் பத்தி ஒரு இமேஜ் இருக்கு.. அதை உடைக்காம உண்மையைச் சொல்லு..."
"அப்பா பெயரை ஏன் வைக்கல..?"
"யாருக்கு..?"
"நம்ம பிள்ளைக்கு.."
"அதுக்குத்தான் இப்படிக் குற்றப் பத்திரிகை வாசிச்சுக்கிட்டு இருக்கியா..? மாமா பெயரை என் மகனுக்கு வைக்காம.. என் அப்பாவின் பெயரையா வைத்து விட்டேன்..?"
"நான் அப்படிச் சொன்னேனா...?"
மாளவிகா மகனைத் தூக்கிக் கொண்டு மாடிக்குப் போய்விட.. இரவுச் செய்தியைப் பார்த்துவிட்டு.. சரண் மாடியேறினான்..
அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தபோது விடி விளக்கின் மெல்லிய வெளிச்சம்.. அறையில் பரவியிருந்தது.. அந்த மெல்லிய ஒளியில் கண்மூடிப் படுத்திருந்த மாளவிகா தேவதையைப் போல இருந்தாள்.. கட்டிலை சமீபித்த சரண்.. குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான்.. அதன் பிஞ்சு விரல்களில் முத்துமிட்டான்..
"தூங்குகிற பிள்ளையை எழுப்பி விடாதீங்க..."
"நீயேன்டி தூங்கறவளைப் போல நடிச்சே..?"
"ம்ச்ச்.."
"லுக் மாளவிகா.. இவன் நம் மகன்.. இவனை 'வாடா.. போடா'ன்னு நாம் கூப்பிடுவோமா.. மாட்டோமா..?"
"இது என்ன கேள்வின்னு கேட்கறிங்க.."
"முதல்ல.. என் கேள்விக்கென்ன பதில்டி..?"
"பெத்த பிள்ளையை வாடா.. போடான்னு கூப்பிடாம.. வேற எப்படிக் கூப்பிடறது..? இது ஒரு கேள்வின்னு கேட்க வந்திட்டார்.."
"டீச்சரம்மாவுக்கு கேள்வி கேட்கத்தானே தெரியும்.. பதிலை சொல்லத் தெரியாதே..."
"அதுக்காக டெஸ்ட் பண்ணிப் பார்த்தீங்களாக்கும்..?"
"அதுக்கு மட்டுமில்லடி.. என் மக்கு பெண்டாட்டி.."
"மக்கா.. நானா..?"

"நீதான்.. வேறு யாரு..? இவனுக்கு உங்க அப்பா பெயரையோ.. இல்லை.. என் அப்பாவின் பெயரையோ வைத்தால்.. வாடா.. போடான்னு பெயர் சொல்லிக் கூப்பிட முடியுமா..? கொஞ்சம் இமாஜின் பண்ணிப்பாரு.."
'வாடா வாசவா.. டேய் வாசவா..' மாளவிகா மனதிற்குள் சொல்லிப் பார்த்துவிட்டு நாக்கைக் கடித்தாள்..
'அப்பா பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதா..?'
"பெயர் சொல்லிக் கூப்பிடத்தான் பிள்ளைக்கு பெயர் வைக்கிறோம்.. மனசிலாயி..?"
சரண்.. மகனைத் தொட்டிலில் படுக்க வைத்து விட்டு.. மனைவியை அணைத்துக் கொண்டான்...
"ஐ ஆம் ஸாரி.." என்றாள் அவள்..
"எதுக்கு..?"
"உங்களைத் தப்பா நினைச்சதுக்கு.."
"புதுசா நினைக்கறியா..? விவரம் தெரிந்த நாளில் இருந்து இதுதானே உன் பிழைப்பாய் இருக்கு.."
மாளவிகா வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்...
தருணுக்கு நான்கு வயதான போது.. மாளவிகாவிற்கு மீண்டும் மசக்கை வந்தது..
"ஸ்கூல்..?" என்று அவள் இழுக்க..
"என் மகளைப் பெற்றுக் கொடுத்துட்டு உன் ஸ்கூலைக் கவனிக்கப் போ.." என்று கறாராக சொல்லி விட்டான் சரண்...
தருணுக்கு தங்கை பிறந்தாள்..
"தாரிணின்னு பெயர் வைக்கலாம் மாளவிகா.."
மாளவிகா மறுப்புச் சொல்லவில்லை. தருணும்.. தாரிணியும். 'வாசவ் ஹையர் செகண்டரி ஸ்கூலிலேயே சேர்ந்து படித்தனர்..'
"என் பிள்ளைகளை இன்டர்நேசனல் ஸ்கூலில் சேர்க்கப்போகிறேன்.." சரண் அலட்டிக் கொண்டான்...
"அவங்க எனக்கும் பிள்ளைகள்.." மாளவிகா அழுத்தமான குரலில் சொல்லவும் அடங்கிப் போனான்..
போர் முழக்கத்தை கைவிட்டு விட்ட மனைவியை முறைத்துகொள்ள அவன் விரும்பவில்லை..

தருண் பத்தாம் வகுப்பிலும்.. தாரிணி ஆறாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தனர்.. அவர்களின் பள்ளி.. நான்கு ஆண்டுகளாக.. மாநிலத்தில் முதல் ரேங்க் எடுத்த மாணவ மாணவிகளை தந்து கொண்டிருக்க.. தமிழ்நாடு மாளவிகாவின் பள்ளியைத் திரும்பிப் பார்த்தது..
கூடவே.. பணத்தாசை கொண்ட வஜ்ரவேலுவும் திரும்பிப் பார்த்து தொலைத்தான்..
அவன் அந்த வட்டாரத்தின் பெரிய மனிதன். மிகப் பெரிய பணக்காரன்.. அரசியல் பின்புலம் கொண்டவன்.. இது வெளியே அவன் காட்டும் முகம்..
அவனுடைய மறுபக்கம்.. அவனை 'தாதா' என்று அடையாளம் காட்டியது. எல்லாத் தொழில்களிலும் கால் பதித்த அவன்.. அந்தக் கல்வியையும் தொழிலாக நினைத்து கால்பதிக்க துடித்ததுதான்.. மாளவிகாவை பாதித்து விட்டது..
"வணக்கங்கம்மா..."
இரு கைகளையும் உயரத்தூக்கி கும்பிட்டவாறே.. ஏதோ தேர்தல் காலத்தில்.. ஓட்டுக் கேட்க வந்த அரசியல் வாதியைப் போல்.. அவன் ஒருநாள் மாளவிகாவின் அறைக்குள் பிரவேசித்தான்..
"யார் நீங்க..?" என்ற கேள்வியுடன் மாளவிகா மேஜை மேலிருந்த அழைப்பு மணியை அழுத்தினாள்..
பியூன் ஓடி வந்து நின்றான்..
"விசிட்டர்ஸ் வந்தா வெளியே உட்கார வைத்து விட்டு எனக்குத் தகவல் சொல்லி.. பெர்மிஷன் வாங்கணுமுன்னு உனக்குத் தெரியுமா.. தெரியாதா..?"
அவளின் கண்டிப்பான கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் அவன் மலங்க மலங்க விழித்தான்..
"அவனை ஏன் திட்டறீங்க வாத்தியாரம்மா.. உங்களுக்குத்தான் என்னை யாருன்னு தெரியலை.. அவனுக்குத் தெரியுமே.. தெரிஞ்ச பின்னாடியும் என்னை தடுத்து நிறுத்த அவனுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?"
வஜ்ரவேலு மாளவிகாவின் அனுமதியை எதிர் பார்க்காமல் அவளுக்கு எதிரேயிருந்த சேரில் அமர்ந்து கொண்டான்.. அத்தோடும் நிற்காமல்..

"நீ போப்பா.. நான் வாத்தியாரம்மாகிட்ட பேச வேண்டியிருக்கு.." என்று பியூனுக்கு உத்தரவு போடவும் செய்தான்..
அவனுடைய உத்தரவிற்கு கீழ்படிந்து பியூன் உடனடியாக அறையை விட்டு வெளியேறவும்.. மாளவிகா யோசனையுடன் எதிரே அமர்ந்திருந்தவனைப் பார்த்தாள்..
வஜ்ரவேலு.. வெள்ளை.. வேட்டி சட்டையில் இருந்தான்.. அவனுக்குப் பின்னால் கைகட்டி நின்ற வாட்டசாட்டமான நான்கு ஆள்களும்.. அவனைப் போலவே.. வெள்ளை வேட்டி சட்டையில் இருந்தனர்..
'என்னவோ.. சொட்டு நீல விளம்பரத்துக்கு வருகிறதைப் போலஇல்ல போஸ் கொடுத்திக்கிட்டு நிற்கிறானுங்க..' மாளவிகா பல்லைக் கடித்தாள்...
"நீங்க யாருன்னு கேட்டேன்..?" மாளவிகாவின் குரலில் கண்டிப்பு குறையவில்லை..
"வஜ்ரவேலுன்னா.. இந்த ஏரியாவில் பிறந்த குழந்தைக்குக்கூடத் தெரியும்மா.." அவன் கெத்தாகக் கூறினான்..
"நான் பிறந்த குழந்தையில்லை.."
"பார்த்தாலே தெரியுதே.."
ஏற்கெனவே அவனது பார்வையில் எரிச்சலைடந் திருந்த மாளவிகா இதைக் கேட்டதும்.. ரௌத்திரமாகி விட்டாள்..
"மிஸ்டர் இது ஸ்கூல்.."
"நம்ம ஸ்கூலுன்னு சொல்லுங்கம்மா.."
"நம்ம ஸ்கூலா..?"
"ஆமா.. இன்னைக்கு இது உங்களோட ஸ்கூல்.. நாளைக்கே.. இது என்னோட ஸ்கூல் ஆகணும்.."
அதுவரை நிதானமாகப் பேசிக்கொண்டிருந்த மாளவிகாவின் பொறுமை காற்றில் பறந்தது..
"ஹூ ஆர் யு மேன்..? யாருகிட்ட வந்து என்ன பேச்சுப் பேசற..? இது என் உழைப்பில் உருவான ஸ்கூல்.. உன்னைப் போல ஆளுகளின் காலடி இந்த ஸ்கூல் மண்ணில் படுவதே பாவம்... இதில ஸ்கூலை விலை பேச வரியா..? இதுக்கு விலை மதிப்பு கிடையாது.. வெளியே போ.."
மாளவிகா பெண் சிங்கமாய் கர்ஜிக்க.. அவன் சாவதானமாக கேட்டான்..

"போகலைன்னா..?"
"போக வைப்பேன்.."
"அது உன்னால் முடியாது.. அதே சமயம் இந்த ஸ்கூலை எனக்கு நீ பத்திரம் போட்டுக் குடுக்கிற.. அது மட்டும்தான் உன்னால் முடியும்.."
"கனவு காணாதே.. அது ஒருநாளும் நடக்காது.."
"நான் நடத்திக்காட்டறேன்.."
வஜ்ரவேலு போய் வெகுநேரமாகியும் - மாளவிகாவிற்கு படபடப்பு அடங்கவில்லை. மேஜை மேலிருந்த தண்ணீர் பாட்டிலை.. தொண்டையில் சரித்துக் கொண்டவளுக்கு.. கண் முன் போர்க்களம் தெரிந்தது..
'இதை எப்படி டீல் பண்ணுவது..?'
இதே சிந்தனையுடன் வீடு வந்தவளை.. இறுகிய முகத்துடன் எதிர்கொண்டான் சரண்..
"வஜ்ரவேலு உன் ஸ்கூலை விலைக்கு கேட்டானா..?"
"ஆமாம்.. அது எப்படி உங்களுக்குத் தெரியும்..?"
"என்னைப் பார்க்க என் கம்பெனிக்கு வந்திருந்தான்.."
"ராஸ்கல்.. ஸ்கூலை வாங்கியே தீருவேன்னு சவால் விட்டுட்டுப் போகிறான்.. நானா.. அவனான்னு.. ஒருகை பார்க்காம நான் விடறதாயில்லை.."
"நீ தனி மனுஷியில்லை மாளவிகா.."
கண்டிப்புடன் இதைக் கூறிய சரணின் முகத்தில் அப்பட்டமான கோபம் தெரிந்தது..
"சரண்.." என்றாள் அவள் திகைப்புடன்..
"உனக்கு குடும்பம் இருக்கு மாளவிகா.. உன்னைக் குறிவைக்கிறவங்களோட கோபப் பார்வை.. நம்ம பிள்ளைகள் மேல விழுந்து விடக்கூடாது.."
"என்ன சரண்.. இப்படி பயமுறுத்தறீங்க..?"
"அவன் பயப்பட வேண்டியவன்.."
"அதுக்காக.. ரெளடியைப் பார்த்து நாம பயப்படலாமா..?"
"ஏண்டி.. அவனென்ன ஒத்தைக்கு ஒத்தைன்னு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு.. நேரே வந்து நிற்கிற ஆளா..? முதுகிற்கு பின்னால் குத்தறவண்டி.."
"பாரதியாரே சொல்லியிருக்கிறார் சரண்.."

"பாதகம் செய்பவனைக் கண்டால் - நீ
பயங் கொள்ளாலாகாது பாப்பா..

மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பான்னு.."

"மாளவிகா.."

சரண் போட்ட சத்தத்தில் அந்த வீடே அதிர்ந்தது.. படித்துக் கொண்டிருந்த.. தருணும், தாரிணியும்.. அறைக்குள் எட்டிப் பார்த்தார்கள்.. அதைக்கூட கண்டு கொள்ளாமல் மாளவிகாவிடம் இரைந்து கொண்டிருந்தான் சரண்..

"நான் சொல்லிக்கிட்டு இருக்கிறதென்ன.. நீ பேசறது என்ன..? பாப்பா பாட்டை பாடிட்டு நீ முட்டாளைப் போல நிற்கறியே.. உனக்கு அறிவுங்கிறதே இல்லையா..? அதை கடன் கொடுத்துட்டியா..?"

"நீங்கதான் புரியாம பேசறீங்க.. அது என்னுடைய ஸ்கூல்.. அதை அவன் கேட்டதும் தூக்கி தந்துட முடியுமா..?"

"வேற வழியில்லை மாளவிகா.. நான் அப்பவே படிச்சுப் படிச்சு சொன்னேன்.. இந்த ஸ்கூல் நடத்துற விசயமெல்லாம் நமக்கு உதவாதுன்னு.."

"என்ன பேசறிங்க சரண்..? எனக்கு பிடித்த வேலையை நான் செய்ய நினைக்கிறது குற்றமா..?"

"உனக்கு எப்படிச் சொல்லி புரிய வைப்பேன் மாளவிகா.. அவன் உன் ஸ்கூலை விலை பேச வந்தானே.. உன் ஸ்கூலை விட.. அதிகமா கோடிக்கணக்கில் பணம் கொட்டுகிற தொழில்.. என்னுடைய தொழில்.. என் கம்பெனியை விலை பேசினானா..?"

சரண் இப்படிக் கேட்டதுமே.. மாளவிகா.. புரியாமல் விழித்தாள்..

"ஆமாமில்ல.. ஏன் கேட்கலை..?"

"அது அவனுக்கு புரியாத ஏரியாடி.. கம்ப்யூட்டர்ன்னா அவன் பயப்படுவான்.. அதுவே கண்ணுக்கு முன்னால் இருக்கிற ஸ்கூல்ன்னா ஆசைப்படுவான்.."

மாளவிகாவிற்கு கோபம் வந்தது...

19

"ஸ்கூல் நடத்தறதுன்னா அவனுக்கு அவ்வளவு ஈஸியா போச்சா..?"

"அவனாடி நடத்தப் போறான்..? டீச்சர்ஸ் ஸ்கூலை ரன் பண்ணப் போகிறாங்க.. அவன்.. ஃபீஸை வாங்கி மடியில் போட்டுக்கப் போகிறான்.."
"சரண்.. நீங்க அவனுக்கு சப்போட்டா பேசறது போல எனக்குப் படுது.." மாளவிகாவின் குரலில் கோபம் தென்பட்டது..
"நான் நடப்பைச் சொன்னேன் மாலு.. இதில் சப்போர்ட் பண்ண என்ன இருக்கு..? நீ அந்த ஸ்கூலை எந்த அளவுக்கு நேசிக்கிறாய்ன்னு எனக்குத் தெரியும் - அதே சமயம் உன்னையும்.. பிள்ளைகளையும் நான் எந்த அளவுக்கு நேசிக்கிறேன்னு உனக்கும் தெரியும்.."
சரணின் வார்த்தைகளில் இருந்த உண்மையை மாளவிகா நன்கு அறிவாள்...
"இந்தப் பிரச்னை உங்க கம்பெனிக்கு வந்திருந்தால் நீங்க என்ன செய்வீங்க..?"
"உன்னையும்.. பிள்ளைகளையும்.. முதல் வேலையா.. பாரினில்.. ஏதாவது ஒரு கன்ட்ரியில் செட்டில் பண்ண வைத்துவிட்டு.. என் கம்பெனியின் கேபிடலை வேறு ஊருக்கு மாற்றியிருப்பேன்.. உனக்கே தெரியும்- உனக்காகத்தான் நான் சென்னையில் இருக்கிறேன் என்பது.."
மாளவிகா உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமானாள்.. அவர்கள் இருவரின் பேச்சையும் கவனித்தவாறு நின்றிருந்த தருணும்.. தாரிணியும்.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்..
"டாட்.. ரௌடியிசத்துக்கு பயப்படுகிறீங்களா..?" தருண் முகம் சுளித்தான்.. மாளவிகா மகனை பெருமிதத்துடன் பார்த்தாள்..
'இவன் என் மகன்.. என் வளர்ப்பு..' அவளது நெஞ்சம் ஆறுதலடைந்தது..
"நோ.. பட்.. எனக்கு நீங்களும் உங்க அம்மாவும் ஷேஃபா இருக்கணும்.. அது எனக்கு முக்கியம்..."
"அதுக்காக.. நாம கட்டிக்காத்த ஸ்கூலை.. யாரோ ஒரு ரௌடிகிட்ட தாரை வார்த்துக் கொடுக்கிறதா..?"
"இது அந்த வியூவில் பார்க்க வேண்டிய விசயமில்லை தருண்.. உங்க அம்மா பாரதியின் பாட்டைச் சொல்கிறாளே..

துஷ்டரைக் கண்டால் தூர விலகுன்னு பெரியவங்க சொல்லி வைச்சிருக்காங்களே.. அது இவளுக்குத் தெரியாதா..? "
"அது வீட்டுக்குள்ளே இருக்கறவங்களுக்குச் சொன்னது.. அம்மா ஒரு கிரியேட்டர்.. ஸ்கூல் கரெஸ் பாண்டென்ட் கம் பிரின்ஸிபால்..."
தருணின் வார்த்தைகளில் அவன் அந்த ஸ்கூல் கரெஸ்பாண்டெண்டின் மகன் என்ற பெருமை தொனித்தது.. தருணின் வார்த்தைகளில் தொனித்த பெருமையை.. தாரிணி தன் முகத்தில் பிரதிபலிக்க.. சரணின் மனதில் மெல்லிய பொறாமையுணர்வு எழுந்தது.. அவனும்தான்.. கோடி கோடியாக சம்பாதித்துக் கொட்டிக் கொண்டிருக்கிறான். வீட்டை இடித்து.. அதி நவீனமாக.. நீச்சல் குளத்துடன் கட்டியிருக்கிறான். தருணுக்கும், தாரிணிக்கும் தனித்தனியாக வெளிநாட்டுக் கார்களை இறக்குமதி பண்ணியிருக்கிறான்...
இருந்தும்.. அதிலெல்லாம் அவனுடைய பிள்ளைகள் இந்த அளவுக்கு பெருமைப்படவில்லையே...
'ஜஸ்ட் லைக் தட்..' என்று எடுத்துக் கொண்டு போய் விட்டார்களே...
இப்போது அவர்களுடைய அம்மா நடத்துகிற ஒரு பள்ளிக்கூடத்தைப் பற்றி இந்த அளவுக்கு பெருமைப் படுகிறார்களே..
சரணுக்கு.. குழந்தைகளின் மனோபாவம் பிடிபடவில்லை.. தருணும், தாரிணியும்.. மூன்று வயதிலிருந்தே மாளவிகாவின் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தவர்கள்...
"நம்ம கரெஸ்ஸோட குழந்தைகள்.." என்ற கவனிப்பைப் பெற்றவர்கள்..
இருபத்தி நான்கு மணி நேரம் கொண்ட ஒருநாளில் பத்து மணி நேரம் தூங்கி எழுகிறோம்.. மீதி நேரத்தில் பெரும்பான்மையான நேரம்.. பள்ளியிலும்.. கல்லூரியிலும்.. வேலை செய்யும் இடங்களிலும்தானே கழிகின்றது..?
அப்படிப்பட்ட நாளின் பெரும்பான்மையான நேரத்தை செலவிட வேண்டிய பள்ளியில்.. தனிக் கவனிப்புடனும்.. பெருமையுடனும் வளர்ந்தவர்கள்.. சரணின் பிள்ளைகள்..

அந்தப் பெருமையை அவர்களுக்கு அளித்த மாளவிகாவின் பள்ளியின் மீது அவர்களுக்கு அபிமானம் அதிகமாக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லைதான்.. அத்தோடு அது அவர்கள் படிக்கும்.. அவர்களின் பள்ளிக்கூடம்..
"டாட்... அம்மாவுக்கு சப்போர்ட் பண்ணுங்க.." தாரிணி கறாராகக் கூறினாள்..
குண்டுக் கண்களுடன்.. கொழு கொழு கன்னங்களுடன்.. மாளவிகாவின் சிறுவயது பிம்பமாக இருக்கும் மகளிடம் சரணுக்கு தனி வாஞ்சை உண்டு. எதிலும் தீர்க்கமான.. தீர்மானமான முடிவை இயல்பாக எடுக்கும் தருண்.. சரணின் ஜெராக்ஸ் காபி போல.. குணத்திலும் உருவத்திலும் இருப்பவன்..
பிள்ளைகள் இருவரும் தாயின் பக்கம் சாய்ந்து பேசவும்.. பெரும்பான்மையான பலம் மாளவிகாவின் பக்கம் இருப்பதை உணர்ந்தவனாக சரண் அப்போதைக்கு...
"என்ன குட்டிம்மா.. நீயும் உன் அண்ணனும்.. அம்மாவுக்கு சப்போர்ட்டா..?" என்று மட்டும் கேட்டு விட்டு பேச்சை விட்டு விட்டான்...
ஆனால்.. அன்று இரவில் மாளவிகா இயல்பாக அவன் தோள் சாய்ந்து உறங்க முயன்றபோது விலகிப் படுத்தான்.. மாளவிகா.. அந்த புறக்கணிப்பை கண்டு கொண்டவளாக...
"சரண்..?" என்று அதிர்ச்சியுடன் அழைத்தாள்..
"ம்ச்ச்.." அவன் கண்கள் மூடிக் கொண்டான்.. அவனுடைய அதிருப்தியை அறிந்த பின்னால் மாளவிகா வினால் நிம்மதியாக உறங்க முடியவில்லை..
பள்ளியின் மேல் தளத்தில்.. அவள் சுற்றி வந்து கொண்டிருந்த போது.. அவளது செல் போனின் மணியொலித்தது.. எடுத்துப் பார்த்தாள்.. மணிமேகலை அழைத்துக் கொண்டிருந்தாள்...
"என்ன மேகலை..?"
"மேம்.. என் கிளாஸ் பொண்ணுங்க இரண்டு பேர் அழுதுகிட்டு இருக்கிறாங்க..!"
"எதுக்கு..?"
"ஈவ் டீஸிங்.."
"வாட்..? அவங்களை என் ரூமுக்கு கூப்பிட்டுக் கொண்டு வாங்க.."

அந்த சிறுமிகள் இருவரும் பிளஸ் டூ படிப்பவர்கள்.. அழுது.. அழுது.. முகம் சிவந்திருந்தார்கள்..
"என்னம்மா.. என்ன ஆச்சு..?" என்று மாளவிகா கேட்டவுடன்.. இரண்டு பேரும் ஒன்று போல அழ ஆரம்பித்தார்கள்..
"டோண்ட்கிரை.. வாட் ஹேப்பன்..?"
"மேம்.. நாங்க ஸ்கூலுக்கு வந்துக்கிட்டு இருந்தோம்.. அப்ப.. தெரு முனையில் ஒரு ரௌடி.. எங்க ஸ்கூட்டிகளை வழி மறிச்சு நின்னான்..."
"தென்..?"
"நாங்க பயந்துக்கிட்டே நிப்பாட்டினோம்.. அதுக்குள்ள நாலைந்து ரௌடிக.. எங்களைச் சுத்திக்கிட்டு.."
அந்தச் சிறுமி மேலே பேச முடியாமல் கதறியழுக..
நடந்தகை அவளுடைய கிழிந்த துப்பாட்டாவும்.. கலைந்த தலைமுடியும் சொல்லின..
'பட்டப் பகலில்.. நடுரோட்டில்.. சின்னப் பெண்களை.. ச்சே..'
மாளவிகாவின் இதயம் அதிர்ந்தது..
அவள் உடனடியாக போலீஸ் கமிஷனரை தொடர்பு கொண்டாள்..
"சார்.. சம்பந்தப்பட்டது என் ஸ்கூல் ஸ்டூண்ட்ஸ்.. சின்னப் பெண்கள்.. என் ஸ்கூலை நம்பி படிக்க வந்தவங்க.. அவங்க கம்ப்ளெயிண்ட் கொடுக்க வரமுடியாது.. அவங்க பெயர் வெளியே தெரியும்.. இதை ஓரலா நீங்க டீல் பண்ண முடியுமா..?"
அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில்.. அந்த ரௌடிகள் கைது செய்யப்பட்டனர்.. மாளவிகா தன் போராட்டத்தில் முதல் வெற்றியைச் சந்தித்தாள்..
20

சரணிடம் அதைப் பற்றி அவள் சொன்ன போது.. நிமிர்ந்து அவளைப் பார்த்த அவனது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை துணுக்குறச் செய்தது...
"சரண்..?" என்று கேள்வியாக அழைத்தாள்..
"இருபத்தி நாலுமணி நேரத்தில் அவங்க கைதானது தான் உனக்குத் தெரியும்.. அடுத்த நாலு மணி நேரத்துக்குள் அவங்க வெளியே வந்துட்டது உனக்குத் தெரியுமா..?"
அவன் நிதானமாக வினவினான்..

"எப்படி..? எப்படி இது நடக்க முடியும்..?"
"எதுவுமே நடக்கலை.. அந்த ரௌடிகள் யாருன்னே எங்களுக்குத் தெரியாதுன்னு சம்பந்தப்பட்ட கேர்ள்ஸ் சொன்னா.. அது நடக்காதா..?"
"ஓ... காட்..?"
மாளவிகா சிலையாக சமைந்தாள்.. அடுத்தநாள்.. அந்தச் சிறுமிகளின் பெற்றோர்கள் பள்ளிக்கு வந்து.. அவர்களின் டி.ஸி.யை வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்..
"அந்தப் பெண்களை வேற ஸ்கூலில் சேர்த்துட்டாங்க மேடம்.." என்றாள் மணிமேகலை..
ஒரு வார காலம்.. எந்த சலசலப்பும் இல்லாமல் போனது.. அந்த வார இறுதியில்.. எல்.கே.ஜியில் படித்த பையன் ஒருவன் காணாமல் போனான்..
"எப்படி.. நாங்க வந்து கூப்பிட்டுக் கொண்டு போகிற வரைக்கும் அவன் ஸ்கூலின் கண்ட்ரோலில்தானே இருக்கணும்..."
பெற்றவர்கள் மாளவிகாவின் மேல் பாய்ந்தனர்.. மாளவிகா அந்தப் பையனின் வகுப்பு ஆசிரியை முதல்.. வாட்ச் மேன் வரை.. அனைவரையும் விசாரித்து விட்டாள்..
"அந்தப் பையனின் அம்மாதான் வந்து கூப்பிட்டுக் கொண்டு போனாங்க மேடம்.."
அனைவரின் பதிலும் ஒன்றாக இருந்தது.. பெற்றவளோ இல்லவே.. இல்லையென்று சாதித்தாள்.. அவளது கண்ணீரில் உண்மை தெரிந்தது...
மாளவிகா மீண்டும் காவல் துறையின் உதவியை நாடினாள்.. இந்த முறை.. அடுத்த ஆறே மணி நேரத்தில் குற்றவாளி பிடிபட்டாள்...
கடத்தப்பட்ட பையனின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் புதிதாய் குடிவந்தவளாம்.. குடிவந்து இரண்டே நாள்கள் தான் ஆகிறதாம்.. அந்தப் பையனின் தாய் கட்டியிருந்த சேலையைப் போலவே கட்டிக் கொண்டு வந்திருக்கிறாள்..
"உன் அம்மாவும்.. நானும்தான் உன்னைக் கூப்பிட வந்தோம்.. அம்மா ஸ்கூல் வாசலில் நிற்கிறாங்க.. போகலாமா..?" என்று அவள் கேட்டதும்.. அறிமுகமான பெண்தானே என்று அந்தப் பையனும் கூடப் போய் விட்டான்..

"குடிவந்த நாளில் இருந்து.. இந்த இரண்டு நாளும் என்வீடே கதின்னு கிடந்தாள்.. பால் பாக்கெட் எங்கே வாங்குறதுன்னு ஆரம்பித்து.. மளிகை சாமான்வரை என்னை துணைக்கு கூப்பிட்டாள்.. வீட்டுக்கு வரப் போக இருந்தவங்கதானேன்னு.. என் பையன் நம்பி இவள் பின்னால் போய் விட்டான்.." அந்தப் பையனின் அம்மா அழுதாள்..
இந்தக் கதையும்.. முதல் கதையைப் போலவே முடிந்தது..
"வீடு புகுந்து மிட்டறாங்க மேடம்.. கம்ப்ளெயிண்டை வாபஸ் வாங்கிக்கச் சொல்கிறாங்க.. எங்களுக்கு வேறு வழியில்லை.."
அந்தப் பையனும் வேறு ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டான்..
வாசவன் ஹையர் செகண்டரி ஸ்கூலில் படிக்கும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு நிச்சயமில்லை என்ற வாய்மொழிச் செய்தி பரவி.. கண்.. காது.. மூக்கு வைத்து.. அனைத்து மாணவ.. மாணவிகளின் குடும்பங்களுக்கும் போய் சேர்ந்தது..
அவர்கள் பள்ளியை நோக்கி.. படையெடுத்தனர்...
"என்னென்னவோ சொல்கிறாங்க.. பிள்ளைகளை படிக்க அனுப்பி வைச்சா.. நிம்மதியாயிருக்கணும்.. ஸ்கூலுக்கு போன பிள்ளைக.. பத்திரமாய் வீடு திரும்புவாங்களான்னு பதக்கு பதக்குன்னு இருக்கக் கூடாது.."
ஒவ்வொரு நாளும்.. அந்தப் பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்க வரிசையில் பெற்றோர்கள் நின்ற காலம் மாறி.. பிள்ளைகளின் டி.ஸி.யை வாங்க.. நின்ற பெற்றவர்களின் கூட்டம் நின்ற காலம் வந்து சேர்ந்தது..
"வேண்டாம் மாளவிகா.. அவன் நல்ல விலை தருகிறேன்னு சொல்கிறான்.. ஸ்கூலை விற்று விடு.." சரண்.. தனிமையில் அவளை எச்சரித்தான்..
"நாம வேற பேச்சிருந்தால் பேசலாம்.." மாளவிகா பிடிவாதமாக கூறிவிட்டாள்..
"ஏய்.. இன்னைக்கு அந்த ஸ்டூடண்ட்ஸிற்கு வந்த நிலைமை நாளைக்கே.. நம்ம பிள்ளைகளுக்கு வராதுன்னு என்ன நிச்சயம்..?"
"சரண்.."

"அலறாதே.. இதுதான் உண்மை.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பாவத்திற்காக நான்தான் என் வாழ்வை பணயம் வைத்திருக்கிறேன்னா.. உன் வயிற்றில் பிறந்த பாவத்திற்காக.. என் பிள்ளைகளும் அவங்க வாழ்வை பணயம் வைக்கணுமா..?"
இதுவரை மாளவிகாவின் மனதில் அந்த பயம் எழாமல் இல்லை.. அவள் தன் கண் பார்வையிலேயே பிள்ளைகளை வைத்திருந்தாள்.. அதற்கும் சரண் காரணம் சொன்னான்..
"உன் கண்பார்வையிலே இருக்கிற மற்ற பையன்கள் காணாமல் போகும்போது.. உன் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு என்னடி உத்திரவாதம் இருக்கு..?"
"இல்லை.. அப்படி எதுவும் நடக்காது.."
"நடக்காதுதான்.. நான் இருபத்தி நாலுமணி நேர செக்யூரிட்டிக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேனே.. என் பிள்ளைகளுக்கு மட்டுமில்லை.. உனக்கும் சேர்த்துத்தான்.."
சரண் முகம் இறுகச் சொல்லி விட்டு திரும்பிப் படுத்துக் கொண்டான்.. சமீபகாலமாக தங்களின் காரை.. இரண்டு மோட்டார் பைக்குகள் பின் தொடர்வது மாளவிகாவின் நினைவுக்கு வந்தது.. அவள் கண்கள் கலங்கின..
அவளுக்குத் தெரியும்.. சரண்.. அவளையும்.. பிள்ளைகளையும் தன் மூச்சாக நினைப்பவன் என்று..
"தேங்க்யு சரண்.." என்றாள்..
பதிலுக்கு திரும்பிப் பார்த்த சரணின் அனல் பார்வையைக் கண்டதும் அவசரமாக வாயை மூடிக் கொண்டாள்..
அந்த மாதத் தேர்வுகளின் மதிப்பெண் பட்டியலை வகுப்பு வாரியாக மாளவிகா பார்வையிட்டுக் கொண்டிருந்த போது.. அவளது மேஜையில் இருந்த தொலைபேசி ஒலித்தது.. எடுத்தக் காதில் வைத்து-
"ஹலோ.." என்றாள்...
"என்னம்மாகண்ணு... சௌக்கியமா..?" என்றது மறுமுனை..
சட்டென்று அந்தக் குரலை இனம் கண்டு கொண்டாள்..
'வஜ்ரவேலு!' பல்லைக் கடித்தாள்...
"என்ன கண்ணு.. பேச்சையே காணோம்.. ஆடிப் போயிட்ட போல.. அப்புறம் பேச்சு எங்கேயிருந்து வரும்.."
"கண்ணு.. கிண்ணுன்ன பல்லைக் கழட்டிடுவேன்.. ராஸ்கல். யாருகிட்ட எப்படிப் பேசறதுன்னு கூடத் தெரியாத

பொறுக்கி நீ.. உனக்கு ஸ்கூல் நடத்தணுமா..?"
"எதுக்கு கண்ணு இப்படிப் போட்டுத் தாளிக்கற..? சும்மா தளதளன்னு பெங்களூர் தக்காளியைப் போல இருக்கே.. உன்னைப் பார்த்தா.. பதினைந்து வயசுப் பையனுக்கு அம்மான்னு யாராச்சும் சொல்லுவாங்களா..?"
"டேய்ய்.. ராஸ்கல்.."
"நீ என்ன வேணும்னாலும் திட்டு.. எனக்கு அதைப் பத்திக் கவலையே இல்ல.. யாரு என்னத் திட்டறது..? நீதானே.. உனக்கில்லாத உரிமையா..?"
"எருமைமாடே.. சூடு சுரணையில்லாத ஜென்மமே.. எதைப் பேசினாலும் தட்டி விட்டுப் போகிற பிறவியே.. நீயெல்லாம் எதில் சேர்த்திடா..?"
"நீ வேணும்னா என்னைச் சேர்த்துக்க.. நான் வேணாம்னா சொல்றேன்..?"
மாளவிகா தாங்க முடியாமல் போனை வைத்து விட்டாள்.. சரணிடம் இதைப் பற்றி முறையிட முடியாது...
'சொன்னேனே.. கேட்டியா..?' என்று மாளவிகாவை கொன்று புதைத்து விட்டு.. வஜ்ரவேலுவையும் கொல்லக் கிளம்பி விடுவாள்.. வேறு என்ன செய்வது..?

21

மாளவிகா ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியின் மகள்.. தந்தையின் சிநேகிதர்களை அணுக முடிவு செய்து.. அவர்களின் பெயர்களை யோசித்து.. மனதிற்குள் வரிசைப் படுத்திக் கொண்டிருந்த போது.. பியூன் பதட்டமாக ஓடி வந்தான்...
"மேடம்.. நம்ம ஸ்கூலுக்குள்ள வெடிகுண்டு வெடிச்சிருக்கு..."
"வாட்..?"
மாளவிகா பதறி எழுந்தபோது.. அடுத்த அணுகுண்டைத் தூக்கி அவள் தலையில் போட்டான் அவன்..
"நம்ம தாரிணிப் பாப்பாவுக்கு பக்கத்திலேதான் வெடிகுண்டு வெடிச்சது மேடம்.."
மாளவிகாவின் உயிரே பறந்தது.. அவள் மகளைத் தேடி ஓடினாள்.. பள்ளி மைதானத்திற்கு கூட்டம் குழுமியிருந்தது.. தாரிணி மயங்கிக் கிடந்தாள்..

"பயம்தான்.. வேற ஒண்ணுமில்லை.."
அந்தப் பள்ளியில் ஆசிரியராக வேலைபார்க்கும் கண்ணன் சமாதானப்படுத்தினார்..
ஆனால்.. அடுத்த சில நிமிடங்களில் புயலைப்போல பள்ளிக்குள் வந்து நின்ற சரண் சமாதானமாகவில்லை..
அது பள்ளிக்கூடம்.. மாளவிகா அதன் நிர்வாகி.. தலைமை ஆசிரியை.. என்பது எல்லாவற்றையும் மறந்து.. அவன் கத்தித் தீர்த்து விட்டான்..
"என்ன செக்யூரிட்டி போட்டாலும்.. என் பிள்ளைகளை ஆபத்து தொடர்ந்துகிட்டு இருக்கு.. இது யாரால்..? உன்னால்தாண்டி.. இது எல்லாமே உன்னால்தான்.. உனக்கு உன் கொள்கை முக்கியம்.. லட்சியம் முக்கியம்.. உன் வறட்டுப் பிடிவாதத்திற்கு பலி கொடுக்க என் பிள்ளைகள் தான் கிடைச்சாங்களா..? போதும்டி.. உனக்கும் எனக்குமான உறவு போதும்.."
"சரண்.."
"பேசாதே.. உன் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெறுப்பா இருக்கு.. உன் நிழலை விட்டு அகற்றினால் தான் நான் என் பிள்ளைகளைக் காப்பாற்ற முடியும்.."
சரண் தீவிரமாக - சொன்னதைச் செய்தான்.. தருணுக்கும், தாரிணிக்கும் விசா வாங்கினான்.. அவர்கள் படிக்க கனடாவில் இடம் பார்த்து விட்டான்.. கிளம்ப மறுத்த குழந்தைகளை கிளப்பும் பொறுப்பையும் இரக்கமில்லாமல் மாளவிகாவிடம் ஒப்படைத்தான்..
"கனடாவில் வீடு வாங்கியிருக்கேன்.."
"ம்ம்ம்.."
"தருணுக்கும், தாரிணிக்கும் அங்கே ஸ்கூலில் சீட் வாங்கிவிட்டேன்.."
"ம்ம்ம்.."
"நீயும் வரணும்னா.. எங்களோடு வரலாம்.."
"நோ.. தேங்க்ஸ்.."
வெறுமையான பதிலளித்தவளை ஒரு கணம் நிமிர்ந்து ஊன்றிப் பார்த்தான் சரண். அவன் பார்வையின் ஜுவாலையின் வீச்சைத் தாங்க முடியாமல் மாளவிகா முகம் திருப்பிக் கொண்டாள்..

"புருசன் வேணாம்.. பிள்ளைகள் வேணாம்..
எங்களையெல்லாம் விட்டுவிட்டு அப்படி என்னத்தைடி
சாதிக்கப் போகிற..?"
"வேறு பேசலாம்.."
"ஷ்யூர்.. பிள்ளைகள் என்னோடு கிளம்பி வர மாட்டேன்னு
பிடிவாதம் பிடிக்கிறாங்க.. உன் வயிற்றில்
பிறந்ததுகளாச்சே.. உன் பிடிவாதம் அப்படியே இருக்கு.."
"அதுக்கு நான் என்ன செய்யணும்..?"
"என் பிள்ளைகளை என்னோடு அனுப்பி வைக்கணும்.."
'அவங்க என் பிள்ளைகள்தானே..' மாளவிகாவின் இதயம்
பொங்கியது.. கண்களில் நீர் தழும்பியது...
பொத்திப் பொத்தி பிள்ளைகளை வயிற்றில் சுமந்து..
பெற்று வளர்த்தவள்.. இன்று பிரிய வேண்டும்..
எதற்காக அவளுக்கு இந்த தண்டனை...? பெண்ணாகப்
பிறந்து விட்டால்.. சுயத்தை இழக்க வேண்டுமா..?
லட்சியத்தை மறக்க வேண்டுமா..?
மாளவிகா கண்ணீரை விழுங்கிக் கொண்டாள்..
பிள்ளைகளைத் தேடிச் சென்றாள்..
"தருண்.."
"நான் டாடியோடு போகமுடியாதும்மா.."
அவள் ஆரம்பிக்கும்போதே.. பதிலைச் சொல்லும்
புத்திசாலிப் பிள்ளை.. அடக்கி வைத்திருந்த கண்ணீர்
அவள் கண்களில் வழிந்தது.. தாரிணி அவளருகே வந்து
கண்ணீரைத் துடைக்க.. மகளைத் தூக்கி மடியில் வைத்துக்
கொண்டாள்..
மனத்தை கல்லாக்கிக் கொண்டு பேச ஆரம்பித்தாள்..
"தருண்.. அம்மா போராட வேண்டும்.. ஐ நீட் யுவர் ஹெல்ப்..."
"நாங்க அதுக்கு என்ன பண்ணணும்மா..?"
"உங்களை பாதுகாத்துக்கணும்.. நீங்க ஷேஃபா
இருந்தால்தான் நான் நிம்மதியா ஃபைட் பண்ண முடியும்.."
"அதுக்காக..?"
"டாடியோட கிளம்பிப் போங்க.."
"நீங்க தனியாய் இருப்பீங்களே.."
மகனின் அக்கறையில் மனம் நெகிழ்ந்தவள். மனத்தை
இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்...

'மாளவிகா.. மனதை விட்டு விடாதே.. சரண் பதறுவதிலும் அர்த்தமிருக்கு.. பிள்ளைகளின் நன்மைக்காக.. நீ பிள்ளைகளைப் பிரியத்தான் வேண்டும்..' மனதிற்குள் உருப்போட்டுக் கொண்டாள்..
"எவ்வளவு நாள் தனியாய் இருக்கப் போகிறேன் தருண்..? இங்கே பிரச்னைகளை சமாளித்து முடித்தவுடனேயே நீங்க திரும்பி வந்து விடலாமே.."
அரை மனதாக அவர்கள் கிளம்பிப் போனார்கள்.. கிளம்பும் நாளன்றும்.. சரண் அவளோடு போராடிப் பார்த்தான்..
"கடைசியாகக் கேட்கிறேன் மாளவிகா.. எங்களோடு வந்துவிடு.."
"பத்திரமா போயிட்டு வாங்க சரண்.."
"எனக்கு நீ வேணும்டி.."
"பிள்ளைகளைப் பார்த்துக்கங்க.."
"ஒரு நிமிஷம் என்னைப் பத்தி யோசிச்சுப் பாரு.. உன்மேல் உயிரையே வைச்சிருக்கேண்டி.. என்னோடு வந்துவிடு.."
"தினமும் போன் பண்ணுங்க.."
பொறுக்க முடியாமல் ஓங்கி ஒரு அறை விட்டான் சரண்.. அவள் சுருண்டு விழுந்தாள்.. அவளது தலை முடியைப் பற்றி வெறிகொண்டவனாக அவன் உறுமினான்..
"ராட்ஸஸி.. மனசுக்குள்ள ஈரமே இல்லாத பிறவிடி நீ.. இவ்வளவு கெஞ்சுகிறேன்.. கொஞ்சமாவது இரங்கி வரயா..? நானும் பிள்ளைகளும் இல்லாத வாழ்வை வாழும் துணிச்சல் உனக்கு வந்துருச்சுல்ல...?"
சரண் போய் விட்டான்.. பிள்ளைகளும் அவனோடு போய் விட்டார்கள்.. வெறுமையான உணர்வு.. மாளவிகாவை சுற்றிக் கொள்ள.. யாருமில்லாத தனிமையில்.. இருளின் அந்தகாரப் போர்வைக்குள் புகுந்து கொண்டாள் மாளவிகா...
மனதில் சரணின் குரல் ஒலித்தது...
'நானும்.. பிள்ளைகளும்.. கூட இல்லாமல் சாதிக்கும் சாதனை எதுக்குடி உனக்கு..?'
அவன் கேட்டதிலும் நியாயம் இருக்கிறதுதானே.. மாளவிகா முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்...
"அப்பா.." மனம் விட்டு அழ ஆரம்பித்தாள்..

"ஒவ்வொரு செங்கலாக பார்த்துப் பார்த்துக் கட்டின கட்டிடம்ப்பா அது.. என் கனவு.. லட்சியம் எல்லாம் சேர்ந்து குழைத்துக் கட்டின கட்டிடம் அது.. வெறும் செங்கலும்.. சிமிண்டும் மட்டும் அதை உருவாக்கவில்லை.. அப்பா.. என் உணர்வுக்கு நீங்க மதிப்புக்கொடுத்து உங்க பாசத்தையும்.. வியர்வையையும்.. உழைப்பையும்.. அதில் போட்டு உருவாக்கினீங்க.. நீங்க கொடுத்த தந்தை வீட்டுச் சீதனம்பா அது.. ஒரு அயோக்கியனுக்குப் போய் அதை எப்படி நான் விட்டுக் கொடுப்பேன்..?"
"அம்மா.."
பஞ்சவர்ணம் அறைவாசலில் காபிக் கோப்பையோடு நின்றிருந்தாள்.. மாளவிகா.. அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டாள்...
"அழுதீங்களாம்மா..." ஆதங்கத்துடன் கேட்டாள் பஞ்சவர்ணம்.. மாளவிகா பதில் சொல்லவில்லை..
"எதுக்கும்மா அழுகறீங்க.. பொட்டைக் கோழி கூவி பொழுது விடியாதுன்னு இவங்க சொல்கிறாங்க.. அது விடியும்ன்னு காட்டுங்கம்மா.. இருட்டுன்னு ஒண்ணு இருந்தா.. வெளிச்சமுன்னு ஒண்ணு வராமலா போயிரும்..?"
அது வேலைக்காரியின் வார்த்தைகளா..?

## 22

'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே...
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே...
ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே...
இரவானால் பகலொன்று வந்திடுமே...
நம்பிக்கை என்பது வேண்டும்
நம் வாழ்வில்...
லட்சியம் நிச்சயம் வெல்லும்
ஒரு நாளில்...
மனமே... ஓ... மனமே...
நீ மாறி விடு...
மலையோ அது பனியோ
நீ மோதி விடு...'

அவளுக்குப் பிடித்த பாடல்... காரில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது... அலைபாயும் மனத்தை அந்தப் பாடலைக் கேட்டு அமைதிப்படுத்த முயன்றாள் அவள்...

"உள்ளம் என்றும் எப்போதும்
உடைந்து போகக் கூடாது...
என்ன இந்த வாழ்க்கையென்ற..
எண்ணம் தோன்றக்கூடாது...
எந்த மனிதன் நெஞ்சுக்குள்...
காயமில்லை சொல்லுங்கள்...
காலப் போக்கில் காயமெல்லாம்...
மறைந்து போகும் மாயங்கள்...
உளி தாங்கும் கற்கள் தானே
மண் மீது சிலையாகும்...?
வலி தாங்கும் உள்ளம்தானே
நிலையான சுகம் காணும்...?
யாருக்கில்லை போராட்டம்...?
கண்ணில் என்ன நீரோட்டம்...?
ஒரு கனவு கண்டால்... அதை தினம் முயன்றால்...
ஒரு நாளில் நிஜமாகும்..."

வாசவன் இருக்கும் போது... அவர் கூறிய அறிவுரைகளை... அந்தப் பாடல் கூறியது... மாளவிகா மனத்தைரியம் வரப் பெற்றாள்...

அவள் என்ன தவறு செய்தாள் என்று இருளுக்குள் பதுங்க வேண்டும்...? எதற்காக மூலையில் ஒடுங்க வேண்டும்...? அது அவளுடைய பள்ளிக்கூடம்... எல்லோரும் அதை விட்டுப் போனாலும்... அவள் ஒருத்தி மட்டுமாவது அங்கே நிச்சயம் இருப்பாள். அவளே பயிற்றுவிப்பாள். அவளே கல்வியும் கற்பாள்...

வஜ்ரவேலுவின் வார்த்தைகள் அவள் மனதில் சுழன்றடித்தன... அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த வக்கிரம்... அவளை அவமானப்படுத்தியது... அவள் வேதனையோடு கண்களை மூடிக் கொண்டாள்...

"வாழ்க்கை கவிதை வாசிப்போம்...
வானமளவு யோசிப்போம்...
முயற்சி என்ற ஒன்றை மட்டும்...
மூச்சுப் போல சுவாசிப்போம்...

லட்சம் கனவு கண்ணோடு...
லட்சியங்கள் நெஞ்சோடு...
உன்னை வெல்ல யாருமில்லை...
உறுதியோடு போராடு...
மனிதா... உன் மனதைக் கீறி...
விதை போடு... மரமாகும்...
அவமானம்... படுதோல்வி...
எல்லாமே... உரமாகும்...
தோல்வியின்றி வரலாறா...,
துக்கமென்ன என் தோழா...?"

அவளது துக்கம் புரிந்த தோழமையோடு அந்தப் பாடல் அவளை தட்டி எழுப்பியது. மாளவிகா வஜ்ரவேலுவின் வக்கிர வார்த்தைகளை புறம் தள்ளினாள். மனதில் ஒரு தெளிவான முடிவை எடுத்தாள். பள்ளிக்கூடத்தை நோக்கி.. திட மனத்துடன் காரைச் செலுத்தினாள்.

"ஒரு முடிவிருந்தால்...
அதில் தெளிவிருந்தால்...
அந்த வானம் வசமாகும்..."

கார் கதவைத் திறந்த மாளவிகாவின் கண் முன்னால்... தொடுவானம் தெரிந்தது... அதைக் தொட்டு... வானத்தை வசப்படுத்திவிடும் வேகத்துடன் அவள் பள்ளிக்குள் விரைந்தாள். தன் அறையில் அமர்ந்து மைக்கை ஆன் செய்தாள். பேச ஆரம்பித்தாள். அனைத்து வகுப்புகளிலும்... ஓய்வு அறையிலும்... அவளது குரல் ஒலிக்க... அனைவரும் அமைதியாகி... அவளது பேச்சை கவனிக்க ஆரம்பித்தார்கள்.

"டியர் ஸ்டூடன்ஸ் அண்ட் டீச்சர்ஸ்... அர்ஜன்ட் மீட்டிங் ஆரம்பமாகப் போகுது. கான்பரன்ஸ் ஹாலுக்கு வாங்க... க்விக்..."

அடுத்த சில நிமிடங்களில் கான்பரன்ஸ் ஹால் நிரம்பி வழிந்தது... எல்லோரும் வந்து விட்டார்களா என்பதை உறுதிபடுத்திக் கொண்ட மாளவிகா... பியூனை அழைத்து... வாட்ச் மேனையும் அந்தப் பள்ளியை துப்பரவு செய்யும் தொழிலாளிகளையும் அழைத்துக் கொண்டு வரச்சொன்னாள்...

"என்னவாக இருக்கும்..." ஆசிரியைகள் கிசுகிசுத்துக் கொண்டனர். மாணவ மாணவிகள்... வகுப்புகளில் இருந்து தப்பித்து விட்ட உற்சாகத்தோடு... நடப்பவற்றை சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்தனர்.
மாளவிகா எழுந்தாள்... மைக்கின் அருகே சென்றாள்...
"நம் ஸ்கூலுக்கு கொஞ்ச நாள்களாகவே பிரச்னைகள் வந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது என் முன் இரண்டு முடிவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது... இந்த ஸ்கூலை விலை பேசும்... வஜ்ரவேலுக்கு இந்த ஸ்கூலை விற்று விடுவது... அப்படி நான் விற்ற பின்னால் நடக்கப் போவதை என் மாணவ மாணவிகளுக்கும்... ஆசிரியப் பெருமக்களுக்கும் சொல்கிறேன்... மனிதர்களை மதிக்கத் தெரியாத நிர்வாகியிடம் வேலை பார்க்க நேரும். ஆண் ஆசிரியர்கள் அவமானப்படுத்தப் படலாம்... பெண்களை போகப் பொருளாக நினைப்பவனின் கீழ் வேலை பார்க்க நேரும் பெண் ஆசிரியைகளின் நிலைமையைப் பற்றி நான் சொல்லவே வேண்டியதில்லை... நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்..."
ஆசிரியர்களின் முகத்தில் பதட்டமும்... ஆசிரியை களின் முகத்தில் பயமும் வந்தது... மாளவிகா பேச்சைத் தொடர்ந்தார்...
"மாணவ.. மாணவிகளின் கல்விக் கட்டணம்... நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு கூடி விடும்... சேவை மனப்பான்மை போய்... லாப நோக்கு வந்தால்... கல்வித்தரம் குறையும்... இதை மாணவ.. மாணவிகள் யோசிக்க வேண்டும்..."
கூட்டத்திலிருந்து முதல் குரல் எழுந்தது...
"இரண்டாவது முடிவு என்ன மேம்...?"
"போராடுவது..." மாளவிகா உறுதியான குரலில் சொன்னாள்... "நிற்க வேண்டும்... இது நம் ஸ்கூல்... இதை அந்நியருக்கு விட்டுக் கொடுக்க முடியாது என்று துணிந்து நிற்க வேண்டும். ஆசிரியர்கள் முதல்... துப்புரவு செய்யும் தொழிலாளிகள் வரை... இந்தப் போராட்டத்தில் ஒற்றுமையாக நிற்க வேண்டும்... முடியுமா?"
"முடியும்..." மாணவ... மாணவிகள் முழங்கினார்கள்.

"அப்படி முடிய வேண்டுமென்றால்... டியர் ஸ்டூடண்ட்ஸ்... உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்... உங்களைப் பெற்றவர்களின் பயத்தை போக்கவேண்டும்... இந்த ஸ்கூலில் பிரச்னை வந்து விட்டது என்று வேறு ஸ்கூலுக்குப் போகக்கூடாது. நம் தாய் மண்ணுக்கு ஒரு பிரச்சனை வந்தால்... நாம் வேறு நாட்டுக்கு ஓடுவோமா...?" மாளவிகா கேட்டாள்.
"மாட்டோம்..." கூட்டம் கூவியது.
"அப்படியென்றால்... இந்த ஸ்கூலை விட்டு... வேறு ஸ்கூலுக்குப் போவது சரியா...?"
"சரியில்லை..."
"நீங்கள் என்ன செய்வீர்கள்...?"
"தைரியமாக இருப்போம்..."
மாளவிகாவின் கண்களில் நீர் துளிர்த்தது... அவள் வாஞ்சையுடன் தன் பள்ளியின் மாணவ-மாணவிகளைப் பார்த்தாள்....
"உங்களைப் பார்க்கும் போது எனக்குப் பெருமையாக இருக்கிறது... நான் என் ஸ்டூடன்ட்ஸை விட்டுக் கொடுத்து விடமாட்டேன்... ஸ்கூலின் பாதுகாப்புக்கும்... உங்களின் பாதுகாப்புக்கும் என்னbல்லாம் செய்ய வேண்டுமோ... அதைவிட... அதிகமாகவே செய்வேன்... கவலைப் பட வேண்டாம்..."
அவள் பேசிக் கொண்டு இருந்த போதே... அங்கு வந்த வஜ்ரவேலுவின் கைக்கூலி ஒருவன் பலத்த குரலில் கத்தினான்...
"ஆ... நல்லாயிருக்கு டீச்சர்... உங்க பிள்ளைகளை மட்டும் டி.ஸி. கொடுத்து வெளியே அனுப்பி... வெளிநாட்டில் படிக்க வைப்பீங்க... எங்க வீட்டு பிள்ளைகளை மட்டும் காவு கொடுக்கப் பார்ப்பீங்க... இது எந்த ஊரு நியாயம்...?"
மாணவ... மாணவிகளின் முகத்தில் குழப்பம் சூழ்வதை உணர்ந்தாள் மாளவிகா.. சிந்தனையை ஒருமுகப்படுத்திக் கொண்டு மைக்கில் தொடர்ந்து பேசினாள்.
"டியர் ஸ்டூண்ட்ஸ்.... கணவன் ஒரு ஊரிலும்... மனைவி ஒரு ஊரிலும் வேலை பார்த்தால் பிள்ளைகள் இரண்டு பேரில் யாராவது ஒருவரிடம்தானே... வளர முடியும்..? என் கணவரின் தொழில் வெளிநாட்டில் இருக்கிறது. அவரிடம்

என் பிள்ளைகள் இருக்கிறார்கள்.. நான் இங்கே தானே இருக்கிறேன்..? எது நடந்தாலும்.. எனக்குத்தானே முதலில் நடக்கும்..? அதை ஏற்றுக் கொள்ளும் துணிச்சலோடுதானே உங்களுடன் கலந்து நிற்கிறேன்..?"
மாணவர்கள் முகம் தெளிந்தார்கள்.. மாளவிகா நிம்மதி அடைந்தாள்.. தொடர்ந்து ஆசிரியர்களின் ஆதரவை வேண்டினாள்.. வாட்ச் மேனிடம் பாதுகாப்பைக் குறித்து வலியுறுத்தினாள். துப்புரவுத் தொழிலாளிகளிடம்.. வகுப்புகளை மட்டுமின்றி.. இதர இடங்களிலும் தீவிரமாக கண்காணித்துக் கொண்டிருக்கும்படி கேட்டுக் கொண்டாள்..

23

"நீ கட்சித் தலைவரைப் பார் மாளவிகா.." சாம்பசிவம் யோசனை சொன்னார்..
அவர்.. வாசவனின் நெருங்கிய நண்பர்.. தலைமைச் செயலகத்தில் வேலை செய்பவர்..
"ஏன் அங்கிள்..?" மாளவிகா புரியாமல் கேட்டாள்..
"வஜ்ரவேலு... கட்சியின் பெயரைச் சொல்லிக் கிட்டுத்தான் ஆட்டம் போடுகிறான்.. தலைவருக்கு இதை தெரியப் படுத்தினா.. அவர் அவனை அடக்கி வைப்பார்.."
"ஒரு வேளை.. அவர் அவனுக்கு சப்போர்ட் பண்ணினா..?"
"நிச்சயம் செய்ய மாட்டார்.. இது ஸ்கூல் சம்பந்தப் பட்ட விஷயம்.. நீ தைரியமா போய்ப் பாரு.. நான் அவரை மீட் பண்ண டைம் வாங்கித்தரேன்.."
மாளவிகா அவர் சொன்னதைச் செய்தாள்.. வாசவனின் இன்னொரு நண்பர்.. பரந்தாமன்.. போலீஸ் கமிஷனரிடம் அவளை நேரடியாக அழைத்துச் சென்றார்.
"இவங்க மாளவிகா.. இவங்க அப்பா ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர்.. என் குளோஸ் பிரண்ட்.. வாசவன்னு பெயர்.. டியூட்டியில் இருக்கும் போதே செத்துட்டான்.. அவன் பெயரில் இந்தப் பெண் ஸ்கூல் நடத்துகிறா..."
"யு மீன்.. வாசவன் ஹையர் செகண்டரி ஸ்கூல்..?"
"யெஸ்.. யெஸ்.."
"அதில்தான்.. தினத்துக்கும் ஒரு கம்ப்ளெயிண்ட் வருதே..."

"தினம்.. தினம் இவங்களுக்கு தொல்லை கொடுக்கிறாங்க.."
"செய்கிறது யார்..?"
"வஜ்ரவேலு..."
"என்ன மோடிவ்..?"
"அந்த ஸ்கூலை அவனுக்கு விற்கணுமாம்..!"
"மழைக்குக் கூட ஸ்கூல் பக்கம் ஒதுங்காதவன் அவன்.. ஸ்கூலை வாங்கி என்ன செய்யப் போகிறானாம்..?"
"அதிலேயும் காசுபார்க்க ஆசைப்படுகிறான்..."
போலீஸ் கமிஷனர் தான் முழுவீச்சில் உதவி செய்வதாக வாக்களித்தார்..
பரந்தாமனோ.. இன்னும் ஒருபடி மேலே போய்.. மாளவிகாவை மீடியாக்களுக்கு அறிமுகப்படுத்தினார்..
"இது எதுக்கு அங்கிள்..?"
"தனி மனுஷியாய் போராடுகிறாய்.. உன் போராட்டம் உலகுக்கு தெரிய வேண்டாமா..?"
மாளவிகா.. நியூஸ் சேனல்களில் முகம் காட்டினாள்.. தினம் தினம் தான் சந்திக்க நேரும் ஆபத்துக்களைப் பற்றி எடுத்துரைத்தாள்..
'ஒரு பள்ளியைக் காப்பாற்ற போராட்டம்...'
தினசரிகளில் செய்திகள் வந்தன.. மாளவிகாவின் போராட்டம் வெளியே தெரிய ஆரம்பித்தது.. வஜ்ரவேலு அடங்கிப் போனான்..
"உங்களைப் பார்க்கும் போது நினைச்சேன்ம்மா.."
வேலை மெனக்கெட்டு.. பள்ளிக்கு வந்து மாளவிகாவிடம் கை கூப்பிச் சொன்னான்..
அவன் என்ன நினைத்தான் என்பதை அறிந்து வைத்திருந்த மாளவிகா அவனை முறைத்தாள்..
"கையில வீணை மட்டும்தான் இல்லை.. மத்தபடி.. அப்படியே அந்த சாட்சாத் சரஸ்வதி தேவியோட அம்சம் தான் நீங்க.."
'அடப்போடா.. பெங்களூர் தக்காளின்னு சொன்னவன் தானே நீ.. உன்னை எனக்குத் தெரியாதா..?'
"நானெல்லாம் படிக்காத கூதரை.."
'அது இப்போதுதான் உனக்குத் தெரிந்ததா..?'

"நீங்க நடத்தினா.. அது ஸ்கூலு.. நான் நடத்தினா.." அவன் சொல்லாமல் நிறுத்த..
"சொல்ல வேண்டாம்.. மிஸ்டர் வஜ்ரவேலு.." என்று கண்டிப்பான தொனியில் கூறினாள் மாளவிகா..
"அதில்லைம்மா.."
"அது எதுவாக இருந்தாலும்.. எனக்கு அதைப் பற்றி கவலையில்லை.. இனிமேல் தேவையில்லாமல் எங்கள் ஸ்கூல் காம்ப்பவுண்டுக்குள் நீங்க நுழையக்கூடாது. மீறி நுழைந்தால் நடக்கிறதே வேற.."
வஜ்ரவேலுவின் நடையில் தோல்வி தெரிந்தது.. மாளவிகா வெற்றியின் மிதப்பில்லாமல் தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்..
அந்த வருடத்தின் 'நல்லாசிரியர்' விருது அவளுக்குக் கிடைத்தது.. தமிழகத்தின் சிறந்த பள்ளிகளின் தர வரிசையில் அவளது பள்ளி ஆறாம் இடத்துக்கு வந்தது.. மாளவிகா வெற்றிப் படிக்கட்டில் ஏற ஆரம்பித்தாள்..
தொடுவானாய் விலகி நின்று கண் சிமிட்டிய வானம் அவளுக்கு வசப்பட்டு விட்டது... அவளுடைய லட்சியத்தில் அவள் ஜெயித்து விட்டாள்.. ஆனால்.. அதற்கான மகிழ்வை முழு மனதாக உணரமுடியாமல்.. அவளது நெஞ்சில் ஒரு நெருஞ்சி முள் இடை விடாமல் குத்திக் கொண்டே இருந்தது...
மனச்சுமையை இறக்க வழி தெரியாமல்.. அஷ்டலட்சுமி கோவிலைத் தேடிச் சென்றாள்.. அஷ்டலஷ்மிகளையும் வணங்கி விட்டு.. அலை கொஞ்சும் கடலோரம் வந்து நின்ற போது...
"மாளவிகா.." என்ற குரல் கேட்டது...
திரும்பிப் பார்த்தாள்.. கார்த்திகேயன் நின்றிருந்தார்..
"சௌக்கியமாம்மா..?" என்றபடி அருகில் வந்தார்..
"சௌக்கியம்தான் அங்கிள்.. நீங்க என்ன செய்கிறீங்க..?"
"ரிட்டயர் ஆகிட்டேன்.. மேலே என்ன செய்கிறதுன்னுதான் தெரியலை.."
"ஓய்வெடுக்க வேண்டியதுதானே.."
"வாழ்க்கை பூராவும் ஓடிக்கிட்டே இருந்த கால்கள்.. ஓரிடத்தில் நிற்குமாம்மா.. நானும்.. உன் அப்பாவும்.. ஒன்றாகத்தான் டிரெயினிங் போனோம்.. அவன் ஐ.ஏ.எஸ்.

ஆனான்.. நான் ஐ.பி.எஸ் ஆனேன்.. இரண்டு பேருக்குமே வேறு வேறு உத்தியோகம். ஆனா இரண்டு பேருக்குமே நாங்க பார்த்த வேலையில் அவ்வளவா ஈடுபாடு இல்லை.."

"அப்பாவுக்கு ஈடுபாடு இல்லைன்னு தெரியும்.. உங்களுக்குமா..?"

"இரண்டு பேரும் ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தவங்க தானேம்மா.. எனக்கும் டீச்சராகப் போகணுமுன்னுதான் ஆசை இருந்தது. ஐ.பி.எஸ் ஆனவன்.. டீச்சராப் போறேன்னு சொன்னால் வீட்டில் சும்மா விட்டு விடுவாங்களா..?"

"இன்ட்ரெஸ்டிங்..."

"உனக்கு என் சோகக் கதையைக் கேட்டால் இன்ட்ரெஸ்ட்டா இருக்கு.. ம்ஹூம்.. ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்கிறதுக்கு ஈடானது ஒரு ஏழைக்கு படிப்பைச் சொல்லிக் கொடுப்பது.."

மாளவிகா அந்த வார்த்தைகளில் சட்டென்று நின்றாள்.. முகம் ஜொலிக்க.. கார்த்திகேயனின் முகம் பார்த்தாள்...

"என்ன சொன்னீங்க அங்கிள்..?"

## 24

பனி படர்ந்த தெருக்களில்.. கார் வளைந்து திரும்பியது.. குளிருக்காக அணிந்திருந்த நீண்ட கோட்டையும் மீறி.. குளிர் உடலைத் தாக்கியது..

ஒரு வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும் இடையே.. அதிகமான இடைவெளி விட்டுக் கட்டப்பட்டிருந்த வீடுகளில் ஒன்றின் முன்னால் கார் நின்றது.. மாளவிகா இறங்கி தன் பெட்டிகளை எடுத்துக் கொண்டாள்.. வீட்டை நோக்கி.. நீண்டு சென்ற சிமிண்ட் பாதையில் நடந்தாள்..

அழைப்பு மணியின் ஓசையைக் கேட்டதும்.. சமையலறையிலிருந்து சரண் குரல் கொடுத்தான்...

"தருண்... வாசலில் யாருன்னு பாரு.."

"ஐ ஹேவ் சம் வொர்க் டாடி.."

"தாரிணி.. நீபோ.."

"ஐ ஆம் ஸோ டயர்டு டாடி.."

'கொஞ்சமாவது சொன்ன பேச்சைக் கேட்கிறதுகளா..? அப்படியே அம்மாவின் குணம்..' சலித்துக் கொண்டான் சரண்..
இருபத்தி நான்கு மணி நேரத்தின் ஒவ்வொரு வினாடியிலும் மனதில் உறைந்து கொண்டிருந்த மாளவிகாவின் நினைவு.. அப்போதும் தோன்ற.. சரண் அவளுக்காக ஏங்கினான்...
'என் காதலையும்.. என் தாலியையும் நினைத்துப் பார்க்காதவளை நான் ஏன் நினைக்கணும்..?' வீம்பாக நினைத்துக் கொண்டான்..
'அவளுக்கே இவ்வளவு இருந்தால்.. எனக்கு எவ்வளவு இருக்கும்..?' கோபத்துடன் கதவைத் திறந்தவன் திகைத்து நின்றான்..
"என்ன சமையல் சரண்.. வாசனை ஆளைத் தூக்குது..?" என்று, கரண்டியுடன் நின்ற கணவனைப் பார்த்துக் கேட்டாள் மாளவிகா...
"ஏய்ய்.. எப்படிடீ.. சொல்லவே இல்லையே.." வார்த்தைகள் வராமல் தடுமாறினான் சரண்...
"என்மேல் கோபம்ன்னா.. உள்ளே கூப்பிட்டுக்கிட்டு போய் நாலு மொத்து.. மொத்துங்க.. இப்படி வழியை விடாமல் வாசலை மறைக்காதீங்க.." மாளவிகா சுவாதீனமாக கூறவும்..
"ஸாரி.. ஸாரி.. உள்ளே வா.." என்று கதவை விரியத் திறந்தான் சரண்...
"வீடு அழகா இருக்கு சரண்.." மாளவிகா உள்ளே வந்தாள்..
"வேர் இஸ் தருண் அண்ட்.. தாரிணி.." அவள் ஹாலுக்குள் வந்ததும்.. திரும்பிப் பார்த்த பிள்ளைகள் விழிவிரித்தனர்..
"அம்மா.." என்றபடி இருவரும் தாவிவர அவள் தாய் பறவையாய் அவர்கள் இருவரையும் அணைத்துக் கொண்டாள்..
"தருண்.. வளர்ந்துட்ட டா.. தாரிணி நீ இளைச்சுட்டே.." ஹாலின் சோபாவில் அவர்கள் சரிந்தனர்.. தருணுக்கும்.. தாரிணிக்கும்.. மாளவிகாவிடம் சொல்ல ஆயிரம் கதைகள் இருந்தன.. அதை முக்கியத்துவம் கொடுத்துக் கேட்க மாளவிகாவிற்குத் தெரிந்திருந்தது..

'இப்படி ஒரு நாளாவது என்னிடம் இவர்கள் பேசியிருப்பார்களா..?' சரணுக்கு பொறாமையாக இருந்தது..
தாய்மைப் பெருக்குடன் பேசிக் கொண்டிருந்த மாளவிகாவைப் பார்க்கும்போது.. அவனுக்குள் பிரவாகமாய் தாபம் பொங்கியது...
'எத்தனை மாதங்களாச்சு.. கோபமாய் நான் வந்தால்.. இவள் தேடிவரக் கூடாதா.. இப்போது வந்திருக்கிறவள்.. எத்தனை நாள் கூட இருப்பாளோ..'
"எல்லோரும் சாப்பிடலாமா..?"
அவன் சமைத்தவைகளை டைனிங் டேபிளில் பரப்பிக் கொண்டே அழைத்தான்...
"நாளையிலிருந்து கிச்சன் டிபார்ட்மென்டை நான் எடுத்துக்கறேன் சரண்..."
"உனக்கெதுக்கு அந்த சிரமம்...?"
"இதில் சிரமப்பட என்ன இருக்கு..?"
"நீயே கொஞ்ச நாள் இங்கே ரெஸ்ட் எடுக்க வந்திருக்கிற.. உன்னை எதுக்கு நாங்க டிஸ்டர்ப் பண்ணனும்..?"
சரண் ஒட்டாத குரலில் கூற.. மாளவிகா சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்..
அவன் கூறியதை.. தருணும்.. தாரிணியும் கண்களில் பிரதிபலிப்பதைப் புரிந்து கொண்டவளாக மென் சிரிப்பை சிரித்தாள்..
"இல்லை சரண்.. நான் என் புருசனோடும்.. பிள்ளைகளோடும் தான் இருப்பேன்.. தனியாக போக மாட்டேன்.."
"நிஜமாகவா அம்மா.."
பிள்ளைகள் குதூகலிக்க.. சரண் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்...
"ஸ்கூல் மேட்டர் என்ன ஆச்சும்மா..?" தருண் வினாவினான்..
மாளவிகா தான் ஜெயித்த கதையைச் சொன்னாள்.. நல்லாசிரியர் விருது வாங்கியதைக் கூறினாள்..
"பரவாயில்லையே.. இந்தச் சின்னவயதில் நினைத்ததை சாதிச்சிட்டயே.." சரண் உண்மையாகப் பாராட்டினான்..

தாய் தங்களைத் தேடி வந்து விட்டாள் என்ற நிம்மதியுடன்.. தருணும்.. தாரிணியும் தூங்கப் போன பின்னால்.. சரண்.. மாளவிகாவின் முகம் பார்த்தான்..

"நிஜமாகத்தான் சொன்னியா மாளவிகா..."

"எதைச் சொல்கிறீங்க..?"

"நீ திரும்பிப் போக மாட்டியா..?"

"மாட்டேன்.."

"உன் ஸ்கூல்..? உன் லட்சியம்..? உன் கனவு..?"

"என் லட்சியத்தில் ஜெயித்து விட்டேன்.. என் கனவு நிறைவேறி விட்டது.. என் ஸ்கூலை.. என்னைப் போல லட்சியத்துடன் இருக்கும் ஒருவரிடம் ஒப்படைத்து விட்டேன்.."

"விற்று விட்டாயா..?"

"இல்லை.. உரிமை என்னிடம். அதை நடத்தும் பொறுப்பு அவரிடம்... நமக்கு சென்னையில் சொத்துக்கள் இருக்கின்றன.. வீடு.. கம்பெனி.. அதோடு.. இந்த ஸ்கூல்.."

"யார் அவர்..?"

"கார்த்திகேயன். என் அப்பாவின் நண்பர்.. என் அப்பாவைப் போலவே இவருக்கும் கனவு இருக்கிறது.."

"இதையெல்லாம் எதற்காக செய்தாய் மாளவிகா..?"

சரணின் கண்களில் தாபம் தெரிந்தது.. தவிப்பு தெரிந்தது..

"உங்களுக்காக சரண்.." மாளவிகா அவன் கைகளில் புகுந்தாள்.. அவனோடு ஒட்டிக் கொண்டாள்..

"எனக்காக எவ்வளவோ செய்தீங்க.. உங்களுக்காக.. நான் என் வெற்றிப் படிக்கட்டில் இருந்து விலகி ஓடி வந்திருக்கிறேன்.. இனி காலமெல்லாம் உங்கள் நிழலில் தான் இருப்பேன்.."

அந்த வார்த்தைகளில் தெரிந்த காதலில் சரணின் மனம் அமைதியடைந்து விட்டது.. வானத்தை வசப்படுத்தி விட்டவனாக அவன் அவளை அணைத்துக் கொண்டான்..

...முற்றும்...